

கொங்கு வேளாளர் கல்வெட்டும் காணிப்பாடல்களும்

செ. இராசு

கொங்கு வேளாளர் கல்வெட்டும் காணிப்பாடலும்

தொகுப்பாசிரியர்

புலவர். **செ. இராசு** எம்.ஏ., பிஎச்.டி.,
முன்னாள் தலைவர்,
கல்வெட்டு - தொல்லியல் துறை
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.

வெளியீடு :

கொங்கு ஆய்வு மையம்
64/5, டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ்,
புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில்,
ஈரோடு - 11.

இந்நூல் ஈரோடு, கோயமுத்தூர் ' லோட்டஸ் TVS ' நிறுவனத்தின்
உரிமையாளர். ஈரோடு திரு. பி. பெரியசாமி அவர்கள்
பொருட்கொடையால் வெளியிடப்பெறுகிறது.
அவர்களுக்கு எங்கள் மனமார்ந்த நன்றி

நூற்குறிப்பு

நூலின் பெயர்	:	கொங்கு வேளாளர் கல்வெட்டும் காணிப்பாடலும்
நூல் பொருள்	:	சமுதாய வரலாற்று ஆவணம்
தொகுப்பாசிரியர்	:	புலவர் செ. இராசு. எம்.ஏ., பிஎச்.டி.,
மொழி	:	தமிழ்
நூல் உரிமை	:	தொகுப்பாசிரியர்க்கு
பதிப்பு ஆண்டு	:	2007
நூலின் அளவு	:	18 செ.மீ. x 24 செ.மீ.
பக்கங்கள்	:	264
அச்சு எழுத்து	:	11 புள்ளி
விலை	:	150 ரூபாய்
நூல் கிடைக்குமிடம்	:	கொங்கு ஆய்வு மையம் 64/5, டி.பி.ஜி. காம்ப்ளக்ஸ், புதிய ஆசிரியர் குடியிருப்பு அருகில், ஈரோடு - 638 011. போன்: 0424 - 2262664. செல் : 99942 77711.
ஒளி அச்சு	:	T. பாலாஜி, வர்ணாலயம் ஆப்செட், 744/1, நேதாஜி ரோடு, ஈரோடு-1. செல்: 98432 - 12779.
அச்சு	:	காயத்திரி ஆப்செட் 29, நாச்சியப்பா வீதி, ஈரோடு - 638 001. போன்: 0424 - 2250164.

முன்னுரை

கல்வெட்டுக்கள்

பண்டைய வரலாற்றைத் தெரிந்துகொள்ள உதவும் பல்வேறு சான்றுகளில் கல்வெட்டுக்கள் மிக முக்கியமானவை. கல்லில் வெட்டப்பட்ட எழுத்துக்களைக் கல்வெட்டுக்கள் என்று கூறுகிறோம். கல்லில் எழுத்துக்களைப் பொறித்தால் அவை அழியாமல் நிலைத்து நிற்கும் என்பதை முன்னோர் கண்டனர்.

'இளமையில் கல்வி சிலையில் எழுத்து'

'நல்லார் ஒருவர்க்குச் செய்த உபதேசம்'

கல்மேல் எழுத்துப்போல் காணுமே

என்ற தொடர்கள் இதனை விளக்கும்

கோயில்களுக்குக் கொடுத்த கொடைகளையும், கோயிலில் செய்த திருப்பணிகளையும் ஊரார், சபையார் முடிவுகளையும், அரசனது ஆணைகளையும் கோயிலில் கல்வெட்டுக்களாகப் பொறித்து வைத்தனர். புண்ணியத்திற்காகவும், புகழுக்காகவும் பொறித்து வைத்த கல்வெட்டுக்கள்தான் இன்று நமக்கு அக்கால வரலாற்றை அறிவிக்கும் சான்றுகளாகத் திகழ்கின்றன. அவை பெரும்பாலும் உரைநடை வடிவிலும், சில இடங்களில் பாடல் வடிவிலும் காணப்படும்.

கல்வெட்டின் தொன்மை

கி.பி. இரண்டாம் நூற்றாண்டு முதல் கொங்கு நாட்டில் கல்வெட்டுக்கள் பொறிக்கப்பட்டிருந்தாலும், கி.பி. எட்டாம் நூற்றாண்டு முதல்தான் கொங்கு வேளாளர்கள் பற்றிய கல்வெட்டுக்கள் நமக்குக் கிடைக்கின்றன. சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம் செந்தாரப்பட்டியில் கிடைத்த வட்டெழுத்துப் பொறித்த நடுகல்லில்தான் 'கங்கரைசரு சேவகன் சாகாடன் நக்கன்' என்ற காடைகுல வீரனின் பெயர் கல்வெட்டில் காணப்படுகிறது. அடுத்து வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், சின்னய்யன் பேட்டையில் கிடைக்கும் இரு நடுகற்களில் 'கொங்கத்து எழுமாத்தூர் இருந்துவாழும் சாகாடச் சிற்றன்' என்ற பெயர் காணப்படுகிறது. இவையே கொங்கு வேளாளரைப் பற்றிய தொன்மையான கல்வெட்டுக்கள் ஆகும். இவை முறையே கி.பி. எட்டு, ஒன்பதாம் நூற்றாண்டைச் சேர்ந்தவை. இரண்டும் காடை குலத்திற்கு உரியவை.

பிராமிக் கல்வெட்டுக்களிலும், கொடுமணல் போன்று அகழ்வாராய்ச்சி செய்த இடங்களிலும் கிடைத்த மண்பானை ஓடுகளில் அந்துவன், ஆந்தை, கண்ணன், கொற்றன், கொற்றந்தை, ஓதாளன், சாத்தந்தை, மணியன், வண்ணக்கன், கீரன், தோடன் போன்ற கொங்கு வேளாளர் குலங்களோடு ஒத்த பெயர்கள் காணப்படினும் அவை கொங்கு வேளாளர்களின் குலங்களைக் குறிப்பவை என்று உறுதிசெய்யப்படவில்லை. 20ஆம் நூற்றஆண்டு வரை தொடர்ச்சியாகக் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன.

கல்வெட்டுக்கள் உள்ள இடங்கள்

பெரும்பாலும் கோயில் புறச்சுவர்களிலும், உள்சுவர்களிலும், சுற்று மதில்களிலும், கதவு நிலைகால்களிலும், தூண்களிலும், படிகளிலும், மேல் விதானங்களிலும், தரைப் பாவுகற்களிலும், நூரிக்கற்களிலும், மண்டபங்களிலும், தீபத்தம்பங்களிலும், நடப்பட்டுள்ள தனிக் கற்களிலும், உருவச்சிலைகளிலும் கல்வெட்டுக்கள் காணப்படுகின்றன.

கற்களில் அல்லாமல் மரக்கதவுகள், உலோக வாகனங்கள், வேல், வாள், பூசைப் பரிகலங்கள், கோயில் பாத்திரங்கள், கோபுரக்கலசங்கள், செப்புப்படிமங்கள் ஆகியவற்றில் உள்ள எழுத்துப் பொறிப்புக்களையும் கல்வெட்டுக்களோடு சேர்த்துக்கொள்வது வழக்கமாக உள்ளது. இத்தொகுதியிலும் அவை உள்ளன.

கல்வெட்டுக்களின் பரப்பு

கொங்கு நாட்டு எல்லைக்குட்பட்ட கோவை மாவட்டம், ஈரோடு மாவட்டம், சேலம் மாவட்டம், நாமக்கல் மாவட்டம், கரூர் மாவட்டம், திண்டுக்கல் மாவட்டம் ஆகிய இடங்களிலும், சிறிய அளவில் தருமபுரி, வட ஆர்க்காடு, தென்னார்க்காடு ஆகிய இடங்களிலும் கொங்கு வேளாளர் கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன.

இத்தொகுப்பில் ஈரோடு மாவட்டக் கல்வெட்டுக்கள் முதலிடமும் (204), கோவை மாவட்டம் இரண்டாமிடமும் (76) நாமக்கல் மாவட்டம் மூன்றாமிடமும் (46) பெறுகின்றன. திண்டுக்கல் (21) கரூர் (20) சேலம் (13) மாவட்டங்களில் ஓரளவு கல்வெட்டுக்கள் கிடைக்கின்றன. பிற மாவட்டங்களில் மிகச் சில கல்வெட்டுக்களே உள்ளன.

கொங்குச் சோழர் (94), கொங்குப் பாண்டியர் (58), போசளர் (20) விசயநகர அரசர் (16), மதுரை நாயக்கர் (5) காலக் கல்வெட்டுக்களும், சிறிய அளவில் சேரர் (3) உம்மத்தூர்த் தலைவர்கள் (1) மைசூர் உடையார் (1) காலக்கல்வெட்டுக்களும் கிடைக்கின்றன. விக்டோரியா மகாராணி காலக் கல்வெட்டு ஒன்றும், அவர்க்கு முந்தைய கிழக்கிந்தியக் கம்பெனியாட்சிக் காலக் கல்வெட்டு ஒன்றும் கிடைத்துள்ளது. இவை அல்லாமல் பிற கல்வெட்டுக்கள் அனைத்திலும் ஆட்சியாளர் குறிப்பு எதுவும் இன்றி உள்ளன. எல்லாக் கல்வெட்டுக்களும் தமிழிலேயே உள்ளன. அரசர்களின் கல்வெட்டுக்களில் மட்டும் இடையிடையே கிரந்தம் கலந்து வருகின்றது.

பதிப்பு முறை

கல்வெட்டுக்கள் குலங்களின் பெயர் அகரவரிசைப்படி கொடுக்கப்பட்டுள்ளன. அந்துவன் குலம் தொடங்கி வேந்தர் குலம் இறுதியாக 78 குலங்களின் கல்வெட்டுக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. பெரும்பாலும் கல்வெட்டில் உள்ளவாறு வரி வரியாகப் பதிப்பிப்பதுதான் முறை. ஆனால் நூல் அளவு மிகப் பெருகிவிடும் என்று கருதி கல்வெட்டுக்கள் தொடர்ச்சியாகப் பதிப்பிக்கப் பட்டிருக்கின்றன.

கல்வெட்டுக்களில் எழுத்துக்களுக்குப் புள்ளியில்லாமலும், குறில் நெடில்

வேறுபாடு இல்லாமலும் காணப்படும். சொற்களுக்கிடையே இடைவெளி இருக்காது. புள்ளியிட்டு குறில்நெடில் வேறுபாட்டுடன் சொற்களுக்கிடையே இடைவெளிவிட்டுப்பதிப்பிக்கப் பட்டுள்ளது. கிரந்த எழுத்துக்கள் ஏற்ற தமிழ் எழுத்துக்களாக மாற்றப்பட்டு எவரும் படித்துப் புரிந்துகொள்ளும் வண்ணம் பதிப்பிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு உள்ள மாவட்டம், வட்டம், ஊர், கோயில் அல்லது எந்த இடத்தில் கல்வெட்டு உள்ளது என்றும், யார் காலக் கல்வெட்டு, கல்வெட்டின் காலம் ஆகியவை அடுத்துக் கூறப்பட்டுப் பின்னர் கல்வெட்டின் செய்தியும் சுருக்கமாகக் கூறப்பட்டுள்ளன.

குலப்பெயர் தாங்கிய கல்வெட்டுக்களின் பின்னர் வேளாளர், காமிண்டர், கவுண்டர், வேளான், வெள்ளானூர், வெள்ளா நாட்டார் போன்ற குல அடையாளப் பெயர்கள் வரும் சில கல்வெட்டுக்கள் தொகுக்கப்பட்டுள்ளன. படைத்தலைக் கவுண்டர், வடகரைக்கவுண்டர் (கணவாளர், நரம்பர்), நாட்டு வேளாளகவுண்டர், குறும்பகவுண்டர் ஆகியோரின் கல்வெட்டுக்களும் சில தரப்பட்டுள்ளன. ஒப்பாய்வுக்காகக் கொங்குச்சமுதாயங்களின் குலப்பெயர்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டுக்களின் சிறப்பு

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகாலக் கொங்கு வேளாளர்களின் வாழ்வியல் முறையைத் தெரிந்துகொள்ள இக்கல்வெட்டுக்கள் பெரும் துணை புரிகின்றன. அவர்களின் வேளாண்மை, பொருளாதார நிலை, அரசர்களிடம் பெற்ற சிறப்பு, சமுதாயத்தில் அவர்களுக்குள்ள பங்கு, பெண்கள் நிலை, சமயவாழ்வு, கலையுணர்வு, மொழிப்பற்று, பிற சமுதாய உறவுகள் ஆகியவற்றைத் தெரிந்து கொள்ள இக்கல்வெட்டுக்களே தக்க சான்றுகளாகத் திகழ்கின்றன. சமூகவியல் ஆய்வாளர்கட்கும், கொங்கு வேளாளர் பற்றிய வரலாற்று நூல் எழுதுவோருக்கும் இவை பெரும் துணை புரியும்.

கொங்கு வேளாளர் பெயர் அமைப்பு

இடைக்காலக் கல்வெட்டுக்கள் அனைத்திலும் வெள்ளாளன் என்று மட்டுமே காணப்படுகிறது. வேளாளன் என்பது பிற்கால வழக்கு. இக்கல்வெட்டுக்களில் கொங்கு வேளாளர் பெயர் கூறும் போது நாடு, ஊர், குலம், பெயர், சிறப்புப் பெயர் ஆகிய வரிசையில் கூறப்பட்டுள்ளன.

" குறுப்புநாட்டு விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவன் ஆன முடி கொண்ட சோழ மாராயன் " "வடபரிசார நாட்டு நம்பி பேரூரில் வெள்ளாளன் சோழரில் தேவன் ராசராசன் "என்பன போல வரும். வேந்தர் குலத்தாரும், பில்ல குலத்தாரும் தங்கள் குழந்தைகட்கு வேந்தன், பில்லன் என்றே பெயர் வைத்திருப்பதைக் கல்வெட்டு மூலம் அறிகின்றோம். பிற்காலப் பெயர்கள் பெரும்பாலும் தெய்வப் பெயர்களாகவும், முன்னோர் பெயர்களாகவும் உள்ளன.

"வெள்ளாளன் காடர்களில் நக்கன் அரையன் சுந்தர தேவன் "

"வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவன் "

என்றால் வேளாளர் காடை குலத்தைச் சேர்ந்தவர்களில் நக்கன் அரையன், வேளாளர் சாத்தந்தை குலத்தார்களில் சிறியான் தேவன் என்பது பொருள். இதன் பொருள் புரியாமல் ஆய்வாளர் ஒருவர் காடர்கள், சாத்தந்தைகள், கண்ணர்கள் என்பதே குலப் பெயர் என்று தவறாக எழுதியுள்ளார்.

இடைக்காலக் கல்வெட்டுக்களில் குலத்தின் பெயர் கூறி தொடர்ந்து குலம் என்ற சொல்லை இணைப்பதில்லை. சாத்தந்தை குலம் என்று கூறாமல் சாத்தந்தைகளில் என்று மட்டும் கூறப்பெற்றிருக்கும். பிற்காலக் கல்வெட்டுக்களில் தான் குலம் என்றும், கூட்டம் என்றும், கோத்திரம் என்றும் குறிக்கப்பெற்றிருக்கும். இவை மூன்றும் ஒரே பொருள்தரும் சொற்களாகும்.

பெண்கள் கொடைகொடுத்ததைக் கூறும் கல்வெட்டுக்களில் அவர் இன்னாருடைய மனைவி என்று சுட்டிக் கூறப்பெற்றிருக்கும். " பூந்துறை நாட்டு இளம்பள்ளியில் வெள்ளாளர் காடைகளில் அவிநாசி தேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கி " என்பது போல் குறிக்கப்பெறும். இக்கால வழக்கப்படி கணவன் பெயர் மனைவி பெயரோடு குறிக்கப்பட்டுள்ளதையும் காணலாம். தேவன் மனைவி "தேவன்சொக்கி" என உள்ளது.

மனைவியைக்குறிக்க கணவர் பெயருடன் மனைக்கிழத்தி, மணவாட்டி, தேவி, அகமுடையாள், வாழ்க்கைப்பட்ட என்ற சொல் சேர்க்கப் பெற்றிருக்கும்.

" வடபரிசார நாட்டில் காரைப்பாடியிலிருக்கும் வெள்ளாளன் கொற்றந்தைகளில் அன்னி காவன் மனைக்கிழத்தி கேசி " *என்பது போல வரும்.*

சில கல்வெட்டுக்களில் பெண்ணின் தந்தை பெயரும் கூறப்பட்டிருக்கும். " வெள்ளாளன் ஆவகளில் வீரகாமிண்டன் உடையாண்டான் மனைக்கிழத்தி வாமதேவன் மகள் பிள்ளையம்மை " என்பது போலப் பெயர் சில இடங்களில் அமைந்துள்ளன.

சிலரது பெயர்களில் அவர்களை அடையாளம் காட்ட அவர்களின் தொழில் முதலியவை கூறப்பெற்றிருக்கும்.

உருளிக்காரப் பெரியணகவுண்டர் (ஊதியூர்)

கவுமாரன் கருப்பகவுண்டர் (கொளாநல்லி)

கிழக்குப் பண்ணயம் கருப்பண கவுண்டர் (மூலனூர்)

கொத்துக்கார ராக்கியன் (கீரனூர்)

பண்டிதகாரச் சின்னயகவுண்டன் (ஊதியூர்)

பள்ளிக் கூடத்துக் கவுண்டர் (ஆரியூர்)

பூசாரி கருப்பணகவுண்டர் (ஆரியூர்)

மணியம் வஞ்சியப்பகவுண்டர் (ஆரியூர்)

வில்லமரத்து நல்லிக்கவுண்டர் (கூத்தம்பூண்டி)

தர்மகர்த்தா நமசிவாயக் கவுண்டர் (ஏழூர்)

என்பன போல அவை அமையும்.

கொளாநல்லி, கூனவேலம்பட்டி, குருசாமிபாளையம், சித்தளந்தூர் போன்ற ஊர்களில் கொங்கு வேளாளர் சிலர் பெயர் துலுக்கணகவுண்டர் என்று காணப்படுகிறது. கொளாநல்லியில் துலுக்கணசாமி கோயிலும் உள்ளது. கொல்லன்கோயில் வெண்டுவகுலத்தார் ஒருவர் இராவுத்தப் பெருமாள் என்று அழைக்கப்பெறுகிறார். இராவுத்தர் என்பது அரேபியக் குதிரை வணிகரைக் குறிக்கும் (ரவுத் - ராவுத்தர்). இருப்புலி, கொளாநல்லி போன்ற ஊர்களில் கொங்கு வேளாளகவுண்டர்கள் மனைவியர் கவுண்டச்சி என அழைக்கப் பெற்றுள்ளனர். வடபரிசார நாட்டில் துலுக்கன் புத்தூர் என்ற ஊர் உள்ளது.

சில கொங்கு வேளாளர் பெயர்கள் பொருள் ஆழம் மிக்க காரணப் பெயர்போல் அமைந்துள்ளன. சார்ந்தாரைக் காப்பான், அடியார்க்கு அடியான், நல்லிசையாளன், அஞ்சாதான், பிறவிக்கு நல்லார், உய்யநெறி காட்டினான், பொய்யாத் தமிழ் நம்பி, இனியபிள்ளை, தப்பிலா வாசகன் என்பன அவற்றுள் சில.

சிறப்புப் பெயர்கள்

சிலரது பெயர்களில் இயற்பெயரோடு இணைந்து அரசு, ஆட்சியோடு தொடர்புடைய பெயர்கள் காணப்படுகின்றன. அவர்கள் அரசரோடும், நாட்டு நிர்வாகத்தோடும் தொடர்பு கொண்ட உயர் அலுவலராக இருந்துள்ளனர் என்பது தெளிவு.

- அவிநாசி முதலியான சோழநாராயணக் காமிண்டன் (மூல குலம்)
- அழகியசோழக் காமிண்டன் (கண்ணகுலம்)
- சிறியான் ஆன செயங்கொண்ட சோழக் காமிண்டன் (தேவேந்திர குலம்)
- சோழக் காமிண்டன் மன்றாடி (மலையர் குலம்)
- துட்டன் செல்வன் அமரவிடங்கப் பல்லவரையன் (வெள்ளாளன்)
- நம்பி கரியான் அபிமானசோழன் (கடத்தூர் வெள்ளாளன்)
- பெரியான் பிள்ளன் ஆன செயங்கொண்ட சோழக் காமிண்டன் (வெண்டுவ குலம்)
- மணியனான இராசராசப் பல்லவரையன் (பூச்சந்தை குலம்)
- மன்றாடி மூக்கன் சாத்தன் ஆன இராசேந்திர சிங்கக் காமிண்டன் (செல்ல குலம்)
- வீரசோழகங்கன் (பயிர குலம்)
- வீர சோழக் காமிண்டன் (சாத்தந்தை குலம்)

அரசன், அரையர், மாராயர் என்பதும் அரசர்கள் அளிக்கும் உயர்பட்டங்கள் ஆகும். சிலர் அப்பெயர் பெற்றுள்ளனர்.

- அய்யன் அரைசன் (கோட்டாறுகுலம்)
- அரையன் காமிண்டன் விக்கிரமன் (பேரூர் வெள்ளாளன்)
- அரையன் காவன் (மாடை குலம்)
- சிறியான் தேவனான முடிகொண்ட சோழ மாராயன் (சாத்தந்தை குலம்)
- அதிசயசோழ அரைசன் ஆன மணிகைராயர் (குழாயர் குலம்)
- ஆடன் புளியனான மும்முடிச் சோழ மாராயன் (காடை குலம்)
- அரையன் சிறியான் ஆன வேந்த சூளாமணிப்பல்லவரையன் (பூசகுலம்)
- அரையன் காமிண்டன் விக்கிரமன் (பேரூர் வெள்ளாளன்)
- பன்றன் மாராயனான தென்னவன் மூவேந்த வேளான் (மணியன் குலம்)
- கொற்றன் ஏகவீரமாராயன் (செல்லன் குலம்)

சிவபக்தர்கள்

சோழநாடு, தொண்டை நாடு, பாண்டிய நாடு போலக் கொங்கு நாட்டில் இடைக்காலத்தில் பக்தி இயக்கம் பெரிதும் பரவியிருக்கவில்லை என்ற கருத்தைப் பலர் கூறிவருகின்றனர். அக்கருத்து தவறு என்று நிறுவும் வண்ணம் பல கொங்கு வேளாளர் பெயர்கள் சைவ சமயம் தொடர்பான பெயர்களுடனும், சமய அடியார்கள் பெயருடனும் காணப்படுகின்றன.

கொங்கு வேளாளர்கள் பலருடைய கல்வெட்டுக்கள் சிவமயம் என்ற மங்கலச் சொல்லோடு தொடங்குகிறது. மொஞ்சனூர் தேவேந்திர குலத்தாரும், தனஞ்செய குலத்தாரும் தங்களை சைவ வேளாள சாதி என்று குறிப்பிட்டுக் கொள்கின்றனர். பருத்திப்பள்ளிச் செல்ல குலத்தார் ஒருவர் சிவபக்தர் அத்தாணிக் காமிண்டர் என்று அழைக்கப் பெறுகிறார்.

கீழ்வரும் பெயர்கள் சைவ சமயச் சிறப்புள்ளவை.

- ஆண்டானான அம்பலப் பெருமாள் (வெண்மணிகுலம்)
- கருங்காள மண்டலிகசுவாமியான மன்றுளாடுவான் (குண்டெலி குலம்)
- தர்மகர்த்தா நமசிவாயக்கவுண்டர் (பண்ணை குலம்)
- கொன்றைவார் சடையன் (பெரிய குலம்)
- சிவபாதசேகர மூவேந்த வேளான் (கோனாபுரம் வேளாளர்)
- நம்பி நம்பியான நல்லமங்கை பாகன் (பெரிய குலம்)
- நம்பியான மங்கைக் கூத்தன் (பெரிய குலம்)
- பிள்ளை பிள்ளையாழ்வியான பிறை சூடும் பெருமாள் (ஆந்தை குலம்)

- பொல்லாத பிள்ளை (பெரிய குலம்)
- பொன்னம்பலம் சன்னதி நிறைந்தான் (செம்பூத்த குலம்)
- வள்ளிமருதூருடையான் மானேந்தியகையன் (சேலம் வெள்ளாளர்)
- தேவன் கூத்தப் பெருமாள் (படைத்தலையர்)

என்பன சைவ சமயத்தோடு தொடர்புடைய பெயர்கள்.

சமய அடியார்கள் வரலாறும், பெரியபுராணப் பயிற்சியும் கொங்கு நாட்டில் இருந்துள்ளதைப் பின்வரும் பெயர்கள் காட்டுகின்றன.

- சிறுநம்பி நம்பியான நம்பியாரூரன் (பெரிய குலம்)
- சேரமான் தோழனான தொண்டைமான் (பில்ல குலம்)
- சேரமான் பெருமாள் பிறவியான் (ஆந்தை குலம்)
- ஆண்டியான மங்கைய ர்க்கரசி (சாத்துவாய் குலம்)
- திருச்சிற்றம்பல முடையான் அம்மை அப்பனான தம்பிரான் தோழன் (பூச குலம்)
- காவனூர் உடையான் மாணிக்கவாசகன் (கருப்பூர் வெள்ளாளன்)
- தோழன் பிள்ளனான ஞானசம்பந்தன் (மலையர் குலம்)
- நம்பி நம்பியான பிள்ளை ஞானசம்பந்தன் (பெரிய குலம்)
- மஞ்சனான காளியான் காழி ஞானசம்பந்தன் (செம்பூத்தகுலம்)
- முனையடுவார் (கண்ணகுலம்)

ஒருவர் பெயர் கண்ணைக்கொடுத்தான் எனவருவது கண்ணப்பர் பெயரை நினைவூட்டுகிறது.

இத்தொகுப்பிலுள்ள கொங்கு வேளாளர் கல்வெட்டுக்கள் சிலவற்றில் பறையன் என்ற சொல் கொங்கு வேளாளர் பெயரோடு இணைந்து வருவதைக் காணலாம். இதை மேலோட்டமாகப் பார்த்த தொல்லியல் ஆய்வாளர் ஒருவர் இருபெரும் சமூகத்தையும் ஒன்றுபடுத்திக் கூறியுள்ளார்.

திருமுருகன் பூண்டியில் உள்ள கொங்கு மன்னன் விக்கிரமசோழனின் 12ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் கொடை கொடுத்தவர் பெயர் " வெள்ளாளர் மாப்புள்ளிகளில் சோழன் பறையன் ஆன தனபாலன் " எனக் குறிக்கப்பெறுகிறது. இவர் திருமுருகன் பூண்டிக் கோயிலுக்கு நாள்தோறும் அமுதுபடிக்காக நாழியரிசி கொடையாகக் கொடுத்துள்ளார்.

அதனை கோயில் காணியுடைய சிவப்பிராமணர்கள் பெற்றிருக்கின்றனர்,

இப்பெயரில்

சமூகப் பெயர்	-	வெள்ளாளன்
குலப்பெயர்	-	மாப்புள்ளி

இயற்பெயர் - தனபாலன்

வெள்ளாளரில் மாப்புள்ளி குலம் சேர்ந்த தனபாலன் சோழன் பறையன் என்ற பட்டப்பெயரைப் பெற்றுள்ளான். அரசால் அல்லது சபையால் அல்லது ஊராரால் அவன் சோழன் பறையன் என ஆக்கப்பட்டுள்ளான் என்பதை ஆன என்ற சொல் விளக்குகிறது. பறையன் என்பது இங்கு அரசு சார்ந்த ஒரு பட்டப் பெயரே தவிர இயற்பெயர் அல்ல.

சோழன் புகழைப் பரப்புபவனாகவோ, அல்லது பறை முதலிய கருவிகள் இயக்கத்தின் தலைவனாகவோ அவன் இருக்கலாம். உடுமலை வட்டம், சோழமாதேவியில் இதே விக்கிரம சோழனின் 20ஆம் ஆட்சியாண்டுக்கல்வெட்டில் தன் சிறிய தாயாருடன் சேர்ந்து கோயிலுக்கு நிலைகால் அளித்த பெண்ணின் பெயர் “பறையன் ஆளுடைய நாச்சி” என்பதாகும். எனவே பறையன் என்பது சோழர் காலத்தில் கொடுக்கப்பட்ட உயர்பட்டப் பெயர் என்று தெரிகிறது. அது குலப்பெயர் அல்ல.

ஆட்சியுரிமை

தனி அரசர்களாக இல்லாவிடினும் கொங்கு வேளாளர் பலர் அரசர்கள் சார்பில் ஊர், நாட்டு நிர்வாகம் செய்துள்ளனர். பூந்துறை, கீரனூர் போன்ற பல ஊர்களில் தாங்கள் வசூலிக்கும் சுங்கம், மகமை போன்றவற்றால் வரும் பொருளைக் கோயிலுக்குக் கொடையாக அளித்துள்ளனர். பல ஊர்களில் ஊர் முழுவதும் (எல்லா வரிகளும்) அவர்களால் ஆலயங்கட்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன.

இதனால் கொங்கு வேளாளர் பெருமக்கள் ஆட்சியில் பல தனி உரிமைகளையும் பெற்றிருந்தனர் என்பது விளங்குகிறது.

கொங்காள்வான், கொங்காள்வி, ஊராளி, ஊராண்டான், நாட்டுக்காமிண்டன், நாடுகொண்டான், அதிபன், மன்றாடி, அரசன், அரையன் போன்ற பல பெயர்கள் அவர்களின் ஆட்சியுரிமையைக் காட்டுகிறது. இறுதியில் அளிக்கப்பட்டுள்ள காணிப்பாடல்கள் பலவற்றில் ஆட்சி உரிமை குறிக்கப்பட்டுள்ளது.

காலிங்கராயன்

காலிங்கராயன் என்பது அரசர்கள் அளிக்கும் மிக உயரிய விருதுப் பெயராகும். வெள்ளோடு கனகபுரம் சாத்தந்தை குல லிங்கையன் வீரபாண்டியனால் காலிங்கராயன் என்ற பட்டம் பெற்றான். தனிப்பாடல் காலிங்கராயனை வீரபாண்டிய வேந்தமைச்சன் என்று கூறுகிறது. காலிங்கராயனுக்கு உத்தர மந்திரி என்ற பட்டமும் உண்டு. இவர் போல் இடிகரை கொற்றந்தை குல அமரபுயங்கன், பிள்ளையான் ஆகியோர் காலிங்கராயன் பட்டம் பெற்றுள்ளனர். காஞ்சிக்கோயில் செல்லகுல இளச்சியும், ஆதியூர்க் குண்டெலிகுலக் காளி என்பவரும் காலிங்கராயன் பட்டம் பெற்றுள்ளதாகக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன. வடகரைக்கவுண்டர்களில் வெள்ளாளன் கணவாளரில் உடையாண்டானான அழகப்பெருமாள் காலிங்கராயன் பட்டம் பெற்றிருந்தார்.

வேள், வேளிர், வேளான்

வேள், வேளிர் என்பது ஆட்சித் தலைவர்கட்கு உரிய பெயர். வேள்பாரி, வேள்

பேகன் என்பன அவ்வாறு சங்ககாலத்தில் ஆட்சிபுரிந்த குறுநில மன்னர்கள். வேள் - வேளிர் என்றும் கூறப்பெறும். பலகொங்கு வேளாளர்கள் வேள் பட்டம் பெற்றுள்ளனர். அவர்கள் ஆட்சியாளர்கள் என்பதில் ஐயமில்லை. அவர்கள் அரசனால் சிறப்பிக்கப்பட்டவர்கள். வேளாளர் தலைவர்கட்குத் தமிழக அரசர்கள் மூவேந்தவேளான் என்ற பட்டப்பெயர் கொடுப்பது வழக்கம்.

- ஆடன்புளியனான உத்தமசோழத்தமிழவேளான் (காடை குலம்)
- இளைய செல்ல நாயனான இஞ்சிவேளான் (அந்துவகுலம்)
- கேசன்காவனான தமிழவேளான் (மலையர் குலம்)
- கொங்கு வேள் தரையர் (பயிர குலம்)
- பெருக்கன் வஞ்சிவேள் ஆன பெற்றான் (அந்துவகுலம்)
- வெள்ளாளன் மூவேந்த வேளான் (கோனாபுரம்)
- நேரிய மூவேந்த வேளான் (படைத்தலையர்)

தமிழவேளான், பொய்யாத் தமிழ்நம்பி போன்ற சில பெயர்கள் தமிழோடு தொடர்புடையதாக வருவது சிறப்பு மிக்கதாகும்.

முதலி, முதலிக் காமிண்டன்

ஊர், நாடு இவைகட்கு முதன்மையானவன் என்று பொருள்தரும் முதலி, முதலிக்காமிண்டன் என்ற பெயரைப் பலர் பெற்றிருந்தனர்.

- அவிநாசி முதலியான சோழ நாராயணக் காமிண்டன் (மூல குலம்)
- இளமன் முதலி (ஆந்தை குலம்)
- கஞ்சப்பள்ளி வெள்ளாளன் முதலி பொத்தி (வெள்ளாளன்)
- சிலம்பன் முதலி (பொருளந்தை குலம்)
- பருத்திப்பள்ளி முதலி கஞ்சமலைத் தேவன் (செல்ல குலம்)
- பருத்திப்பள்ளி முதலி சண்ணுவான் ஆண்டை (செல்லகுலம்)
- பூமி காமிண்டர் முதலிக்காமிண்டன் (செல்ல குலம்)
- மின்னாம்பள்ளி முதலிகளில் பெரியபிள்ளையாண்டை (தூர குலம்)
- முதலிகள் அத்தாணிக் காமிண்டர் (செல்ல குலம்)
- முதலி வீரன் (கொற்றந்தை குலம்)
- பட்டி கோவனான மண்டல முதலி (விச்சர் குலம்)

காமிண்டன் என்பதும் முதலில் பட்டப் பெயராகவே இருந்துள்ளது. காமிண்டன் பட்டப் பெயர் உள்ளவர் பெயர்களில் அரச மரபின் தொடர்புப் பெயர்கள் காணப்படுகின்றன. முன்னோர் பெற்ற காமிண்டன் என்ற பட்டத்தைப் பின்னோரும் தங்கள் பெயரோடு சேர்த்துக் கொண்டனர். காமிண்டன் என்ற இப்பெயரே

காலப்போக்கில் கவுண்டர் என மாறிவிட்டது.

திருப்பணிகள்

இத்தொகுதியில் உள்ள கல்வெட்டுக்களில் ஏறக்குறைய பாதிக்கல்வெட்டுக்கள் கோயில் திருப்பணி பற்றியவையே. கொங்கு வேளாளர் பெருமக்கள் காலந்தோறும் கோயில் திருப்பணிகளைச் சிறப்புடன் மேற்கொண்டு வந்துள்ளனர். இன்றும் குலதெய்வக் கோயில்களைக் கோடிக் கணக்கான ரூபாய் செலவு செய்து புதுப்பிக்கும் திருப்பணி வேலை நம் கொங்கு நாட்டில் மட்டுமே நடைபெறுவதை யாவரும் அறிவர். வாழையடி வாழையாக இந்நற்செயல் தொடர்ந்து நடைபெற்றுவருகிறது.

பல கோயில்கள் சிகஸ்தாயிருந்தது, இறங்கல் பட்டுக் கிடந்தது என்றறிந்து முழுவதையும் புதுப்பித்துள்ளனர். சமுதாயத்தில் பலர் சேர்ந்து கோயில்களைப் புதுப்பித்துள்ளனர். பங்காளிகள் அல்லது குடிகள் சேர்ந்து புதுப்பித்துள்ளனர். தந்தையும் மகனும், கணவனும் மனைவியும் சேர்ந்து புதுப்பித்துள்ளனர். முன்னோர் கட்டியதை அவர்களின் பின்னோர் கட்டியுள்ளனர். முன்னோர்கள் மரத்தினாலும், செங்கல்லாலும் கட்டிய கோயில்களைக் கற்கோயில்களாக (கற்றளி) மாற்றியுள்ளனர். கோயிலில் எந்தப் பகுதி பழுது பட்டிருந்ததோ அதைப் பழுதுபார்த்துப் பழுது நீக்கிக் கட்டியுள்ளனர். அல்லது எது கோயிலுக்குத் தேவையோ அதைச் செய்வித்து நிறைவேற்றியுள்ளனர். அவ்வாறு ஏராளமான திருப்பணிகள் காலம் தோறும் நடைபெற்றுள்ளன. ஒரு கோயில் முழுமையாகக் கட்டும் போது அக்கோயிலின் ஒவ்வொரு பகுதியை ஒவ்வொருவரும் தம் உபயமாகச் செய்தளித்துள்ளனர். இன்றும் பல திருப்பணிகள் இவ்வாறே நடைபெறுகின்றன.

சிலர் முன்னின்று பலரிடம் பொருள் திரட்டிக் கோயில் கட்டியுள்ளனர். பல்வேறு மக்கள் சேர்ந்து கோயில் கட்டியபோது முன்னின்று அச்செயலைச் செய்தவர்கள் எவர் எவர் என்று சில கல்வெட்டில் குறிக்கப்பட்டுள்ளது. கோயில் முழுவதும் கட்டிக் குடமுழுக்கு விழாவும் சிறப்புடன் நடத்தியுள்ளனர். மூலனூர்க் காணியாளர் ஒருவர் பிச்சையெடுத்து அதனால் வந்த பொருளைக்கொண்டு வஞ்சியம்மன் கோயிலுக்குத் தூரி ஒன்றைக் கொடுத்துள்ளார். அனுமன் பள்ளியில் ஒருவர் கோபுரக் கலசங்கள் பலர் உதவியால் வைத்துள்ளார்.

திருப்பணிப் பகுதிகள்

கோயில் முழுத் திருப்பணியின் போது பலர் தங்கள் பங்காகக் கோயிலின் ஒரு பகுதியைக் கொடையாகக் கொடுத்துள்ளனர். அல்லது இறைபடிமங்களில் ஒன்றைக் கொடையளித் துள்ளனர். அவற்றைக் கல்வெட்டுக்கள் குறிக்கின்றன.

அகவாய், அம்மன், அரங்கமண்டபம், அர்த்தமண்டபம், உத்திரம், கதவு, கபோதம், கர்ப்பக்கிரகம், கலசம், கல்லுக்கட்டு, கால், குதிரை, குறிஞ்சி, கொடிக்கம்பம், கொறடு, கொறட்டு வாசல், கோபுரம், சண்டிகேசுவரர், சிகரம், சோபனமண்டபம், தட்சிணாமூர்த்தி, தளவரிசை, தாமப்படை, திருநிலைகால், திருமடைப்பள்ளி, திருமடைவிளாகம், தீபத்தம்பம், தீர்த்தக்கிணறு, தூண், தூரி, நந்தி, நிருத்தமண்டபம்,

நிர்மாலியத்தொட்டி, படை, பலிபீடம், பாவுகல், பித்தளைத்தகடு, பிரதம், பிரபை, புறவாய், பூதம், போதிகை, மகாமண்டபம், மயில் வாகனம், மடம், முகமண்டபம், முகவணை, முருகன், முருகன் தேவியர், ரதம், ரிஷபம், வரிப்படை, வாத்யமண்டபம், வாயிற்படி, வியாழம் போன்றவைகளைத் திருப்பணியின் போது பலர் அளித்துள்ளனர். இவையனைத்தும் இத் தொகுதிக் கல்வெட்டுக்களில் இடம் பெற்றுள்ளன.

திருப்பணிகளில் தங்கள் வீட்டுப் பெண்களுக்கும் முக்கிய உரிமை கொடுத்து அவர்கள் பெயரும் தங்கள் பெயரோடு நின்று நிலைக்கச் செய்துள்ளனர்.

ஆந்தைகுலம் செல்லப்பகவுண்டரும் தேவியும் (கூத்தம் பூண்டி)

ஓதாளகுலம் சின்னப்பகவுண்டன் அகமுடையாள் சிவகாமியம்மாள் (கொடுவாய்)

செம்பூத்தகுலம் செல்லப்பகவுண்டரும் தேவியும் (கூத்தம் பூண்டி)

விலையகுலம் பிடாரப்பகவுண்டரும் தேவி முத்தாயி கவுண்டச்சியும் (கூத்தம் பூண்டி)

என்பன அவற்றைக் குறிக்கும் சில கல்வெட்டுக்கள் ஆகும். கூத்தம் பூண்டியில் அவர்கள் உருவச் சிலைகளும் பெயர்களுடன் உள்ளன.

கால்கள் தூண்கள் என்றும் வழங்கப் பெறும். அதன் வேலைப்பாட்டுக்கு ஏற்பப் பல்வேறு வகைகளாக அவை அழைக்கப்பட்டுள்ளன. குதிரைக்கால், சிங்கக்கால், அணியொட்டிக்கால், சித்திரகண்டக்கால், நாயகக்கால், பந்தக்கால் எனக் கால்கள் பல்வேறு வகைப்படும். கொறடு முன்கொறடு, பின்கொறடு, இடப்பாகக் கொறடு, வலப்பாகக் கொறடு எனப் பலவகைப்படும். சிற்பம், கட்டிடக் கலையிலும் கொங்கு வேளாளர்கள் தேர்ந்துள்ளனர் என்பது தெரிகிறது.

குறிப்பிட்டவரது நலம் வேண்டித் திருப்பணி செய்வதும் உண்டு. பருத்திப்பள்ளியில் கண்ணந்தை சிலம்பாண்டை தன் மாமா செம்போத்த குலம் பிள்ளையாண்டை நலத்திற்காகவும், சோழமாதேவியில் குழாயர் குல அதிசயசோழன் அரசன் நலத்திற்காக மணிகைராயரும், குமரசாமிக்காலிங்கராயர், அவர் தம்பி சின்னையகவுண்டர், மணியம் குழந்தை வேலுப் பிள்ளை, சம்பிரதி குமரகுருபரம்பிள்ளை, மணியம் சாமிக்கவுண்டன் இவர்கள் நலத்திற்காக ஊத்துக்குழியிலும் திருப்பணிகள் செய்யப்பட்டன.

கொடைகள்

பல்வேறு வழிபாடுகளுக்காகவும், விழாக்களுக்காகவும் பொன்னும் பொருளும் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன. பொன்னால் ஆரம் (மாலை) செய்து அளித்துள்ளனர். பூசைக்கு வேண்டிய வெற்றிலைபாக்கு ஆகியன (இலையமுது, அடைக்காயமுது) கொடை கொடுத்துள்ளனர். படையலுக்கு (வெஞ்சனம்) வேண்டிய அனைத்துப் பொருள்களையும் கொடுத்துள்ளனர்.

வேதம் ஓத, ஆயிர நாமத்தால் அர்ச்சிக்க, இறைவனை இறைவியை திருவீதி

எழுந்தருளச் செய்ய, கார்த்திகைத்தீபத்திருவிழா, சிவராத்திரி நான்கு கால பூசைகள், தைப்பூசம், திருக்கல்யாண உற்சவம், புஷ்ப யாகம், திருமஞ்சனம் செய்விக்க, திருப்பள்ளி எழுச்சி, சிறுகாலைச்சந்தி, உச்சிச்சந்தி, இரவுசந்தி, அர்த்தசாமச்சந்தி முதலிய பலவற்றுக்கும் கொடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.

புன்செய் நிலங்களும், குளமும், குளம் நீர்பாயும் நன்செய் நிலமும் அளந்து எல்லைகாட்டிச் சிவன்கோயிலுக்குத் திருநாமத்துக்காணி ஆகவும், திருமால் ஆலயங்கட்குத் திருவிடையாட்டமாகவும் கொடைகள் அளித்துள்ளனர். ஊர்களே கொடையாகக் கொடுக்கப்பட்டுள்ளன. ஊரில் வசூலாகும் வரிகளும், சுங்கம், மகமை முதலிய பல வருவாயும் கோயிலுக்குக் கொடையாக அளிக்கப்பட்டுள்ளன.

பலர் புண்ணியத்தின் பொருட்டுச் சுமைதாங்கிக் கற்களும், தண்ணீர்ப் பந்தல்களும், விலங்குகள் நீர் குடிக்கக் கல்பண்ணைகளும் அமைத்துள்ளனர். கொங்கு நாட்டில் கோயில்கட்குக் கம்பு கொடையாகக் கொடுக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. நெல் கொடுக்க ஒப்புக்கொண்டபோதும் குளத்தில் நீர் இல்லாத போது (குளம் எத்தாத நாள்) நெல்லுக்குப் பதிலாகப் புன்செய்த் தானியங்கள் கொடையாகக் கொடுக்க அனுமதிக்கப்பட்டது.

மறைந்த முன்னோர்களின் நினைவாகக் கோயில்களில் தூண் நாட்டுவது கொங்கு வேளாளர் சமூகத்தில் முன்பு வழக்கமாக இருந்துள்ளது. வெள்ளலூர் வண்ணக்கரில் மூர்க்கன் செல்லன், அவன் தம்பி மூர்க்கன் தண்டன் ஆகியோர் தங்கள் தந்தை ஏற மூர்க்கன் நினைவாகச் சிவன் கோயிலில் தூண் நாட்டியுள்ளனர். குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயிலில் இவ்வாறு எடுக்கப்பட்ட தூண்களில் கல்வெட்டுக்களும் பொறிக்கப்பட்டுள்ளன.

தூரன் குமரகவுண்டன் மகன் செட்டிக்கவுண்டன் பிரியா விடை

தூரன் அரியணகவுண்டன் மகன் விருப்பண கவுண்டன் பிரியாவிடை

என்பவை தூண்களில் உள்ள எழுத்துக்களாகும்.

கொங்கு வேளாளர் தண்ணீர்ப்பந்தல்களில் தண்ணீர் மட்டுமல்ல வழிப்போக்கர்களுக்கு உப்பு, ஊறுகாய், நீராகாரம் கிடைக்கும். தேசாந்திரிகட்கு அன்னமிடச் சிவன்கோயில்கட்குக் கொடைகள் அளிக்கப்பட்டுள்ளன.

ஆவணிப்பேரூர்ப் பில்லகுல நடுவிலான் என்பார் மனைவி சிறுப்பெண் தன் மகனுக்குப் பில்லன் என்று பெயரிட்டு பெயர் விளங்கக் கோயிலுக்குக் கொடை கொடுத்துள்ளார்.

பெண்கள் அளித்த பெருங்கொடைகள்

கொங்கு வேளாளர் குடும்பத்துப் பெண்கள் குடும்பப் பொறுப்பிலும், விவசாயத்திலும் பெரும்பங்கு வகித்ததோடு சமூகப்பணிகளையும், சமயப்பணிகளையும் மேற்கொண்டு சிறந்து விளங்கியுள்ளனர். திருக்கோயில் திருப்பணிகளோடு விளக்குகள் கொடையளித்ததிலும் ஆண்களுக்குச் சரி சமமாகப்

பங்கு கொண்டுள்ளனர். சோழ பாண்டிய நாடுகளில் அரண்மனை அரச மகளிர் தவிர ஏனைய மகளிர் செய்த கொடைகள் அளவில் சிறியன. ஆனால் கொங்கு வேளாண் பெண்கள் தனித்தும் தம் கணவரோடு சேர்ந்தும் பற்பல கொடைகளைச் செய்துள்ளதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

- அவிநாசிதேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கி (காடை குலம்)
- அன்னிகாவன் மனைக்கிழத்தி கேசி (கொற்றந்தை குலம்)
- அதிராசராச வஞ்சி வேளான் மணவாட்டி (பூச்சந்தை குலம்)
- கண்ணன் பொத்தி மனைக்கிழத்தி சிறிய கண்டி (செவ்வாயர்குலம்)
- கறுப்பகவுண்டன் பெண் கங்காத்தாள் (மணியகுலம்)
- காங்கய தரையன் மனைக்கிழத்தி ஆண்டியான மங்கையர்க்கரசி (சாத்துவாய் குலம்)
- கேசன் மனைக்கிழத்தி அந்தியூராண்டி (சாத்தந்தை குலம்)
- கோவன் மனிச்சர் மனைக்கிழத்தி உண்ணாடி (பனங்காடை குலம்)
- சிலம்பன் நீலன் மனைக்கிழத்தி சிட்டன்காவி (பில்லர் குலம்)
- சிறியான் சடையான் மனைக்கிழத்தி தாவந்தாவி (சாத்தந்தை குலம்)
- சொக்கன் மனைக்கிழத்தி உடையான் மகள் குப்பாண்டி (கொள்ளி குலம்)
- வீரகாமிண்டன் உடையாண்டான் மனைக்கிழத்தி வாமதேவன் மகள் பிள்ளையம்மை (ஆவகுலம்)
- சின்னயகவுண்டன் அகமுடையாள் சிவகாமியம்மாள் (ஓதாளர் குலம்)
- சொக்கன் நடுவிலான் மனைக்கிழத்தி சிறுப்பெண் (பில்லர் குலம்)
- திருவானைக்காவன் விச்சாதிரன் மனைக்கிழத்தி ஆளுடையாள் (படைத்தலையர்)
- நல்லிசையாளன் மகள் அஞ்சாதான் மனைக்கிழத்தி நம்பியம்மை (படைத்தலையர்)
- நம்பி மனைக்கிழத்தி பிள்ளையாள்வி பாவை பிள்ளையம்மை (படைத்தலையர்)

வணிக ஈடுபாடு

கொங்கு வேளாளர் சிலர் வணிகத்திலும் ஈடுபட்டிருந்ததாகக் கல்வெட்டு மூலம் தெரிகிறது. நித்தவிநோதம் என்ற ஊரில் வாழ்ந்த வெண்டுவன் குல அதிருக்குறையான் திசையாயிரத்து ஐநூற்றுவ நானாதேசிகட்டு பாதுகாப்பு நகரம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளான் (அடைக்கலம்). செட்டிக் கவுண்டன் என்றும் செட்டியாக்கவுண்டன் என்றும் சிலர் பெயர் பெற்றுள்ளனர். கொங்கு வேளாளர்களின் காணியுரிமையுடைய குலதெய்வக் கோயில்கட்குச் சில ஊர்களில் செட்டியார்களும் காணியாளர்களாக உள்ளனர். பல ஊர்கள் செட்டிபாளையம் என்று பெயர் பெற்றுள்ளன.

' ஆதவூர் வெள்ளாளன் குண்டெலிகளில் கருங்காள மண்டலிக சுவாமியான

மன்றுளாடுவான் ', 'நடுவிற் பத்தியூர் வெள்ளாளன் மாடைகளில் முழையன் தேவனான பொன்னம்பலச் சிலசெட்டி ' என்பவர்களின் பெயரமைப்பை நோக்கும் போது அவர்கள் வணிகத்தில் ஈடுபட்டுள்ள கொங்கு வேளாளர்கள் என்று தெரிகிறது.

கொங்கு வேளாளர்களின் திருப்பணிபெற்ற பல்வேறு கோயில்களில் கொங்கு நாட்டு வணிகர்களும், வணிகத்தின் பொருட்டுக் கொங்கு நாடு வந்த பிற நாட்டு வணிகர்களும் பலர் பல திருப்பணிகளைச் செய்துள்ளனர். வேளாளர்களும் வணிகர் களும் இணைந்து பல அறச் செயல்கள் செய்துள்ளனர். கொங்கச்செட்டியார்கட்குக் கவுண்டர் பட்டமும் உண்டு என்பது கொங்குப் பட்டயங்களால் அறியப்பெறும் செய்தி யாகும். கொங்குச் செட்டிகளில் இராமஞ் செட்டிக் கவுண்டன் என்பது அவ்வாறான பெயர்களில் ஒன்றாகும்.

சமய ஒருமைப்பாடு

கொங்கு வேளாளர்கள் பெரும்பாலும் சைவ சமயம் சார்ந்தவர்களாக இருப்பினும் தங்கள் ஊரில் உள்ள திருமால் ஆலயங்கட்கும், கொங்கு நாட்டின் முக்கியமான பிற ஊர்களிலுள்ள திருமால் ஆலயங்கட்கும் பல கொடைகள் அளித்திருக்கின்றனர். கோயில் திருப்பணியில் பங்கேற்றிருக்கிறார்கள். வேளாளர்கள் பெரியநாட்டுச் சபைக்கு சித்திரமேழி சபை என்று பெயர். விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலும் பருத்திப்பள்ளி ஆதிகேசவப் பெருமாள் கோயிலும் சித்திரமேழி விண்ணகர் என்று பெயர் பெற்றுள்ளன. அவ்விரண்டு திருமால் ஆலயங்களும் கொங்கு வேளாளர்கட்கு மிகவும் முக்கியமான கோயிலாகும். சிவன் கோயிலுக்கும் திருமால் கோயிலுக்கும் பொதுவாக ஒரே கொடையளித்துள்ளனர்.

கொளாநல்லி பொன் குழலியம்மன் கோயில் கல்வெட்டொன்று சிவமயம் என்று தொடங்கி ராமஜெயம் என்று முடிகிறது. அக்கொடையைக் கொடுத்த கண்ணகுலப் பெரியவர் பெயர் திருமலைக்கவுண்டர் என்பது. பலருடைய பெயர்கள் வைணவப் பெயர்களாக உள்ளதைக் கல்வெட்டுக்கள் காட்டுகின்றன.

விசயமங்கலத்தில் உள்ள சமணக்கோயில் வீரசங்காதப் பெரும்பள்ளி என்றழைக்கப்படும் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில் ஆகும். அச்சமணக் கோயில்கட்கும் கொங்கு வேளாளர்கள் கொடை கொடுத்துள்ளனர். சமயப் பொதுநோக்கோடு கொங்கு வேளாளர்கள் திகழ்ந்துள்ளனர்.

சமூக ஒருமைப்பாடு

கொங்கு வேளாளர்கள் கொங்கு நாட்டில் வாழ்ந்த எல்லாச் சமூகத்தவர்களோடும் நேசமும், நல்லுறவும் கொண்டு வாழ்ந்துள்ளனர் என்று கல்வெட்டுக்கள் மூலம் தெரிகின்றது. பிற சமுதாயங்களோடு இணைந்து பலர் ஆலயப்பணிகளை மேற்கொண்டுள்ளனர். கொடைகள் அளித்துள்ளனர்.

முருங்கத்தொழுவு, நசியனூர், வெள்ளோடு போன்ற ஊர்களில் பொருளந்தை குலத்தாரும், சாத்தந்தை குலத்தாரும் கண்ணகுலத்தாரும் ஊர்க்கணக்கரோடு சேர்ந்து

கோயில் திருப்பணிகளைச் செய்துள்ளனர். எலவமலை சாத்தந்தை குலத்தார் கோயில் பூசாரிகளான ஆண்டிகளுடன் சேர்ந்து கோயில் கட்டியுள்ளனர். ஊதியூர் வாணவராய நல்லூர்க் கோயிலில் வத்தமுதலி மகள் தெய்வானை கோயில் திருப்பணிக்கு உதவியதை ஏற்றுக்கொண்டுள்ளனர்.

ஊஞ்சலூரில் வேளாளர்களும் வேட்டுவர்களும் இணைந்து கோயில் பணிசெய்துள்ளனர். வேளாளர் சபையும், வேட்டுவர் சபையும் கூட்டாகக் கொயில் கொடை அளித்துள்ளனர்.

ஊஞ்சலூர் நாகீசுவரர் கோயில் கல்வெட்டில் கொங்கு வேளாளர் தனஞ்செயகுலத் தாயாண்டார் அவ்வூர் மலைய வேட்டுவர், அந்துவ வேட்டுவர், நச்சுழி வேட்டுவர் ஆகியோரோடு இணைந்து கொடுமுடிக் கோயில்களின் மன்றாட்டுப் பெற்றுள்ளார்.

பூந்துறையில் காடைகுலப் பெருமக்கள் குப்பிச்சி நயினார், நல்ல நயினார், மூத்த நயினார் வேலாண்ட நயினார் ஆகியோர் பூவாணி வேட்டுவர், வெம்ப வேட்டுவர், வில்லிவேட்டுவர் ஆகியோரோடு சேர்ந்து பூந்துறை அய்யனார் கோயிலுக்கு விளக்கெரிக்க எண்ணெய் வழங்க ஏற்பாடு செய்துள்ளனர். சேவூரில் இருந்த வேளாளர் சபையும் (வெள்ளாநாட்டார்) வேட்டுவர் சபையும் (பூலுவ நாட்டார்) இணைந்து காரையப்பாடி என்ற ஊரை அழகப் பெருமாள் கோயிலுக்குக் கொடையாக அளித்துள்ளனர்.

கோயில்கட்குக் கொடை கொடுத்தும் ஆலயப் பணிகள் செய்தும் பொருட்செலவு செய்த கொங்கு வேளாண் பெருமக்கள் கொடையைக் கல்லில் வெட்ட ஓலை எழுதியவர்கள் பெயரையும், கல்லில் எழுத்துக்களைப் பொறித்தவர் பெயரையும், ஆலயப்பணி செய்த சிற்பியர் பெயரையும் கல்லில் பொறித்து அவர்கள் பெயரும் நின்று நிலவச் செய்த பெருமை வேறு எங்கும் காணப்படாத நிகழ்ச்சிகளாகும்.

கொற்றனூர்ப் பெரிய குல வேணாடுடையாரும், சிறுக்கிணறு ஆந்தை குலத்தாரும் இணைந்து கட்டிய பெரியநாயகியம்மன் கோயில் திருப்பணி வேலை செய்த பாப்பனாசாரி பெயர் பொறிக்கப்பட்டுள்ளது. ஜமீன் ஊத்துக்குழி சாத்தந்தை குலக் குமரசாமிக்காலிங்கராயர் அகத்தூர்அம்மன் கோயிலில் இருவேறு காலங்களில் செய்த திருப்பணிக்கல்வெட்டில் அய்யாறு குட்டியாசாரி மகன் எழுவராயன் கைவேலை, குருநாத ஆசாரிமகன் பத்திரனாசாரி என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

பூந்துறைக் காடைகுலக் குப்பன் அழைப்பித்தான் 1554ஆம் ஆண்டு புட்பவனமுடையார் கோயிலில் பாகம்பிரியா அம்மன் சன்னதியில் முன் மண்டபம் கட்டினார். மண்டப வேலை செய்தவர்கள் மார்த்தாண்டன், வசவப்பன் ஆகியோர் என்றும், இத்திருப்பணிக் கொடையை எழுதியவர் கணக்கு திருமலைநாதன் தீத்தான் என்றும் கல்வெட்டில் பொறிக்கப்பட்டுள்ளது.

கத்தாங்கண்ணி வெண்டுவ குலத்தார் செய்த ஆயிஅம்மன் கோயில் திருப்பணிக் கல்வெட்டுக்களில் கவில் எழுதியது சதாசிவ முதலியார், எழுதியது உபாத்தியாயர் முத்து, சின்னா போயன் என்ற பெயர்கள் காணப்படுகின்றன.

குல ஒற்றுமை

கொங்கு வேளாளர்கள் பல குலத்தார்கள் ஒரே கோயிலுக்குக் காணியுரிமை யுடையவர்களாக இருப்பர். கல்வெட்டுக்கள் மூலம் பல குலத்தார் இணைந்து ஆலயப்பணிகளை மேற்கொண்ட சிறப்பைக் கூறுகின்றன.

முருங்கத்தொழு அணியரங்கப் பெருமாள் கோயிலைப் பெரிய குலத்தாரும், வெள்ளோடு சாத்தந்தை குலத்தாரும் சேர்ந்து கட்டியுள்ளனர். கத்தாங்கண்ணி ஆயி அம்மன் கோயில் திருப்பணி வேலைகளை வேண்டுவன் குலத்தாரும், இருப்புலி செவந்தி குலத்தாரும் சேர்ந்து திருப்பணியை மேற்கொண்டனர். கொடுமணலில் சேரன், பாண்டியன், பனங்காடை குலத்தாரும், பாப்பினியில் கண்ணந்தை, தோடை குலத்தாரும், மயில்ரங்கத்தில் ஆந்தை, மாடை, வண்ணக்கன் குலத்தாரும், கீரனூரில் ஆதி, அந்துவன், காடை, விலையன், தேவேந்திரன், கீரை குலத்தவர்களும் இணைந்து கோயில் திருப்பணிகளை மேற்கொண்டதாகக் கல்வெட்டுக்கள் மூலம் அறிகின்றோம். பல கல்வெட்டுக்கள் குல ஒற்றுமையைக் காட்டுகின்றன.

திருவிளக்கு ஏற்றல்

திருப்பணிக்கு அடுத்ததாகக் கோயிலில் திருவிளக்கு ஏற்றுவதற்குக் கொடைகொடுத்த கல்வெட்டுக்களே மிகுதியாக உள்ளன. ஏறக்குறைய நூறுகல்வெட்டுக்கள் விளக்குக் கொடைக் கல்வெட்டுக்கள் உள்ளன. விளக்கு தன் சுடரால் இருளை நீக்கி சுற்றுப்புறம், பொருள்கள் ஆகியவைகளை விளக்கம் செய்கிறது. அதனால் அது விளக்கு ஆயிற்று. இருளைக் கண்டு பயந்த மனிதன் ஒளி கொடுக்கும் விளக்கை வணங்கினான். தன் வாழ்வுக்கு ஒளி கொடுக்கும் இறைவனை ஒளிவளர்விளக்கு என்று போற்றினான். அருளாளர்கள் தீப ஜோதியில் இறைவனைக் காணலாம் என்றனர். அருட்பெருஞ்சோதியில் இறைவனைக் கண்டனர். நமக்கும் காட்டினர்.

அதனால் திருக்கோயில்களில் விளக்கு வைப்பது மிகப் பெரிய புண்ணியமாகக் கருதப்பட்டது. விளக்குக் கொடைகள் கொங்கு நாட்டில் குறிப்பாகக் கொங்கு வேளாளர் சமுதாயத்திலேயே மிகுதியும் காணப்படுவது சிறப்புக் குரியதாகும்.

விளக்குகளில் இரு வகைஉண்டு. குறிப்பிட்ட சந்தி, பூசை நேரத்தில் அல்லது குறிப்பிட்ட நேரம் மட்டும் எரியும் விளக்கு சந்திவிளக்கு (சந்தியா தீபம்) எனப்படும். கோயிலில் இறைவன் சன்னதியில் எப்பொழுதும் எரியும் விளக்கு நந்தா தீபம் எனப்படும். சிலர் ஒரே சமயத்தில் இரு வகையான விளக்குகளையும் கொடையாக அளித்துள்ளனர்.

ஐந்து நாழிகை நின்றெரியும் விளக்கு, ஏழரை நாழிகை எரியும் விளக்கு எனக் குறிப்பிட்ட நேரம் எரியும் விளக்குகளும் உண்டு. விளக்கெரிக்கப் பொன், நாணயம், நெல், நிலம் கொடையாகக் கொடுக்கப்பட்டது, விளக்கெரிப்போர் வைக்கும் மூலப்பொருளைப் பெற்று கோயில் காணியுடைய சிவப்பிராமணர் சந்திர சூரியர் உள்ளவரை விளக்கு எரிப்போம் என்று ஒப்புக்கொண்டு எழுதிக் கொடுப்பர். அதைக் கல்வெட்டாகவும் கோயில் சுவர்களில் பொறிப்பர்.

குறிப்பிட்ட விளக்கு ஏற்றாவிட்டால் பின் இரண்டு பங்கு விளக்கு எரிக்கவேண்டும். தொடர்ந்து எரிக்காவிட்டால் தவறியவர்கட்குத் தண்டனையும் உண்டு. தமிழ்நாட்டில் விளக்கெரிக்க ஆடு, மாடு, எருமைகள் பெரும்பாலும் கொடையாகக் கொடுப்பர். அவை சாவா மூவாப்பசு, சாவா மூவா எருமை என அழைக்கப்படும். எப்பொழுதும் எண்ணிக்கை குறையாமல் இருக்க வேண்டும் என்பது பொருள். கொங்கு நாட்டில் கால்நடைச் செல்வம் மிகுதியாக இருப்பினும் கொங்கு வேளாளர் சமூகத்தினர் கால்நடைகள் கொடுத்ததாகக் ஒரு கல்வெட்டுக் கூடக் காணப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. கொங்கு வேளாளர் பெருமக்களேயன்றி அவர்கள் குடும்பத்துப் பெண்களும் திருவிளக்குக் கொடையளித்துள்ளனர்.

சிலர் விக்கெரிப்பதற்காக எண்ணெய் கொடுத்துள்ளனர். திருவிளக்குப்புறம் என்ற பெயரில் நிலம் கொடையாக அளித்து அதன் வருவாயைக் கொண்டு விளக்கெரிக்கப்பட்டது. திருக்காமக் கோட்டத்து நாச்சியார் கோயில் (அம்மன் கோயில்), மண்டபங்கள், வாயில், பிள்ளையார் கோயில் ஆகிய இடங்களில் விளக்கெரிக்கப் பலர் விளக்குக் கொடுத்துள்ளனர். பகலிலும், உச்சிச் சந்தியிலும் விளக்கேற்றப் பட்டது. விளக்கு ஒளி கொடுப்பதற்கு மட்டும் அல்ல பூசைக்குரிய மங்கலப் பொருளாகவும் கருதப்பட்டது. ஒருவர் தூபதீபம் கொடுத்துள்ளார்.

ஒரு விளக்கு முதல் 90 விளக்குகள் வரை கொடையாக அளிக்கப்பட்டன. அடியார் ஒருவர் சிவராத்திரி நான்கு காலபூசைக்காக 90 விளக்குள் கொடுத்துள்ளார். (விசயமங்கலம் சாத்துபாடி குலம் உடையான் தேவனான சிவகல்யாண நம்பி)

ஊர்ப்பெயராய்வு

கொங்கு நாட்டில் உள்ள பல ஊர்களின் பெயர்கள் காலப்போக்கில் மக்கள் பேச்சுவழக்கில் மாற்றம் பெற்றன. அதன் பண்டைய வடிவங்களைத் தெரிந்துகொள்ள கொங்கு வேளாளர் கல்வெட்டுக்கள் பயன்படுகின்றன.

கல்வெட்டில் உள்ள பெயர்	-	*இன்று வழங்கும் பெயர்*
அலைவாய்	-	அலைவாய்ப்பட்டி
ஆதவூர்	-	ஆதியூர்
ஆரைக்கல்	-	நாமக்கல்
இராசராசபுரம்	-	தாராபுரம்
இருப்பள்ளி	-	இருப்புலி
இலத்தூர்	-	எலத்தூர்
ஈஞ்சையூர்	-	ஈங்கூர்
கடற்றூர்	-	கடத்தூர்
கவையமுத்தூர்	-	கோயில்பாளையம்
கற்றாயன்காணி	-	கத்தாங்கண்ணி

காங்கயம்	-	அகிலாண்டபுரம் (ஒரு பகுதி)
காரையூர்	-	நத்தக்காடையூர்
குழாநிலை	-	கொளாநல்லி
குறிச்சி	-	கம்புளியம்பட்டி
குன்றத்தூர்	-	குன்னத்தூர்
கூவலூர்	-	கூகலூர்
கொல்லன்கூவல்	-	கொல்லன் கோயில்
கொற்றனூர்	-	சங்கரண்டாம்பாளையம்
கோவம்புத்தூர்	-	கோயமுத்தூர்
சதுமுகம்	-	சதுமுகை
சந்திரவசதி	-	திங்களூர் (சந்திரபுரி)
சிற்றில் ஓடு	-	சித்தோடு
தலையநல்லூர்	-	சிவகிரி
நசையனூர்	-	நசியனூர்
நம்பிபேரூர்	-	நம்பியூர்
நல்லய்யகவுண்டம்பாளையம்	-	நல்லியம்பாளையம்
நன்னனூர்	-	ஆனைமலை
நிர்மணி	-	பொன்னிவாடி
பட்டில்	-	பட்டிலூர்
பத்தியூர்	-	பருத்தியூர்
பல்லவிடம்	-	பல்லடம்
பழநாகம்பள்ளி	-	நாகம்பள்ளி
பழம்பூந்துறை	-	பூந்துறை
பரமுத்தி	-	பரமத்தி
பரன்சேர்பள்ளி	-	பரஞ்சேர்வழி
புலரி (யூர்)	-	பொருளூர்
பெருந்தொழு	-	முருங்கத்தொழு
பெரும்பழனம்	-	பெருமாநல்லூர்
மன்னியூர்	-	அன்னூர்
மின்னாமொழி	-	மின்னாம்பள்ளி

வள்ளிஎறிச்சில்	-	வள்ளியரச்சல்
வெளிலூர்	-	வெள்ளலூர்
வெள்ளக்கல்	-	வெள்ளகோயில்

சில ஊர்கள் அந்தணர் வசிக்கும் குடியிருப்புக்களைப் பெற்றுக் சதுர்வேதி மங்கலங்களாக விளங்கின.

1.ஈரோடு	-	மூவேந்த சோழச் சதுர்வேதிமங்கலம்.
2. இருப்புலி	-	சத்திரிய சிகாமணிச் சதுர்வேதிமங்கலம்.
3. சேலம்	-	இராசாசிரயச்சதுர்வேதி மங்கலம்.
4. பருத்திப்பள்ளி	-	இராசசிம்மச்சதுர் வேதிமங்கலம்

சில ஊர்கள் கோயிலுக்குக் கொடை கொடுக்கப்பட்டு நல்லூர் எனப்பெயர் பெற்றன.

1. கொங்கூர்	-	செயங்கொண்டசோழ நல்லூர்
2. கீரனூர்	-	கொழுமங்கொண்ட சோழநல்லூர்
3. கல்லிபாடி	-	சித்திரமேழி நல்லூர்
4. சோழமாதேவி	-	சோழமாதேவி நல்லூர்.
5. சேவூர்	-	செம்பியன் கிழானடி நல்லூர்
6. ஆள்வான் கோயில்	-	வீரசோழ நல்லூர்
7. கோயமுத்தூர்	-	வீரகேரள நல்லூர்.

சதுர்வேதி மங்கலங்களும் நல்லூரும் பெரும்பாலும் அரசன், அரசியர் தொடர்பாகவே பெயர் பெற்றுள்ளன.

கோவன்புத்தூர்

கோயன் என்ற இருளர் தலைவன் பெயர் ஓரிடத்தில் வருவதை வைத்துக்கொண்டு அவர் பெயரால் கோவன்புத்தூர் என ஏற்பட்டுக் கோயம்புத்தூராக மாறிற்று என்று கூறுவர். ஆனால் கொங்கு வேளாளர் பெருமக்கள் பலருக்குக் கோவன் என்ற பெயர் இருந்துள்ளதைக் கல்வெட்டுக்கள் கூறுகின்றன.

கோவன் வீரணுக்கமுடையார் (இடிகரை)

சோழன் கோவன் (கொங்கூர்)

கோவன் மணிச்சர் (விசயமங்கலம்)

கோவன் இருடனான இராசநாராயணக் காமிண்டன் (கோயில்பாளையம்)

கோவன் தேவன் ஆன உதய பாலன் (பெரியகளந்தை)

எனவே கொங்கு வேளாளர் கோவன் பெயராலும் கோவைக்குச் பெயர் ஏற்பட்டிருக்க வாய்ப்புள்ளது. இது பற்றி மேலும் ஆய்வு செய்யவேண்டும்.

சிவப்பிராமணர்

கொங்குச் சோழர், கொங்குப் பாண்டியர் காலத்தில் கொங்கு வேளாளர் பெருமக்கள் சமய நெறியுடன் ஆலயத்திருப்பணிகள் செய்து, பெரும் கொடைகள் கோயில்களுக்குக் கொடுத்து நிறைவாழ்வு வாழ்ந்ததற்குச் சிவாலயங்களின் உரிமையாளர்களாக இருந்து (காணியுடைய சிலப்பிராமணர்) கோயில்களைச் சிறப்புடன் வழிபாடு நடத்திக் காத்த சிவப்பிராமணர்களே காரணமாவார்கள்.

சோழர்கள் அவர்களைச் சோழ நாட்டிலிருந்து அழைத்துவந்ததாகக் கொங்குமண்டல சதகமும், திருச்செங்கோட்டுத் திருப்பணி மாலையும் கூறுகிறது. அதற்கேற்பக் கொங்கு வேளாளர் கொடைக்கல்வெட்டுக்களில் புகலிச்சக்கரவர்த்தி, சீகாழியான், தில்லை மூவாயிர நம்பி என்று சிவப்பிராமணர் பலர் பெயர்களைக் காண்கின்றோம். சைவமாமுனி, பிரமாதிராயன், சைவாலயச் சக்கரவர்த்தி, சைவபுரந்தரச் சக்கரவர்த்தி, அருமறை ஆதித்தச் சக்கரவர்த்தி, வீர நாராயணச் சைவமாமுனி என்ற பல பட்டப் பெயர்களை அவர்கள் பெற்றுச் சிறந்திருந்தனர். இப்பெயர்களால் அவர்களின் சமயத் தலைமை நன்கு விளங்குகிறது.

அவர்கள் காசிபகோத்திரம், காப்பியகோத்திரம், பாரத்வாஜகோத்திரம், ஆத்ரேய கோத்திரம், மாடல கோத்திரம், மொகல்லிய கோத்திரம், வாச்சியகோத்திரம், கௌசிக கோத்திரம், சாலங்காயண கோத்திரம், ஆலம்பாய கோத்திரம் முதலிய கோத்திரங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

அபிமான சோழபட்டன், ஆளவந்தசோழபட்டன், குலோத்துங்க சோழ பட்டன், வீரசோழ பட்டன் என்ற பட்டப் பெயர்களைப் பெற்றிருப்பதால் சோழரிடத்தும், பாண்டியன் சுந்தன் என்ற பெயரால் பாண்டியரிடத்தும் செல்வாக்கு மிக்கவர்களாக இருந்துள்ளமை புலப்படும்.

சித்திரமேழிசபை என்பது வேளாளர்சபை. நாற்பத்தெண்ணாயிரவர் என்பது வேளாளர்கட்குரிய சிறப்புப்பெயர். பல சிவப் பிராமணர்கள் சிதிரமேழிபட்டன், நாற்பத் தெண்ணாயிர நம்பி என்று பெயர் பெற்றிருப்பதால் கொங்கு வேளாளர் பெருமக்களிடம் அவர்கள் பெற்றிருந்த செல்வாக்கு நன்கு விளங்கும்.

சந்தியா தீபம், நந்தா தீபம் ஏற்றக் கொங்கு வேளாளர்களும், கொங்கு வேளாளர் குடும்பத்துப் பெண்களும் கொடுத்த பொன்னையும், காசுகளையும் சிவப்பிராமணர்களே பெற்று அதை நிறைவேற்ற ஒப்புக்கொண்டு கல்வெட்டு வெட்டிக் கொடுத்துள்ளனர். குடமும் குச்சியும் கொண்டு கோயில் உள்புகுவார் கொடைகளை ஏற்று நடத்தியுள்ளனர். அவர்களும் அவர்கள் வழியினரும் அறச்செயலைச் சந்திர சூரியர் உள்ளவரை நடத்த ஒப்புக் கொண்டுள்ளனர். பல சிவனடியார்கள் (பன்மகேசுவரர்) அறக்கொடைகளைக் காக்க வேண்டும் என்று கல்வெட்டின் இறுதியில் பொறிக்கப்பட்டிருக்கும்.

அறத்தைக்காத்தலும் அழித்தலும்

கோயிலுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் சந்திரசூரியர் உள்ளவரை நின்று நிலவ

வேண்டும் என்று கொடை கொடுத்தோர் விரும்பினர். பலசிவனடியார்கள் இதனைப் பாதுகாக்க வேண்டும் (பன்மாகேசுவரர் ரட்சை) என்றும், பல வைணவ அடியார்கள் பாதுகாக்க வேண்டும் என்றும், (ஸ்ரீ வைஷ்ணவர் ரட்சை) முறையே சிவன் கோயில் கல்வெட்டுக்களிலும், திருமால் கோயில் கல்வெட்டுக்களிலும் எழுதினர்.

இந்த தர்மத்திற்கு ரண்டு நினைச்சவன், அகிதம் பண்ணினவன், விகாதம் செய்தவன், அழியப் பண்ணினவனுக்கு மிகப்பெரிய பாவம் வரும் என்று கல்லில் எழுதினர்.

'கங்கைக்கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்தில் போவான்'

' காசிகங்கைக் கரையில் காராம்பசுவை மாதாபிதா குருக்களை வதைபண்ணின பாவத்திலே போவான்'

'அசுவத்தி கோகத்தி பிரமகத்தியடைவான்'

'பஞ்சமா பாதகம் செய்த பாவத்திலே போவான்'

'ஏழெச்சம் அறுவான்'

என்று கல்வெட்டின் இறுதியில் பொறித்தனர். காங்கயம் அகிலாண்டபுரம் கல்வெட்டில் நரகத்திற்கு நாற்றங்கால் ஆவான்' என்று எழுதப்பட்டுள்ளது.

சிவனடியார்களைக் கத்தியால் குத்திக் கொன்ற பாவம் வரும், மகேசுவரரைப் பத்திரத்தால் கொன்றது குலையாவதாகவும் என்றும் ஒரு கல்வெட்டில் கூறப்பட்டுள்ளது.

' இந்த தர்மத்தைத் தொடர்ந்து நடத்தினவன் காலுத்தூள் என் தலைமேலின '

என்றும் எழுதப்பட்டுள்ளது. பாவம் புண்ணியங்களில் இருந்த நம்பிக்கை இதனால் தெரிகிறது.

வரி கொடாவிடில்

கோயிலுக்கு கொடுக்க வேண்டிய வரியையோ அல்லது கோயில் நிலத்தை உழுது மேல் வாரமாக நெல்லையோ கொடுக்காதவர் வீட்டில் மண்கலங்களைத் தகர்த்து வெண்கலம் பறித்து அதனை ஈடு செய்து கொள்ளும் வழக்கம் இருந்தது. இது மண்கலந் தகர்த்து வெண்கலம் பறித்துக் கொள்ளல் என்று கூறப்பட்டிருக்கும்.

ஓலையும் செப்பேடும்

கல்வெட்டுச் செய்திகள் முதலில் ஓலையில் எழுதப் பெறுவது வழக்கம். சில கல்வெட்டுக்களின் இறுதியில் ஓலை, ஓலை கொடுத்தோம் என்ற சொற்கள் வருவதைக் காணலாம். ஓலையில் உள்ள எழுத்துக்களை பளிச் என்று தெரிகிற பொருளில் கல்லில் எழுதி அதைக் கல்வெட்டு எழுத்துக்களாகப் பொறிப்பர். சில கல்வெட்டுக்களில் ஓலையில் எழுதியது யார், அதைக் கல்லில் கொத்தியது யார் என்றும் எழுதப் பெற்றிருக்கும்.

சிலருக்குக் கொடுக்கப்பட்ட உரிமைகள் கோயில் சுவர்களில் கல்லில்

வெட்டியபின் அவ்வாசகங்கள் செப்பேட்டில் பொறிக்கப்பட்டு உரிமையாளர்கட்குக் கொடுப்பதும் வழக்கம். சில ஓலைகளில் செம்பிலும் சிலையிலும் செய்து கொள்ளுக என்று கூறப்பட்டிருக்கும். ஓலைகள் விரைவில் அழிந்து விடுவதாலும், செப்பேடுகள் தனிப்பட்டவர் உடைமையாக இருப்பதாலும் அவை பெரும்பாலும் கிடைப்பதில்லை. கல்லில் பொறித்த கல்வெட்டுக்கள் மட்டுமே நமக்கு இன்று வரலாற்று ஆதாரங்களாகக் காட்சி தருகின்றன.

பொதுவாக ஓலையை முதல் பிரதி என்றும், கல்வெட்டை இரண்டாம் பிரதி என்றும், செப்பேடுகளை மூன்றாம் பிரதி என்றும் கூறுவர். செப்பேட்டை வடமொழியில் 'திரிபலி தாம்ரசாசனா' என்று கூறுவர்.

பழமையைப் பாதுகாப்போம்.

ஏறக்குறைய ஆயிரம் ஆண்டுகளாக கல்லில் பொறிக்கப்பட்டு அழியாமல் நின்று நிலவி, காலமாறுபாட்டால் சில அழிவுகளைப் பெற்றிருப்பினும் நம் முன்னோர் வாழ்வியல் நெறியை நமக்குக் காட்டும் இக் கல்வெட்டுக்கள் நம் சமுதாயத்தின் மாபெரும் சொத்தாகும்.

இந்த எழுத்துக்கள் மூலமாக நம் முன்னோர்களைக் காணுகின்றோம். அவர்களோடு நேரில் உரையாடுகின்றோம். நீங்களும் நாங்கள் காட்டிய அறவழியில் நடந்து மிகப் பெரிய புண்ணியத்தையும், புகழையும் பெறுங்கள் என்று அவை நமக்குக் கூறாமல் கூறுகின்றன.

நமது சமுதாயப் பெருமக்களின் சமய ஒருமைப்பாடு, சமூக ஒருமைப்பாடு, குல ஒருமைப்பாடு, சமுதாய வாழ்வு, சமய நம்பிக்கை, கோயில் வழிபாட்டுக்கும், திருப்பணிகட்கும், விழாக்களுக்கும் கொடுத்த கொடைகள், கிணறுகள் வெட்டி, தண்ணீர்ப்பந்தல்கள் வைத்து சுமைதாங்கி நிறுவி, நீர் நிலைகளைப்பாதுகாத்துச் செய்த பொதுப்பணிகள், அவர்கள் பொருளாதார நிலை, செல்வச் செழிப்பு, வேளாண்மை, பணியாளர்களை மதித்துப் பணிகொள்ளும் தன்மை, முன்னோரிடத்தும், அவர்கள் செய்த அறச்செயலிடத்தும் கொண்டிருந்த பற்று, பெண்களுக்குக் கொடுத்த சம உரிமை, பொது வாழ்வில் பெண்கள் பெற்ற பங்கு, குடும்ப ஒற்றுமை இவைகள் பற்றிய முன்னோர் செய்திகளை நமக்கு அறிவிக்கும் ஒரே ஆதாரம் இக் கல்வெட்டுக்கள் தான்.

திருப்பணி ஆர்வத்தால் நம் முன்னோர்களே கல்வெட்டுக்களில் அருமை தெரியாமல் பலவற்றை அழித்துவிட்டார்கள். இன்றும் பல ஊர்களில் அந்த நிலை தொடர்வது மிகவும் வருத்தத்துக்குரியது. இனியும் அழிவு ஏற்படாவண்ணம் அவைகளைப் பாதுகாப்பது நம் கடமையாகும்.

நன்றியுரை

கடந்த 40 ஆண்டு காலமாக கொங்கு நாடு, கொங்குச் சமுதாயம் பற்றிய பல்வேறு ஆய்வுகளை மேற்கொண்டு வரும் என் முயற்சிகளைக் கொங்குச் சமுதாயம் பாராட்டி ஊக்கமூட்டி வந்துள்ளது. 1973ஆம் ஆண்டிலேயே என்னை பேரூராதீனப் புலவராக்கிக் கல்வெட்டறிஞர் பட்டமளித்துச் சிறப்பித்த பேரூர் ஆதீனத் தலைவர் தவத்திரு

சாந்தலிங்க இராமசாமி அடிகளார், என் பணிகட்கு எப்பொழுதும் ஆசி வழங்கிப் பாராட்டும் தவத்திரு. குமரகுருபர அடிகளார், தவத்திரு. மருதாசல அடிகளார், பழனி தவத்திரு. சாது சண்முக அடிகளார், என்னைப் பல்வேறு வகையில் ஊக்குவிக்கும் 'பத்மபூஷன்' அருட்செல்வர் டாக்டர். நா. மகாலிங்கம் அவர்கள், பண்ணாரியம்மன் சுகர்ஸ் தலைவர் டாக்டர். எஸ்.வி. பாலசுப்பிரமணியம் அவர்கள், முன்னாள் அமைச்சர்கள் திருவாளர்கள் துரை இராமசாமி, சி. பொன்னையன், சென்னை கொங்கு நண்பர்கள் சங்கப் பொறுப்பாளர்கள், கொங்கு வேளாளக் கவுண்டர் பேரவைப் பொறுப்பாளர்கள், ஈரோடு கொங்கு இளைஞர் சங்கப் பொறுப்பாளர்கள், இராசிபுரம் கொங்கு நாட்டுவேளாளர் அறக்கட்டளைப் பொறுப்பாளர்கள், பெங்களூர் கர்நாடக கவுண்டர்கள் சேவா சங்கப் பொறுப்பாளர்கள், திருச்செங்கோடு கொங்கு வேளாளர் சங்கப் பொறுப்பாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக. அமெரிக்க நாட்டு ஹூஸ்டன் நகரில் இருந்தாலும் என் பணிகளை நெறிப்படுத்தும் முனைவர் கண்ணந்தை நா. கணேசன் அவர்கட்கு நன்றி உரியதாகுக.

1981ல் கொடுமணல் கோயில், குல வரலாற்றை முதலில் எழுத தங்கம்மன் கோயில் வி. இராமசாமிக்கவுண்டர் அவர்கள் வாய்ப்பளித்தார்கள். பின்னர் என்னை அன்புடன் அழைத்து தங்கள் குலவரலாறுகளையும், கோயில் வராலாறுகளையும் ஆய்வு செய்து தொகுத்து எழுத வாய்ப்பளித்த கொங்கு நாடெங்கும் பரந்து விளங்கும் 65 குலக் கோயில் நிர்வாகிகளுக்கும், என் ஆய்வுப் பணிகட்கு ஊக்கமூட்டி தங்களில் ஒருவனான எனக்குத் தனிச் சிறப்பளித்துப் பாராட்டி மகிழும் எங்கள் தென்முகம் வெள்ளோடு அருள்மிகு இராசாசுவாமி நற்பணி மன்றத் தலைவர் என்.டி. கண்ணுச்சாமி உள்ளிட்ட அனைத்துப் பொறுப்பாளர்கட்கும் என் நன்றி உரியதாகுக. 2007 எஸ்.கே.எம். இலக்கிய விருதளித்து என் பணிகளைப் பாராட்டிய திரு. எஸ்கேஎம். மயிலானந்தன், த. ஸ்டாலின் குணசேகரன் ஆகியோருக்கு என் மனமார்ந்த நன்றி.

ஆய்வுப் பணிகட்கெல்லாம் உடனிருந்து உதவி, என்னோடு இணைந்து எல்லா நிகழ்வுகளிலும் தக்க வழிகாட்டியாக இருப்பவரும், என் ஆய்வுப் பணிகட்குத் துணையாக இருப்பவரும் நண்பர் செவாலியர் டாக்டர். கொங்கு என். கொளந்தசாமி அவர்கள் ஆவர். அவர்கட்கு என் மனமார்ந்த தனிப்பட்ட நன்றி உரியதாகுக.

குடும்பப் பொறுப்புக்கள் அனைத்தையும் தான் ஏற்றுக்கொண்டு முழுநேர ஆய்வுப் பணிகளில் என்னை ஈடுபடச் செய்யும் என் வாழ்க்கைத் துணைவியார் கௌரி அவர்கட்கும், என்னை விழுதுகளாக இருந்து பேணும் என் மக்கள் இரா. ஜெயப்பிரகாஷ், இரா. செந்தில்குமார், இரா. ஜெயமோகன் ஆகியோருக்கும், என் குடும்பத்தார் அனைவருக்கும் என் நன்றி.

சிறப்பாக இந்நூலை ஒளி அச்சுச் செய்த ஈரோடு வர்ணாலயம் ஆப்செட் உரிமையாளர் பாலாஜி அவர்கட்கும், இந்நூலை அச்சிட்ட ஈரோடு காயத்ரி ஆப்செட் அச்சக உரிமையாளர்கட்கும் என் மனமார்ந்த நன்றி உரியதாகுக.

அன்பன்
செ. இராசு

ஈரோடு
1-6-2007

கொங்கு சமுதாயக் குலங்கள்

வடகரைக்கவுண்டர் குலங்கள் (நரம்பர்)

1. ஆவ குலம்
2. ஆவரான் குலம்
3. ஊம குலம்
4. எருமை குலம்
5. ஏறுமயில் குலம்
6. கணவாள குலம்
7. கண்ண குலம்
8. கண்ணி குலம்
9. காடை குலம்
10. காரியான் குலம்
11. குங்கிலியான் குலம்
12. குரியான் குலம்
13. கொன்னதியான் குலம்
14. கோதண்டியான் குலம்
15. கோவேந்தர் குலம்
16. சாத்தந்தை குலம்
17. செல்ல குலம்
18. நரபால குலம்.
19. பண்ண குலம்
20. பவள குலம்
21. பாரியூரான் குலம்
22. பால குலம்
23. பில்லை குலம்
24. புல்ல குலம்
25. பூமன் குலம்
26. பேர்வாழ குலம்
27. பேரீஞ்சியான் குலம்
28. மணியன் குலம்
29. மேனி குலம்
30. வக்கண குலம்
31. வண்ண குலம்
32. வந்தன் குலம்
33. வாணி குலம்
34. வேத குலம்
35. வேந்த குலம்

நாட்டுவேளாள கவுண்டர் குலங்கள்

(1) கண்ணன் குலம் (2) செல்ல குலம் (3) பண்ணை குலம்
(4) மணியன் குலம் (5) விழியன் குலம்.

படைத்தலைக் கவுண்டர் குலங்கள்

(1) ஈஞ்சன் குலம் (2) சாத்தந்தை குலம்
(3) சாத்துவாய் குலம் (4) பயிரன் குலம்
(5) புள்ளந்தை குலம் (6) பூமன் குலம்
(7) பொருந்தை குலம் (8) மணியன் குலம்
(9) மேதி குலம் (10) வாணன் குலம்
(11) வாணி குலம்.

பால வேளாளர் குலம்

1. ஆதிக்க குலம்
2. கருந்துளிகுலம்
3. களஞ்சியன் குலம்
4. குந்தவை குலம்
5. கொத்தண்டியர் குலம்
6. கோட்டேர் குலம்
7. சாமைக்களத்தார் குலம்
8. சிட்ட குலம்
9. செந்துளி குலம்
10. செம்ப குலம்
11. பில்ல குலம்
12. புத்த குலம்
13. புலிய குலம்
14. பைத்தலை குலம்
15. மலைய குலம்
16. மாட குலம்
17. முகில குலம்
18. முருக குலம்
19. மேல் மணியர் குலம்
20. மோட்டம்பட்டியார் குலம்
21. வரகுண்ணாப் பெருங்குடியர் குலம்
22. வெள்ளத்தலை குலம்
23. வேம்ப குலம்
24. வைத்தலை குலம்

கொங்கு வேளாளர் குலங்களோடு ஒத்துவரும் வேட்டுவ சமூகக் குலங்கள் :

1. அக்கினி வேட்டுவர்
2. அந்தவ வேட்டுவர்
3. இந்திர வேட்டுவர்
4. கண்ண வேட்டுவர்
5. கருங்கண்ண வேட்டுவர்
6. காடை வேட்டுவர்
7. காரி வேட்டுவர்
8. சாத்தந்தை வேட்டுவர்
9. சூரிய வேட்டுவர்
10. செங்கண்ண வேட்டுவர்
11. செம்ப வேட்டுவர்
12. சேர வேட்டுவர்
13. தனஞ்செய வேட்டுவர்
14. தூர வேட்டுவர்
15. பனைய வேட்டுவர்
16. பண்ண வேட்டுவர்
17. பாண்டிய வேட்டுவர்
18. பிரம வேட்டுவர்
19. பூச்சந்தை வேட்டுவர்
20. பொன்ன வேட்டுவர்
21. மணிய வேட்டுவர்
22. மயில வேட்டுவர்
23. ம்லைய வேட்டுவர்
24. மூலவேட்டுவர்
25. வாகை குல வேட்டுவர்
26. வெள்ளை குலம்
27. விளிய குலம்
28. வேந்த குலம்
29. வேம்ப குலம்

பொருளடக்கம்

கல்வெட்டுக்கள்

(எண்கள் பக்கங்களைக் குறிக்கும்)

30.	செட்டர் குலம்	-	81
31.	செம்பர் குலம்	-	82
32.	செம்பூத்தன் குலம்	-	83, 191
33.	செல்லன் குலம்	-	87, 193
34.	செவந்தி குலம்	-	93, 169
35.	செவ்வாயர் குலம்	-	93
36.	சேடர் குலம்	-	95
37.	சேரன் குலம்	-	96, 170, 190
38.	சேரிலான் குலம்	-	97
39.	சோழன் குலம்	-	97
40.	தனஞ்செய குலம்	-	98
41.	தூரன் குலம்	-	100
42.	தேவேந்திரன் குலம் (தேவந்தை)	-	103, 170
43.	தோடன் குலம் (தோடை)	-	105
44.	பண்ணை குலம்	-	106
45.	பதரி குலம்	-	106
46.	பயிரன் குலம்	-	106
47.	பவளன் குலம்	-	111, 193
48.	பனங்காடை குலம்	-	112, 170
49.	பாண்டிய குலம்	-	170
50.	பில்லன் குலம்	-	113
51.	பிள்ளந்தை குலம்	-	117
52.	பூசன் குலம்	-	118
53.	பூச்சந்தை குலம்	-	120, 194
54.	பூந்தை குலம்	-	121
55.	பூமன் குலம்	-	122
56.	பெரிய குலம்	-	122, 169
57.	பைதலை குலம்	-	125
58.	பொன்ன குலம்	-	194
59.	பையர் குலம்	-	126
60.	பொருளந்தை குலம்	-	129, 190, 191
61.	மணியன் குலம்	-	132, 190, 194
62.	மலையர் குலம்	-	135
63.	மாடை குலம்	-	137, 170

காணிப்பாடல்கள்

அந்துவன் குலம்

இடம்	-	கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பழநாகம் பள்ளி, மகாபலீசுவரர் கோயில்
காலம்	-	வீரராசேந்திர தேவனின் பத்தாவது ஆட்சியாண்டு, கி.பி. 1217
செய்தி	-	பழநாகம் பள்ளி வெள்ளாளன் அந்துவன் குல பெருக்கன் வஞ்சிவேளான் பெற்றான் என்பவர் அளித்த கொடை

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் சிரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பத்தாவது வீரசோழமண்டலத்து வெங்கால நாட்டுப் பழ நாகம்பள்ளி வெள்ளாளரில் அந்துவரில் பெருக்கன் வஞ்சி வேளான் ஆன பெற்றானேன் வீரசோழ....

2

இடம்	-	ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கீரனூர் ஆதி நாதேசுவரர் கோயில்
காலம்	-	வீரராசேந்திர தேவனின் பதினைந்தாம் ஆட்சியாண்டு, கி.பி.1222
செய்தி	-	கீரனூர் ஆதிநாதேசுவரர் கோயில் கட்டும்போது கீரனூர் வெள்ளாளன் அந்துவன்குல இளைய செல்வநாயனான இஞ்சி வேளான் ஒரு தூண் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதினைந்தாவது ஆதி நாத ஈசுரமுடையார் கோயில் திருமண்டபத்து நாயகக்கால் செய்வித்தேன் கீரனூரிலிருக்கும் வெள்ளாளன் அந்துவர்களில் இளைய செல்வ நாயனான இஞ்சி வேளானேன் இக்கால் தூண் செய்வித்தேன்.

3

ஆடர் குலம்

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்
காலம்	-	வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி.1489-1500
செய்தி	-	பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்ககொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபையில் ஒரு உறுப்பினர் ஆடர்குல நல்ல பெருமாள்.

கல்வெட்டு

பழமங்கலத்து வெள்ளாளன் ஆடரில் நல்ல பெருமாள் எழுத்து.

4

ஆதி குலம்

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பழநாகம்பள்ளி மகாபலீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திர சோழனின் 18 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1225

செய்தி - பழநாகம் பள்ளி வெள்ளாளன் ஆதிகுலத்தைச் சேர்ந்த புருஷ மாணிக்கச்சேடயன் மகாபலீசுவரர் கோயிலில் சந்திவிளக்கு வைக்க ஐந்து கழஞ்சு பொன்கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பந்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதினெட்டாவது வெங்காலநாட்டு பழநாகம்பள்ளி வெள்ளாளன் ஆதிகளில் புருஷமாணிக்கச் சேடயன் மாவலீசுவரமுடையார்க்கு வைச்ச சந்திவிளக்கொன்றுக்கு ஒடுக்கின பொன் ஐங்கழஞ்சு கோயில் காணியுடைய சிவப்பிராமணன் ஆநாயர் உடையரவி.........................

5

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பழநாகம்பள்ளி மகாபலீசுவரர் கோயில்

காலம் - கொங்குச் சோழர் காலம்

செய்தி - பழநாகம்பள்ளி வெள்ளாளன் ஆதிகுல பெரியான் என்பவர் மகாபலீசுவரர்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள்....சோழ...பழநாகம்பள்ளி வெள்ளாளன் ஆதிகளில் .....பெரியான்...மாவலீசுவர முடையார்க்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்று....காணியுடைய சிவப்பிராமணன்...

6

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பழநாகம்பள்ளி மகாபலீசுவரர் கோயில்

காலம் - குலோத்துங்க சோழனின் காலம், கி.பி.1148-1167

செய்தி - பழநாகம்பள்ளி வெள்ளாளன் ஆதிகளில் தனவேலன் மகாபலீசு

வரமுடையார்க்கு சந்திவிளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழ தேவர்க்கு........வெங்கால நாட்டுப் பழநாகம்பள்ளி வெள்ளாளன் ஆதிகளில் தனவேலன்......... மாவலீசுரமுடையார்க்கு வைச்ச சந்தி விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின பொன்........

7

ஆந்தை குலம்

இடம்	-	ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயில்
காலம்	-	கி.பி. 13-ஆம் நூற்றாண்டு
செய்தி	-	ஆந்தைகுல வெள்ளாளன் பிள்ளை பிள்ளையாழ்வியான பிறை சூடும்பெருமாள் கோயில் திருப்பணியின்போது இரண்டு திருநிலைகால் கொடையாகக் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ காங்கையத்து நாயனார் திரு அகத்தீசுரம் உடையார் கோயில் அர்த்த மண்டபத்தில் திருநிலைகால் இரண்டும் வெள்ளாளன் ஆந்தைகளில் பிள்ளை பிள்ளையாழ்வியான பிறைசூடும் பெருமாள் என் தன்மம்.

8

இடம்	-	கரூர் மாவட்டம், கரூர் வட்டம்,பரமத்தி அருகில் முன்னூர் மோள பாளையம் மலைப்படி
காலம்	-	கி.பி. 1758
செய்தி	-	முன்னூரில் வாழ்ந்த குறிச்சி ஆந்தை குலத்தைச் சோந்த சின்னத் தம்பிக்கவுண்டர் மகன் காசி உடையான் சின்னத்தம்பிக்கவுண்டர் மலைபபடியின் ஓரங்களில் கல் சுவர் கட்டினார்.

கல்வெட்டு

வெகுதானிய வருஷம் மாசி மாரம் 5 தேதி முன்னூரு குறிச்சி ஆந்தை கூட்டம் சின்னத்தம்பிக் கவுண்டன் குமாரன் காசி உடையான் சின்னத்தம்பிக்கவுண்டன் கல்லுக்கட்டு உபயம்.

9

இடம்	-	திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொங்கூர், பசுபதீசுவரர் கோயில்

காலம் - 16-ஆம் நூற்றாண்டு

செய்தி - திருவிளக்கும் எண்ணெயும் உபயம்

கல்வெட்டு

கொங்கூரான செயங்கொண்ட சோழ நல்லூர் பசுபதீசுவரர் பக்தன் வெள்ளாளன் ஆந்தை குல பிரமாண்டக்கவுண்டர் திருவிளக்கு உபயம் வருடம் 12 வள்ளம் நெய்

10

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி, நிர்மலீ சுவரர்கோயில்

காலம் - கி.பி. 1832, சங்கு சக்கர திருமலைசாமி தேவர்க்கு முதலாண்டு

செய்தி - பொன்னிவாடி கிராமம் குசவலசு வெள்ளகோயில் ஆந்தைகுலம் புள்ளாக்கவுண்டர் செய்த ஆலயத்திருப்பணி

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சங்கு சக்கர திருமலைசாமி தேவர்க்கு யாண்டு முதலாவது தென் பொங்கலூர் நாட்டில் நிர்மலியூரிலே நிர்மலியூர் சுவாமி மலையில் ஆலயம் சீர்ணம் உத்தாரணம் செய்து ஸ்ரீமது சங்குசக்கர திருமலைசாமி கிருபா கடாட்சத்துனாலே அனுக்கிரகம் பெற்ற பொன்னிவாடி கிராமம் குசவலசிலேயிருக்கும் வெள்ளகோயில் ஆந்தை குலாதிபனாகிய புள்ளாக்கவுண்டன் செய்த தர்மம் சாலியவாகன சகாத்தம் 1754 கலியுக சகாத்தம் 4933 மேல் செல்லா நின்ற கர வருஷம் மார்கழி மாதம் 24 தேதி வெள்ளிக்கிழமையும் அவிட்ட நட்சத்திரமும் கூடின சுபதினத்தில் புள்ளாக்கவுண்டன் இந்தச் சிவ திருப்பணி சீர்ணம் உத்தாரணம் உபயம் பெரிய பண்டிதர் மகேஸ்வரர் ரட்சை.

11

இடம் - சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், பெரிய சோறகை பிரானீசுவரர்கோயில்

காலம் - போசள வீரராமநாதனின் பதினேழாம் ஆட்சியாண்டு

செய்தி - திருக்கற்றளி எடுத்து அமுதுபடிக்கு நிலமும் நந்தவனத் தோப்பும் அளித்தவர் சோறகை முதலிகளில் ஆந்தை இளமன் முதலி

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகல புவனச் சக்கரவர்த்தி போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 17வது கொங்கான வீரசோழ மண்டலத்து வட பூவாணிய நாட்டு சோறகையில் முதலிகளில் ஆந்தை இளமன் முதலியேன் நாயனார் பிரானீசுவரம் உடைய நாயனார்க்கு திருக்கற்றளி திருப்பணி செய்வித்தேன் இளமன் முதலியேன் இந்நாயனார்க்கு அமுதுபடி சாத்துப்படி திருப்பணிக்கு உடலாக ஊரு

முதலிகளோம் தெற்கில் வாசலில் சிற்றேரியில் ஏரிக்கீழ் நன்செய் நிலம் திருநாமத்துக் காணியாக விட்ட நிலம் குழி நூற்றைம்பதும் சோறகையில் ஊராளிச் சமுத்திரம் என்று பேர் பட்ட ஏரியில் நன்செய்யாக ஏரிக்கீழ் விட்ட குழி இருநூறும் புன்செய் நெட்டம் பண்பட்ட கொல்லையும் நாற்பாலெல்லைக்கு.. பர் கிழக்கெல்லை தளிய் மடைக்கு மேற்கும் மேற்கெல்லை செருவிடையிட்டேரிக்குக் கிழக்கும் வடக்கெல்லை ஆரியூர் இட்டேரிக்குத் தெற்கும் தெற்கெல்லை இரண்டாவது பெருவிடையிட்டேரிக்கு வடக்கும் இக்கொல்லைக்கு இதெல்லையாகவும் இத்தன்மம் சோறகையில் நாயனார் பிரானீசுவரம் உடைய நாயனார்க்கு திருநந்தவனம் திருத்தோப்புக்கு கிழக்கெல்லை கழனியான வேளார் தோட்டத்துக்கு மேற்கும் தெற்கெல்லை கழனிக்கு வடக்கும் மேற்கெல்லை அகமுக்கும் கிழக்கும் வடக்கெல்லை காரியாக்கிக் கிணத்துக்குத் தெற்கும் தோப்புக்கு இதெல்லையாகவும் இந்நாயனார்க்கு திருநாமத்துக் காணியாக விட்டோம் இச்சோறகையில் ஊரும் முதலிகளும்.

12

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம்பூண்டி ஓங்காளியம்மன் கோயில்

காலம் - கி.பி. 1765

செய்தி - ஆந்தை குலம் சின்ன செல்லப்பகவுண்டர் இரண்டு பூதம் செய்தார்.

கல்வெட்டு

பார்த்திப வருடம் சித்திரை மாதம் 5 தேதி கூத்தம்பூண்டி காணியாளரில் ஆந்தை குலம் வேலகவுண்டர் மகன் நல்லிக்கவுண்டர் மகன் சின்ன செல்லப்பகவுண்டர் பூதமிரண்டு உபயம்.

13

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு கூத்தம்பூண்டி புவனேசுவரர்கோயில்

காலம் - கி.பி. 1744

செய்தி - ஆந்தைகுலம் தாத்தா, மகன், பேரன் உருவச்சிலைகளின் கீழே எழுதப்பட்ட பெயர்கள்

கல்வெட்டு

ரக்தாட்சி வருஷம் ஆவணி மாதம் கூத்தம்பூண்டி காணியாளரில் ஆந்தைகுலம் வேலகவுண்டர் மகன் வில்லமரத்து நல்லிக்கவுண்டர் ஆந்தைகுலம் செல்லப்பகவுண்டரும் தேவியும்

14

இடம் - வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், கண்டம்பட்டு நடுகல்

காலம் - கி.பி. 9ஆம் நூற்றாண்டு, தகடூர் மகேந்திர வர்மன் ஆட்சியாண்டு

செய்தி - மேல் வேணாட்டு ஆந்தைபாடி பெரும்பாண அரசரின் ஊர்

கல்வெட்டு

கோவிசைய மயிந்திர பருமர்க்கு யாண்டு பதினெட்டாவது மீவேணாட்டு ஆந்தைபாடி பெரும்பாணரைசரு மருமக்கள் பொற்சேந்தியான் சேவகரு தொறுக் கொண்ட ஞான்று மீட்டுப் பட்டான் வேணாட்டு நந்தியார் மகன்

15

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், முன்னூர் மலை தனிக்கல்

காலம் - கி.பி. 1758

செய்தி - வேலூர் ஆந்தைகுல சின்னண கவுண்டர் செய்த ஒரு கொடை

கல்வெட்டு

வெகுதானிய வருஷம் தையி மாதம் 4 ஆம் தேதி வேலூரு ஆந்தை கோத்திரம் புள்ளாக் கவுண்டர் குமாரர் சின்னணகவுண்டன் உபயம்.

16

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம்பூண்டி அத்தனூரம்மன் கோயில்

காலம் - கி.பி. 1771

செய்தி - ஆந்தைகுலம் சின்ன செல்லப்பகவுண்டன் செய்த திருப்பணிகள்

கல்வெட்டு

கர வருஷம் பங்குனி மாதம் 5 ஆம் தேதி கூத்தம்பூண்டி காணியாள ஆந்தை குலம் வேலகவுண்டன் மகன் நல்லிக்கவுண்டன் மகன் சின்ன செல்லப்பகவுண்டன் சிகரம் சுத்துமதிள் முன் சிகரம் அவனுட உபயம்.

17

இடம் - வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், அய்த்தாம் பாளையம் நடுகல்

காலம் - 11-ஆம் நூற்றாண்டு, பரகேசரி ஆட்சியாண்டு 4

செய்தி - ஆந்தை பொன்னிமகன் மோடையன் தொறுமீட்டு இறந்ததற்கு நடுகல்

கல்வெட்டு

கோப்பரகேசரிபன்மர்க்கு யாண்டு நாலாவது வாணகோவரையர் வேட்டுவதியரையரால் மேற்கோவலூர் நாட்டு அள்ளிப்பாடி உடைய ஆந்தை பொன்னி மகன் மோடையன் தொறுமீட்டுப்பட்டான் கல்.

18

ஆவ குலம்

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயில்
காலம்	-	இராசகேசரி வீரபாண்டியனின் 17-ஆம் ஆட்சியாண்டு கி.பி.1282.
செய்தி	-	வாமதேவன் மகளும் ஆவ குல வீரகாமிண்டன் உடையாண்டான் மனைவியுமான பிள்ளை அம்மை விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் சந்தியா தீபம் வைக்க ஸ்ரீ யக்கிபழஞ் சலாகை அச்சு ஒன்று கொடையாகக் கொடுத்தாள்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 17 வது ஆவணித்திங்கள் முதலாக காங்கய நாட்டில் பரஞ்சேர்பள்ளி வெள்ளாளன் ஆவகளில் வீரகாமிண்டன் உடையாண்டான் மனைக்கிழத்தி வாமதேவர் மகள் பிள்ளை அம்மை விசயமங்கலத்துச் சித்திர மேழி விண்ணகர எம்பெருமான் கருமாணிக்காழ்வார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய வைகாநச சூத்திரத்தில் நம்பிமாரில் கௌதமன் சொக்கத் தேவர் வரதரும் இவன் தம்பி பெரிய பெருமாளும் இவ்விருவோம் கைக்கொண்டோம் கோயில் புக்கவன் சந்திராதித்தவரை எரிப்பதாகக் கல்வெட்டிக் குடுத்தோம். இது வைஷ்ணவர் ரட்சை.

19

ஈஞ்சன் குலம்

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஈங்கூர் தம்பிராட்டி யம்மன் கோயில்
காலம்	-	கி.பி.1890.
செய்தி	-	ஈஞ்சகுல ஈங்கூர் செம்பராசிக்கவுண்டர் பேரன்மார் மூவர் புதிய கல் கம்பம் நாட்டினர்.

கல்வெட்டு

கலியுகாதி வருஷம் 4991 சித்திரை மாதம் 14 ஆம் தேதி ஈஞ்சகுல செம்பராசிக்கவுண்டன் செய்த கம்பம் சீறணமாகிவிட்டது பிற்பாடு மக்கள் மக்கள் வெள்ளமுத்துக் கவுண்டன் நல்லாக்கவுண்டன் வெள்ளைமுத்துக் கவுண்டன் மூன்று பேரன்மார்களால் தம்பிராட்டியம்மனுக்கு கற்கம்பம் உபயம்.

20

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி.1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். ஈஞ்ச குலத்தார் சாட்சிக் கையொப்பமிட்டுள்ளனர்.

கல்வெட்டு

ஈஞ்சையூரில் வெள்ளாளன் ஈஞ்சர்களில் சிறுவப்பன் ஈஞ்சன்பள்ளியில் வெள்ளாளன் ஈஞ்சர்களில் கண்ணப்பன்

21

உத்தமர் குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அக்கசாலீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திரன் காலம், கி.பி. 1207 - 1255

செய்தி - சேவூர் வெள்ளாளன் உத்தமர்குல சாத்தன் ஆண்டான் சேவூர் அக்கசாலீசுவரருக்கு சந்தியாதீபம் ஒன்று வைக்க ஓர் அச்சு கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர ராசேந்திர தேவற்கு யாண்டு..... வட பரிசார நாட்டுச் சேவூரில் வெள்ளாளன் உத்தமரில் சாத்தன் ஆண்டானேன் உடையார் அக்கை சாலீஸ்வரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்று அச்சொன்றும் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசுப கோத்திரத்து ஆழ்வான் சுருதனான வீரசோழபட்டன் உள்ளிட்டாரும் புகலிச் சக்கரவர்த்தி உள்ளிட்டாரும் வழி வலவன் தேவநாரும் இடங்கை நாயக பட்டனும் உய்ய நாயன் வீரபத்திர பட்டனும் இவ்வனைவோம் அச்சொன்றுங் கொண்டு குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவோமாக பன்மா கேஸ்வர ரட்சை

22

இடம்	-	சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், இலவம்பட்டி கன்னிமார் பாழி
காலம்	-	திருமலை நாயக்கர் ஆட்சிக்காலம், கி.பி. 1623 - 1659
செய்தி	-	இலவம்பட்டிக் காணியாளராக உத்தமர் குல சிந்தாமணிக் கவுண்டர் குறிக்கப் பெறுகிறார்.

கல்வெட்டு

பூவாணி நாட்டில் உள்ள இலவம்பட்டிக்கு கைலாசநாதபுரம் எனப்பெயரிட்டு தாரமங்கலம் கைலாசநாதர் கோமிலுக்குக் கொடையாக அளித்த கல்வெட்டு இலவம்பட்டிக் காணியாளக் கவுண்டர்கள் வெள்ளாளரில் உத்தம குலம் சிந்தாமணிக் கவுண்டன்

23

ஓதாளன் குலம்

இடம்	-	கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் நாகீசுவரர் கோயில்
காலம்	-	கி.பி. 1714, கி.பி. 1724
செய்தி	-	கொடுவாய் நிழலிப்பிரிவில் கவுண்டம்பாளையம் ஓதாளகுலம் பிள்ளைக் கவுண்டன் மகன் சின்னைய கவுண்டன் திருப் பணிகள்.
		1. சுவாமி குறட்டு வாசல் தென்பக்கம் கட்டியது 2. கொறட்டு வாசல் மண்டபம் கட்டியது. 3. மரம், செங்கல்லாலான மகா மண்டபத்தைக் கல்லால் கட்டியது

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4815 க்கு மேல் செல்லா நின்ற விரோதிகிறுது வருஷம் ஆவணி மாதம் 15 தேதி கொடுவாய் கிராமம் நிழலிப் பிரிவில் கவுண்டம் பாளையத்திலிருக்கும் ஓதாளர் கோத்திரம் பிள்ளைக் கவுண்டன் மகன் சின்னய்ய கவுண்டன் நாகீசுவரமுடையார் சன்னதியில் குறட்டு வாசல் தென் பாரிசத்துக் குறடு.

24

விரோதிகிறுது வருஷம் ஆவணி மாதம் 15 தேதி கொடுவாய் கிராமம் நிழலிப் பங்கில் கவுண்டம்பாளையம் ஓதாளர் கோத்திரத்தில் பிள்ளைக் கவுண்டன் மகன் சின்னய்யன் நாகீசுவர சுவாமியார் கடாட்சத்துனாலே கட்டிய மண்டபம்.

25

ஸ்வஸ்திஸ்ரீ கொடுவாய் நாகீஸ்வரமுடையார் சன்னதி மகாமண்டபம் முன்னிருந்த பெரியோர்கள் மரத்தினாலும் செங்கல்லாலேயும் உண்டு பண்ணியிருந்தார்கள். அந்த மண்டபம் கிலமாய்ச் சிதைஞ்சு போச்சுது ஆனபடியினாலே கலியுக சகாப்தம் 4825 மேல்ச் செல்லா நின்ற சோபகிறுது வருஷம் அற்பிசை மாதம் 15 தேதி நாகீசுவர சுவாமியார் கிறுபா கடாட்சத்துனாலே மகா மண்டபத் தூணு உத்திரம் பாவுகல்லு வரிப்படை முதலானதும் நாகீசுரர் கிருபையினாலே கொடுவாய் கிராமம் நிழலிப் பிரிவில் கவுண்டம்பாளையத்திலிருக்கும் ஓதாளர் குலத்தில் பிள்ளைக்கவுண்டன் மகன் சின்னய்யன் திரு நாகீசுவர சுவாமியார் அப்பணைப் படிக்கி மகா மண்டபத்து வேலை முடிந்தது சுவாமியார் துணை உண்டு.

26

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் நாகீசுவரர் கோயில்

காலம் - கி.பி.1714.

செய்தி - மேற்கண்ட மூன்று கல்வெட்டுகளில் கூறப்பட்ட சின்னய்ய கவுண்டன் மனைவி சிவகாமியம்மாள் கோயில் வடக்குப் பக்கக்கொறகு கட்டினார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாப்தம் 4815 மேல் செல்லா நின்ற விரோதிகிறுது வருஷம் ஆவணி மாதம் 15 தேதி கொடுவ க் கிராமம் நிழலிப் பிரிவில் கவுண்டம் பாளையம் ஓதாளர் கோத்திரத்தில் பிள்ளைக் கவுண்டன் மகன் சின்னய்ய கவுண்டன் அகமுடையாள் சிவகாமியம்மாள் வடபாரிசத்து உள்குறகு பிறகுறகு கூட நாகீசுவர சுவாமியார் கிருபா கடாட்சத்தால் முடிந்தது நாகீசுவர சுவாமியார் துணை.

27

கணக்கன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல், மாந்தீசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழனின் 11-ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1015

செய்தி - வள்ளி எறிச்சல் கணக்கர்குல கேசன் மூக்கன் கொடை

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரி ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பதினொன்றாவது வள்ளிஎறிச்சில் வெள்ளாளன் கணக்கரில் கேசன் மூக்கன்..........

28

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திர தேவரின் 16-ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1223

செய்தி - கீரனூரான கொழுமங்கொண்ட சோழ நல்லூரிலிருக்கும் வெள்ளாளன் கணக்கரில் மாறன் முசுதரன் திருவாகீசுவரம் உடையர்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதினாறாவது பொங்கலூர்க்கா நாட்டில் கீரனூரான கொழுமங் கொண்ட சோழ நல்லூரில் வெள்ளாளர் கணக்கரில் மாறன் முசுதரனேன் ஆளுடையார் திருவாகீசுவரம் உடையார்க்கு நான் வைத்த சந்தியாதீப விளக்கு ஒன்றுக்கு நான் ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கின துளை கழஞ்சும் இப்பொன் கைக்கொண்டு சந்தியா விளக்கொன்றும் இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் காசியபன் பாண்டியன் சுந்தனான சைவ சூளாமணி பிரமாதரையனேன் இக்கோயில் குடங்கொடு கோயில் புக்கார் செலுத்துவதாக பன்மாகேஸ்வரர் ரட்சை.

29

கண்ணந்தை குலம்

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி ஆதிகேசவப்பெருமாள் கோயில்

காலம் - போசள வீரராமநாத தேவனின் 19 ஆம் ஆட்சியாண்டு கி.பி. 1273.

செய்தி - கச்சுப்பள்ளி கண்ணந்தை குல சிலம்பாண்டை தன் மாமா செம்போத்தா பிள்ளையாண்டை நலமுடன் வாழ்வதற்காக திருநிலைகால் செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சார்வபுவன சக்கரவர்த்திகள் ஸ்ரீ போசள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 19வது சேல நாட்டுப் பருத்திப்பள்ளியான இராசசிங்கச் சதுர்வேதி மங்கலத்து சித்திரமேழி விண்ணகர் ஆன ஆதிகேசவப் பெருமாள் கோயிலில் கெர்ப்பக் கிரகத்தில் உள்ளில்த் திருநிலைகாலிரண்டும் கச்சிப்பள்ளியில் முதலிகளில் கண்ணந்தை சிறியாண்டை மகன் சிலம்பாண்டையேந் மாமா செம்போத்தா பிள்ளையாண்டைக்கு நன்றாகச் செய்வித்தேன் எந்தன்மம்.

30

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பாப்பினி பெரியநாயகி யம்மன் கோயில்

காலம் - கி.பி.1686.

செய்தி - பாப்பினிக் காணியாளர்கள் வீரசோழபுரத்தில் வாழும் கண்ணந்தை குலத்தாரும் காடை குலத்தாரும் சேர்ந்து செய்த கொடை

கல்வெட்டு

ஸ்ரீ கலியுகம் 4787 சகாத்தம் 1605 குரோதன வருஷம் மாசி மாதம் 30 தேதி காங்கய நாட்டுப் பார்ப்பதியில் பெரிய நாயகியம்மனுக்குப் பார்ப்பதி வீர சோழபுரம் காணியாளர்களோம் கண்ணந்தை காடைகுல கோத்ரத்து உபயம் பச்சையாக்கவுண்டன் கருப்பணகவுண்டன் செல்லகவுண்டன் சதாசேர்வை பெரிய நாயகி அம்மன் துணை

31

இடம் - ஈரோடு மாவட்டம் காங்கயம் வட்டம், பாப்பினி பெரியநாயகி யம்மன் கோயில்

காலம் - கி.பி.17-ஆம் நூற்றாண்டு

செய்தி - செட்டிபாளையம் பாப்பினிக் கண்ணந்தை குலத்தார் மூன்று பேர் சேர்ந்து கொடிக்கம்பத்திற்குப் பித்தளைத் தகடு போர்த்தியது.

கல்வெட்டு

செட்டிபாளையம் பாப்பினி கண்ணந்தை கோத்ரத்து கொமாரசாமி கவுண்டன் மக்கள் சின்னிய கவுண்டன் சங்கர கவுண்டன் பச்சாக் கவுண்டன் நாங்கள் மூணு பேரும் பாப்பினி பெரிய நாயகி அம்மனுக்கு பித்தளை தகடு போட்டு வய்த்தது உபயம்.

32

இடம் - தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், பாப்பிரெட்டிப்பட்டி அருகில் இராசகோபால் கவுண்டர் தோட்டம்

காலம் - கி.பி.12-ஆம் நூற்றாண்டு

செய்தி - கண்ணந்தையார் செய்த தருமம்

கல்வெட்டு

.... மண்டலத்து கங்கநாட்டு தகடை நாட்டுப் புறமலை நாட்டு தாயன் நாட்டுக் கீழ் கூற்றில் கல்லிபாடியான சித்திரமேழி நல்லூர்க்கு எழுபத்தொன்பது நாட்டோம்....ம் அமைச்சுக் குடுத்தோம் கண்ணந்தை கூதரு....

33

இடம் - சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தசவிளக்கு சிவன் கோயில்

காலம் - சுந்தர பாண்டிய தேவனின் 14 - ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1299

செய்தி - தசவிளக்கு வெள்ளாளரில் கண்ணந்தை குலத்தார் உடையாக் காமிண்டர் உள்ளிட்ட சிலர் திருமடை விளாகம் அமைத்து உலகீசுவரமுடையார், சென்னராயர், பத்திரகாளி, கண்ணந்தை விநாயகன் ஆகியோருக்கு திருமடைவிளாக வருவாயை விகிதாசாரப்படி செயலாக்க வேண்டும் என்று எழுதினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 14 ஆவது பூவாணிய நாட்டுத் தசவிளக்கில் வெள்ளாளன் கண்ணந்தைகளில் உடையாக் காமிண்டர் பூம நாயன் செங்கழனியார் திருக்கைவேலர் காளியப்பர் பெருமாள் திருமலையப்பன் பெருமா காமிண்டர் உலகீஸ்வரமுடைய தம்பிரானாற்கு திருமடைவிளாகம் வச்ச விபரமாவது இம்மடைவிளாகம் மத்தத்துக்கு 12 ஆம் ஏரி சடையர் முத்து நஞ்சை உலகீஸ்வரமுடைய தம்பிரானாற்கு இரண்டு பங்கும் சென்னராயனுக்கு ஒரு பங்கும் பத்திரகாளிக்கு அரைப்பங்கும் கண்ணந்தை விநாயகனுக்கு அரைப்பங்கும் நடத்தக் கடவதாகவும் இதுக்கு அகிதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற பாவத்திலே போவான்.

34

கண்ணன் குலம்

இடம் - நாமக்கல் மாவட்டம் , திருச்செங்கோடு மலை வேலவர் கோயில்

காலம் - கி.பி.1628, 1616

செய்தி - மோரூர்க் கண்ணகுலக் குமாரசாமிக் காங்கேயன் செய்த திருச்செங்கோட்டுத் திருப்பணிகள், நாரி கணபதியார் மண்டபம், தெற்குவாசல் கதவு, தாண்டவ விலாச மண்டபம், சிங்கக் கால்கள், தாண்டவத்தூண், சித்திரக்கால், பாவுகல் அமைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1553 இதன் மேற் செல்லா நின்ற பிரசோத்பத்தி வருடம் ஆடி மாதம் குமாரசாமி காங்கேயன் காரியத்துக்குக் கர்த்தரான சுப்பநாயக்கன் மகன் சாமண்ணன் உபயம் (சந்தைக் குறடு) மோரூர்க் கண்ணகுலம் வேல் பூபதி சந்ததி குமாரநல்லதம்பி வெற்றிக் குமாரசாமி சாலிவாகன சகாப்தம் 1538 நள வருடத்தில் ஸ்ரீ அர்த்த நாரீசுவரர் கோயில் முன் கிழக்கிலே விசுவேசுரர் விசாலாட்சியம்மை நந்தி பலி பீடம் பிரதிட்டித்தான்.

35

இடம் – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மலை வேலவர் கோயில்

காலம் – கி.பி.1600

செய்தி – மோரூர்க் கண்ணகுலத் திருமலைஅத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் திருப்பணி.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1522 இதன் மேல் செல்லாநின்ற சார்வரி சித்திரை மாதம் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரில் இருக்கும் வேளாளக் கண்ணர்களில் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் உபயம்.

36

இடம் – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு, அர்த்தநாரீசுவரர் கோயில்

காலம் – கி.பி.1600

செய்தி – மோரூர்க் கண்ணகுல திருமலைஅத்தப்ப நல்லதம்பிக் காங்கேயர் பெரியாண்டவர் சன்னதி, நிருத்தமண்டபம், தூண்கள், கால்கள் செய்தது.

கல்வெட்டு

சார்வரி வருடம் சித்திரை கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரிலிருக்கும் வெள்ளாளக் கண்ணர்களில் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் உபயம் பெரியாண்டவர் சன்னதி நிறுத்த மண்டபம் அணி ஒட்டிக்கால் எட்டு சித்திரகண்டக்கால் எட்டு இதுக்குண்டான பாவுகல் தளவரிசை உட்பட முற்றுப் பெறுவித்தான் அநேக தர்மம்.

37

இடம் – நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மலை வேலவர் கோயில்

காலம் – கி.பி.1619

செய்தி – மோரூர்க் கண்ணகுல அத்தப்ப இம்முடி நல்லதம்பிக் காங்கேயன் பெரியாண்டவர் சன்னதி கூடம் கட்டினார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகாப்தம் 1541 இதன்மேற் செல்லாநின்ற சித்தார்த்தி வருடம் சித்திரை மாதம் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் மோரூரிலிருக்கும் வெள்ளாளக் கண்ணர்களில் திருமலை அத்தப்ப நல்லதம்பிக் காங்கேயன் குமாரர் அத்தப்ப இம்முடி நல்லதம்பிக் காங்கேய கவுண்டன் உபயம் குமாரசாமியார் மண்டபமும் இதற்கு வடபுறம் சிறந்த பக்தி பெரியாண்டவர் சன்னதி கூடம் சிங்கக்கால் குதிரைக்கால் இருபத்திரண்டு சக்கரகண்டக்கால் பன்னிரண்டு இதற்குண்டான

பாவுக்கல் தளவரிசை உள்பட முற்றுப் பெறுவித்தான் புண்ணியத்தினால் அன்னதான சோமன் என இருந்தான்.

38

இடம்	-	நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தளந்தூர் சீகாழிநாதர் கோயில்
காலம்	-	கிருஷ்ணதேவராயர் காலம், கி.பி.1523
செய்தி	-	மோரூர்க் கண்ணகுலத் திருமலை காங்கேயன் திருப்பணி

கல்வெட்டு

சுபானு வருஷம் ஸ்வஸ்திஸ்ரீ விஜயாத்புதய சாலிவாகன வருஷம் சகாப்தம் 1455ன் மேல் செல்லாநின்ற சுபானு வருஷம் கார்த்திகை மாசம் 23 தேதி பௌர்ணமியும் ஞாயிற்றுக்கிழமையும் பெற்ற புண்ணிய காலத்திலே ஸ்ரீமன் ராசாதிராசன் ராசபரமேசுரன் ராச மார்த்தாண்டன் பூர்வ தெட்சிண பச்சிம உத்தர சத்த சமுத்ராதிபதி எம்மண்டலமுங் கொண்டருளிய ஸ்ரீ வீரப்பிரதாப கிருஷ்ணராய மகாராயர் பிருத்விராஜ்யம் பண்ணியருளா நின்ற காலத்து முள்வாய் சூழ்ந்த எயினூர்ச் சாவடி செங்கோல் செலுத்தும் திரியம்பக உடையார் காரியத்துக்குக் கடவரான சாமநயினார்க்கு நடக்கிற காலத்திலே எழுகரைப் பூந்துறை நாட்டு மோரூரில் திருமலை காங்கேயன் சீமையான சித்தளந்தூரில் என் காணி சொத்தில்...

39

இடம்	-	ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நசியனூர், மூவேந்தீசுவர முடையார் கோயில்
காலம்	-	வீர நஞ்சராய உடையார் காலம், ரவுத்திரி சித்திரை 15, கி.பி.1500
செய்தி	-	நசியனூர்க் கண்ணகுல பெத்தபெருமாள் அழைப்பிச்சான் கோயில் கட்டும்போது கணக்கர் திருமலை நாதர் கோப்பணன் தூண்கள் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மன் மகா மண்டலீசுவரன் ஸ்ரீ வீர நஞ்சராய உடையார்க்குச் செல்லாநின்ற ரவுத்திரி வருஷம் சித்திரை மாதம் 15 ல் மேல்கரைப் பூந்துறை நாட்டு நசையனூரும் ஊரவரும் மேற்படியூரில் வெள்ளாளர் கண்ணர்களில் பெற்றபெருமாள் அழைப்பிச்சரும் உடையவர் மூவேந்திரமுடைய தம்பிரானார் கெற்ப கிரகம் அர்த்த மண்டபம் மகா மண்டபம் கட்டுகையில் மேற்படி நாட்டு மேற்படியூரில் திருக்கணக்கரில் கௌசிய கோத்திரத்து நாட்டுக் கணக்கு திருமலை நாதர் கோப்பணன் இட்ட தூண் இரண்டு

40

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், திண்டல் மலை வேலாயுதசுவாமி கோயில்

காலம் - கி.பி.1849

செய்தி - நசியனூர் கண்ண குலத்தைச் சேர்ந்த நால்வர் சேர்ந்து தீபத் தம்பமும், மண்டபமும் திருப்பணி செய்வித்தனர்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4950 க்கு மேல் செல்லுகின்ற சவுமிய வருஷம் ஆவணி மாதம் 23 தேதி குருவாரமும் அசுவதி நட்சத்திரமும் பாலவாகரணமும் யோகமும் கூடிய சுப தினத்தில் திண்டல்கிரி வேலாயுதசுவாமிக்கு நசையனூருக்காணியாளர் கண்ண கோத்திரம் திண்டல் பாளையத்திலே யிருக்கும் மொசுக்கவுண்டர் மகன் வெள்ளைக் கவுண்டர் பொங்காக்கவுண்டர் மகன் கருப்பண கவுண்டர் பெரியசாமிக் கவுண்டர் மகன் சேனாபதிக்கவுண்டர் யிவர்கள் நாலு பேரும் திசைக்கம்பம் உபயம்.

41

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், காளமங்கலம் கலியாண வரதராசப் பெருமாள் கோயில்

காலம் - கி.பி.1851

செய்தி - காளமங்கலம் கண்ணகுல நல்லாக்கவுண்டர் அனுமந்தப் பெருமாள் கோயில் கட்டினார்.

கல்வெட்டு

ராமஜெயம் கலியுகம் 4952 வருஷம் விரோதிகிறுது வருஷம் தை மாதம் 24 தேதி காழமங்கலம் அனுமந்தப் பெருமாள் கோயில் கெறபக்கிரகம் கண்ணர்குல கோத்திரம் றாசாக்கவுண்டன் கரை கொமற வேலப்ப கவுண்டன் மகன் நல்லாக்கவுண்டன் அனுமந்தப் பெருமாள் கோயில் உபயம்.

42

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பொன்குழலி யம்மன் கோயில்

காலம் - கி.பி.1834

செய்தி - கொளாநல்லி கண்ணகுலத்தார் பலர் சேர்ந்து பொன்குழலி யம்மன் கோயிலில் அரங்கமண்டபம், துலுக்கணசாமி மண்டபம் கட்டினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1756 க்குக் கலியுக சகாப்தம் 4935க்கு மேல் செல்லாநின்ற செய வருஷம் தை மாதம் 23ந் தேதி சுபதினத்தில் குழாநிலை குழலியம்மன் சந்நதியில் அரங்கமண்டபம், துலுக்கணசாமி மண்டபம் உள்பட மேற்படியூர் கண்ணகுல கோத்திரமாகிய குடிகள் உபயம் சின்னகவுண்டன் மகன் எழுயகவுண்டன் மகன் நல்லகுட்டியாக்கவுண்டன் மகன் நல்லாக்கவுண்டன் சின்னய கவுண்டன் மகன் சின்னத்தாயம்ம கவுண்டன் மகன் வெள்ளகவுண்டன் பெருமாக்கவுண்டன் சின்னாக்கவுண்டன் மகன் துலுக்கண கவுண்டன் விருப்பாண்டிக் கவுண்டன் மகன் சின்னயகவுண்டன மகன் வீரமலையப்ப கவுண்டன் அல்லாளியப்பகவுண்டன் விருப்பண கவுண்டன் மகன் சின்னயகவுண்டன் மகன் குமரய கவுண்டன்.

43

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பொன் குழலியம்மன் கோயில்

காலம் - கி.பி.1829

செய்தி - அத்தப்பம்பாளையம் கண்ணகுலத்தாரும், பொய்ங்காக் கவுண்டச்சியும், அம்மன் கருவறை கட்டி, சுப்பிரமணியரை எழுந்தருளச் செய்தனர்.

கல்வெட்டு

சொஸ்திஸ்ரீ சாலிய வாகன சகாப்தம் 1750 கலியுக சகாப்தம் 4929க்கு மேல் செல்லாநின்ற சறுவதாரி வருஷம் தை மாதம் 5 ஆம் தேதி சோமவாரமும் அஷ்டமியும் அசுபதி நட்சத்திரமும் கூடிய சித்த யோகமும் பவகரணமும் பெத்த சுபதினத்தில் அத்தப்பன் பாளையத்திலிருக்கும் கண்ண குல கோத்திரம் எளயாக்கவுண்டன் மகன் அத்தப்பகவுண்டன் செங்கோட கவுண்டன் பொய்ங்காக் கவுண்டச்சி சுவாமி அம்மன் கெற்ப்பகிரகம் சுப்பிரமணியர் உபயம்.

44

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தளந்தூர் அத்தனூரம்மன் கோயில்

காலம் - துந்துபி வருடம் ஆனி 22, 18 ஆம் நூற்றாண்டு கி.பி.1742

செய்தி - ஒலகப்ப பாளையம் கண்ணகுல ஒலகப்ப கவுண்டர் அத்தனூர் அம்மன் கோயிலுக்குத் தூண் அளித்தார்.

கல்வெட்டு

துந்துபி வருடம் ஆனி 22 தேதி வெள்ளிக்கிழமை ஒலகப்பன் பாளையம் கண்ண கோத்திரம் கொமரசாமிக்கவுண்டன் பேரன் ஒலகப்ப கவுண்டன் அத்தனூர் அம்மைக்குத் தூண் உபயம்.

45

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தளந்தூர் அத்தனூரம்மன் கோயில்

காலம் - துந்துபி ஆனி 22, 18 ஆம் நூற்றாண்டு, கி.பி.1742

செய்தி - தேவடியாபாளையம் கண்ணகுல இராமசாமிக்கவுண்டர் அத்தனூரம்மன் கோயிலுக்குத் தூண் அளித்தார்.

கல்வெட்டு

துந்துபி வருஷம் ஆனி மாசம் 22 தேதி வெள்ளிக்கிழமை தேவடியாபாளையம் கண்ண கோத்திரம் நல்லய கவுண்டன் பேரன் ராமசாமிக் கவுண்டன் அத்தனூர் அம்மைக்குத் தூண் உபயம்.

46

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பொன் குழலியம்மன் கோயில்

காலம் - கி.பி.1827

செய்தி - கொளாநல்லி கண்ணகுல திருமலைக்கவுண்டர் பொன்குழலி யம்மன் கோயில் மகா மண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

சிவமயம் கலியுக சகாத்தம் 4928 க்கு மேல் செல்லாநின்ற சருவசித்து வருஷம் ஆடி மாதம் 23 தேதி சோமவாரமும் திருவோணமும் பெற்ற சுபதினத்தில் குழாநிலைக் காணியாளரில் கண்ணகுல கோத்திரம் சீரங்கக் கவுண்டன் மகன் திருமலைக் கவுண்டன் குழலியம்மனுக்கு மகா மண்டபம் உபயம் ராமஜெயம்.

47

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கொக்கராயன் பேட்டை பிரமபுரீசுரமுடையார் கோயில்

காலம் - கிருஷ்ணதேவராயர் காலம் கி.பி. 1516

செய்தி - மோரூர்க் கண்ணகுலத்தார் ஒருவர் மானிய நிலமும் வரிப்பண மும் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுரன் அரியராய விபாடன் மேதினி மீசுர கண்டன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் கண்டநாடு கொண்டு கொண்ட நாடு குடாதான் துலுக்கதள விபாடன் துலுக்கர் மோகந்தவிழ்ந்தான் எம்மண்டலமுங் கொண்டருளிய இராசாக்கள் தம்பிரான் பூர்வ தெட்சிணை பச்சிம

உத்தர சதுச் சமுத்திராதிபதி ஸ்ரீ வீரப்ப பிரதாப ஸ்ரீ கிருஷ்ணதேவ மகாராயர் பிருத்விராஜ்யம் பண்ணியருளா நின்ற சகாப்தம் 1438 ன் மேல் செல்லாநின்ற யீசுரவருஷம் தை மாதம் 20 பூற நட்சத்திரமும் சதுர்த்தெசியும் ஆயுஷ்மான யோகமும் பெற்ற சோமவாரப் புண்ணிய காலத்தில் கீழ்க்கரைப் பூந்துறை நாடு மோரூர் வெள்ளாளன் கண்ணர்களில் பெரிய.... நஞ்சை புஞ்சை நாற்பா லெல்லைக்கு உட்பட்ட தோட்டம் பாட்டம் மாவடை மரவடை மேல் நோக்கிய மரம் கீழ்நோக்கிய கிணறும்.... களத்துப் பயிருண்டானதும் துறையில் தீர்வையும் சுங்கம் பேரமும் நஞ்சலார் எப்பேறப்பட்டதும் உட்பட பிரமீசுரமுடைய தம்பிரானார்க்கு சகிரண்யோதக தன்மத்தை நீதி வாதையின்றி நடத்தினவன் சீபாதம் எந்தலை மேலே இந்தத் தன்மத்தை அகிதம் பண்ணினவன் ஏழெச்சமறுவான் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலே போகக் கடவார்கள் பஞ்சமா பாதகம் பண்ணின பாவத்திலே போகக்கடவார்கள்.

48

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், செல்லப்பம் பாளையம் கரிய பெருமாள் கோயில்

காலம் - சௌமிய ஆனி 19, கி.பி.1728

செய்தி - காளமங்கலம் கண்ணகுல கங்காபுரம் செல்லப்ப கவுண்டர் எல்லப்பாளையம் கருப்பணகவுண்டர் ஆகியோர் கரிய பெருமாள் கோயில் கட்டினர்.

கல்வெட்டு

சௌமிய வருஷம் ஆனி மாதம் 19 தேதி வியாழக்கிழமை பூச நட்சத்திரம் கரிய பெருமாளுக்கு கொளத்துப் பாளையம் கங்காபுரம் கிராமம் காளமங்கலம் கண்ண கோத்திரம் முத்துவேலப்ப கவுண்டன் மகன் செல்லப்பகவுண்டன் பெருந்துறை எல்லப்பாளையம் பெருமாக்கவுண்டன் மகன் கருப்பண கவுண்டன் உபயம்.

49

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பாம்பலங் காரநாதர் கோயில்

காலம் - 19 ஆம் நூற்றாண்டு

செய்தி - கண்ணகுலத்தாரின் மனைவியர் செய்த திருப்பணி

கல்வெட்டு

குழாநிலை கண்ண குலத்தாருக்கு வாழ்க்கைப்பட்ட பெரியம்மாள் பொய்ங்காக்கவுண்டச்சி உபயம்.

50

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங் கேசுவரர் கோயில்

காலம் - வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி.1489 - 1500

செய்தி - பூந்துறைநாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர்கள்.

கல்வெட்டு

நசையனூரில் வெள்ளாளன் கண்ணர்களில் அழைப்பிச்சான், முனையடுவார். கிழாம்பாடியில் வெள்ளாளன் கண்ணர்களில் கண்ணப்பன், சின்னப்பன், பிறவியான். குழாநிலையில் வெள்ளாளன் கண்ணர்களில் செம்பியன், பெத்தாக்கவுண்டன்,காளமங்கலத்து வெள்ளாளன் கண்ணர்களில் தேவணன், பெரியணன்.

51

கருந்தோழி குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், இரும்பறை கயிலாச நாதர் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் 27 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1312

செய்தி - முடுதுறை வெள்ளாளன் கருந்தோழி குல ஆண்டான் கண்ணனான கருசன் நாகீசுவரர் கோயிலில் மூன்று சந்திக்கும் அடைக்காயமுது கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 27 வது மாசிமாதம் முதல் வட பரிசார நாட்டில் முடுதுறையில் வெள்ளாளன் கருந்தோழிகளில் ஆண்டான் கண்ணனான கருசனேன் முடுதுறையார் திருநாகீசுவரமுடையாற்கும் சிவகாம சுந்தரி நாச்சியார்க்கும் அடைக்காயமுது இலையமுதுக்கும் சந்தி மூன்றுக்கும் அடைக்காயமுது..... அஞ்சுபொன் கைக்கொண்டோம் மேற்படி முடுதுறையில் காணியுடைய சிவப்பிராமணரில் காசிபகோத்திரத்தில் பெரியான் முதலியான நாற்பத்தெண்ணாயிர பட்டனும் அவிநாசி திருநாகீஸ்வரமுடையானான தில்லை மூவாயிர நம்பியும் உடையான் தென்னனான இடங்கை நாயகபட்டனும் இம்மூவருள்ளிட்டார் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தர் வரை செலுத்துவார்களாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

52

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி.1259

செய்தி - இடிகரை வெள்ளாளர் கருந்தோழிகுல வில்லி இராசகோன் வில்லீசுரருக்கு சந்தியா தீபவிளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு 3 வது வட பரிசார நாட்டில் இடிகரையிலிருக்கும் வெள்ளாளன் கருந்தோழிகளில் வில்லி இராசகோனேன் ஆளுடையார் வில்லீசுரமுடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டு கோயிற் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்து திருநட்டன் அகஸ்தீசுவரம் உடையானான சித்திரமேழி பட்டன் குடங்கொண்டு கோயில் புகுவார் இத்தன்மம் ரட்சிக்க....

53

கழஞ்சியர் குலம்

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திர தேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1215.

செய்தி - கீரனூர் வெள்ளாளன் கழஞ்சியன் தேவனான கொங்கிளங்கோன் வாகீசுவரமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்தி ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு எட்டாவது பொங்கலூர்க்கா நாட்டுக் கீரனூர் வெள்ளாளன் கழஞ்சியன் தேவனான கொங்கிளங்கோனேன் ஆளுடையார் திருவாகீசுரம் உடைய நாயனார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு நான் ஒடுக்கின பொன் நகரக் கற்றுளை

54

இடம் - ஈரோடு மாவட்டம், கோபிசெட்டிபாளையம் வட்டம், நம்பியூர் தான் தோன்றீசுவரர் கோயில்

காலம் - வீர பாண்டிய தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1276

செய்தி - நம்பிபேரூர் வெள்ளாளன் கழஞ்சியர் குல சிங்க காமிண்டன் தேவன் தான்தோன்றீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

சுபமஸ்து ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 11 ஆவது வடபரிசாரநாட்டு நம்பி பேரூரில் வெள்ளாளன் கழஞ்சியரில் சிங்க காமிண்டன் தேவன் ஆளுடையார் தான்தோன்றீசுரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு கோயில் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்வாஜ கோத்திரத்து....

திருச்சிற்றம்பல நம்பியும் ஆழ்வா ... இவர் பக்கல் உபயமாகக் கொண்ட பணம் பத்துக்கும் சந்தியா தீபம் ஒன்றும் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை இது பன் மாகேஸ்வரர் ரட்சை....

55

காடை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறை புட்பவன முடையார் கோயில்

காலம் - விசயநகர மன்னன் சதாசிவராயர், காலம் ஆனந்த ஆவணி 1, கி.பி. 1554

செய்தி - பூந்துறை மேலைக் காடைகளில் குப்பன் அழைப்பித்தான் அம்மன் கோயில் முன் மண்டபம் கட்டினார். மண்டபப்பணி செய்தோர் மார்த்தாண்டன், வசவப்பன் ஆகியோர். கல்வெட்டை எழுதியவன் பூந்துறைக் கணக்கன் திருமலைநாதன் தீத்தான்.

கல்வெட்டு

ஸ்ரீ சுபமஸ்து மகாமண்டலேசுவரன் சதாசிவராயர்க்கு செகபிரதானி இராமராசாவின் காரியத்துக்குக் கர்த்தரான நஞ்சையத் திம்மப்பன் அவர்கள் இராசராசபுரத்தில் இராச்சியம் பண்ணியருள காரியத்துக்குக் கர்த்தரான சங்கப்பன் நின்ற காலத்து ஆனந்த வருஷம் ஆவணி மாதம் முதல் தியதி மேல்கரைப் பூந்துறை நாட்டு பூந்துறையில் மேலைக் காடைகளில் குப்பன் அழைப்பித்தான் புற்பவனநாதர் பாகம் பிரியாதாற்கு திருக்கோயில் மார்த்தாண்டனும் வசவப்பனும் இந்த மண்டபம் செய்தமைக்கு திருப்பேற்று சோழியப் பிராமணன் பூந்துறையில் கணக்குத் திருமலை நாதன் தீத்தான் எழுத்து.

56

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறை புட்பவன முடையார் கோயில்.

காலம் - கி.பி. 1789.

செய்தி - பூந்துறை காடை குல காசிலிங்கக் கவுண்டர் கொடிக்கம்பம் நிறுவினார்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4889 சார்வரி வருஷம் மாசிமாதம் பூந்துறைக் காடைகுலம் வாரணவாசிக் கவுண்டன் மகன் காசிலிங்கக் கவுண்டன் உபயம்.

57

இடம் - பூந்துறை நாட்டுக் கட்டளை என்ற சுவடியில் உள்ளது.

காலம் - பிரபுடதேவ மகாராயர் காலம், கி.பி. 1445.

செய்தி - பூந்துறை புட்பவன முடையார்க்கு காடை குலத்தாரால் சேமூர் கொடையளிக்கப்பட்டது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் ஆகிய பிரபுட தேவராயர் நாளையில் கலியுக சகாப்தம் 4546க்கு மேல் செல்லாநின்ற குரோதன வருஷம் அற்பிசை மாதம் 11 தேதி பூர்வபட்ச சத்தமியில் பூச நட்சத்திரமும் குருவாரமும் பெற்ற நாளில் கொங்கு மண்டலத்தில் மேல்கரைப் பூந்துறை நாட்டில் பூந்துறைப் புட்வனமுடையார்க்கு சேமூர் தேவஸ்தானம் காடர்கள் சிலா சாசனமாக எழுதிக் கொடுத்தது. இந்த தர்மத்தை விகாதம் பண்ணினபேர் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்தில் போவான். இந்தச் சிலா சாசனம் பூந்துறை புட்பவன நாதர் கெர்ப்பக் கிரகத்தின் கீழ்ப்பக்கத்தில் எழுதியிருக்கிறது. புட்பவன லிங்கம் துணை

58

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பூந்துறை அய்யனார் கோயில்.

காலம் - 17 ஆம் நூற்றாண்டு, செய வருடம் கார்த்திகை மாதம் 8 ஆம் நாள், கி.பி. 1654

செய்தி - வேளாளரும் வேட்டுவருமாக ஆறு கரையாரும் சேர்ந்து பூந்துறை எல்லையில் கிடைக்கும் சுங்கம், மகமை ஆகியவற்றை அய்யனார் கோயில் விளக்கு எண்ணெய்க்குக் கொடையாக அளித்தனர்.

கல்வெட்டு

செயவருஷம் கார்த்திகை மாதம் 8 தேதி பூந்துறை நாட்டு வேளாளரில் மேல் காடைகளில் குப்பிச்சி ஙயினார் நல்ல நயினார் கீளை காடைகளில் மூத்த நயினார் வேலாண்ட நயினார் பூவாணி வேட்டுவரில் செய்யா நல்லார் வெம்ப வேட்டுவரில் சம்பமிராகியார் வில்லி வேட்டுவரில் வகுத்துவெம்பாண்டார் அறுகரை காணியாளரும் கூடி எங்களூர் எல்லைமில் மகமை சுங்கம் அய்யனாருக்கு ரண்டு நேரத்துக்கும் திருவிளக்கு எண்ணெய்க்குத் தர்மம் சந்திராதித்தர் உள்ளவரைக்கும் நடக்க எழுதிக்கொடுத்த சிலாசாசனம் யிந்த சிலாசாசனம் அய்யனார் கோமில் தலைவாசல் கல்லில் எழுதியிருக்குது அய்யனார் துணை.

59

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பருத்தியூர் அம்மன் கோயில்

காலம் - வீர ராசேந்திரனின் 31 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1238

செய்தி - நடுவில் பருத்தியூரில் காடைகுல வெள்ளாளன் நக்கன் அரையனான சுந்தர தேவன் பிடாரியார் திருக்கலியாணத்திற்குக் கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர ராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவதற்கெதிராவதுக் கெதிராவது பொங்கலூர்க்கா நாட்டில் நடுவில் பருத்தியூர் வெள்ளாளன் காடர்களில் நக்கன் அரையனான சுந்தர தேவன் இளையகுடி நாச்சியார் பிடாரியார்க்கு திருக்கல்யாணத்திற்கு... பழங்காசு குடுத்துக் கல்வெட்டுவித்தேன்.

60

இடம் - ஈரோடு வட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல் மாந்தீசுவரர் கோயில்

காலம் - 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - சிற்றில்ஓடு காடர்குல வேளாளர் ஆடன் புளியனான உத்தம சோழ தமிழவேளான் திருப்பணியின் போது தூண் கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சிற்றில்லோட்டிலிருக்கும் வெள்ளாளன் காடகளில் ஆடன் புளியநான உத்தம சோழத்தமிழ வேளான் இட்ட கால்.

61

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல் மாந்தீசுவரர் கோயில்

காலம் - கி.பி.13 ஆம் நூற்றாண்டு

செய்தி - சிற்றில்ஓடு காடர்குல வேளாளர் ஆடன் புளியனான மும்முடிச் சோழ மாராயன் திருப்பணியில் தூண் கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சிற்றில் லோட்டிலிருக்கும் வெள்ளாளன் காடகளில் ஆடன் புளியநான உத்தம சோழ மும்முடிச்சோழ மாராயன் இட்ட கால்.

62

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், குண்டடம் வடுகநாதர் கோயில்

காலம் - வீரராசேந்திர தேவனின் 44 ஆம்ஆண்டு ஆட்சியாண்டு, கி.பி. 1251.

செய்தி - குண்டடம் முதலிகளில் காடன் உலகை வலம் வந்தான் திருநிலை அழகிய பிள்ளையார்க்குச் சந்தியா தீபம் வைத்தான்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு 44 வது பொங்கலூர்க்கா நாட்டு குண்டொட முதலிகள் வெள்ளாளர் காடைகளில் சார்ந்தாரைக்காப்பான் திருநிலை அழகிய பிள்ளையாற்கு சந்தியாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கினேன் சீயக்கி பழஞ்சலாகை ஒன்றுங்கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் காப்பிய கோத்திரத்தில் உத்தமன் சொக்க பட்டன் உள்ளிட்டாரும் பட்டன் ஆளவந்தான் உள்ளிட்டாரும் குடங்கொண்டு கோயில் புகுவார் இவ்வச்சு கைக்கொண்டோம் சந்திராதித்தவரை செலுத்துவதாக இது பன்மாகேஸ்வர ரட்சை

63

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராயர் காலம், 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டு 32 ஊரவர் வெள்ளோட்டில் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழாவெடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர் ஒருவர் பெயர்.

கல்வெட்டு

பூந்துறையில் வெள்ளாளன் மேலைச் சாகாடைகளில் அப்பியன்.

64

இடம் - வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், சின்னய்யன் பேட்டை நடுகல்

காலம் - 9 ஆம் நூற்றாண்டு, கம்பவர்மனின் ஆறாவது ஆட்சியாண்டு

செய்தி - எருமைத் தொறு மீட்டுப்பட்ட எழுமாத்தூர் சாகாடச் சிற்றனுக்கு நடுகல் எடுக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

கோவிசைய கம்பபர்மர்க்கு யாண்டு ஆறாவது கொங்கத்து எழுமாத்தூர் இருந்து வாழும் சாகாடச் சிற்றன் மீ கொன்றை நாட்டுப் புளியூர் எருமை கொண்ட ஞான்று பூசல்லோடி மேல் நாட்டு மணிக்கல வடவூரில் முட்டி எருமைத் தொறு மீட்டுப் பட்டான் சாகாடச் சிற்றன்.

65

இடம் - வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் வட்டம், சின்னய்யன் பேட்டை நடுகல்

காலம் - 9 ஆம் நூற்றாண்டு, கம்பவர்மனின் ஆறவாது ஆட்சியாண்டு

செய்தி - எருமைத் தொறுப் பூசலில் பட்ட புளியூர் சாகாடச் சிற்றன் மீட்டுப் பட்டதுக்கு நடுகல் எடுக்கப்பட்டது.

கல்வெட்டு

கோவிசைய கம்பபர்மர்க்கு யாண்டு ஆறாவது மிய் கொன்றை நாட்டுப் புளியூரிலிருந்து வாழும் சாகாடச் சிற்றன் புளியூர் எருமை கொண்ட ஞான்று பூசலிலோடி மேல் வேணாட்டு மணிக்கல வடவூரில் தொறு மீட்டுப் பட்டான்.

66

இடம் - சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், செந்தாரப்பட்டி நடுகல்

காலம் - கி.பி. 8 ஆம் நூற்றாண்டு

செய்தி - கங்கரசர் சேவகர் சாகாடன் நக்கன் தொறுப் பூசலில் பட்டு நடுகல் எடுக்கப்பட்டது.

கல்வெட்டு

கங்கரைசரு சேவகன் சாகாடன் நக்கன் ...பட்டான் கல்

67

இடம் - ஈரோடுமாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் செல்லீசுவரர் கோயில்

காலம் - வீர ராசேந்திரனின் 14 ஆம் ஆட்சியாண்டு, கி.பி1221

செய்தி - காடன் மாணிக்கதேவன் செல்லீசுவரர் கோயிலில் ஒரு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதின்மூன்றாவதுக் கெதிராவது தலையூர்...பெயரில் காடன் மாணிக்கதேவன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில்...ணன் தோன்றி ஆண்டபிள்ளையான சிற்றம்பலத்துக்கும் இவன் தம்பிமார்க்கும் இவர்களுக்கிசைய ஒரு சந்தியா தீபம் ஒன்றுக்கு பொருள் கொடுத்து கல் வெட்டுவித்தேன் மாணிக்க தேவனேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

68

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - விக்கிரமசோழ தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1284.

செய்தி - இளம்பள்ளி வெள்ளாளர் காடை குல அவிநாசி தேவன் மனைக் கிழத்தி தேவன் சொக்கி விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது பூந்துறை நாட்டு இளம்பள்ளியில் வெள்ளாளர் காடைகளில் அவிநாசி தேவன் மனைக்கிழத்தி தேவன் சொக்கியேன் விசயமங்கலத்து ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு சந்தியா தீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கைக்கொண்டோம் ஆத்ரேய கோத்திரத்து ஆளவந்த பிழைபொறுத்தான் பட்டனும் இவ்விளக்கொன்றும் சந்திராதித்த வரை குடங்கொண்டு கோயில் புகுவான் எரிக்கக் கடவானாகவும்.

69

குண்டெலி குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - வீ ரபாண்டிய தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி1270

செய்தி - ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் பிள்ளையாண்டான் சிலம்பன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு நாலாவதுக் கெதிராவது குறுப்பு நாட்டு ஆதவூர் வெள்ளாளன் குண்டெலிகளில் பிள்ளையாண்டான் சிலம்பனேன் இவ்வூர் நாயனார் ஆதீஸ்வரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு இவ்வூர் காணியுடைய சிவப்பிராமணன் வாச்சிய கோத்திரத்து கடைக்குறுச்சி ஆண்டவனும் பிள்ளை பட்டனும்... ட்டனும் பற்றின சந்திராதித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவானாகவும் இது பன்மாகேஸ்வர ரட்சை.

70

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி.1271

செய்தி - ஆதியூர் வெள்ளாளன் குண்டெலிகளில் ஆண்டான் சாத்தாண்டான் சிவன்கோயிலில் தாமப்படை, அகவாய், புறவாய் செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க கோவிராசகேசரிபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு ஆறாவது குறுப்பு நாட்டு ஆதவூரில் வெள்ளாளர் குண்டெலிகளில் ஆண்டான் சாத்தாண்டானேன் நாயனார் ஆதீசுவரமுடைய நாயனார் திருக்கோயில் திருக்கட்டளையறுதியாக தாமப்படை அகவாய் புறவாய் செய்வித்தேன் சாத்தாண்டானேன்.

71

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1270

செய்தி - ஆதியூர் வெள்ளாளன் குண்டெலி குலத்தில் கருங்காள மண்டலிக சுவாமியான மன்றுளாடுவான் இரண்டாங்கால் அகவாய், புறவாய் செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க திரிபுவன சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு அஞ்சாவது குறுப்பு நாட்டில் ஆதவூர் வெள்ளாளன் குண்டெலிகளில் கருங்காள மண்டலிக சுவாமியான மன்றுளாடுவானேன் நாயனார் ஆதீஸ்வரமுடையார் திருக்கோயில் திருக்கட்டளையறுதியாக இரண்டாங்கால் அகவாய் புறவாய் செய்வித்தேன் மன்றுளாடுவானேன்.

72

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - துந்துபி ஆடி 14, கி.பி. 1322

செய்தி - ஆதியூர் வெள்ளாளர் குண்டெலிகுல பிள்ளையான் சிறுக்கொடுக்கன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ துந்துபி சம்வத்சரத்து ஆடிமாதம் 14 தேதி குறுப்பு நாட்டு ஆதவூர் வெள்ளாளன் குண்டெலிகளில் பிள்ளையான் சிறுக்கொடுக்கனேன் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்க்கு நான் வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு சீபண்டாரத்தில் ஒடுக்கின பணம் 10க்கும் இந்த விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை செலுத்துவதாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

73

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்.

காலம் - வீரவல்லாளன் காலம், குரோதன வைகாசி 1, கி.பி. 1325.

செய்தி - ஆதியூர் வெள்ளாளர் குண்டெலிகுல காளிகாளி சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் திருவிராச்சியம் பண்ணியருளா நின்ற குரோதன வருஷத்து வைகாசி மாதம் முதல் குறுப்பு நாட்டு ஆதவூரில் வெள்ளாளரில் குண்டெலிகளில் காளி காளியேன் இவ்வூர் ஆதீஸ்வரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு இவ்வூர்க் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்துக் கடைக்குறிச்சி ஆண்டவனும் பெரிய பிள்ளையப்பனும் சிறுபிள்ளையப்பனும் வசம் ஒடுக்கின அச்சு ஒன்றும் கைக்கொண்டு சந்திராதித்த வரை குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவோமாகவும் பன்மாகேசுவரர் ரட்சை.

74

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி.1291

செய்தி - ஆதியூர் வெள்ளாளர் குண்டெலிகுல காளி காளியான காலிங் கராயன் சந்தியாதீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு ஆறாவது குறுப்பு நாட்டு ஆதவூர் வெள்ளாளன் குண்டெலிகளில் காளி காளியான காலிங்கராயனேன் ஆதீஸ்வரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீபத்துக்குக் காணியுடைய சிவப்பிராமணரில் பெரிய வாச்சியன் கடைக்குறுச்சி ஆண்டவனும் பிள்ளையப்பனும் சிறுபிள்ளையப்பனும் சந்தியா தீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுங் கைக்கொண்டு குடங்கொடு கோயில் புகுவான் செலுத்தக் கடவோமாகவும் பன்மாகேஸ்வரர் ரட்சை.

75

காரி குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி அவிநாசியப்பர் கோயில்.

காலம் - குலசேகர தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1242.

செய்தி - ஆனங்கூர் வெள்ளாளன் காரிகுல சத்திநாயக்கன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோமாறபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ குலசேகர தேவற்கு யாண்டு 5 வது பங்குனி மாதம் 23 தேதி நாள் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் ஆனங்கூரில் வெள்ளாளன் காரிகளில் சத்தி நாயக்கனேன் உடையார் அவிநாசி ஆளுடைய நாயனார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஸ்ரீ பண்டாரத்திலே ஒடுக்கின அச்சு ஒன்று இது கொண்டு சந்திராதித்தவரை செல்வதாக.

76

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினரில் ஒருவர் காரி குலத்தவர்.

கல்வெட்டு

குறிச்சியில் வெள்ளாளன் காரிகளில் ஆவுடையார்

77

குழாயர் குலம்

இடம் - கோவை மாவட்டம், உடுமலை வட்டம், சோழ மாதேவி குலசேகரீசுவரம் உடையார் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவரின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி1293

செய்தி - மணிகைராயன் என்பவர் சோழமாதேவிநல்லூர் வெள்ளாட்டி குழாயரில் அதிசயசோழன் அரைசனான மணிகைராயனின் நலத்தின் பொருட்டு மண்டபத்தில் திருநிலைகாலும் படியும் அமைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சிரீ விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு 20 ஆவது சோழமாதேவிநல்லூரில் வெள்ளாட்டி குழாயரில் அதிசய சோழன் அரைசன் ஆன மணிகைராயனுக்கு நன்றாகத் திருமண்டபத்தில் திருநிலை காலிரண்டும் படியும் நாட்டிவிச்சேன் மணிகை ராயனேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

78

கூறை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், தலையநல்லூர் கரிய வரத ராசப் பெருமாள் கோயில்.

காலம் - கி.பி. 1710.

செய்தி - தலைய நல்லூர்க் கூறைகுல கடை திறக்கி வகையில் செங்காளியப்பகவுண்டர் கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விசயாப்யுதய சாலிவாகன சகாற்தம் 1632 கலியுக சகாற்தம் 4811 மேல் செல்லாநின்ற விக்ருதி வருஷம் புரட்டாசி மாதம் பூர்வ பட்சத்தில் விசய தசமியும் குருவாரமும் திருவோண நட்சத்திரமும் சுபநாம யோகமும் கரிசிவாகரணமும் பெற்ற சுபதினத்தில் கரிய வரதராசப்பெருமாள் விருச்சிக லக்கணத்தில் பிரதிஷ்ட்டை முகூர்த்தமானது இந்த தன்மம் தலையநல்லூரில் இருக்கும் கூரைகுல கோத்திரத்தில் கடைதிறக்கி வகையில் முகமாண்டார் காளியப்ப கவுண்டனுக்கு பொன்காளியப்பகவுண்டன் குமாரன் செங்காளியப்பகவுண்டன் உபயம் கெர்ப்பகிரகம் அர்த்தமண்டபம்.

79

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நசியனூர் ஆதிநாராயணப் பெருமாள் கோயில்

காலம் - கி.பி 1939

செய்தி - 1827ல் கட்டப்பட்ட மண்டபம் 1939 ல் பழுதுபார்க்கப்பட்டது. முன்பு கட்டிய வேலப்பகவுண்டர் வகையினர் திருப்பணி செய்தனர்.

கல்வெட்டு

கலியுகம் 4928 ஆவணி மாதம் 17 தேதியில் தயிர்ப்பாளையம் ந. வேலப்பகவுண்டர் கட்டிய இக்கல் மண்டபத்தை கலியுகாதி 5040 வருசம் ஆவணி மாதம் இம்மண்டபத்தை நசியனூர் கூறகுலம் வேலப்பகவுண்டர் வம்ச வகையோரால் ரிப்பேர் செய்யப்பட்டது.

80

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், தலையநல்லூர் வேலாயுத சுவாமி கோயில்

காலம் - விக்ருதி கார்த்திகை 25 , கி.பி1830

செய்தி - தலையநல்லூர் செங்காளியப்ப கவுண்டர் கொறட்டு வாசல் தேவகூடத்தில் உபநயின விக்கிரகம் பிரதிட்டை செய்தார்.

கல்வெட்டு

விக்ருதி வருஷம் கார்த்திகை மாதம் 25 தேதி கொறட்டு வாசல் தேவ கூடத்தில் உபநெயின விக்கிரகம் உண்டு பண்ணினவன் தலையநல்லூரிலிருக்கும் கூறை குலத்தில் கொடுமுடிக் கவுண்டன் மகன் முத்தன கவுண்டன் மகன் செங்காளியப்ப கவுண்டன் உபயம்.

81

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நசியனூர் ஆதி நாராயணப் பெருமாள் கோயில்

காலம் - கி.பி.1940

செய்தி - 1827ல் கட்டப்பட்ட மண்டபம் 1940ல் புதுப்பிக்கப்பட்டது.

கல்வெட்டு

சொத்திக விசுவாயுத சாலி 1749 கலி 4928 க்குச் செல்லாநின்ற சர்வசித்து வருஷம் ஆவணி மாதம் 17 தேதி வெள்ளிகிழமை மூல நட்சத்திரம் பிரிதியோக கௌளகரணம் கூடிய சுபதினத்தில் பூந்துறை நாடு நசியனூருக்குச் சேர்ந்த தமிர்ப்பாளையம் நல்லைய கவுண்டர் குமாரன் வேலப்பகவுண்டர் நசியனூர் ஆதிநாராயணப்பெருமாள் முன் கொறட்டு வாசல் மண்டபம் இம்மண்டபத்தை சாலி 1862 கலி5041 வருசம் செல்லாநின்ற பிரமாதீச ஆவணி மாதம் 16 தேதி வெள்ளிக்கிழமையும் ...திதி உத்திரட்டாதியும் சித்தயோகமும் கரச கரணம் கூடிய சுபதினத்தில் நசியனூர்க் கூறை குல கோத்திரத்தார்கள் பாவு கல்லும் மேற்படி மண்டபம் புதுப்பிக்கப்பட்டது. ஆதிநாராயணப்பெருமாள் சன்னதி முன் கொறட்டு வாசல் உபயம்.

கூறை செங்காளியப்ப கவுண்டர் மகன் பிள்ளான் உபயம் கூறை ராமணகவுண்டர் மகன் கந்தப்பன் உபயம்.

82

கொம்மையர் குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அழகப்பெருமாள் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் 27 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1312.

செய்தி - அன்றாடு வராகன் புள்ளிக்குளிகை 300க்கு அழகப்பெருமாள் கோயில் சேனாபதி ஆழ்வார்க்கு வெள்ளாளன் கொம்மையரில் சிறுவன் ஆண்டான் விற்ற நிலம் பற்றிய விபரம் கூறப் பட்டுள்ளது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோற்சடையபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு 27வது சித்திரை மாத முதல் மதினாள் பக்கம் பஞ்சமிநாள் மூலங்கிழமை வெள்ளிப்பொழுது இந்நாள் இது பருவமாக வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் மன்றத்திருந்து மன்றறியச் செய்த புன்செய் தோப்பு நிலம் பிரமாணமாவது இவ்வூர் வெள்ளாளன் கொம்மையரில் சிறுவன் ஆண்டான் இவ்வூர் திருமேற்கோயில் அழகப்பெருமாள் விண்ணகர எம்பெருமாள் கோயில் ஸ்ரீ சேனாபதி ஆழ்வார்க்கு நான் மண்ணறுதியாக விற்ற புன்செய் தோட்டத்துக்கு எல்லையாவது மேற்பாற்கெல்லை சங்காழ்வான் குளத்தில் வயலுக்குத்தெற்கும் கீழ்பாற்கெல்லை தென்னவன் தட்டான் தோட்டத்துக்கு மேற்கும் தென்பாற்கெல்லை சிறுவன் ஆண்டானும் அல்லாளப்பெருமாள் தோட்டத்துக்கு வடக்கும் இந்நான்கெல்லைக்குட்பட்ட நிலமும் மேல்நோக்கிய மரமும் கீழ்நோக்கிய கிணறும் மற்றும் எப்பேர்ப்பட்டன சகல பிராப்திகளும் உட்பட விற்ற இதுக்கு எம்மில் இசைந்த விலைப்பொருள் அன்றாடு வராகன் புள்ளிக் குளிகை பணம் 300 இப்பணம் முந்நூறும் கொண்டு இத்தோப்பில் எப்பேர்ப்பட்ட உரிமைகள் உட்பட மண்ணறுதியாக விற்று பொருளறக்கொண்டு விற்று விலைப்பிரமாணம் பண்ணிக்குடுத்தோம் இப்படிக்கு செம்பிலும் சிலையிலும் வெட்டி இத்தோட்டத்தில் ஆழிக்கல்லும் நாட்டிக்கொள்ளக்கடவதாகவும்... இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து சேவூர் வெள்ளாளன் வகையரில் கேசன் ஆண்டான் எழுத்து இப்படிக்கு வெள்ளாளன் வெள்ளெலிகளில் சொக்கன் எழுத்து இப்படிக்கு முடிகொண்ட காமிண்டன் எழுத்து.

83

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அழகப்பெருமாள் கோயில்

காலம் - போசள வீரவல்லாளதேவன் காலம், கி.பி1322

செய்தி - இராச்சய தெண்ணாயக்கர் சேவூர் வெள்ளாளன் கொம்மையரில் சிறுவன் ஆண்டானிடம் நிலம் வாங்கி சேநாபதி ஆழ்வார்க்குக் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்ரீமது பிரதாபச் சக்கரவத்திகள் போசள புஜபல வீரவல்லாள தேவர் அருளாநின்ற சகரையாண்டு 1244 இதன்மேல் செல்லாநின்ற துந்துபி சம்வத்சரத்து மீன ஞாயிற்றுப் பூர்வ பட்சத்து சப்தமியும்

வெள்ளிக்கிழமையும்பெற்ற புனர்பூசத்து ஸ்வஸ்திஸ்ரீ மோட குலைய குல கமல மார்த்தாண்ட சிதகர கண்ட இம்மடி இராகுத்தராயன் மாதப்ப தெண்ணாயக்கர் குமாரர் இராச்சய தெண்ணாயக்கர் வடபரிசாரநாட்டு சேவூர் ஆன செம்பியன் கிழானடி நல்லூர் திருமேற்கோயில் நாயனார் அழகப்பெருமாள் விண்ணகர் எம்பெருமான் கோயில் சேநாபதி ஆழ்வார்க்கு இவ்வூர் விற்ற தோட்டத்துக்கு இக்கோயிலில் கல்வெட்டினபடி.

84

கொள்ளி குலம்

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம், நாகீசுவரர் கோயில்.
காலம்	-	வீரராசேந்திர தேவனின் 38 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1245.
செய்தி	-	விசயமங்கலம் வெள்ளாளன் கொள்ளிகளில் சொக்கன் தேவன் நாகீசுவரமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராஜேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவதற்கெதிர் ஒன்பதாவது தைத்திங்கள் முதலாக குறுப்பு நாட்டில் விசயமங்கலத்தில் வெள்ளாளர் கொள்ளிகளில் சொக்கன் தேவனேன் ஆளுடையார் திரு நாகீசுரமுடையார்க்கு சந்தியா தீபத்துக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சொன்றுங் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவபிராமணரில் ஆத்ரய கோத்திரத்து ஆளவந்தி மாணிக்கனும் ஆளவந்தி பிழைபொறுத்தானும் மாடல கோத்திரத்து உடையான் அவிநாசியும் உடையான் வேதநாயக பட்டனும் குடங்கொண்டு கோயில் புகுவான் இச்சந்தியா தீபம் ஒரு விளக்கெரிப்பதாகவும் சந்திராதித்தவரை எரிச்சு வருவதாகவும் இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

85

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.
காலம்	-	சுந்தரபாண்டிய தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி.1287
செய்தி	-	குன்றத்தூர் வெள்ளாளன் கொள்ளிகளில் சொக்கன் மனைக் கிழத்தி உடையான் மகள் குப்பாண்டி சித்திரமேழி விண்ணகரம் பெருமாளுக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு உ வது ஆடி மாதம் குறுப்புநாட்டுக் குன்றத்தூர் வெள்ளாளன் கொள்ளிகளில் சொக்கன்

மனைக்கிழத்தி உடையான் மகள் குப்பாண்டியேன் நாயனார் சித்திரமேழி விண்ணகரம்பெருமாள் கரியமாணிக்காழ்வார் கோயிலுக்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு யான் ஒடுக்கின அச்சு ஒன்று இது...

86

கொற்றந்தை குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1259.

செய்தி - இடிகரை வெள்ளாளர் கொற்றந்தைகளில் முதலிவீரன் வில்லீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 3 வது வடபரிசார நாட்டு இடிகரையிலிருக்கும் வெள்ளாளன் கொற்றந்தைகளில் முதலி வீரனேன் ஆளுடையார் வில்லீசுரமுடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்துத் திருநட்டன் அகஸ்தீசுவரம் உடையானான சித்திரமேழிபட்டனேன் குடங்கொண்டு கோயில்புகுவார் சந்திராதித்தவரை செல்வதாக இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

87

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்

காலம் - சர்வசித்தி, பங்குனி 4, கி.பி.1767

செய்தி - இடிகரையில் வெள்ளாளன் கொற்றந்தைகளில் அமரபுயங்க காலிங்கராயன் பிள்ளையானான காலிங்கராயன் தேசாந்திரிகட்கு உணவளிக்க கொடை அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சர்வசித்து வருஷம் பங்குனி மாதம் 4 ஆம் தேதி வடபரிசாரநாட்டு நிரற்றூர்ப்பற்றில் இடிகரையில் வெள்ளாளன் கொற்றந்தைகளில் அமரபுயங்க காலிங்கராயன் பிள்ளையாண்டானான காலிங்கராயன் தேசாந்திரிகட்கு சோறிட 40 பணம் வைத்தான்.

88

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவனின் 13 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1286.

செய்தி - காரைப்பாடி வெள்ளாளன் கொற்றந்தைகளில் அன்னி காவன் மனைக்கிழத்தி கேசி நந்தாதீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஶ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு பதிமூன்றாவது ஆளுடையார் காலகாலஈசுவரர்க்கு திருநந்தா விளக்கு எரிய வடபரிசார நாட்டில் காரையப்பாடியிலிருக்கும் வெள்ளாளன் கொற்றந்தைகளில் அன்னி காவன் மனைக்கிழத்தி கேசியேன் இரண்டு பழஞ்சலாகை அச்சு இத் தேவர்க்கிசைவித்த நம்பி சந்திராதித்தவல் செல்வதாக இத்தன்மம் செய்தேன் கேசியேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

89

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், துடியலூர் விருந்தீசுவரர் கோயில்.

காலம் - 14 ஆம் நூற்றாண்டு.

செய்தி - ஊரும் ஊராளிகளும் விருந்தீசுவரருக்குக் கொடுத்த கொடையைக் கொற்றந்தை கண்டன் எழுதியுள்ளான்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஶ்ரீ தை மாதம் முதல் வடபரிசார நாட்டு நாலூர்ப் பற்றில் துடியலூரில் ஊரும் ஊராளிகளும் எங்களூர் கால்பாடும்.....ப்பணவும் எங்களூர் நாயனார் திருவிருந்தீசுவரம் உடைய நாயனார்க்கு...த்தில் நிறைவற நிறைந்து குறைவறக்கூடி தந்தபடியாவது நாயனார்க்கு அமுதுபடி பல வெஞ்சனங்களுக்கு எங்களூரில் உழமடந்திக்கு கா....தினைக்கு கலக்கண்பும் மூன்று...நந்திக்கு தண்டம் ஆட்டை குடுப்போமாகவும் இது வெண்கலமெடுத்தும் மண்கலம் தகர்த்தும் தண்டிக்கொள்வார்களாகவும் இத்தன்மம் சந்திராதித்தர்வரை நடக்கக் கடவதாகவும் இந்த தன்மம் குமரி கங்கையிடை ரட்சிக்க துடியலூரில் வெள்ளாளன் கொற்றந்தைக் கண்டன்...எழுத்து

90

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவரின் 10 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1275.

செய்தி - இடிகரையில் வெள்ளாளன் கொற்றந்தைகளில் மிலசன் பெருமாள் வில்லீசுவரர் கோயிலில் சந்தியா தீபம்வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஶ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 10 வது வடபரிகார நாட்டு இடிகரையில்

வெள்ளாளன் கொற்றந்தை மிலசன் பெருமாளேன் ஆளுடையார் வில்லீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்துத் திருநட்டன் அகஸ்தீஸ்வர முடையானான சித்திரமேழிப் பட்டனேன் குடங்கொடு கோயில் புகுவான் சந்திராதித்தர்வரை செலுத்துவதாக இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

91

இடம்	-	கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்.
காலம்	-	வீரவல்லாளதேவர் காலம், நளவருடம், கி.பி.1316
செய்தி	-	இடிகரை வெள்ளாளன் கொற்றந்தைகளில், பிள்ளையாண்டியான கோக்கண்டன் ரிஷபதேவரை எழுந்தருளிவித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாளதேவர் திருவிராச்சியம் பண்ணியருளாநின்ற நள வருஷத்து வடபரிசாரநாட்டு இடிகரையில் வெள்ளாளன் கொற்றந்தைகளில் பிள்ளையாண்டியான கோக்கொண்டனேன் ரிஷபதேவர் என் தன்மம்.

92

கொற்றன் குலம்

இடம்	-	கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்
காலம்	-	வீரபாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி1271
செய்தி	-	வெள்ளாளன் கொற்றன் மக்கள் கோவன் வீரணுக்கமுடையார் செய்த கொடை குறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 6 வது வடபரிசாரநாட்டு வெள்ளாளன் கொற்றன் மக்கள் கோவன் வீரணுக்கமுடையார் உடையார் வில்லீசுவரமுடையார்....கைக் கொண்டு காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்து திருநட்டன் அகஸ்தீசுரம் உடையானான சித்திரமேழிக்கோன் குடங்கொண்டு கோயில் புகுவார் செலுத்துவதாகவும்.

93

கோட்டாறு குலம்

இடம்	-	கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் மந்நியூராண்டார் கோயில்

காலம் - குலோத்துங்க சோழனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி1155

செய்தி - குழிமங்கலம் செயங்கொண்டீசுவரர் கோயிலில் வெள்ளாளன் கோட்டாறில் அய்யன் அரைசன் திருமஞ்சனம், திருப்பள்ளி எழுச்சிக்குக் கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது...திங்கள் வடபரிசார நாட்டில் படைவீட்டில் வெள்ளாளன் கோட்டாரில் ஐயன் அரைசனேன் உடையார் செயங்கொண்டீசுவர முடையார்க்கு இவர்க்கு கழஞ்சு பொன் ஒடுக்கினேன் இப்பொன்னுக் கொண்டு ஆண்டு தோறும் காணத்தால் கல நெல் பதக்கும் தண்டி உபயம் வருவதாகவும் பங்கழுசிப்பானுக்கும் திருமஞ்சனம் சுமப்பானுக்கும் திருப்பள்ளித் தாமத்திற்கும் அமுதுபடி நாலு சந்திக்குத் தூணி அரிசியும் பிள்ளையாருட்பட வெஞ்சனாதிகளும் குழிமங்கலத்தில் உடையார் செயங்கொண்டீசுவரம் உடையார் கோயிலில் காணியுடைய சிவப்பிராமணர் பாரத்வாச கோத்திரத்தில் தேவன் தேவனான குலதீப பட்டன்.

94

கோரக்கர் குலம்

இடம் - திண்டுக்கல் மாவ:ட்டம், பழனிவட்டம், கொங்கூர் பசுபதீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர தேவனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி. 1214.

செய்தி - கொங்கூர் வேளாளன் கோரக்கர்களில் சோழன் கோவன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்குச் செல்லா நின்ற யாண்டு ஏழாவது பொங்கலூர்க்கா நாட்டுக் கொங்கூரான ஜெயங்கொண்ட சோழ நல்லூரில் பசுபதீஸ்வரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு துளைகழஞ்சு பொன் சிவப்பிராமணன் வசம் குடுத்தேன் இவ்வூர் வேளாளன் கோரக்கர்களில் சோழன் கோவனேன் இப்பொன் கொண்டு விளக்கெரிக்கவே கடவன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் கவுசிகன் ஆண்டபிள்ளை உரியவனான சைவாலயச் சக்கரவத்தியேன் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவாராக பன்மாகேஸ்வரர் ரட்சை.

95

சாத்தந்தை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரியமாணிக்கப்பெருமாள் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 1217

செய்தி - விசயமங்கலம் வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவனான முடிகொண்ட சோழ மாராயன் திருப்படி மாற்றுக்காக 29 அச்சு ஸ்ரீ பண்டாரத்தில் மூலப்பொருளாக வைத்து நித்தம் நானாழி அமுதுபடி செய்ய ஏற்பாடு செய்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பத்தாவது ஐப்பசித்திங்களில் குறுப்பு நாட்டு விசயமங்கலத்து திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகர் ஆழ்வார்க்கு திருப்படிமாற்றுக்கு இருபத்தொன்பது அச்சு எம்பெருமான் ஸ்ரீ பண்டாரத்து ஒடுக்க இவ்வமுதுபடி நித்த நானாழியமுதுபடி செல்வதாகக் கல்வெட்டுவித்தேன் விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் தேவனான முடிகொண்ட சோழ மாராயனேன் தர்மம் சந்திராதித்தர்வரை செல்வதாக இத்தன்மம் இடங்கை தொண்ணூற்றொன்பது ரட்சை இறக்குவான் வழியேழெச்சமறுவான்.

96

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொங்கூர் பசுபதீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திர தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1218.

செய்தி - கொங்கூரான செயங்கொண்ட சோழநல்லூர் வெள்ளாளன் சாத்தந்தை பிள்ளன்தேவன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு 11 வது கொங்கூரான செயங்கொண்ட சோழநல்லூரில் இருக்கும் வெள்ளாளரில் சாத்தந்தைகளில் பிள்ளன் தேவனேன் நாயனார் பசுபதீசுவரமுடையார்க்கு சந்தி விளக்கு ஒன்றுக்கு..... சோழபிடாரனேன் இவ்விளக்கு குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை.... பன் மாகேஸ்வரர் ரட்சை.

97

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர தேவனின் இருபதாவது ஆட்சியாண்டு, கி.பி.1227

செய்தி - விசயமங்கலம் வெள்ளாளன் சாத்தந்தைகளில் சிறியான் உடையான் மனைக்கிழத்தி தாவந்தாவி திருப்பணியில் ஒரு படையில் மூன்றொபாதி செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபதாவது தை மாதம் குறுப்பு நாட்டுத் திங்களூர் உடையார் சந்திரபுரி உடையார் கோயில் திருக்கற்றளித் திருப்பணி விசையமங்கலத்து இருக்கும் வெள்ளாளரில் சாத்தந்தைகளில் சிறியான் உடையான் மனைக்கிழத்தி தாவந்தாயி ஒரு படையில் மூன்றொபாதி செய்வித்தார்.

98

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் குன்றமுடையார் கோயில்
காலம்	-	வீரபாண்டிய தேவனின் 17 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1282
செய்தி	-	சிறுவலூர் வெள்ளாளன் சாத்தந்தைகளில் கேசன் மனைக் கிழத்தி அந்தியூராண்டி குன்றமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு 17 வது மார்கழி மாத முதலாக குறுப்பு நாட்டில் சிறுவலூர் வெள்ளாளன் சாத்தந்தைகளில் கேசன் மனைக்கிழத்தி அந்தியூராண்டியேன் குறுப்பு நாட்டில் குன்றத்தூர் நாயனார் குன்றமுடையார் கோயிலில் சந்தியா தீப விளக்கு ஒன்றினுக்கு அச்சு ஒன்று கொடுத்தேன்.

99

இடம்	-	ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் மாரியம்மன் கோயில்.
காலம்	-	பரிதாபி வருடம், 19 ஆம் நூற்றாண்டு, கி.பி.1852
செய்தி	-	வெள்ளோடு சாத்தந்தை குலம் சின்னண கவுண்டர் மாரியம்மன் கோயில் தீபத்தம்ப மண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

பரிதாபி வருஷம் வெள்ளோடு சாத்தந்தை கோத்திரம் உருளிக்காரப் பெரியணகவுண்டர் மகன் சின்னணகவுண்டன் உபயம்.

100

இடம்	-	கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி அகத்தூரம்மன் கோயில்.

காலம் - பத்தொன்பதாம் நூற்றாண்டுத் தொடக்கம்

செய்தி - குமாரசாமிக் காலிங்கராயர் அவர் தம்பி சின்னைய கவுண்டர், மணியம் குழந்தைவேலுப்பிள்ளை, சம்பிரதி குமரகுருபரம் பிள்ளை, போடிபாளையம் மணியம் சாமிக்கவுண்டர் இவர்கள் நலனுக்காக அகத்தூர் அம்மன் கோயிலில் பந்தக்கால் மண்டபம் கட்டப்பட்டது.

கல்வெட்டு

சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலாதிபதி எம்மண்டலமுந் திறை கொண்டருளிய நான்கு சிம்மாசனாதிபதி மகாமண்டலேசுவரன் ஆனைகுந்திச் சமஸ்தானம் சதாசிவராயன் புத்திரன் வீரநரசிம்மராயர் அரசாட்சி ராமராயர் நாளில் சாலிவாகன சகாப்தம் 1203 கலியுக சகாப்தம் 4382 மேல் செல்லாநின்ற விய வருடம் தை மாதம் 5 தேதி சப்தமி நட்சத்திரம் அமிர்த சித்த யோகம் கெரசை வாகரணம் பெற்ற சுபதினத்தில் ராயர் பட்டாபிஷேகம் பெற்று தம்முடைய காணியாட்சியாகிய பூந்துறை நாட்டில் பவானியாற்றில் அணைகட்டிச் சந்திராதித்தர் உள்ள மட்டும் காலிங்கராயன் அணை என்கிறதாகப் பேர்பிரசித்தியாகச்செய்து காவடிக்கா நாட்டில் ஊத்துக்குளி பாளையக்காரனாகப் பேர் வாங்கி ராயர் பட்டாபிஷேகம் பத்தாம் பட்டக்காரனாகிய குமாரசாமிக் காலிங்கராயக் கவுண்டர் அவர்தம்பி சின்னைய கவுண்டர் நாட்டு மணியம் குழந்தைவேலுப்பிள்ளை சம்பிரதி குமரகுருபரம் பிள்ளை போடிபாளையம் மணியம் சாமிக்கவுண்டன் இவர்கள் முதலான சகலரும் சுகத்திலிருக்கும் படியாய் ஆதி...அகத்தூர் அம்மனுக்குப் பந்தக்கால் மண்டபம் திருப்பணி உபயம் ஐயாறு குட்டியாசாரி மகன் ஏமுராயன் கை வேலை அகத்தூர் அம்மன் லட்சிக்கவும்.

101

இடம் - கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி அகத்தூரம்மன் கோயில்

காலம் - விய புரட்டாசி 25, 19ஆம் நூற்றாண்டு, கி.பி.1826

செய்தி - குமாரசாமி காலிங்கராயன் விநாயகர் கோயில் கட்டினார்.

கல்வெட்டு

விய வருஷம் புரட்டாசி மாதம் 25தேதி வெள்ளிக்கிழமை தசமி நாழிகை 25 திருவோண நட்சத்திரம் நாழிகை 24 திரிதி நாமயோகம் நாழிகை 16 வகேதசை நாழிகை 24 சுபதினத்தில் ராயஸ்ரீபட்டம் குமாரசாமிக் காலிங்கராயக்கவுண்டர் தங்கள் விக்கினேசுவரன் கோயில் திருப்பணி செய்து நிறைவேற செய்விச்சுது குருநாத ஆசாரி மகன் பத்திரனாசாரி.

102

இடம் - கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஜமீன் ஊத்துக்குளி அகத்தூரம்மன் கோயில்

காலம் - கி.பி. 1808

செய்தி - குமாரசாமிக் காலிங்கராயர் அகத்தூர் அம்மன் கோயிலில் கருட கம்பம் உபயம்.

கல்வெட்டு

சாலிவாகன சகாப்தம் 1730 கலியுக சகாப்தம் 4915 மேல் செல்லாநின்ற ஸ்ரீமுக கார்த்திகை மாதம் 25 தியதி சுக்கிர வாரமும் சப்தமி 16 பரிநாம யோகமும் பெற்ற சுபதினத்தில் ஊத்துக்குளிப் பாளையக்காரர் பட்டாபிஷேகம் பெற்ற அகத்தூர் காலிங்கராயர் அவர்கள் குமாரன் குமாரசாமிக் காலிங்கராயக் கவுண்டர் அவர்கள் தங்கள் அகத்தூர் அம்மனுக்கு கருடகம்பம் உபயம்.

103

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு இராசாக்கோயில்

காலம் - 19 ஆம் நூற்றாண்டு

செய்தி - நல்லைய கவுண்டம்பாளையம் முதலியாக் கவுண்டர் குதிரை உபயம்

கல்வெட்டு

வெள்ளோடு நல்லைய கவுண்டம்பாளையம் சாத்தந்தை நல்லய்யகவுண்டன் குமாரன் முதலியாக் கவுண்டன் குமாரன் காசிலிங்கக் கவுண்டன் உபயம்.

104

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கனகபுரம் சித்திவிநாயகர் கோயில்.

காலம் - 19 ஆம் நூற்றாண்டு

செய்தி - காலிங்கராயன் வழியினரான காசிலிங்கக் கவுண்டர் சித்தி விநாயகர் கோயில் கட்டினார்.

கல்வெட்டு

காலிங்கராயன் வங்குஷத்தில் சாத்தந்தை கோத்திரம் தென்முகம் வெள்ளோடு காசிலிங்கக் கவுண்டன் உபயம்.

105

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கவுண்டச்சி பாளையம் பாலமடையம்மன் கோயில்.

காலம் - கி.பி. 1850.

செய்தி - காலிங்கராயன் வழியினரான சாத்தந்தை குலம் கொளந்தசாமிக் கவுண்டர் பாலமடையம்மன் கோயில் கட்டினார். காலிங்கராயன் அணை நிற்கும் பொருட்டு அனுமன்பள்ளி சின்னம்மன், பெரியம்மன் கோயிலிலிருந்து காலிங்கராயன் எடுத்துவந்த பெரியம்மன் சிலையே பாலமடையம்மன்.

கல்வெட்டு

றாமசெயம் சுபமஸ்து விசயாப்புதய சாலிவாகன சகாப்தம் 1772 கலியுக சகாப்தம் 4951 க்கு மேல் நடக்கும் சார்வரி வருஷம் தை மாதம் 25 தேதி பெற்ற நவமி வெள்ளிக்கிழமை...நட்சத்திரம் சவுபாக்கியநாமயோகம் மிந்த சுபதினத்தில் சாத்தந்தி கோத்திரம் காலிங்கராய கவுண்டன் வம்மிஷ வெள்ளோடு கனகபுரம் காசிலிங்கக் கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன் மகன் பழனி வேலப்பகவுண்டன் மகன் கொளந்தவேல் கவுண்டன் செயிவிச்ச பாலமுடி அம்மன் கோயில் திருப்பணி வேலை முடிந்தது உபயம்.

106

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளிரவெளி, மாங்குட்டை கரியகாளியம்மன் கோயில்

காலம் - கி.பி.1804

செய்தி - இங்கிலீசு கும்பினியார் நாளில் வெள்ளோடு சாத்தந்தை குலம் சின்னக்கவுண்டர் கரியகாளியம்மன் கோயில் கட்டினார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1726 கலியுக சகாப்தம் 4905 மிதின்மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருஷம் புரட்டாசி மாதம் 30 தேதி சனிக்கிழமை விசயதசமி திருவோண நட்சத்திரம் திருவிநாம யோகமுங் கூடின சுபதினத்தில் குன்றத்தூர் வெள்ளிரவெளி கரியகாளியம்மனுடைய கோவில் திருப்பணி ஆரம்பம் மகாராசராயஸ்ரீ யிங்கிலீசு கும்பினியார் நாளில் கெற்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் சுத்துப்பிரகாரத் திருமதிள் ரத நிர்மானமும் உண்டுபண்ணியிதினுடன் குரோதன வருஷம் புரட்டாசி மாதம் 27 தேதி வியாழக்கிழமை அமரபட்சத்து துதிகை அசுபதி நட்செத்திரம் வச்சிரநாமயோகம் தைதுலவாகரணமும் அமிர்த யோகமும் பெற்றநாளில் கெற்பக்கிரகம் அர்த்தமண்டபம் மகாமண்டபம் விக்கிரகம் முதலான சம்புரோசணையும் செய்து மகாசம்பு ரோட்சணையும் செய்து ரதோற்சவம் நடப்பிவிச்சவன் குறுப்பு நாடு குன்றத்தூர் வெள்ளிரவெளி காணியாளக்கவுண்டர்களில் வெள்ளோடு சாத்தந்தை கோத்திரத்தில் திருவேங்கடக் கவுண்டன் குமாரன் சுப்பிரமணியக்கவுண்டன் புத்திரன் சின்னக்கவுண்டன் உபயம்.

107

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், எலவமலை செல்லாண்டி யம்மன் கோயில்

காலம் - விரோதிகிருது ஐப்பசி 25, 19 ஆம் நூற்றாண்டு, கி.பி.1851

செய்தி - சாத்தந்தை குலம் லிங்ககவுண்டர், விஜயகவுண்டன், முத்தாண்டி மூவரும் செல்லாண்டியம்மன் கோயில் கட்டினர்.

கல்வெட்டு

விரோதிகிருது வருஷம் அப்பிசை மாதம் 25 தேதி யீறோடு தாலூக்காவுக்குச் சேர்ந்த யெலவமலையிலேயிருக்கும் சாத்தந்தை குல பெரியண கவுண்டன் மகன் லிங்ககவுண்டன் சின்னியம் பாளையத்திலிருக்கும் செல்ல குமாரகவுண்டன் மகன் விஜயகவுண்டன் குப்பாண்டி மகன் முத்தாண்டி மூவருமாகக் கூடி செல்லாண்டியம்மன் திருப்பணி வேலை முடிச்சது சம்பூரணம் சதா சேவை.

108

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் இராமசாமி கோயில்

காலம் - 19 ஆம் நூற்றாண்டு

செய்தி - சாத்தந்தை குல சின்னய கவுண்டரும் செலம்ப கவுண்டரும் திருப்பணியில் தூண் அளித்தனர்.

கல்வெட்டு

யிந்த தூணு சாத்தந்தைகுலம் செம்பாக்கவுண்டன் மகன் சின்னயக்கவுண்டன் உபயம் யிந்த தூணு சாத்தந்தைகுலம் குப்பிச்சிக் கவுண்டன் மகன் செலம்பக்கவுண்டன் உபயம்.

109

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீரநஞ்சராயர் காலம், கி.பி.1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்கு தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர்கள்.

கல்வெட்டு

வெள்ளோடு வெள்ளாளன் சாத்தந்தைகளில் கனகபுரி வேளான் பெரியண்ணன் இலவமலை வெள்ளாளன் சாத்தந்தைகளில் சடையர்.

110

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கூகலூர் மத்திய புரீசுவரர் கோயில்

காலம் - கி.பி.1919

செய்தி - கூகலூரில் வாழ்ந்த சாத்தந்தைகுல இளையணகவுண்டர் மகன் பழனியப்பகவுண்டரும், அவர் மகன் பச்சையப்பகவுண்டரும் 1919 ஆம் ஆண்டு 5 ஏக்கர் 63 .5 செண்ட் நன்செய் நிலத்தைக் கூகலூர் மத்தியபுரீசுவரர் கோயிலுக்குக் கொடையாக அளித்தனர். (24 அடிச் சதுரக் கோலால் 402.5 குழி) வரி நீக்கி வருவாய் நெல்லில் பாதி காலையில் வேதம் ஓதவும், சிவன் உமைக்கு சகஸ்ரநாம அர்ச்சனையும், கணபதி, முருகனுக்கு அஸ்டோத்திரம் சொல்லும் அந்தணன் பெறவும், கால் பங்கு அபிஷேக அர்ச்சனை நிவேதனத்துக்கும், கால் பகுதி வில்வம், விளக்கு, பாயச நிவேதனத்துக்கும் அளித்துப் பதிவும் செய்து அழகிய ஆசிரியப்பா வடிவில் கோயில் முன் மண்டபத்தில் பாடலாகவும் வெட்டி வைத்தனர்.

கல்வெட்டு

கடல்புடை சூழ்ந்த காசினி தன்னில்
கலியுகம் அய்யா யிரத்திரு பதினில்
காளயுக் தியாண் டைப்பசி மதியில்
காஞ்சிக் கூவல் நாட்டுள் கூவலூரர்
மத்யபுரி ஈசன்என மறுபெயர் கொண்ட
நட்டு ராண்ட நாயனார் தமக்கு
கூவலூரர் வேளாண் குடிச்சாத் தந்தை
இளையண வேள்தவத்து எய்திய புதல்வன்
பழனி யப்பனும் ஒருபழனி யப்பன் சேய்
பச்சையப் பனுமாய் இருவரும் மனமொத்து
எழுதிவைத் திட்ட தருமசாசனம்
கூவலூரர்ப் புதுவாய்க் கால்பாய் நஞ்சையில்
எங்களுக் குள்ள ஏக்கரா நாலு
சென்டறு பத்து மூன்றரை யுடனே
மேவானிக் கிராமம் ராஜவாய்க் கால்பாய்
தேர்புளியல் என்ற திகழ்தரு நஞ்சை

ஏக்கரா ஒன்றும் இவ்விரண்டும் சேர்ந்து
ஏக்கர் ஐந்துடன் அறுபத்து மூன்றரை
சென்டும் கொண்டஇவ் விரண்டு பூமியும்
இருபத்து நாலடிச் சதுரக் குழிகள்
நானூத்தி இரண்டரை உள்ள ததனில்
வருடந் தோறும் வருந்தானி யத்தில்
அவ்வக் காலத்து அரசிறை செலுத்தி
மீதி உள்ளதில் பாதி தானியம்
காலை ஆலயத்தில் வேதம் ஓதியும்
மாலையில் சிவன்உமைக்கு ஆயிர நாமமும்
கணபதி கந்தவேள் அஷ்டோத் திரமும்
சொல்லும் வைதிக அந்தணன் பெறவும்
பின்னும் பாதியில் பாதி தானியம்
அபிஷேக அர்ச்சனை செய்யும் அந்தணன்
அன்ன நிவேதனமாய்ச் செய்து பெறவும்
மீதி உள்ளதில் வில்வம் விளக்கு
பாயச நிவேதனம் பண்ணிவித் தற்குமாம்
இறைவன் கோயில் தருமகர்த்தன்
எங்கள் குலத்தில் கந்தப் பனிடம்
விடுத்த பூமி தேவ தானம்
எங்கள் சந்ததிக்கு இப்பூமி தன்னில்
யாதொரு தொடர்பும் இல்லை அவர்கள்
தருமம் தன்னைத் தான் கவனித்து
என்று நீடூழி நடத்த
மன்றுள் ஆடுவார் மலர்ப்பதம் போற்றி.

இவ்விவரம் தற்கால ராஜாங்கத்தில் பதிவு செய்திருக்கும் பத்திரங்களில் பார்க்கலாம். இங்ஙனம் பழனியப்பகவுண்டன் பச்சியப்பகவுண்டன் மரகதாம்பிகை சகாயம்.

111

சாத்துபாடி குலம்

இடம் – ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் – வீரராசேந்திர தேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1221

செய்தி – விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துபாடிகளில் உடையான்

தேவனான சிவகல்யாண நம்பி சிவராத்திரி நான்கு கால அமுதுபடிக்கு மூன்று கழஞ்சு பொன் கொடுத்தார். தொண்ணூறு விளக்குகளும் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராஜேந்திர தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு பதினாலாவது குறுப்பு நாட்டு விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துபாடிகளில் உடையான் தேவனான சிவகல்லியாண நம்பியேன் ஆளுடையார் திரு நாகீஸ்வர முடையாற்குச் சிவராத்திரிக்கு வேண்டுவதுக்கு குடுத்த பொருள் முக்கழஞ்சுக்கும் அமுதுபடி நாலு சந்திக்கும் தூணிப்பதக்கும் திருவிளக்குத் தொண்ணூறும் இதுக்கு வேண்டும் விஞ்சனாதிகள் அட்டுவதாகக் கைக்கொண்டோம் யிக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் ஆத்ரேய கோத்திரத்து தட்சிணாமூர்த்தி ஆளவந்தியான குறுப்பு நாட்டுப்பட்டனும் மாடல கோத்திரத்து தெற்றியப்பனும் மாடல கோத்திரத்து குனிசாரனுடையானான நாற்பத் தெண்ணாயிரச் சக்கரவர்த்தியும் இவ்வனைவோம் இத்தன்மம் சந்திராதித்தவரை செலுத்துவதாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

112

சாத்துவாய் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - குலோத்துங்க சோழதேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி.1156

செய்தி - விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துவாய்களில் காங்கய தரையன் மனைக்கிழத்தி ஆண்டியான மங்கையர்க்கரசி பெரிய நாச்சியார் திருக்கலியாண உற்சவம், அமுதுபடி, இரண்டு சந்தியா தீபம் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு எட்டாவது குறுப்பு நாட்டு விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துவாயிகளில் காங்கயதரையன் மனைக்கிழத்தி ஆண்டியான மங்கையர்க்கரசியேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்குப் பெரிய நாச்சியாரை எழுந்தருளுவித்துத் திருக்கலியாணம் பண்ணி நாச்சியார்க்கு அமுதுபடி நித்தம் இருநாழி அரிசிக்கும் அடைக்காயமுது ஆறுக்கும் இலையமுது பதினைஞ்சுக்கும் சந்தியாதீபம் இரண்டுக்கும் ஆண்டொன்றுக்கு இரண்டு பரிவட்டத்துக்கும் விசயமங்கலத்து ஊரார் வசம் ஒடுக்கின அச்சு பத்தொன்பது இத்தன்மம் சந்திராதித்தர்வரை உபையம் ஊரார் செலுத்துவதாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை

113

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரமுடையார் கோயில்
காலம்	-	வீர ராசேந்திர தேவனின் 42 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1249
செய்தி	-	விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துவாய்களில் உடையான் உடையான் நாகீசுவரருக்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு நாற்பத்திரண்டாவது கார்த்திகை மாதம் முதலாகக் குறுப்பு நாட்டு விசயமங்கலத்து வெள்ளாளன் சாத்துவாய்களில் உடையான் உடையானேன் ஆளுடையார் திருநாகீஸ்வர முடையார்க்கு சந்தியாதீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீ யக்கி பழஞ்சலாகை அச்சொன்றுங் கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில்.... ஆளவந்தபட்டன் மாடல கோத்திரத்து உடையான் வஞ்சிய... வேத நாயக பட்டனும் பிள்ளையாழ்வான் வாழ்வித்தானும் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தர் வரை எரிப்போமாகவும் இத்தன்மம் பன்மாகேஸ்வரரட்சை.

114

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்றத்தூர் குன்ற முடையார் கோயில்
காலம்	-	போசள வீரவல்லாள தேவர் காலம், சித்திரபானு கார்த்திகை, கி.பி. 1342
செய்தி	-	குன்றத்தூர் வெள்ளாளன் சாத்துவாயரில் கோன் கூத்தப்பெருமாள் குன்றமுடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க வீரவல்லாள தேவர் திருவிராச்சியம் பண்ணியருளாநிற்க சித்திரபானு வருஷத்துக் கார்த்திகை மாதம் குறுப்பு நாட்டுக் குன்றத்தூர் வெள்ளாளர் சாத்துவாயரில் கோன் கூத்தப்பெருமாள் குன்றத்தூர் ஆளுடையார் குன்றமுடையார்க்குச் சந்தியாதீபம் ஒன்றுக்கு அக்கோயிலுடைய சிவப்பிராமணரில் வாச்சியகோத்திரத்துப் பன்றிபட்டன் உய்யவந்தான் உள்ளிட்டாரும் நான் உத்திராபதி உள்ளிட்டாரும் இவ்வனைவோமும் அச்சொன்றுங் கைக்கொண்டு குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தர் வரை செலுத்துவோமாக இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

115

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் குன்ற முடையார் கோயில்

காலம் - போசள வீரவல்லாள தேவர் காலம், கி.பி.1296 - 1342

செய்தி - குன்றத்தூர் வெள்ளாளன் சாத்துவாய் குலத்தார் கொடை

கல்வெட்டு

நன்மங்கலஞ் சிறக்க வீரவல்லாள தேவர்க்குச் செல்லாநின்ற யாண்டு...குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாளன் சாத்துவாயரில்....இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் வாச்சிய கோத்திரத்தில் பன்றிபட்டன் உய்யவந்தபட்டன் உள்ளிட்டார் குடங்கொண்டு கோயில்புகுவார் சந்திராதித்தவரை....

116

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

காலம் - விரோதி வருடம், ஆனிமாதம், கி.பி.16 ஆம் நூற்றாண்டு, கி.பி. 1529.

செய்தி - குன்றத்தூர் வெள்ளாளன் சாத்துவாயரில் கேசன் அம்பலத் தாடுவார் சந்தியா தீபம் எரிக்க பாலையன் புள்ளிப்பணம் 12 கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விரோதி சம்வத்சரத்து ஆனி மாதத்தில் குறுப்புநாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாளன் சாத்துவாயரில் கேசன் அம்பலத்தாடுவார்க்கு மேற்படியூரில் நாயனார் இலட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலில் நம்பிமாரில் பாரத்வாஜ கோத்திரத்து திருவேங்கடதாதன் ஆயப்பிள்ளையேன் கல்வெட்டிக் குடுத்தபடியாவது இற்றை நாளில் இவர் பக்கல் நாயனார் இலட்சுமி நாராயணப் பெருமாள் திருமுன்பே சந்தியாதீப விளக்கு எரிப்பதாக வாங்கின பணம் பாலையன் புள்ளிப்பணம் 12 இப்பணம் பன்னிரண்டும் பற்றிக்கொண்டு சந்தியாதீபம் எரிக்கக் கடவேனாகவும் இம்மரியாதி குடங்கொண்டு கோயில் புகுவான் எரிக்கக் கடவார்களாகவும் இப்படி சம்மதித்துக் கல்வெட்டிக் குடுத்தேன் ஆயப்பிள்ளையேன்.

117

செங்கண்ணன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காங்கய அகிலாண்ட புரம், அகத்தீசுவரர் கோயில்.

காலம் - கி.பி.13 ஆம் நூற்றாண்டு.

செய்தி - காங்கயம் வெள்ளாளன் செங்கண்ணரில் பிள்ளை சேரமான் தோழனான தொண்டைமான் அகத்தீசுவரர் கோயிலில் நிர்மாலியத் தொட்டி அமைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ காங்கயத்தில் நாயனார் திரு அகத்தீசுரமுடையார் கோயிலில் நிர்மாலியத் தொட்டி சமைப்பித்தேன் இவ்வூர் வெள்ளாளன் செங்கண்ணரில் பிள்ளை சேரமான் தோழனான தொண்டைமான் தன்மம் ஸ்ரீ நன்றாக.

118

செட்டர் குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், கோயமுத்தூர் (வடக்கு) வட்டம், இடிகரை வில்லீசுவரமுடையார் கோயில்

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1287.

செய்தி - சேவூர் வெள்ளாளன் செட்டரில் சின்னன் காவன் வில்லீசுவர முடையார்க்குச் சந்தியா தீபம் வைக்க பணம் 10 கொடைய ளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 2 ஆவது வடபரிசாரநாட்டு சேவூர் வெள்ளாளன் செட்டரில் சின்னன் காவனேன் உடையார் வில்லீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் . காசிப கோத்திரத்து திருநட்டன் அகத்தீசுவரம் உடையானான சித்திரமேழி பட்டனேன் குடங்கொடு கோயில் புகுவான் சந்திராதித்தர் வரை செலுத்துவோமாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

119

செம்பன் குலம்

இடம்	-	கோவை மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், வெள்ளியங்காடு (முத்துக்கல்புதூர்) பசுவேசுவரர் கோயில்.
காலம்	-	வீரராசேந்திர தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1210
செய்தி	-	மாவண்டூரான எறிவீரபட்டணம் வெள்ளாளன் செம்பரில் செல்வனான கொங்காள்வான் பசுபதீசுவரமுடையார்கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு 3 வது வடபரிசாரநாட்டில் மாவண்டூரான எறிவீரபட்டணத்தில் வெள்ளாளன் செம்பரில் செல்வனான கொங்காழ்வானேன் பசுபதீஸ்வரமுடையார் கோயிலில் சந்தியா தீபமொன்று காணியுடைய சிவப்பிராமணன் கைவசம் ஒடுக்கின பொன்.

120

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோயில், குமரன் கோயில்
காலம்	-	விரோதி ஐப்பசி, 15 தேதி, கி.பி.1529
செய்தி	-	காஞ்சிக்கூவல் வெள்ளாளன் செம்பரில் இளச்சி காலிங்கராயன் குமரன் கோயில் திருப்பணி செய்தார்.

கல்வெட்டு

விரோதி வருஷம் ஐப்பசி மாதம் 3 தியதி ஸ்ரீமன் மகாமண்டலீசுவர பாலய தேவர் காலத்து காஞ்சிக்கூவல் வெள்ளாளன் செம்பரில் இளைச்சி காலிங்கராயன்.

121

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வ லிங்கேசுவரர் கோயில்
காலம்	-	வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489 - 1500.
செய்தி	-	பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடைகொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

நசையனூரில் வெள்ளாளன் செம்பர்களில் பச்சையன்.

122

செம்பூத்தன் குலம்

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் நாகீசுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1279.

செய்தி - கொடுவாய் வெள்ளாளன் செம்பூத்த குலம் சிறுக்காளி சிறுபிள்ளையான சன்னதி நிறைந்தான் நாகீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 14வது பொங்கலூர்க்கா நாட்டுக் கொடுவாயில் செம்பூதிகளில் சிறுக்காளி சிறுபிள்ளையான சன்னதி நிறைந்தானேன் குடுத்த சந்தியாதீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின அச்சு 4 இவ்வச்சு நாலுங் கைக்கொண்டோம் இக்கோயில் சிவபிராமணரில் கவுசிய கோத்திரத்து அடிகள் திருத்தளியான் திருச்சிற்றம்பல நம்பி ஒருகையும் குன்றன் ஆவுடையான் காளியாண்டானும் நாங்களிருவரும் ஒரு கையும் இவ்விருவோம் விளக்கொன்றும் செலுத்துவோம் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாகேசுவரர் ரட்சை.

123

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் உத்தண்ட வேலாயுதசுவாமி கோயில்.

காலம் - கி.பி. 1843, சோபகிறிது, புரட்டாசி மாதம்

செய்தி - முதலிபாளையம் செம்பூத்தகுலம் கவுண்டைய கவுண்டர் கோயில் திருமதிளும், மகன் நல்ல குமாரசாமிக்கவுண்டர் குறட்டு வாசலும் உபயம்.

கல்வெட்டு

கலியுக சகாத்தம் 4943ல் சோபகிறிது வருஷம் பிரட்டாசி மாதம் முதலி பாளையத் திலேயிருக்கும் உள்ளூருக் கவுண்டைய கவுண்டன் திருமதிளு உபயம் அவருடைய மகன் நல்லகுமாரசாமிக் கவுண்டர் குறட்டு வாசல் செம்பூத்த கோத்திரம் உத்தண்ட வேலாயுதசாமி துணை.

124

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் உத்தண்ட வேலாயுதசுவாமி கோயில்.

காலம் - கி.பி. 1775, மன்மத சித்திர்ரை மாதம்.

செய்தி - ஊதியூர் செம்பூத்த குலம் கவுண்டைய கவுண்டர் கோயில் திருமதிள் கட்டினார்.

கல்வெட்டு

சுவாமி துணை கலியுக சகாத்தம் 4875 க்கு மேல் செல்லாநின்ற மன்மத வருஷம் சித்திரை மாதம் தென்கரை நாடு கொற்றனூர் ஊதியூர்க் காதிபன் செம்பூத்த கோத்திரம் நல்ல குமாருக்கவுண்டன் மகன் கவுண்டைய கவுண்டன் உத்தண்ட வேலாயுதசுவாமி கோயில் திருமதில் உபயம்.

125

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், வாணராய நல்லூர் கரிய காளியம்மன் கோயில் (தீபத்தம்ப மண்டபம்)

காலம் - கி.பி. 1853, பிரமோதூத தை மாதம்

செய்தி - செம்பூத்தகுல மாணிக்கி ஊதியூர் வத்தமுதலி மகள் தெய்வானை தீபத்தம்பம் அமைத்தார்.

கல்வெட்டு

கலியுக சகாத்தம் 4954 க்கு மேல் பிரமோதூத தை மாதம் செம்பூத்தகுல மாணிக்கி ஊதியூர் வத்த முதலி மகள் தெய்வானை உபயம்.

126

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் உத்தண்ட வேலாயுதர் கோயில் மயில் வாகனக் குறடு.

காலம் - 23-4-1896, துன்முகி சித்திரை 13 தேதி.

செய்தி - நாகரசு நல்லூர் செம்பூத்த குலம் ராமசாமிக் கவுண்டர் மயில் வாகனக் குறடு உபயம்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4996 துன்முகி வருஷம் சித்திரை மாதம் 13 தேதி நாகரசு நல்லூர் செம்பூற்றாதிபன் சிவன்மலைக் கவுண்டர் குமாரன் ராமசாமிக் கவுண்டர் மயில்வாகனக் குறடு உபயம்.

127

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் நாகீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழனின் 12 ஆம் ஆடசியாண்டு, கி.பி. 1267.

செய்தி - செம்பூத்த குலம் சாடையார் கண்ணைக் கொடுத்தேன் திருநிலைகால் இரண்டு கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு 12 வது பொங்கலூர்க்கா நாட்டில் திரு நாகீசுவரம் உடையார் கோயிலில் செம்பூதிகளில் சாடையார் கண்ணைக் கொடுத்தேன்... திருநிலை காலிரண்டு.

128

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், மறவபாளையம் அப்பிரமேயர் கோயில் (தீபத்தம்பத்தில் எழுதப்பட்டுள்ளது)

காலம் - கி.பி.1869.

செய்தி - கொற்றனூர் செம்பூத்த குலம் முதலிபாளையம் (வட்டமலை பாளையம்) குமாரக் கவுண்டர் தீபத்தம்பம் அமைத்தார்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4970க்கு மேல் செல்லாநின்ற விபவ வருஷம் கார்த்திகை மாதம் கொற்றனூர் ஆதிபன் செம்பூத்தகுல கோத்திரம் முதலிபாளையம் நல்ல குமாருக் கவுண்டன் மகன் வட்ட மலைப்பாளையம் குமாரக் கவுண்டன் உபயம்.

129

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம்பூண்டி அத்தனூரம்மன் கோயில்.

காலம் - விசு கார்த்திகை 5, பதினெட்டாம் நூற்றாண்டு, கி.பி.1761.

செய்தி - செம்பூத்த குலம் குப்பிச்சிக்கவுண்டர் அத்தனூரம்மன் கோயில் மகாமண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

செம்பூத்த கோத்திரம் விசு வருஷம் கார்த்திகை மாதம் 5 தேதி கூத்தம்பூண்டி காணியாளர் குப்பிக்கவுண்டன் மகன் செட்டிக் கவுண்டன் மகன் குப்பிச்சிக் கவுண்டன் மகா மண்டபம் அவன் உபயம்.

130

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம்பூண்டி புவனேசுவரர் கோயில்.

காலம் - 13ஆம் நூற்றாண்டு.

செய்தி - கணவரும் மனைவியும், உருவச்சிலையின் கீழ் பெயர்.

கல்வெட்டு

செம்பூத்த குலம் செல்லப்பகவுண்டரும் தேவியும்.

131

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம் பூண்டி புவனேசுவரர் கோயில்.

காலம் - கி.பி. 18ஆம், நூற்றாண்டு.

செய்தி - செம்பூத்த குலத்தார் திருப்பணி.

கல்வெட்டு

இதன்மேல் செல்லா நின்ற ரவுத்திரி வருஷம் செம்பூத்த குலக் கவுண்டர்கள் அனைவரும் செய்த தருமம் நீடூழி காலம் சிவபத முண்டாகும்.

132

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், கொடுவாய் நாகீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவரின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1271

செய்தி - கொடுவாய் வெள்ளாளன் செம்பூதிகளில் மஞ்சனான காளியான் காழி ஞானசம்பந்தன் நாகீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 6வது பொங்கலூரார்கா நாட்டில் கொடுவாயில் வெள்ளாளன் செம்பூதிகளில் மஞ்சனான காளியான் காழிஞான சம்பந்தனேன் திருநாகீசுவரமுடையாற்கு நான் சந்தியா தீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின அச்சொன்றும் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் கவுசிய கோத்திரத்துக் குன்றன் ஆவுடையானும் சொக்கன் வுண்டானும் நாங்களிருவகையும் அடிகள் திருத்தளி ஒரு வகையும் நாங்கள் சந்தியாதீப விளக்கொன்றும் இட்டு வருவோமாகவும் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவார்களாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

133

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், ஊதியூர் உத்தண்ட வேலாயுதர் கோயில்.

காலம் - 11-4-1843

செய்தி - ஊதியூர்க் காணியாளர் செம்பூத்தகுல சிவன்மலைக் கவுண்டர் வாத்திய மண்டபம் கட்டினார்

கல்வெட்டு

தெண்டாயுதபாணி துணை கலியுக சகாப்தம் 4942க்கு மேல் சுபகிறுது வருஷம் மாசி மாதம் 29 தேதிக்கு சுக்கிரவாரமும் தசமியும் புனர்பூச நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் தென்கரைநாடு பொன்னூதி மாமலை உத்தண்ட வேலாயுத சுவாமி கோயில் முன் வாத்ய மண்டபம் கொற்றனூரு ஊதியூராதிபன் செம்பூத்த கோத்திரத்தில் கவுண்டய கவுண்டருட குமாரன் முதலிக்கவுண்டன் அவருடைய குமாரன் சிவன்மலைக் கவுண்டன் வாத்யமண்டபம் உபயம்.

134

செல்லன் குலம்

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி சீகாழிநாதர் கோயில்

காலம் - இராசேந்திர சோழன் காலம், கி.பி. 12ஆம் நூற்றாண்டு

செய்தி - பருத்திப்பள்ளி செல்லர்களில் அத்தாணிக்காமிண்டன், நம்பியாழ்வான், தேவன் நாயன், பெரிய தேவன்,கஞ்சமலைத் தேவன் ஆகியோர் சோழங்கத் தேவர், அவர் தம்பி ஆகியோரின் நலத்துக்காகவும் திருநாளுக்காகவும் ஏரிக்கீழ் நிலம் அளித்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ ராஜேந்திரசோழ தேவர்க்கு யாண்டு...நாடாழ்வார் நாட்டுப் பருத்திப் பள்ளியில் காமிண்டன் செல்லர்களில்.... வானசீலம் அத்தாணிக் காமிண்டனும் நம்பியாழ்வான் தேவன் நாயனும் பெரியதேவன் கஞ்சமலைத் தேவன் உள்ளிட்டாரும் இவ்வூர் உடையார் ஸ்ரீ கயிலாயமுடைய... நாடு உடைய சோழங்கத்தேவரும் தம்பியார்...னும் தங்கள் திருமேனிக்கு நன்றாக திருநாளைக்கும் உட்பட பெரிய ஏரிக்குக் கிழக்குப் பற்றில் எங்கள் காணியான நிலம்....

135

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி ஆதிகேசவப் பெருமாள் கோயில்

காலம் - போசள வீரராமநாத தேவனின் 19ஆம் ஆட்சியாண்டு கி.பி.1273.

செய்தி - பருத்திப்பள்ளி முதலி கஞ்சமலைத் தேவன் அர்த்தமண்டபத் திருநிலைகால் இரண்டும் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சார்வ பௌம திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ போஜள வீரராமநாத தேவர்க்கு யாண்டு 19 வது சேல நாட்டுப் பருத்திப்பள்ளியான ராஜசிம்மச் சதுர்வேதி மங்கலத்துச் சித்திரமேழி விண்ணகரான ஆதிகேசவப் பெருமாள் திருக்கோயிலில் அர்த்தமண்டபத்தில் திருநிலைகால்கள் இரண்டும் செய்வித்தேன் பருத்திப்பள்ளிக் காமிண்டர்களில் முதலி கஞ்சமலைத்தேவன் என் தன்மம்

136

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி அழகு நாச்சியம்மன் கோயில்

காலம் - விசயநகர மன்னன் புக்கராயர் காலம், கி.பி. 1408

செய்தி - பச்சைப் பெருமாள் கோயில் திருப்பணியின்போது செல்லன் குல பூமிக்காமிண்டர் முதலிக் காமிண்டர் உள்ளிட்ட காணியாளர்கள் பிரதம் முதல் கபோதம் வியாழம் வரை தங்கள் உபயமாகச் செய்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் சதுஸ் சமுத்திராதிபதி அரிகரமகாராயர் குமாரன் ஸ்ரீ விஜயபுக்க ராயர்க்குச் செல்லாநின்ற சர்வதாரி சம்வத்சரத்து ஆனி மாதம் மூன்றாம் தியதி நயினார் பச்சைப் பெருமாள் ஸ்ரீ கோயில் பிரதம் கபோத வியாழம் அளவும் நயினாரையும் இறங்கல் மீட்ட வெள்ளாளர் செல்லர்களில் பூமிகாமிண்டர் முதலிக்காமிண்டர் உள்ளிட்ட காணியாளரோம் எங்களொபாதிக்கு ஸ்ரீமன் தர்மம் ரட்சை.

137

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி அழகு நாச்சியம்மன் கோயில்

காலம் - புக்கராயர் காலம்

செய்தி - பச்சைப் பெருமாள் கோயில் திருப்பணியின்போது பருத்திப் பள்ளி வெள்ளாளர் செல்லன் குல சிவபக்தர் அத்தாணிக் காமிண்டர் உள்ளிட்ட காணியாளர்கள் பிரதம் முதல் கபோத வியாழம் வரை உபயமாகக் கட்டினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலேசுவரன் அரியராயர் விபாடன் பாஷைக்குத் தப்புவராயர் கண்டன் ஸ்ரீ விஜயபுக்க தேவராயர்க்குச் செல்லா நின்ற காலத்து நாயனார் பச்சைப்பெருமாள் ஸ்ரீ கோயிலில் பிரதம் முதல் கபோத வியாழம் அளவும் நாயனாரையும் எங்களொபாதி பருத்திப்பள்ளியில் வெள்ளாளன் செல்லர்களில் சிவபக்தர் அத்தாணிக் காமிண்டர் உள்ளிட்ட காணியாளரோம் ஸ்ரீமன் தர்மம் ரட்சை.

138

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி புவனேசுவரர் கோயில்

காலம் - சுந்தரபாண்டியனின் 24 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1209

செய்தி - பருத்திப்பள்ளி முதலி செல்லர்களில் சண்ணுவான் அப்பன் தூண் கொடை

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு உ4வது பருத்திப்பள்ளி முதலி செல்லர்களில் சண்ணுவான் அப்பன் தர்மம்.

139

இடம் - நாமக்கல் மாவட்டம்,திருச்செங்கோடு வட்டம்,பருத்திப்பள்ளி ஆதிகேசவப் பெருமாள் கோயில்

காலம் - சடையவர்மன் வீரபாண்டியனின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1285

செய்தி - பருத்திப்பள்ளி முதலிகளில் செல்லன் சண்ணுவான் ஆண்டை முதலிக்காமிண்டன் கோயிலில் கார்த்திகை தீபத்துக்கும் புதுப்பிக்கும் பணிக்காகவும் 42 குழி நிலம் அளித்தார்

கல்வெட்டு

சுபமஸ்து கோச்சடபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் வீ,பாண்டிய தேவர்க்கு யாண்டு பதினஞ்சாவதுக்கு எதிர் அஞ்சாவது பருத்திப்பள்ளியான இராஜசிங்கச் சதுர்வேதி மங்கலத்து நாயனார் ஆதிகேசவப்பெருமாளுக்குப் பருத்திப்பள்ளி முதலிகள் செல்லன் சண்ணுவான் ஆண்டை முதலிக்காமிண்டனேன் திருக்கார்த்திகை தீபத்துக்கும் திருப்புதியதுக்கும் உண்டான நிலம் குரம்படி குழி முப்பது மட்டிகை நிலம் தெத்தலை குழி பன்னிரண்டும் ஆக குழி நாற்பத்திரண்டும் இந்த நிலம் இரண்டும் என் தர்மம்.

140

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பாலமேடு பொன்காளியம்மன் கோயில் வளாகம்

காலம் - 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - முதலிகளில் செல்லன் கஞ்சமலைத் தேவர் அத்தாணிக் காமிண்டர் திருநிலைகால் உபயம்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இத்திருநிலைகால் இவ்வூர் முதலிகளில் செல்லன் கஞ்சமலைத் தேவர் அத்தாணிக் காமிண்டன் தன்மம்.

141

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பாலமேடு பொன்காளியம்மன் கோயில் வளாகம்

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - முதலிகளில் செல்லன் சண்ணுவான் அய்யன் திருநிலைகால் உபயம்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இத்திருநிலைகால் இவ்வூர் முதலிகளில் செல்லன் சண்ணுவான் அய்யன் தன்மம்.

142

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், அனுமன்பள்ளி அனுமீசுவரர் கோயில்

காலம் - 17 ஆம் நூற்றாண்டு, கி.பி. 1678

செய்தி - செல்லன் குலப் பச்சையப்ப கவுண்டர் சுப்பிரமணியர் சன்னதி கட்டினார்.

கல்வெட்டு

காலயுக்தி வருஷம் அய்ப்பசி மாதம் சுப்பிரமணிய சுவாமியார் சன்னதி செல்லன் வீரண கவுண்டன் மகன் பச்சையப்ப கவுண்டன் உபயம்.

143

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், காங்கயம்பாளையம் நட்டாற்றீசுவரன் கோயில்.

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - செல்லகுலம் பட்டில் மன்றாடி மூக்கன் சாத்தனான இராசேந்திர சிங்க காமிண்டன் மண்டபம் கட்டி கோயில் புதுப்பித்தார்.

கல்வெட்டு

...செல்லன் கொற்ற மூக்கன் ஏகவீர மாராயன் மகன் பட்டில் மன்றாடி மூக்கன் சாத்தனான இராசேந்திர சிங்க காமிண்டன் மண்டபமும் எடுப்பிச்சான் கோயிலும் புதுக்கு விச்சேன் இத்தன்மம்...

144

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இருப்புலி அத்தனூரம்மன் கோயில்

காலம் - 1936 நவம்பர் 30 ஆம் தேதி

செய்தி - இருப்புலி அத்தனூரம்மன் கோயிலில் செல்லகுல வம்சப் பங்காளிகள் அனைவரும் புதியதாக கர்ப்பக்கிரகம், அர்த்த மண்டபம், மகா மண்டபம் ஆகியவற்றைக் கட்டினர். மூன்று நிலைக் கோபுரமும் கட்டினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விஜயாத்புதய சாலிவாகன சகாப்தம் வருஷம் 1859 கலியுக சகாப்தம் வருஷம் 5038 இங்கிலிஸ் வருஷம் 1936 நவம்பர் மாதம் 30 தேதிக்கு தமிழ் தாது நாம சம்வத்சரம் கார்த்திகை மாதம் 15ந்தேதி சோமவாரம் துதிகையும் மிருகசீரிட நட்சத்திரமும் அமிர்த யோமும் கூடிய சுபதினத்தில் திருச்செங்கோடு கொங்கு கைலாசம் ஆண்டவர் சந்நிதி திருப்பணி கைங்கரிய பாத்திரராகிய இருப்புலி கிராமம் செல்லங்குல கோத்திரம் எளையாக்கவுண்டர் வம்மிச குலதெய்வமாகிய அத்தனூர் அம்மன் கோயில் சிகஸ்தாய் இருந்ததை தற்போது மேற்படி வமிசப் பங்காளிகளாகிய நாங்கள் எல்லோரும் சேர்ந்து நூதன கெர்ப்பக்கிரக அர்த்தமண்டப மகா மண்டபங்களும் மூன்று நிலை கோபுரங்களும் திருப்பணி செய்து வைத்தது.

145

இடம் - சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், இலவம்பட்டி கன்னிமார் பாழி

காலம் - மதுரை திருமலை நாயக்கர் காலம்

செய்தி - தாரமங்கலம் இம்முடி சீயால கெட்டி முதலியார் இலவம் பட்டியை கைலாசநாதபுரம் என்று பெயரிட்டு தாரமங்கலம் கைலாச நாதர்க்குக் கொடையாக அளித்த கல்வெட்டில் காணியாளர் செல்ல குலத்தார் பெயர் குறிக்கப்படுகிறது.

கல்வெட்டு

காவாண்டைக் கவுண்டர் கொல்லையுண்டான மட்டும் இதுப்படிக்கு எட்டுத் திக்கும் எல்லை கண்டு ஊர் காணியாள செல்லர்குல காவாண்டைக் கவுண்டன் தண்டு ஸ்தானத்து மற்று முண்டான கட்டுக் கல்லணைக்கும் கூட

146

இடம் - சேலம் மாவட்டம், சேலம் வட்டம், ஆட்டையாம்பட்டி திருமணி முத்தாற்றாங்கரை

காலம் - கி.பி. 14 ஆம் நூற்றாண்டு, கி.பி. 1372

செய்தி - பருத்திப்பள்ளிச் செல்லர், விழியர் குறிக்கப்பெறுகின்றனர்

கல்வெட்டு

பரிதாபி வருஷம்... 19தேதி பருத்திப்பள்ளியிலிருக்கும் வெள்ளாளர் செல்லர்களில் கொண்டாக் கவுண்டர் மகன் காகத்தலைக் கவுண்டன் நல்ல மயில் கவுண்டனும் மல்ல சமுத்திரத்தில்...க்கும் செ... விழியர்களில்..

147

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

அனுமன்பள்ளியில் வெள்ளாளன் செல்லர்களில் பத்தயான்

148

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியகோட்டை திருப்பாண்டீசுவரர் கோயில்

காலம் - விக்கிரமசோழ தேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி.1164

செய்தி - வீரசோழநல்லூர் வெள்ளாளன் செல்லர்களில் கரும்பிள்ளை உத்தமனான உய்யநெறி காட்டினான் திருப்பாண்டீசுவர முடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு 8 ஆவது அண்ட நாட்டில் ஆண்டான் கோயிலான வீரசோழ நல்லூரில் வெள்ளாளரில் செல்லர்களில் கரும்பிள்ளை உத்தமனான உய்யநெறி காட்டினான் திருப்பாண்டீசுரமுடையார்க்கு சீபண்டாரத்துக்கு ஒடுக்கின சிரியக்கி பழஞ்சலாகை அச்சு ஒன்று உடையார் திருப்பாண்டீசுரமுடையார் கோயில் காணியுடைய சிவபிராமணரோம் மொகல்லிய

கோத்திரத்தில் சிவமங்கையாழ்வி ஆன அருமறை ஆதித்தச் சக்கரவத்திகள் சந்தியா தீபம் ஒரு விளக்கு எரிப்போமாகவும் சந்திராதித்தவரை குடங்கொண்டு குச்சிகொடு புக்கார் எரிச்சு வருவோமாகவும் இது பன்மாகேசுவரர் ரட்சை.

149

செவ்வந்தி குலம்

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இருப்புலி அழகுராயப் பெருமாள் கோயில்

காலம் - கி.பி. 1857, நள சித்திரை 18 ஆம் தேதி

செய்தி - இருப்புலி காணியாளர்களில் செவந்தி குலத்தார் அழகுராயப் பெருமாள் கோயிலில் கர்ப்பக்கிரகம் அர்த்தமண்டபமும், தேவராயப் பெருமாள் கோயிலில் மகாமண்டபமும் கட்டினர். அழகப்பகவுண்டர், பழனிக்கவுண்டர், முத்துக்கவுண்டர் முன்னிருந்து பணி செய்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1779 கலியுக சகாப்தம் 4958 இதன்மேற் செல்லாநின்ற நள நாம சம்வத்சரத்து சித்திரை மாதம் 18ந் தேதி சுக்கிர வாரமும் சத்தமியும் மிருகசீரிச நட்சத்திரமும் கூடிய சுபதினத்தில் அழகுராய சுவாமிக்கு கெருப்பகிரகம் அர்த்தமண்டபம் தேவராய சுவாமிக்கு மகா மண்டபமும் சேஷய்யங்கார் பூசை பண்ணுகுற நாளையிலே செவந்தி குலத்துக் காணியாளக்கவுண்டர்கள் நாங்களே உபயமாகக் கட்டிவச்ச சகாயம் இந்தக் கோயில் வேலைக்கு எசமானராய் இருந்து வேலை நடப்பிவச்சது அழகப்பகவுண்டன் பழனிக்கவுண்டன் முத்துக்கவுண்டன் வேலை பண்ணினது சுப்பனா சாரி.

150

செவ்வாயர் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி நிர்மலீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரமசோழ தேவரின் 19 ஆவது ஆட்சியாண்டு, கி.பி.1293

செய்தி - பொன்னிவாடி வெள்ளாளன் செவ்வாயரில் காவன் செம்பள்ளி நிர்மலீசுவரர் கோயிலில் மேலைவாசல் விநாயகருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு பத்தொன்பதாவது பொங்கலூர்க்கா நாட்டு நிர்மணியில் மேலை வாசலில் பிள்ளையார்க்குச் சந்தியா தீபம் ஒன்றுக்கு மேற்படியூர் வெள்ளாளர்களில் செவ்வாயரில் காவன் செம்பள்ளியேன் இவ்வச்சு ஒன்று ஒடுக்கினேன் இப்பொருள் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணர் சாலங்காய கோத்திரத்தில் மணியன் வடுகன் மணியன் அவிநாசியும் திருமுக்கூடல் அவிநாசியும் சந்திராதித்தர்வரை குடங்கொண்டு கோயில் புகுவார் எரிப்பதாக பன்மாகேஸ்வரர் ரட்சை.

151

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பருத்தியூர் காட்டுக்குள் உள்ள கற்பாறை.

காலம் - குலோத்துங்கசோழ தேவனின் எட்டாவது ஆட்சியாண்டு, கி.பி. 1157

செய்தி - நவனியில் வெள்ளாளர் செவ்வாயரில் மாணிக்கதேவர் வாசி பருத்தியூர் நக்கீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு எட்டாவது பொங்கலூர்க்கா நாட்டு நவனியில் வெள்ளாளர் செவ்வாயரில் மாணிக்கதேவர் வாசியேன் பத்தியூர் நக்கீசுரமுடையார்க்கு ஒரு சந்தியாதீபத்துக்கு அச்சொன்றுமொடுக்கினேன் பொன் பெற்றுக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் மணியன் அவிநாசி உள்ளிட்டோம் குடங்கொண்டு கோயில் புகுவான் எரிப்பானாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

152

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி நிர்மலீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திரனின் பனிரண்டாம் ஆட்சியாண்டு கி.பி.1219

செய்தி - பொன்னிவாடி வெள்ளாளன் செவ்வாயரில் குருடன் மாணிக்க தேவன் நிர்மலீசுவரர் கோயிலில் சந்தியாதீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பனிரண்டாவது பொங்கலூர்க்கா நாட்டு நிர்மணியில் வெள்ளாளன் செவ்வாயரில் குருடன் மாணிக்கதேவன் நிர்மணி தேவர்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு காணியுடைய சிவப்பிராமணன் வசம் வைத்த அச்சு ஒன்று கோயில்புகுவான் சந்திராதித்தவரை செல்வதாக தன்மம் வச்சேன் குருடன் மாணிக்கதேவன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

153

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவர முடையார் கோயில்.

காலம் - விக்கிரமசோழ தேவனின் மூன்றாவது ஆட்சியாண்டு, கி.பி. 1259.

செய்தி - வெள்ளாளன் செவ்வாயரில் கேசன் காவன் சந்தியாதீபம் வைக்க பத்து வராகன் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு மூன்றாவது வில்லீசுவரமுடையார்க்கு வடபரிசாரநாட்டுக் கருவலூர் வெள்ளாளன் செவ்வாயரில் கேசன் காவன் பத்து வராகன் வைத்தார்.

154

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி நிர்மலீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர தேவனின் பதினொன்றாம் ஆட்சியாண்டு, கி.பி.1218

செய்தி - பொன்னிவாடி வெள்ளாளன் செவ்வாயரில் கண்ணன் பொத்தி மனைக்கிழத்தி சிறிய கண்டி நிர்மலீசுவரர் கோயிலில் மேலை வாசல் பிள்ளையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது பொங்கலூர்க்கா நாட்டு நிர்மணியில் வெள்ளாளர் செவ்வாயரில் கண்ணன் பொத்தி மனைக்கிழத்தி சிறிய கண்டியேன் இவ்வூர் மேலை வாசலில் பிள்ளையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு அச்சொன்று ஒடுக்கினேன் இப்பொருள் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணர் சாலங்காயன கோத்திரத்தில் மணியன் வடுகனும் மணியன் அவிநாசியும் திருமுக்கூடல் அவிநாசியும் இம் மூவோம் கைக்கொண்டு சந்திராதித்தவரை செலுத்துவோமாகவும் குடங்கொண்டு கோயில் புகுவார் எரிப்பாராக பன்மாகேஸ்வரர் ரட்சை.

155

சேடர் குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டு கி.பி. 1287.

செய்தி - சேவூர் வெள்ளாளர் சேடர்களில் சின்னன் காவன் இடிகரை வில்லீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 2 வது வடபரிசார நாட்டு சேவூர் வெள்ளாளன் சேடரில் சின்னன் காவனேன் உடையார் வில்லீஸ்வரமுடையார்க்கு வைத்த சந்தியா தீப விளக்கொன்றுக்கு ஒடுக்கின வராகன் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்துத் திருநட்டன் அகத்தீசுரமுடையானான சித்திரமேழி பட்டனேன் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செலுத்துவதாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

156

சேரன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், தாராபுரம் தில்லா புரியம்மன் கோயில்.

காலம் - காலயுக்தி, சித்திரை 7 ஆம்நாள், கி.பி. 1803

செய்தி - நரையனூர் நாட்டில் சேர குலத்தார் பிரமணகவுண்டர், நல்ல செட்டிக்கவுண்டர், நல்லமுத்துக்கவுண்டர், சின்னயகவுண்டர் காணிகொண்ட விபரம் கூறப்பட்டுள்ளது.

கல்வெட்டு

சொஸ்த்திரி விசயாப்புதைய சாலிவாகன வருஷம் கலியுகம் 4904 சாலிவாகனம் 1725க்கு மேல் செல்லாநின்ற காலையுக்தி வருஷம் சித்திரை 7 தேதி புதவாரம் பஞ்சமி உத்திராடம் மீன லக்கினம் இப்படிப்பட்ட சுபதினத்தில் கொங்கு வஞ்சி விலாடபுரம் ராசராசபுரம் விதாபுரம் நரையனூர் நாடு காணி கொண்டது சேர குலம் காசிப கோத்திரம் பிரமணகவுண்டன் நல்லசெட்டிக்கவுண்டன் நல்லமுத்துக்கவுண்டன் சின்னயகவுண்டன் தெய்வம் வஞ்சியம்மன் தில்லாபுரி பிரமதாயம் யிதுக்கு எல்லை அனுமந்தநல்லூர் வரை எல்லை சதிரம் வஞ்சிக்குளத்துக்கு கொங்கு நகரம் இது.

157

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், சித்தளந்தூர் அத்தனூரம்மன் கோயில்

காலம் - கி.பி.19 ஆம் நூற்றாண்டு, 4.7.1864

செய்தி - புளியம்பட்டி சேரகுல நல்லமகவுண்டரும், சாமப்பாளையம் சேரகுல துலுக்க கவுண்டரும் ஒவ்வொரு தூண் உபயம்.

கல்வெட்டு

(அ)துந்துபி வருஷம் ஆவணி மாதம் ௨௨ தேதி வெள்ளிக்கிழமை புளியம்பட்டி சேரன் கோத்திரம் நல்லமகவுண்டன் தூண் உபயம்.

(ஆ) துந்துபி வருஷம் ஆவணி மாதம் ௨௨ தேதி வெள்ளிக்கிழமை சாமப்பாளையம் சேரன் கோத்திரம் நல்லய கவுண்டன் பேரன் துலுக்க கவுண்டன் அத்தனூர் அம்மைக்குத் தூண் உபயம்.

158

சேரிலான் குலம்

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியகோட்டை சோழீசுவரர் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் ஆட்சியாண்டு, கி.பி. 1207-1256

செய்தி - சேரிலான் குல அவிநாசி புளியன் சோழீசுவரம் உடையார் கோயிலில் சண்டிகேசுவரரை எழுந்தருளச் செய்து சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு.. அண்ட நாட்டு ஆழ்வான் கோயிலான வீரசோழநல்லூரில் வெள்ளாளன் சேரிலாரில் அவிநாசி புளியன் தண்டேசுவரப் பிள்ளையாரை எழுந்தருளுவித்தேன் ......சோழீசுவரபட்டனேன் அவிநாசி புளியன் கையால் கொண்ட பழஞ்சலாகை அச்சு ஒன்று இவ்அச்சு ஒன்றுங்கொண்டு தண்டேசுவரப் பிள்ளையார்க்கு சந்தியா தீபம் இடுவானாகவும் இவை பன்மாகேசுவர ரட்சை.

159

சோழன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நம்பியூர் தான்தோன்றீ சுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் பதினொன்றாம் ஆட்சியாண்டு கி.பி. 1276.

செய்தி - நம்பி பேரூர் வெள்ளாளர் சோழரில் தேவன் ராசராசன் தான் தோன்றீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 11வது ஐப்பசி மாதம் வடபரிசாரநாட்டு நம்பி பேரூரில் வெள்ளாளன் சோழரில் தேவன் ராசராசனேன் ஆளுடையார் தான்தோன்றியீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்று இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்வாஜ கோத்திரத்து ஆண்டான் செல்லபட்டனேன் திருச்சிற்றம்பல நம்பி...

160

தனஞ்செயன் குலம்

இடம்	-	நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், அலைவாய்ப்பட்டி ஏகாம்பர நாதர் கோயில்
காலம்	-	கி.பி. 1648, சேலம் சின்னம நாயக்கர் ஆட்சிக்காலம்
செய்தி	-	வெள்ளாளர் தனஞ்செயரில் அலைவாய் செங்கோடகவுண்டர் சேலம் சின்னம நாயக்கருக்கு 100 பொன் கொடுத்து காணி பெற்றார். செங்கோட கவுண்டர் கிணறு வெட்டி வைத்துள்ளார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாத்தம் 4749க்கு மேல் செல்லாநின்ற சாறுவரி வருஷம் மாசி மாதம் 15 தேதி பூருவபட்ச தசமியும் ரோகணியும் பெற்ற சோமவாரநாள் சேலம் சின்னம நாயக்கன் காலத்தில்....வெள்ளாளன் தனஞ்செயரில் அலைவாய் வேலகவுண்டன் பேரன் மாரப்பகவுண்டன் மகன் செங்கோடகவுண்டன் மேலைக்கிணறும்...க்கு காணியாளக் கட்டளையிட்டதுக்கு ...அரண்மனைக்குக் குடுத்த பொன் நூறு..ஏகாம்பரநாதர் சன்னதி...என்னுடைய உபயம்..

161

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்
காலம்	-	வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500
செய்தி	-	பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

தையூரில் வெள்ளாளன் தனஞ்சுகளில் தாய்க்கு நல்லர்.

162

இடம்	-	கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மொஞ்சனூர் சிவாலயம்

காலம் - கி.பி. 1900, சார்வரி ஐப்பசி 10ஆம் நாள்

செய்தி - தனஞ்செய குலம் பழனிக்கவுண்டர் சிவாலயத்தில் முருகன் சன்னதி முன் மயில் வாகனம் செய்து வைத்தார்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 5001 சார்வரி வருஷம் ஐப்பசி மாதம் 7 ந்தேதி மொஞ்சனூர்க் கிராமம் மொஞ்சனூரில் காவல் சைவ வேளாள ஜாதி தனஞ்செய கோத்திரம் செல்லப்பகவுண்டர் மகன் பழனிக்கவுண்டர் மயில் வாகனம் பிரதிஷ்டை செய்வித்த உபயம்.

163

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மொஞ்சனூர் சிவாலயம்

காலம் - போசள வீரவல்லாளன் காலம், கி.பி. 1296-1344

செய்தி - மொஞ்சனூர் வெள்ளாளர் தனஞ்செய குலம் ஆண்டவன் சிவாலயத்தில் சந்தியா தீபம் வைத்தார்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ போசல புஜபல விரவல்லாள தேவர்க்கு திருவிராச்சியம் பண்ணியருளாநின்ற யாண்டு சம்வத்சரத்து மேல்கரை அரையநாட்டு முஞ்சனூர் ஆளுடைய நாயனார்க்கு மேற்படியூரில் வெள்ளாளர் தனிஞ்சிகளில் கொங்கு வேளாளரில் ஆண்டவனேன் சந்தியா தீபத்துக்கு ஒடுக்கின அச்சொன்று இக்கோயில் காணியுடையான் வயிரவன் உள்ளிட்டாரும் அவர் தமர் உள்ளிட்டாரும் இவ்வச்சு ஒன்றுங் கொண்டு சந்திராதித்த வரை விளக்கெரிக்கக் கடவதாக பன்மாகேஸ்வரர் ரட்சை.

164

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், ஊஞ்சலூர் நாகீசுவரர் கோயில்.

காலம் - கி.பி. 1538 திருமலை நாயக்கர் காலம்.

செய்தி - வெள்ளாளர் தனிஞ்சிகளில் தாயாண்டார்க்கும் மற்றும் ஆறு வேட்டுவர்களுக்கும் ஆக ஏழுபேருக்கும் ஏழுமா நிலம் கொடுமுடி சிவன், பெருமாள் கோயில் பணிகட்காகக் கொடை கொடுக்கப்பட்டது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர அச்சுதராயர் மகாராயர் காரியத்துக்குக் கடவதான திருமலை நாயக்கர் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற கலியுக சகாப்தம் 4639 மேல் செல்லாநின்ற ஏவிளம்பி வருஷம் அற்பசி மாதம் 15 ஸ்ரீமன் மகாதேவ தேவோத்தமன் கொடுமுடி லிங்கன் வீர நாராயணப் பெருமாள்

நிருபப்படிக்கு ஸ்ரீமது தேவர் திருமலை நாயக்கர் காரியத்துக்குக் கடவதான அதிகாரி மெய்க்கும் பெருமாள் பிள்ளையவர்களும் தானத்தார்களும் திருப்பதியாரும் திருவம்படியாரும் ஊஞ்சலூரார்க்கும் ஊரவர்க்கும் மலைய வேட்டுவரில் நல்லணன் கரை ஒன்றுக்கும் இப்படி சோழியன் கரை ஒன்றுக்கும் அந்துவ வேட்டுவரில் சிறுவன் கரை ஒன்றுக்கும் மேற்படி.. நச்சுழி வேட்டுவரில் சின்னான் கரை ஒன்றுக்கும் வெள்ளாளர் தனிஞ்சிகளில் தாயாண்டார் கரை ஒன்றுக்கும் ஆக கரை ஏழு திறத்தார்க்கும் அறுவு கொடுத்தபடி சுவாமி திருக்கை வழக்கமாக ஏழுமா நிலம் அனுபவித்துக் கொள்ளக்கடவாராகவும் இந்த மானியம் விற்றும் ஒற்றி வைத்துக்கொள்ளக்கடவாராகவும் இந்தத் திருக்கை வழக்கம் ஏழுமா நிலம்.

165

தூரன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் இருபத்திரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1287.

செய்தி - கோனகப்பாடியில் வெள்ளாளர் தூரன் குலத்து வேளாள கவுண்டர் ஆதீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கோனகப்பாடியில் வெள்ளாளன் தூரர்களில்.....னேன் குறுப்பு நாட்டு ஆதனூரில் நாயனார் ஆதீசுரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு இவ்வூர்க் காணியுடைய சிவப்பிராமணரில் வாச்சிய கோத்திரத்துக் குறிச்சி ஆண்டவனும் பிள்ளையப்பனும் சிறுபிள்ளையப்பனும் ஒடுக்கின அச்சொன்றுங்கொண்டு சந்திராதித்தர் வரை குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்தக் கடவார்களாகவும் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

166

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு கி.பி. 1297.

செய்தி - கோனகப்பாடியில் வெள்ளாளர் தூரர்களில் பாண்டிய அரையன் ஆதியூர் ஆதீசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு பன்னிரெண்டாவது கீழ்க்கரைப் பூந்துறை நாட்டுக் கோனகப்பாடியில் வெள்ளாளன் தூரர்களில் பாண்டிய அரையனேன் குறுப்பு நாட்டு ஆதவூரில் ஆதீஸ்வரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு காணியுடைய சிவப்பிராமணன் வாச்சிய கோத்திரத்து கடைக்குறிச்சி ஆண்டவனுக்கும் பெரிய பிள்ளையப்பனுக்கும் சிறுபிள்ளையப்பனுக்கும் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுங் கைக்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவோமாகவும் பன்மாகேஸ்வரர் ரட்சை.

167

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பருத்திப்பள்ளி புவனேசுவரர் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் 24 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1309

செய்தி - மின்னாம்பள்ளி முதலிகளில் தூர குல பெரியபிள்ளை யாண்டை கரும்பிள்ளை புவனேசுவரர் கோயில் திருப்பணி யின் போது கால், போதிகை, உத்திரம், இதன்மேல் பாக்கல் 4 இவைகளைக் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு ௨௪ வது பருத்திப்பள்ளி நாட்டு மின்னாமொழியில் தூரர்களில் பெரிய பிள்ளையாண்டை கரும்பிள்ளையேன் இக்காலும் போதிகையும் ஒரு உத்தரமும் செய்வித்தேன் எந்தன்மம் இதில் மேல் பாக்கல் ௪ம் என் தன்மம்.

168

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - நஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக்கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர்.

கல்வெட்டு

மொடக்குறிச்சியில் வெள்ளாளன் தூரர்களில் ஆவுடையார்

169

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயில் வளாகம்

காலம் - 19ஆம் நூற்றாண்டு, பிலவ வைகாசி முதல் நாள், கி.பி. 1841

செய்தி - குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயில் காணியாளர் தூரன் குலத்தில் ஐந்து கரையாரும், கோயிலுக்குரிய இதர சமூக த்தினரும் ஒன்றாகக் கூடி மண்டபம் கட்டினர்.

இப்பணியை நிறைவேற்றியவர்கள் செட்டியாக்கவுண்டர், சுவாமிக் கவுண்டர் ஆகிய இருவரும் ஆவர்.

கல்வெட்டு

பிலவ வருஷம் வைகாசி மாதம் 1 தேதி தூரன் அஞ்சுகரைக் காணியாளக் கவுண்டர்களும் கட்டுகல்லையும் கூடியிந்தத் தன்மம் செட்டியாக்கவுண்டன் சுவாமிக் கவுண்டன் முகிப்பித்தார்.

170

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், குமரமங்கலம் பொன்காளியம்மன் கோயில் முன் மண்டபத்தூண்கள்.

காலம் - சுமார் 150 ஆண்டுகள் முன்

செய்தி - பொன்காளியம்மன் கோயில் காணியாளர் தூரன் குலத்தார் இறந்தால் அவர் நினைவாகக் கோயிலில் தூண் எடுப்பது வழக்கம் போலும். பிரியாவிடை என்பது அவர்கள் மறைந் ததைக் குறிக்கிறது. இது ஒரு வகை நினைவுக்கல்.

கல்வெட்டு

அ. தூரன் குமரகவுண்டன் மகன் செட்டிக் கவுண்டன் பிரியாவிடை

ஆ. தூரன் விருப்பணகவுண்டன் மகன் ரங்கைய கவுண்டன் மகன் பெருமாள் கவுண்டன்

இ. தூரன் அரியணகவுண்டன் மகன் விருப்பணகவுண்டன் பிரியாவிடை

ஈ. தூரன் கல்லாக்கவுண்டன் மகன் சுவாமிக் கவுண்டன் பிரியாவிடை

171

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், பாலமேடு சீனிவாசப் பெருமாள் கோயில்

காலம் - கி.பி. 1828, சர்வதாரி மாசி 10 ஆம் நாள்

செய்தி - பாலமேடு தூரகுலப் பொன்காளிக்கவுண்டர் சீனிவாசப் பெருமாளுக்குச் சித்திரத் தேர் செய்தார்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4929 சர்வதாரி வருஷம் மாசி மாதம் 10 தேதி வியாழக்கிழமை சீனிவாசப் பெருமாளுக்குச் சித்திரத்தேர் செய்தது பாலமேடு தூரன் பழனிவேல் கவுண்டன் மகன் பொன்காளிக் கவுண்டன்.

172

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு மலைக் கோபுர வாயில்

காலம் - 18ஆம் நூற்றாண்டு

செய்தி - கோபுரவாயில் வலப்புறமும், இடப்புறமும் சுப்பிரமணியர் மண்டபம், விநாயகர் மண்டபம் ஆகியவைகளை அமைத்தவர் குமரமங்கலம் தூர குல சடையப்ப கவுண்டர்

கல்வெட்டு

(அ) இச்சுப்பிரமணியர் மண்டபம் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் கொமரமங்கலம் வெள்ளாள தூரகுலம் சடையப்பன் உபயம்

(ஆ) இப்பிள்ளையார் மண்டபம் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டில் கொமரமங்கலம் வெள்ளாள தூரகுல சடையப்பன் உபயம்.

173

தேவந்தை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் குன்ற முடையார் கோயில்

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் இருபதாம் ஆட்சியாண்டு, கி.பி. 1305

செய்தி - குன்றத்தூர் வெள்ளாளர் தேவந்தைகளில் சொக்கன் இனிய பிள்ளை குன்றமுடையார்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு ௨0 வது அற்பிசை மாதம் குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாளன் தேவந்தைகளில் சொக்கன் இனிய பிள்ளையேன் ஆளுடையார் குன்றமுடையார்க்கு சந்தியா தீபத்துக்கு கோயில் காணியுடைய சிவப்பிராமணன் ஆத்ரய கோத்திரத்தில் உடையான் சிறுவனும் நாயனார் திருநிலை பட்டனும் பன்றிப்பட்டனும் ஆளவந்தானும் இவ்வனைவோம் வாங்கின அச்சு ஒன்றுக்கும் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவோமாகவும் பன்மாகேஸ்வரர் ரட்சை.

174

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தமசோழீசுவரமுடையார் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி. 1272

செய்தி - ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளர் தேவந்தைகளில் சிறியான் செயங்கொண்ட சோழக் காமிண்டன் உத்தமசோழீ சுவரமுடையார் கோயில் முக மண்டபத்தில் திருவிளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு 7வது ஐப்பசி மாதம் முதலாக வடபரிசார நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளன் தேவந்தைகளில் சிறியான் செயங்கொண்டசோழ காமிண்டனேன் நாயனார் உத்தமசோழீசுரமுடையார் முகமண்டபத்துக்கு நான் வைத்த திரு விளக்கு ஒன்றுக்கு குடுத்த பழஞ்சலாகை அச்சு ஒன்று இவ்வச்சு ஒன்றுங் கைக்கொண்டேன் மேற்படி நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்துக் காணியுடைய சிவப்பிராமணன் காசுவ கோத்திரத்து ஆளவந்தான் அப்பனான அன்னதான நம்பியேன் குடங்கொண்டு கோமில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்தவானாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

175

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தம சோழீசுரமுடையார் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் 13 ஆவது ஆட்சியாண்டு, கி.பி 1278

செய்தி - ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளர் தேவந்தைகளில் சிறியான் பிள்ளான் உத்தம சோழீசுவரருக்குத் திருவிளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 13வது ஆவணி முதலாக வடபரிசாரநாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளன் தேவந்தைகளில் சிறியான் பிள்ளானேன் நாயனார் உத்தம சோழீசுரமுடையார்க்கு திருவிளக்கு ஒன்றுக்குக் குடுத்த அச்சொன்று இவ்வச்சு ஒன்றுங் கைக்கொண்டேன் மேற்படி நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்துக் காணியுடைய சிவப்பிராமணன் காசுவகோத்திரத்து ஆளவந்தான் அப்பனான அன்னதான நம்பியேன் சந்திராதித்தவரை செலுத்துவதாக பன்மாகேஸ்வரரட்சை.

176

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் குன்ற முடையார் கோயில் முத்துக்குமாரசாமி சந்நதி

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் 27ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1312

செய்தி - குன்றத்தூர் வெள்ளாளர் தேவந்தைகளில் சொக்கன் இனிய பிள்ளை குன்றமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க ஸ்ரீசுந்தர பாண்டிய தேவர்க்கு யாண்டு 27வது கார்த்திகை மாதம் குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாளன் தேவந்தைகளில் சொக்கன் இனியபிள்ளையேன் ஆளுடையார்க்கும் சங்காதி....சந்தியா தீபம் ஒன்றுக்கு வாங்கின அச்சு

177

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மொஞ்சனூர் சிவாலயம் நந்தி மண்டபம்

காலம் - கி.பி. 1804, விஜய ஐப்பசி 18ஆம் நாள்

செய்தி - மொஞ்சனூர் பசுபதிபாளையம் தேவேந்திர குலம் குமார சின்னய கவுண்டர் சிவாலயத்தில் நந்தி குறடு அமைத்தார்.

கல்வெட்டு

சகாப்தம் 4905 விஜய வருஷம் ஐப்பசி மாதம் 18 ந்தேதி மொஞ்சனூர்க் கிராமம் பசுபதி பாளையம் சைவ வேளாளர் ஜாதி தேவேந்திர கோத்திரம் முத்துக்கவுண்டர் மகன் குமார சின்னைய கவுண்டர் நந்தியீசன் குறடு செய்வித்து உபயம்.

178

தோடை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கீரனூர் வீரநாராயணப் பெருமாள் கோயில்

காலம் - 18ஆம் நூற்றாண்டு, விக்ருதி தை 5 ஆம் நாள், கி.பி.1770

செய்தி - பாப்பினியைச் சேர்ந்த வெள்ளாளரில் தோடை குல மாந்தன் கூத்தன் காங்கய நாட்டுச் சுங்க அலுவலராக இருந்தார். கீரனூர் ஆதீசுவரமுடையார் கோயிலில் ஒரு திருவிளக்கு வைத்தார். குயவர்கள் கொடுக்கும் திருகைச் சுங்கத்தின் மூலமாக அவ்விளக்கு என்றென்றும் எரிய வேண்டும் என்ற விருப்பத்தையும் தெரிவித்துள்ளார்.

கல்வெட்டு

விகுறுதி வருஷம் தை மாதம் 5 தேதி பாப்பினியில் வெள்ளாளன் தோடன் மாந்தன் கூத்தன் காங்கய நாட்டுச் சுங்கம் நடத்துகையில் கீரனூரில் வீர நாராயணப் பெருமாளுக்கு நம்மிட உபயம் ஆக ஒரு திருவிளக்கு நடக்கிறதற்கு இவ்விளக்கு குசவன் திருகைச் சுங்கம் பெருமாள் கோயில் பிராமணன் செரு... சந்திராதித்தர் வரைக்கும் சர்வ மானியமாக நடத்திவரக்

கடவாராகவும் இந்த தன்மத்தை விலகினவர் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலே போவாராகவும் கூத்தன் எழுத்து.

179

பண்ணை குலம்

இடம் - தென் ஆர்க்காடு மாவட்டம், செங்கம் நடுகல்

காலம் - கி.பி. 7 ஆம் நூற்றாண்டு

செய்தி - நடுகற்களில் போந்தை ஊராளி பண்ணன் நாட்டார், பசீரப் பண்ணன் ஆகியோர் குறிக்கப் பெறுகின்றனர். இவர் பண்ணன் அல்லது பண்ணை குலத்தின் முன்னோராக இருக்கக் கூடும்.

கல்வெட்டு

அ) அதியரைசர்க்கு - போந்தை ஊராளி பண்ணன் நாட்டார்

ஆ) கோவிசைய சிங்கவிண்ண பருமர்க்கு முப்பத்து மூன்றாவது கங்கதி அரைசர் மக்கள் மேல் விண்ணனார் சேவகன் தொப்பு வரும்பாடி ஆள்கின்ற பசீரப்பண்ணன் குறட்டாதன் தொறுக் கொண்ட ஞான்று எறிந்து பட்டான் கந்தபரு பென்னாதியார்கல்.

180

பதரி குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி, அவிநாசியப்பர் கோயில்

காலம் - கி.பி. 16 ஆம் நூற்றாண்டு, துந்துபி ஆவணி மாதம், கி.பி 1562

செய்தி - குறுப்பு நாட்டுப் பாலத்தொழு வெள்ளாளர் பதரிகளில் நல்லிசையாளன் பராக்கிரமன் அவிநாசி ஆளுடைய நாயனார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ துந்துபி சம்வத்சரத்து ஆவணி மாதம் குறுப்பு நாட்டில் பாலத்தொழுவில் வெள்ளாளன் பதரிகளில் நல்லிசையாளன் பராக்கிரமனேன் அவிநாசி ஆளுடைய நாயனார்க்கு நான் வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு இற்றை நாளில் சீபண்டாரத்தில் ஒடுக்கின பணம் 10 பணம் பத்துக்கும் இந்த விளக்கு ஒன்றும் சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

181

பயிரன் குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை கோட்டை சங்கமேசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவனின் பனிரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1016

செய்தி - கோவன்புத்தூர் வெள்ளாளர் பயிரரில் பாவநை வீர சோழகங்கன் சங்கீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு பனிரண்டாவது பேரூர் நாட்டுக் கோவம்புத்தூரான வீரகேரள நல்லூர் ஆளுடையார் சங்கீசுவரமுடையார் கோயில் காணியுடைய சிவப்பிராமணன் வீரநாராயண சைவ மாமுனியேன் இவ்வூர் இருக்கும் வெள்ளாளன் பயிரரில் பாவநை வீரசோழகங்கன் பக்கல் நான் சந்தியா தீபம் ஒன்றுக்கு கொண்ட அச்சு சந்திராதித் தவரைக் குடங்கொண்டு கோயில் புகுவார் செலுத்துவாராக இது பன்மாகேஸ்வர ரட்சை.

182

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்

காலம் - 16 ஆம் நூற்றாண்டு

செய்தி - காரையூரில் பயிரகுல வீரநாயனார் கொங்க வேளதரையர் சிறுவப்பர் தூண் உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ காங்கய நாட்டுக் காரையூரில் வீரநாயனார் கொங்கவேளதரையர் சிறுவப்பர் கொங்க வேள தரையர் இட்ட தூண்

183

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்

காலம் - வீரமல்லிகார்ச்சுனர் காலம், பிரபவ வைகாசி 22 ஆம் நாள், கி.பி.1567

செய்தி - காரையூர் வெள்ளாளர் பயிரர்களில் கொற்றன் உத்தமக் காமிண்டன், அழகப்பெருமாள் உத்தமக் காமிண்டன் தூண் உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகா மண்டலீசுவரன் ஸ்ரீ வீரமல்லிகார்ச்சுன ராயர்க்குச் செல்லாநின்ற பிரபவ சம்வத்சரத்து வைகாசி மாதம் 23 தேதி காங்கய நாட்டுக் காரை ஊரில் வெள்ளாளப் பயிரர்களில் கொற்றன் உத்தமக் காமிண்டன் அழகப்பெருமாள் உத்தமக் காமிண்டன் இட்ட தூண்.

184

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்

காலம் - வீர மல்லிகார்ச்சுனராயர் காலம், பிரபவ வைகாசி 23 ஆம் நாள், கி.பி. 1567

செய்தி - காரையூர் வெள்ளாளன் பயிரர்களில் கொங்கவேள் தரையர் இராட்சதப் பெருமாள் தூண் உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீசுவரன் ஸ்ரீவீரமல்லிகார்ச்சுனராயர்க்குச் செல்லாநின்ற பிரபவ வைகாசி உ௩ தேதி காங்கய நாட்டுக் காரையூர் வெள்ளாளன் பயிரர்களில் கொங்கவேள் தரையர் இராட்சத பெருமாள் இட்ட தூண்.

185

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்

காலம் - கி.பி. 16 ஆம் நூற்றாண்டு

செய்தி - திருப்பணி செய்த பயிர குலப் பட்டக்காரர்கள் பெயர் பொறிக் கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ காரை ஊரில் வெள்ளாளன் பயிரர்களில் அழகன் உத்தமக் காமிண்டன் கரியான் உத்தமக் காமிண்டன்

186

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்.

காலம் - கி.பி. 1621, துன்முகி பங்குனி 4 ஆம் நாள்.

செய்தி - காரையூரில் வெள்ளாளர் பயிரர்களில் நல்லதம்பிக்கவுண்டர் விசுவநாதச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் தம் சொந்தப் பணத்தில் நொய்யலாற்றில் புதிய அணையும் கால்வாயும் அமைத்து புன்செயை நன்செய் ஆக்கி செயங் கொண்டீசுவரருக்கு அளித்தார். சின்னக்குளம்,
பெரியகுளத்து நிலங்களும் அளித்தார். காரையூர் சுற்றுக் கிராமக்குடிகள் கலியாணத்துக்கு 15 பணமும், திருப்பணிக்கு ஒரு பணமும் அளிக்கக் கட்டளையிட்டார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மகாமண்டலீசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் ராமதேவ மகாராயர் காரியத்துக்குக் கர்த்தரான முத்துவீரப்ப நாயக்கனய்யனவர்கள் தெட்சிண சமுத்திராதிபதியாய்ப் பிருத்வி ராச்சியம் பண்ணியருளா நின்ற கலியுகம் 4722 இதில் சாலிவாகன சகாப்தம் 1543 க்கு மேல் செல்லாநின்ற துன்முகி வருஷம் பங்குனி மாதம் 9ம்தேதி ஆதித்தவாரநாள் காங்கய நாட்டில் காரையூரில் வெள்ளாளப் பயிரர்களில் நல்லதம்பிக்கவுண்டர் விசுவநாதச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்கள் தம்முடைய வெற்புவாசிச் சொத்திலே காஞ்சிநதி தீரத்தில் நவப்பிரதிஷ்டையாக அணையும் வாய்க்காலும் கண்டு மேற்கு சர்க்கரைபாளையம் கிழக்கு பெரிய காரையூரிலே தெற்கு கோயில் கரையளவும் இதுவெல்லாம் சுவாமி செயங்கொண்டநாத தம்பிரானார்க்குப் பூர்வம் நடந்துவந்தது இந்தப் புஞ்சையில் நஞ்சை நிலங்கண்டதெல்லாம் சுவாமிக்கு விட்டோம் இப்பால் பெரிய காரையூரிலேயிருந்து ஆற்றுக்குப் போகிற இட்டேரிக்குக் கிழக்கும் புதுக்கோட்டையில் பெரிய குளமும் சின்னக்குளமும் இது கூடின நிலமும் அப்பால் நீரோடி நிலம் எழுமாவாக கூடிய நிலத்தில் பாதி நிலம் சுவாமிக்கு விட்டோம் கோயிலுக்குமேற்கு கந்தப்பன் பாளையத்திலிருந்து சர்க்கரைப் பாளையத்துக்குப் போகிற இட்டேரி மட்டும் அதுக்கு வடக்கு சர்க்கரைப் பாளையத்து மட்டும் காரையூர் சுற்றுக் கிராமக் குடியில் கலியாணத்துக்குப் பதினஞ்சு பணமும் திருப்பணி வேடிக்கை குடிக்கு ஒரு பணமும் கட்டளையிட்டோம் ஊர்க்கணக்கு பொன்னாளிப்பிள்ளை மகன் சடைய பிள்ளை எழுத்து.

187

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கீசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டு 32 ஊரவர் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழாவெடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

வெள்ளோட்டு வெள்ளாளன் பயிரர்களில பிள்ளையாண்டான் எழுத்து.

188

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கவுண்டம்பாளையம் விநாயகர் கோயில்

காலம் - கி.பி. 1793, பிரமாதீச சித்திரை மாதம் முதல்நாள்

செய்தி - தீர்த்தகிரிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் சிவன் மலையாண்டவர் உச்சிக்காலக் கட்டளைக்கு இரண்டு இடங்களில் 16வள்ளக்காடு (64ஏக்கர்) கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விசயாற்புதய கலியுக சகாப்தம் 4894 சாலிவாகன சகாப்தம் 1715 மேல் செல்லாநின்ற பிறமாதீட்ச வருஷம் சித்திரை மாதத்தில் தீர்த்தகிரிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் அவர்கள் அதிகாரத்தில் சிவன்மலை ஆண்டவருக்கு உச்சிக்காலக் கட்டளைக்கு காடவூர் கிராமத்தில் மானியம் விட்ட விபரம் கவுண்டம்பாளையத்துக்குத் தெற்கு பொத்திபாளையத்துப் பால....க்கு மேற்கு ராசாவலசுக்கு வடக்கு வேலாங்காட்டுக்குக் கிழக்கு இந்த சதுர் மத்தியில் காடு..14 ஆக 15 வள்ளம் இந்த பதினஞ்சு வள்ளக் காடும் சந்திராதித்தவரை..டுத்த போகத்திலே இருப்பதாகவும் இதற்கு விகாதம் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலேயும்

189

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பட்டாலி (அரசம் பாளையம்) தனிக்கல்.

காலம் - கி.பி. 1793, பிறமாதீட்ச வருஷம் சித்திரைமாதம் முதல் நாள்

செய்தி - தீர்த்தகிரிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் கொடுத்த ஒரு கொடை

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் விசயாற்புதய கலியுக சகாப்தம் 4894 சாலிவாகன சகாப்தம் 1715 க்கு மேல் செல்லாநின்ற பிரமாதீட்ச வருஷம் சித்திரை மாதம் 1 ஆம் தேதியில் தீர்த்தகிரிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார்.....

190

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலைப்பாதை அடிவாரம் இடப்புறம் பழையகோட்டை மடம்.

காலம் - கி.பி. 1858, பிங்கல கார்த்திகை 30 ஆம் நாள்

செய்தி - சிவன் மலையில் பழையகோட்டை மடம் கொற்றவேல் சர்க்கரை மன்றாடியாரால் கட்டப்பட்டது.

கல்வெட்டு

கலியுகம் 4959 பிங்கள வருஷம் கார்த்திகை மாதம் 30தேதி பழையகோட்டை நல்ல சேனாபதிச் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் பௌத்திரன் நல்லதம்பிச் சர்க்கரை

உத்தமக் காமிண்ட மன்றாடியார் புத்திரன் கொற்றவேல் சர்க்கரை உத்தமக் காமிண்ட மன்றாடியார் உபயம்.

191

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், சிவன்மலை நுழைவாயில் முன் மண்டபம்

காலம் - கி.பி. 1899, விளம்பி ஆவணி 30 ஆம் நாள்

செய்தி - வாழத்தோட்டத்து வலசுக்காரர்கள் ரங்கசாமிக்கவுண்டர் இரத்தினத்தாக் கவுண்டர் ஆகியோர் முன் மண்டபம் கட்டினர்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 5000 விளம்பி வருஷம் ஆவணி மாதம் 30 தேதி பழைய கோட்டை தீர்த்தகிரிச் சர்க்கரை சந்ததி வாழத்தோட்டத்து வலசு ரங்காமிக்கவுண்டர் ரத்தினத்தாக் கவுண்டர் ஜீரண உத்தாரணம்

192

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொம்மக்கோயில் வரதராசப் பெருமாள் செப்புப் படிமம்

காலம் - கி.பி. 1827, சர்வதாரி ஐப்பசி 10ஆம் நாள்

செய்தி - வடமுகம் வெள்ளோடு கரையைச் சேர்ந்த பயிர குலத்தார்களில் ராசாக்கவுண்டர், திருமலைக்கவுண்டர் இருவரும் கொம்மக் கோயில் வரதராசப் பெருமாள் செப்புப் படிமம் செய்தனர்.

கல்வெட்டு

ஸ்ரீகலியுக சகாற்தம் 4928 க்கு மேல் செல்லாநின்ற சாலியவாகன சகாற்தம் 1749 க்கு மேல் செல்லாநின்ற சறுவதாரி வருஷம் அப்பிசை மாதம் 10தேதி புதன் வாரமும் உத்திர நட்சேத்திரமும் கூடின அமுர்த யோகத்தில் கொம்மக்கோயில் வரதராசப்பெருமாள் வடமுகம் வெள்ளோடு பயிரகுலம் ராசாக்கவுண்டன் திருமலைக் கவுண்டன் சதா சேர்வை.

193

பவளன் குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் கவைய காளியம்மன் கோயில்

காலம் - கி.பி. 1895, மன்மத வைகாசி மாதம்

செய்தி - தென்திசை வேளாளரில் பவளகுலம் ராயகுமாரகவுண்டர்

கவையகாளியம்மன் குலதெய்வக் குடிகளிடம் தொகை வசூல் செய்து முன் மண்டபத்தைப் பிரித்துப் புதுக்கற்களால் கட்டினார்.

கல்வெட்டு

கலியுகாதி 4996 மன்மத வருஷம் வையாசி முன் மண்டபம் பிரித்து புது கல்லுடன் சீரணத்துடன் தென்திசை வேளாள பவளகுலம் மணியம் வையாபுரிக் கவுண்டர் புத்திரன் ராயகுமாரகவுண்டன் யிதன் குலதெய்வக் குடிகளால் தொகை வசூல் செய்து சீரண உத்தாரணம் விரிவாய் செய்யலாச்சுது 1895 வருஷம் மே மாதம்.

194

பனங்காடை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் 31 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1238

செய்தி - கூடூரில் வெள்ளாளன் பனங்காடரில் சொக்கன் கொற்றன் திங்களூர் சந்திரபுரீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திரதேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திரு நல்லியாண்டு இருபத்தைந்தாவதுக்கெதிர் ஆறாவது குறுப்பு நாட்டில் கூடூரில் வெள்ளாளன் பனைங்காடர்களில் சொக்கன் கொற்றனேன் திங்களூரில் ஆளுடையார் சந்திரபுர ஈசுவரமுடையார்க்குச் சந்தியா தீபமொன்றுந் திங்களூர்க் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்வாஜ கோத்திரத்தில் வேதன் தேவன்.. பழஞ்சலாகை அச்சொன்றுங் கைக்கொண்டேன் சந்திராதித்தவரை செலுத்துவானாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

195

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி.1210

செய்தி - கூடூர் வெள்ளாளன் பனங்காடரில் கோவன் மனிச்சர் மனைக்கிழத்தி உண்ணாடி நாகீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இரண்டாவதுக் கெதிராவது கூடூரில்

வெள்ளாளன் பனைங்காடரில் கோவன் மனிச்சரின் மனைக்கிழத்தி உண்ணாடியேன் விசயமங்கலத்து ஆளுடையார் திரு நாகீசுவரம் உடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சொன்றுங் கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் மாகத்துடையான் வேதநாயக பட்டனும் ஆத்ரேய கோத்திரத்து ஆளவந்தான் பிழைபொறுத்தானும் மாடல கோத்திரத்து அப்பன் பிள்ளையும்...குடங்கொடு கோயில் புகுவான் சந்திராதித்தவரை எரிப்பதாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

196

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி.1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர்.

கல்வெட்டு

எழுமாத்தூரில் வெள்ளாளன் பனங்காடரில் பெரியண்ண காகுத்தர்.

197

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் இராமர் கோயில் தூண்

காலம் - 19 ஆம் நூற்றாண்டு, விசு ஆடி 9 ஆம் நாள், கி.பி. 1821

செய்தி - கொடுமணல் பனங்காடைகுல வெள்ளைக் கவுண்டர் இராமர் கோயிலுக்குத் தூண் உபயம்.

கல்வெட்டு

விசு வருஷம் ஆடி மாதம் 9 தேதி கொடுமணல் சீரங்கராமருக்குப் பனங்காடை குலம் கயிலாசக் கவுண்டன் மகன் முத்துக் கவுண்டன் மகன் வெள்ளைக்கவுண்டன்.

198

பில்லன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு திருத்தொண்டீசுவரர் கோயில்

காலம் - இரவிகோதையான கோக்கலி மூக்கனின் நான்காம் ஆட்சி யாண்டு

செய்தி - ஆவணிப் பேரூர் வெள்ளாளன் பில்லர்களில் சொக்கன்

விக்கிரம சோமயரையன் தன் மகன் அக்கன் சோமன் மாமணி யாழ்வானின் நலத்திற்காக ஈரோடு திருத்தொண்டீசுவரருக்கு நிலம் கொடை அளித்தார்.

கல்வெட்டு

கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ இரவிகோதையான கோக்கலி மூக்கற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு நாலாவது பூவாணிய நாட்டு ஆவணிப்பேரூரில் வெள்ளாளன் பில்லர்களில் சொக்கன் விக்கிரம சோமயரையன் தன் மகன் அக்கன் சோமன் மாமணியாழ்வான் திருநாமஞ்சாத்தினமையால் பேருடைச் சிறப்பு இவனுக்கு ஊர்க்கு வடக்கே தாழ்வுகுளம் கட்டிக் கொண்டு புன்புலம் நன்புலம் ஆக்கிக் கொள்வானாகவும் இக்குளத்தில் உள்ள பயிர் யாதொன்றும் முச்சூடும் தானே அனுபவிப்பானாகவும் ஈரோட்டில் ஆளுடையார் தொண்டீசுவரமுடையார்க்கு நாலில் ஒன்று இறைபோகம் குடுப்பானாகவும் மற்றும் எழுவன முளைப்பன தெங்கு பனையும் தன் மக்கமக்கள் அனுபவிப்பானாகவும் நான் கெல்லைக்கு உட்பட்ட கல்லும் காஞ்சனமும் மற்றும் கழியிறை உள்ளதும் தானே அனுபவிப்பானாக உதகம் பண்ணிக்குடுத்தோம் இது மூன்று நியாயற்கும் இரட்சை இது விலங்கல் செய்து இறங்கல் பண்ணினவன் வழி ஏழெச்சமறுப்ப உதகம் பண்ணிக்குடுத்தோம் இவ்வூரில் நான்கெல்லையாவது வடக்கு சிறுபாடிக்குளத்து தென்னிளந்தலையும் கிழக்கு வேப்பம் பாடியும் தெற்கு ஆயத்தர் மடையும் மேற்கு ஒழுகு கறடும் இந்நான்கும் எல்லையாவதாகவும் இவ்வூர் நான்கு மன்றாட்டாலுள்ளதும் தானே அனுபவிப்பான் நாசமுறுவான் இவை கோக்கலி மூக்கனேன் என் எழுத்து இவை பெருமாள் அதிகாரம் செய்வார் காடுவெட்டியேன் இவை என் எழுத்து பெருமாள் திணைக்களத்தாரில் முனையதரையனேன் இவை என் எழுத்து.

199

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - வீரராசேந்திர தேவனின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1227

செய்தி - பூவாணிய நாட்டு ஆவணிப் பேரூரில் வெள்ளாளர் புல்லர்களில் நடுவிலான் மனைக்கிழத்தி சிறுப்பெண் தன் மகன் பில்லனின் நலத்தின்பொருட்டு இரு கழஞ்சு பொன்னால் காக்கல் ஊராணியோடு ஒத்த திரு ஆரம் அம்மனுக்கு அணிவித்தார், சந்தியா தீபமும் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திரதேவர்க்கு யாண்டு பதினைஞ்சாவதுக்கெதிர் அஞ்சாவது கார்த்திகைத் திங்கள் முதல் பூவாணிய நாட்டில் ஆவணிப் பேரூரில் இருக்கும் வெள்ளாளர் புல்லர்களில் நடுவிலான் மனைக்கிழத்தி சிறுப்பெண்ணேன் என் மகன் பில்லனுக்கு நன்றாக

விசயமங்கலத்து ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார் பெரிய நாச்சியார்க்கு திருவாரமாக காக்கல் ஊராணியோடொப்பது இரு கழஞ்சு பொன்னால் சாத்தினேன் ஊர் கையசம் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒரு பழஞ்சலாகை காணியுடைய சிவப்பிராமணரில் மாடல கோத்திரத்து உடையான் அவிநாசியும் உடையான் வேதனும் மாடல கோத்திரத்துத் தேற்றி அப்பனும் ஆத்ரேய கோத்திரத்து ஆளவந்த மாணிக்கனும் ஆளவந்த பிழைபொறுத்தானும் குடங்கொண்டு கோயில் செய்வார் சந்திராதித்தவரை மக்க மக்கள் விளக்கெரிப்போமாகவும் இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

200

இடம் - ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், சத்தியமங்கலம் சிவாலயம்

காலம் - வீரராசேந்திரனின் 24ஆவது ஆட்சியாண்டு, கி.பி.1231

செய்தி - குளப்பலூர் வெள்ளாளர் பில்லரில் நம்பி தொண்டைமான் ஆலத்துக் கோம்பையான சதுமுகம் கயிலாய முடையார்க்கு உச்சிசந்திக்கு அமுதுபடி உரியரிசிக்கும், சந்தியா தீபத்துக்கும் சுரி குமுந்தன் அச்சு அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இருபத்து நாலாவது ஆலத்துக் கோம்பையான சதுமுகத்தில் ஸ்ரீகயிலாயமுடையார்க்கு உச்சிச் சந்திக்கு அமுதுபடி உரியரிசி நித்தஞ் சந்தியா தீபம் சுரி குமுந்தன் அச்சு பண்டாரத்திலே ஒடுக்கினேன் குறுப்பு நாட்டில் குளப்பலூரில் இருக்கும் வெள்ளாளன் பில்லரில் நம்பி தொண்டைமானேன்.

201

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி.1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக்கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

மங்கலத்து வெள்ளாளன் பில்லர்களில் சூரியதேவன்.

202

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில்

காலம் - வீர நாராயணதேவனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி.1144

செய்தி - மன்னியூர் வெள்ளாளன் புல்லிகளில் கோவன் இருடனான இராசநாராயணக் காமுண்டன் திருப்பணிக்கு மூன்றரை கழஞ்சு பொன் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரநாராயண தேவற்கு யாண்டு ஏழாவது வடபரிசாரநாட்டில் மன்னியூரிலிருக்கும் வெள்ளாளன் புல்லிகளில் கோவன் இருடனான இராஜநாராயணக் காமுண்டேனன் ஆளுடையார் காலகாலதேவற்கு திருப்பணிக்கு முக்கழஞ்சரை பொன்னும் தன்மத்துக்கிட்டுச் செய்வித்துக் கல் வெட்டுவிச்சேன் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

203

இடம் - கோவை மாவட்டம், கோவை நகரம் சங்கமேசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழதேவனின் 19 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1293

செய்தி - வடபரிசார நாட்டு வெள்ளாளன் புல்லிகளில் பறையன் பறையனான நாட்டுக் காமுண்டன் சங்கீசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவற்கு யாண்டு பதினேழாவது எதிர் எதிர் பேரூர் நாட்டுக் கோவன்புத்தூர் உடையார் சங்கீசுரமுடையார் கோயில் பக்கல் வடபரிசாரநாட்டிலிருக்கும் வெள்ளாளன் புல்லிகளில் பறையன் பறையனான நாட்டுக் காமுண்டனேன் வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணனுக்கு ஓரச்சுக் குடுத்தேன் சந்திராதித்தர்வரை செல்வதாக இக்கோயில் குடமுங்குச்சியுங்கொண்டு புக்கானில் ஒருவன் செலுத்தக் கடவேனாகவும் கல்வெட்டுவித்தேன் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

204

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னியூ ராண்டார் கோயில்.

காலம் - வீர ராசேந்திரனின் 14 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1221

செய்தி - வெள்ளாளன் புல்லிகளில் பொற்கோயில் நம்பி ஞாயிற்றுக் கிழமை எழுந்தருளும் இறைவனுக்கு வெஞ்சனங்கள் படைக்க ஏழரை கழஞ்சு பொன் கொடுத்துள்ளார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதிநாலாவது மந்நியூரிலிருக்கும்

வெள்ளாளன் புல்லிகளில் தேவன் பொற்கோயில் நம்பியேன் ஆளுடையார் மந்நியூராண்டார் பெரிய... ஞாயிற்றுக்கிழமைக்குச் சிவாலய பிரதட்சிணை எழுந்தருளப் பண்டாரத்தில் ஒடுக்கின பொன் எழுகழஞ்சரையும்...முக்குறுணியும் நெல்லுக்கு...பதினொரு கலனே முக்குறுணியாலும் கறியமுது வெஞ்சனங்களுக்கும்...

205

பிள்ளந்தை குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் கவைய காளியம்மன் கோயில்

காலம் - கி.பி. 1532, அச்சுதராயர் காலம்

செய்தி - கவையமுத்தூர் வெள்ளாளர் பிள்ளந்தைகளில் இராக்கதப் பெருமாள் பிறவிக்கு நல்லார் கவைய காளியம்மன் கோயில் முன் மண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் மகா மண்டலீசுவரன் அச்சுத ராயர்க்குச் செல்லாநின்ற கலியுக சகாத்தம் 4633க்கு மேல் நடக்கிற நந்தன வருஷம் வைகாசி மாதம் 20 தேதி நாலூர்ப்பற்று நாட்டில் கவையமுத்தூரில் வெள்ளாளன் பிள்ளந்தைகளில் இராக்கதப் பெருமாள் பிறவிக்கு நல்லார் கவையகாளியம்மை கோயில் முன் மண்டபம் கட்டிவித்தமைக்குப் பன்மாகேஸ்வரர் ரட்சை.

206

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அவிநாசி அவிநாசி யப்பர் கோயில் முன் கொடி மண்டபம்.

காலம் - கி.பி.1648, சித்தார்த்தி சித்திரை 3 ஆம் நாள்.

செய்தி - கவையமுத்தூர் வெள்ளாளன் பிள்ளந்தைகளில் பெரிய காளியப்பகவுண்டரும், சின்னக்காளியப்பகவுண்டரும் அணி ஒட்டுக்கால் மண்டபம் அவிநாசியப்பர் கோயிலில் கட்டினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கலியுக சகாத்தம் 4749க்கு மேல் செல்லாநின்ற சித்தார்த்தி வருஷம் சித்திரை மாதம் 3 தியதி நாலூர்ப்பற்று நாட்டு கவையம் புத்தூரில் இருக்கும் வெள்ளாளன் பிள்ளந்தை குலத்தில் பெரிய காளியப்பகவுண்டர் அவர்கள் சின்னக் காளியப்பகவுண்டர் அவர்கள் உபயம் அணிஒட்டுக்கால் மண்டபம் கட்டிமுடித்தார் அவிநாசிலிங்கர் லட்சிப்பார்.

207

பூச குலம்

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், பொருளூர் கலி வரதராசப் பெருமாள் கோயில்

காலம் - 18 ஆம் நூற்றாண்டு, நள வைகாசி 31 ஆம் நாள், கி.பி.1736

செய்தி - மஞ்சநாயக்கன் பட்டி பூசகுலம் நல்லணகவுண்டர் பெருமாள் கோயில் கருடகம்பக் குறடு திருப்பணி செய்தார்.

கல்வெட்டு

ஸ்ரீ நள வருடம் வைகாசி மாதம் 31 தேதி மஞ்சநாயக்கன் பட்டியிலிருக்கும் பூச குலம் குப்பாண்டக் கவுண்டர் பேரன் ஆயிக் கவுண்டருடைய புத்திரன் நல்லண கவுண்டர் பெருமாள் கோயில் கருடகம்பமும் குறடுஞ் செயிதுவைத்த பிறதிஷ்ட்டைத் தர்மம் நம்பியான ரங்கத்தாசன் புத்திரன் அங்காத் தாசன்.

208

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கீரனூர் வாகீசுவரர்கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் 11ஆவது ஆட்சியாண்டு, கி.பி.1218

செய்தி - கீரனூர் வெள்ளாளன் பூசர்களில் அரையன் சிறியானான வேந்த சூளாமணிப் பல்லவரையன் திருவாகீசுவர முடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதினொன்றாவது பொங்கலூர்க்கா நாட்டு கீரனூர் ஆளுடையார் திருவாகீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு துளை கழஞ்சு பொன் சிவபிராமணன் வசம் ஒடுக்கினேன் இவ்வூர் வெள்ளாளன் பூசகளில் அரையன் சிறியானான வேந்தசூளாமணிப் பல்லவரையனேன் இப்பொன் கைக்கொண்டேன் பாண்டிய தனிஞ்சி சுந்தனான குலோத்துங்க சோழபட்டனேன் சந்திராதித்தவரை இவ்விளக்கு குடங்கொடு கோயில் புகுவார் எரிப்பாராக பன்மாகேஸ்வரர்ரட்சை.

209

இடம் - கோவை மாவட்டம், உடுமலை வட்டம், கண்ணாடிப் புத்தூர் கைலாசநாதர் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவன் 13 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1220

செய்தி - கண்ணாடிப் புத்தூர் மன்றாடி பூசகரில் திருச்சிற்றம்பல முடையான் அம்மை அப்பனான தம்பிரான் தோழனும் மற்றொருவரும் எழுந்தருளுவித்த தட்சிணாமூர்த்திக்குக் கொடை

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திரு நல்லியாண்டு...ந்தனான வீரராசேந்திர அனுத்திரப் பல்லவரையனேன் இந்நாட்டுச் சோழ...தட்சிணாமூர்த்தி தேவர்க்கு அமுதுபடிக்கு இவ்வூர் மன்றாடிகளில் பூசகரில் திருச்சிற்றம்பலமுடையான் அம்மை அப்பனான தம்பிரான் தோழனும்...திருச்சிற்றம்பல நம்பியும்....தட்சிணாமூர்த்தி தேவரை எழுந்தருளுவித்து வீரராசேந்திர அனுத்திரப் பல்லவரையன்.

210

இடம் - கோவை மாவட்டம், உடுமலை வட்டம், சோழமாதேவி குலசேகர ஈசுவரமுடையார் கோயில்

காலம் - வீர சோழ தேவரின் காலம், கி.பி. 1118-1137

செய்தி - மன்றாடி பூசகரில் அரைசன் பறையன் ஆன பொய்யாத்தமிழ் நம்பி வேண்டுகோள்படி அரசன் வீரசோழ தேவர் ஆலோடூரில் திருப்பள்ளியறை நாச்சியார்க்கு திரு அர்த்தசாமப் பூசைக்கு நிலம் விட்டார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு கரைவழிநாட்டுச் சோழமாதேவி நல்லூர் ஆளுடையார் குலசேகர ஈசுவரமுடையார் திருப்பள்ளியறை நாச்சியார்க்கு திருவொத்தசாமப்படி வேணுமென்று இவ்வூர் மன்றாடி பூசகரில் அரைசன் பறையனான பொய்யாத் தமிழ்நம்பி பக்கலே வந்து நமக்குச் சொல்லி நின்றான் நானிடு ஆலோடூரில் தலைவயல் மண்ணறை நிலத்துக்கு கலனே தூணிக்கு எல்லையாவது சோழமாதேவிப் பெருவாய்க்காலுக்கு மேற்கும் கண்ணாடிப்புத்தூர் எல்லை கண்ணாற்றுக்கு வடக்கும் ஐங்கலப் பற்றின் நடுவுச்செய் நிலத்துக்கு கிழக்கும் கொண்போடிக் கவருக்குத்தெற்கும் இந்நான்கெல்லைக் குட்பட்ட நெல்லு விதை கலனே தூணியும் அமுதுபடி வாய்வழி நடை சட்டி ஒன்றுஞ் செல்வதாகவும் இந்நிலத்தில் வந்த இறை புரவு சித்தாயம் எலவை உகவை மற்றும் எப்பேர்ப்பட்டதும் கொள்ளாதோமாகச் சந்திராதிச்சற் செல்வதாகந...மாருடை பாற்படுத்துக்குடுக்க நம் ஓலையில் எழுத்துயிட்டுக் குடுத்தோம் இது பன் மாகேசுவரர் ரட்சை.

211

இடம்	-	கோவை மாவட்டம், உடுமலை வட்டம், சோழமாதேவி குலசேகர ஈசுவரமுடையார் கோயில்.
காலம்	-	விக்கிரம சோழதேவரின் 21 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1295
செய்தி	-	சோழமாதேவிநல்லூர் பூசகரில் வெள்ளாட்டி திருப்பணியின் போது தூண் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் சிரி விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 21 வது சோழமாதேவி நல்லூர் வெள்ளாட்டி பூசகரில்......ஆளுடையார்க்கு இட்ட தூண்

212

இடம்	-	கோவை மாவட்டம், உடுமலை வட்டம், சோழமாதேவி குலசேகர ஈசுவரமுடையார் கோயில்
காலம்	-	விக்கிரம சோழ தேவரின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1294
செய்தி	-	சோழமாதேவி நல்லூர் வெள்ளாட்டி பூசகரில் பறையன் ஆளுடைய நாச்சியும், அவள் சிறிய தாயும் மண்டபத்தில் திருநிலைகால் இரண்டும், படி இரண்டும் செய்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு இருபதாவது சோழமாதேவி நல்லூர் வெள்ளாட்டி பூசகரில் பறையன் ஆளுடை நாச்சியும் என் சிறிய தாயும் திருமண்டபத்தில் திருநிலைகாலிரண்டும் படியிரண்டும் செய்விச்சு நாட்டிவிச்சோம் இது பன்மாகேசுவரர் ரட்சை

213

பூச்சந்தை குலம்

இடம்	-	கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை நன்னனூர் ஆளுடையார் நக்காண்டார் கோயில்
காலம்	-	கி.பி.12ஆம் நூற்றாண்டு
செய்தி	-	நன்னனூர் வெள்ளாளன் பூச்சந்தைகளில் மணியமரையனான இராசராசப் பல்லவரையன் பக்கல் நிலத்தை ஒற்றிவைத்து அதனால் வந்த பணத்தை வெள்ளாளன் கணிச்சரிவாப் பழவரையனான அதிராசராச வஞ்சி வேளான் மணவாட்டி

வீரகேரளவளநாட்டு நன்னனூர் ஆளுடையார். நக்காண்டார்க்குக் கொடையாகக் கொடுத்தாள்.

(கல்வெட்டுப்படி கிடைக்கவில்லை)

214

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்.

காலம் - கி.பி.13 ஆம் நூற்றாண்டு

செய்தி - பொங்கலூர்க்கா நாட்டுக் கீரனூர் ஆளுடையார் திருவாகீசுவரமுடையார்க்கு கீரனூர் வெள்ளாளன் பூச்சந்தைகளில் காணி கௌத்தியன் கொடை கொடுத்தார்.

(கல்வெட்டுப் படி கிடைக்கவில்லை)

215

பூந்தை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், துடுப்பதி விசுவநாத ஈசுவரர் கோயில்.

காலம் - கிருஷ்ணராச உடையார் காலம், கி.பி.1744, ரத்தாட்சி பங்குனி 8 ஆம் நாள்.

செய்தி - துடுப்பதி காணியாளரில் பூந்தை குலம் வாரணவாசிக் கவுண்டர் பங்கில் குமாரவேலப்ப கவுண்டர் காசி விசுவேசுவரர் விசாலாட்சியம்மன் கோயில் கட்டி பரிவார தெய்வங்களும் அமைத்து மண்டபம், கோபுரம் கட்டி, படித்தரம் தீபாராதனைக்கு ஏற்பாடு செய்தார்.

கல்வெட்டு

சிவமயம் ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் மகா சுவாமி கிருஷ்ணராஜ உடையாரவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான ஸ்ரீ தளவாய் நஞ்சராசய்யன் அவர்கள் கனுவாய்ச் சீர்மையில் சுபைதார் ரங்கய்யனவர்கள் சுபையில் சாலிவாகன சகாப்தம் 1666 கலியுக சகாப்தம் 4845க்கு மேல் செல்லாநின்ற ரத்தாட்சி வருஷம் பங்குனி மாதம் 8ந் தேதி புதவாரமும் பஞ்சமியும் உத்தர நட்சத்திரமும் இச்சாலி நாமயோகமும் பாலவாகரணமும் பெற்ற சுபதினத்தில் குறுப்பு நாட்டில் விசையமங்கைக்குச் சேர்ந்த துடுப்பதி இவ்வூர் காணியாளரில் வாரணவாசிக் கவுண்டன் பங்கில் வாரணவாசிக் கவுண்டன் மகன் குமாரசாமிகவுண்டன் மகன் குமாரவேலப்ப கவுண்டன் காசிவிசுவேசுவர சுவாமியார் விசாலாட்சி அம்மன் மற்றுமுள்ள பரிவார தேவதைகளுக்கும் மண்டப கோபுரம் உண்டுபண்ணி படித்தரம் தீபாராதனை நடக்கும்படிக்கும் குமாரசாமிக் கவுண்டன் மகன் குமாரவேலப்பகவுண்டன் உபயம் இவன் கோத்திரம் பூந்தை.

216

பூமன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு ,கி.பி. 1271

செய்தி - வெள்ளாளர் பூமகளில் அவிநாசி ஆதீசுவரர் கோயிலில் அர்த்தமண்டப இரண்டாங்காலும் அகவாய் புறவாய் ஆகியவையும் செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு ஆறாவது வெள்ளாளன் பூமகளில் அவிநாசியேன் நாயனார் ஆதீஸ்வரமுடைய நாயனார் திருக்கோயில் அர்த்தமண்டபத்தில் இரண்டாங்காலும் அகவாய் புறவாய் செய்வித்தேன் அவிநாசியேன்.

217

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கூகலூர் மத்திய புரீசுவரர் கோயில்.

காலம் - கி.பி.1338, வீரவல்லாள தேவர் காலம்

செய்தி - காஞ்சிக்கூவல் நாட்டுக் கூவலூரில் வெள்ளாளர் பூமகளில் சொக்கன் ஆண்டார் மத்தியபுரீசுவரருக்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வல்லாளதேவர் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற 1260 காஞ்சிக் கூவல் நாட்டில் கூவலூரில் வெள்ளாளன் பூமகளில் சொக்கன் ஆண்டாருக்கு சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் ஆளுடைய நாயக நம்பியார் வசம் குடுத்த பணம் 10 இப்பணம் பத்தும் கொண்டு சந்திராதித்தவரை செலுத்துவதாகவும் இப்படிக்கு இது பன்மாகேஸ்வர ரட்சை.

218

பெரிய குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழு பிரமீசுவரமுடையார் கோயில்

காலம் - சுந்தர பாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1291

செய்தி - முருங்கத்தொழு வெள்ளாளர் பெரியகுலம் நம்பி நம்பியான பிள்ளை ஞானசம்பந்தன் பிரமீசுவரமுடையார் கோயிலில் திருநிலைகால் இரண்டு உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 6வது பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாளன் பெரியகளில் நம்பி நம்பியான பிள்ளை ஞானசம்பந்தனேன் இவ்வூர் நாயனார் பிரம்மீசுரமுடையார் கோயிலில் திருநிலை காலிரண்டுஞ் செய்வித்தேன்.

219

இடம் - ஈரோடுமாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழு பிரமீசுவரமுடையார் கோயில்

காலம் - சுந்தரபாண்டியனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1291

செய்தி - முருங்கத்தொழு வெள்ளாளன் பெரியகுலம் சிறுநம்பி நம்பியான நம்பி ஆரூரன் பிரமீசுரமுடையார் கோயில் திருக்கட்டளையில் திருநிலைகால் இரண்டும் ரிஷபதேவரையும் ஏறியருளச் செய்து கோயிலும் உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தர பாண்டிய தேவற்கு யாண்டு 6வது சித்திரை மாதம் பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாளன் பெரியகளில் சிறுநம்பி நம்பியான நம்பி ஆரூரனேன் இவ்வூர் நாயனார் பிரமீசுவரமுடையார் கோயிலில் திருக்கட்டளையில் திருநிலைகால் இரண்டும் இஷப தேவரையும் ஏறியருளப்பண்ணி இஷப தேவர் கோயிலும் செய்வித்தேன்.

220

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், சங்கரண்டாம் பாளையம் பெரியநாயகியம்மன் கோயில்.

காலம் - கி.பி.1794, ஆனந்த சித்திரை மாதம்

செய்தி - சங்கரண்டம்பாளையம் பெரியகுலம் வேணாடுடையார், சிறுக்கிணறு ஆந்தைகுலம் பெரியணன் ஆகிய இருவரும் பெரிய நாயகியம்மன் கோயில் கட்டினர்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4895 சாலிவாகன 1716 மேல் செல்லாநின்ற ஆனந்த வருஷம் சித்திரை மாதம் பெரியநாச்சியம்மன் திருப்பணி கெற்பகிரி அர்த்தமண்டபம் மகாமண்டபம் பூந்தேர் பொன்னூஞ்சலுக் கதிபரான வேணாவுடையான் சிறுக்கிணறு ஆந்தைகுலம் பெரியணன் உபயம் பாப்பனாசாரி.

221

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழு பிரமீசுவரமுடையார் கோயில்.

காலம் - சுந்தரபாண்டியனின் முதலாவது ஆட்சியாண்டு, கி.பி. 1285

செய்தி - முருங்கத்தொழு வெள்ளாளன் பெரியகுலம் நம்பி நம்பியான நல்லமங்கை பாகன் அர்த்த மண்டபத் திருநிலைகால் இரண்டு, படி, பலிபீடம் உபயம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 1 வது பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் வெள்ளாளன் பெரியகழில் நம்பி நம்பியான நல்லமங்கை பாகனேன் இவ்வூர் நயினார் பிரமேசுரமுடையார் கோயிலில் அர்த்தமண்டபத்தில் திருநிலைகால் இரண்டும் படியும் பலிபீடமும் செய்வித்தேன்.

222

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழு பிரமீசுவரர் கோயில்

காலம் - சுந்தரபாண்டியனின் ஏழாம் ஆட்சியாண்டு, கி.பி. 1292

செய்தி - முருங்கத் தொழு வெள்ளாளர் பெரியகுலம் நம்பியான், மங்கைகூத்தன், கொன்றைவார் சடையன், பெரிய பிள்ளை, பொல்லாத பிள்ளை இவர்கள் ஐவரும் பிள்ளையாரை கோயில் கட்டி பிரதிட்டை செய்தனர். இருபது பணத்தில் சிவாலயம் திருப்பணி செய்தனர். முப்பது குழி நிலம் கொடையளித்தனர். சந்தியா தீபமும் வைத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு ஏழாவது சித்திரை மாதம் பூந்துறை நாட்டுப் பெருந்தொழுவில் ஊரும் ஊராளிகளோம் வெள்ளாளன் பெரியகளில் நம்பியான் மங்கை கூத்தனும் கொன்றைவார் சடையனும் பெரிய பிள்ளையும் பொல்லாத பிள்ளையும் இந்த ஐய்வரும் தங்கள் தன்மமாகப் பிள்ளையாரையும் ஏறியருளப் பண்ணி கோயிலும் செய்வித்து இவர்கள் பக்கல் இருபது பணம் வாங்கி உடையார் கோயிலும் திருப்பணியிட்டு மேலூர்க் குளத்தில் இருபதடிக் கோலாலே முப்பது குழியால் ஒரு கழனியிட்டுக் குடுத்தோம் இக்கழனி பயிர் செய்தால் கொங்கால் இரு கலனே தூணி நெல் ஆண்டு வரை அளந்து குடுப்போமாகவும் குளம் எத்தாத நாள் இரு கலனே தூணிப் பதக்கு தினை குடுப்போமாகவும் இந்த அமுதுபடி இவ்வூரிலே இருந்தார் ஒருவர் சந்திராதித்தர் வரை அளந்துவரக்கடவதாகவும் இப்படி சம்மதித்து

இக்கல் வெட்டிக் குடுத்தோம் ஊரும் ஊராளிகளோம் மேற்படி நாளில் இவ்வூர்க் காணியுடைய தேவகன்மிகளில் கௌண்டின்ய கோத்திரத்து உய்யவந்த பட்டன் ஆலால சுந்தர நம்பியும் தில்லைக் கூத்தன் மன்றுளாடுவான் நம்பியும் இப்பிள்ளையார் கோயிலுக்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு மேற்படியார் ஐவர் பக்கலும் பற்றின பொன் கழஞ்சு இச்சந்தியா தீபம் சந்திராதித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவார் இடக்கடவதாகவும் இத்தன்மங்களை அழிக்குமவன் ஏழெச்சம் அறுவான் இவை பன்மாகேஸ்வரர் ரட்சை.

223

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், முருங்கத்தொழு வாகைத்தொழு அம்மன் கோயில்

காலம் - 19 ஆம் நூற்றாண்டு, கி.பி. 1821 விக்கிரம வைகாசி 4 ஆம் நாள்

செய்தி - முருங்கத்தொழுபெரியகுலத்தார் வாகைத்தொழு அம்மன் கோயிலில் தூரி அமைத்தனர்.

கல்வெட்டு

விக்கிரம வருஷம் வைகாசி மாதம் 4 தேதி முருங்கத்தொழு பெரியகுலத்தார் வாகைத்தொழு அம்மனுக்கு உபயம்.

224

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீரநஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பெரிய குலத்தார் பெயர்

கல்வெட்டு

முருங்கைப் பெருந்தொழு வெள்ளாளன் பெரியரில் நல்ல பெருமாள் எழுத்து.

225

பைதலை குலம்

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் கபாலீசுவரர் கோயில்.

காலம் - போசள வீரசோமீசுவரன் காலம், சுபானு கார்த்திகை 2 ஆம் நாள், கி.பி. 1283.

செய்தி - சேவூர் வெள்ளாளர் பைதலையில் நடுவன் உடையான் கபாலீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரசோமீஸ்வர தேவற்கு பிருத்விராஜ்யம்பண்ணி யருளாநிற்க நல்லியாண்டு சுபானு வருஷத்துக் கார்த்திகை மாதம் 2 தியதி வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் உடையார் திருக்கபாலீசுவரமுடையார்க்கு மேற்படியூரில் வெள்ளாளன் பைய்தலையரில் நடுவன் உடையானேன் வைத்த சந்தியாதீபம் ஒன்றுக்குக் குடுத்தபணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டோம்.

226

பையர் குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவர முடையார் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவரின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1258

செய்தி - இடிகரை வெள்ளாளர் பையரில் பிள்ளன் சிறியான் வில்லீசுவர முடையார்கோயில் துவாரவாசலில் திருநிலைகால் இரண்டும் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு 2 வது இடிகரையிலிருக்கும் வெள்ளாளன் பைய்யரில் மள்ளன் சிறியானேன் ஆளுடையார் வில்லீஸ்வரமுடையார் கோயில் துவார வாசலில் திருநிலைகாலிரண்டும் என்தன்மம்.

227

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை, வில்லீசுவர முடையார் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1258

செய்தி - இடிகரை வெள்ளாளர் பைய்யரில் உடையான் சிறியான் ஆளுடையார் வில்லீசுரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு மூன்றாவது வடபரிசார நாட்டு இடிகரையிலிருக்கும் வெள்ளாளன் பைய்யரில் உடையான் சிறியான் ஆளுடையார் வில்லீசுரமுடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயிற்காணியுடைய சிவப்பிராமணன்

காசிபகோத்திரத்துத் திருநட்டன் அகஸ்தீஸ்வரம் உடையானான சித்திரமேழி பட்டனேன் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவதாக இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

228

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவர முடையார் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1270

செய்தி - இடிகரை வெள்ளாளர் பைய்யரில் பிள்ளான் சிறியான் சிறுகாற சந்திக்கு ஒரு விளக்கும், உச்சி சந்திக்கு ஒரு விளக்கும் ஆக இரண்டு சந்தியா தீபம் வைத்தார்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 5 ஆவது வடபரிசார நாட்டு இடிகரையில் வெள்ளாளர் பைய்யரில் பிள்ளான் சிறியானேன் ஆளுடையார் வில்லீசுரமுடையாற்கு சிறுகாற சந்திக்கு ஒரு சந்தியாதீப விளக்கும் உச்சி சந்தி ஒரு விளக்குக்கும் ஒடுக்கின வராகன் பணம் 20 இப்பணம் இருபதும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்து அகஸ்தீசுவரம் உடையானான சித்திரமேழி பட்டனேன் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செல்வதாக கல்வெட்டிக் குடுத்தேன் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

229

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவர முடையார் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் பனிரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1277.

செய்தி - இடிகரை வெள்ளாளர் பையரில் சடையன் நெறியான் பறையன் வில்லீசுவரமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 12 வது வடபரிசார நாட்டு இடிகரை யிலிருக்கும் வெள்ளாளன் பைய்யரில் சடையன் நெறியான் பறையனேன் ஆளுடையார் வில்லீசுவரமுடையாற்கு வைத்த சந்தியாதீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்துத் திருநட்டன் அகஸ்தீசுவரம் உடையானான சிதத்ரமேழி பட்டனேன் குடங் கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செல்வதாக பன்மாகேஸ்வரர் ரட்சை.

230

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவர முடையார் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் 15 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1280

செய்தி - இடிகரை வெள்ளாளர் பைய்யரில் செம்மண் காவன் வில்லீசுவர முடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 15 வடபரிசார நாட்டு இடிகரையில் வெள்ளாளன் பைய்யரில் செம்மண் காவனேன் ஆளுடையார் வில்லீசுவரமுடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின பணம் 10.

231

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரம் உடையார் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1273

செய்தி - கொற்றமங்கலம் வெள்ளாளர் பையரில் பறையன் பறையன் ஆளுடையார் வில்லீசுவரமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 8 ஆவது வடபரிசார நாட்டுக் கொற்ற மங்கலத்திலிருக்கும் வெள்ளாளன் பைய்யரில் பறையன் பறையனேன் ஆளுடையார் வில்லீசுவர முடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின வராகன் பணம் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்து திருநட்டன் அகஸ்தீசுரம் உடையான் ஆன சித்திரமேழி பட்டனேன் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித் தவரை செல்வதாக பன்மாகேஸ்வரர் ரட்சை.

232

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர் கோயில்.

காலம் - வீரசோழனின் 19 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1186.

செய்தி - வடபரிசார நாட்டில் உள்ள கங்கைப்பள்ளி, சேவூர் வெள்ளைப் பாடி ஆகிய ஊர்களிலிருக்கும் நிலங்களை ஐந்து மன்றாட்டாகப் பிரித்துக் கொடுக்கப்பட்டது. இம்மன்றாட்டுகளைப்பெற்றவர்கள்

இந்நிலத்தில் வரும் வரிகளை வசூல் செய்து கோயில் பண்டாரத்தில் செலுத்த வேண்டும். மன்றாட்டுப்பெற்றவர்களில் இருவர் வெள்ளாளர் பையர் குலத்தினர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழ தேவர்க்குப் பத்தொன்பதாவது வடபரிசாரநாட்டு கங்கைப் பள்ளியிலிருக்கும் சிவப்பிராமண வாச்சிய கோத்திரத்து உடையான் பற்றியானுக்கும் விக்கிரம சோழபட்டனுக்கும் உடையான் சுந்தனுக்கும் உடையான் சிறு சுந்தனுக்கும் உடையான் நாயகனுக்கும் ஆக இவ்வைவர்க்கு இரண்டு மன்றாட்டும் வெள்ளைப்பாடியில் நம்பனுக்கும் கேசன் கேசனான அனுக்க நம்பி இவர்கள் இருவருக்கும் இரண்டு மன்றாட்டும் வெள்ளாளன் பைய்யரில் வரைய நம்பனும் சடையன் மக்களும் புளிய நம்பனும் வடபரிசாரநாட்டுச் சேவூரிலிருக்கும் வெள்ளாளன் பைய்யரில் பொல்லானும் சிறியான் மூப்பனுமாக இவ்வனைவர்க்கும் ஒரு மன்றாட்டும் வெள்ளைப் பாடியிலிருக்கும் பூலுவன் பூலுவனான...ஓரூராழ்மையும் நியாரயன் போமாற்கொரு ஊராழ்மையும் வடபரிசார நாட்டு வெள்ளைப் பாடியான வீரசோழநல்லூர்..நாட்டார்க்குத் தேவதானமாகக் குடுத்தோம் இவ்வூர் இறையும் எலவை உகவை மன்றுபாடு தெண்டங்குற்றம் மற்றும் எப்பேர்ப்பட்டதும் இறுத்துக் கொடுவருவார்களாகவும் இறையானதுமன்றி மன்றத்தார் அவிநாசியாண்டார் கொடுக்கும் இறைப்படி மன்னியூரான்டார் சீபண்டாரத்து கொடுக்குவார்களாக நம் ஓலைப்படி செம்பிலும் வெட்டிக்கொள்வதாக நம் ஓலை கொடுத்தோம்.

233

இடம்	–	கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் கபாலீசுவரர் கோயில்.
காலம்	–	சுந்தரபாண்டியன், சுபானு கார்த்திகை 2, 13 ஆம் நூற்றாண்டு.
செய்தி	–	வெள்ளாளர் பையரில் நடுவன் உடையான் சேவூர் கபாலீ சுவரருக்குச் சந்தியா தீபம் வைக்க பத்துப் பணம் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்குச் செல்லாநின்ற சுபானு வருஷத்துக் கார்த்திகை மாதம் 2 தியதி வடபரிசாரநாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடி நல்லூரில் உடையார் திருக்கபாலீசுவர முடையார்க்கு மேற்படியூரில் வெள்ளாளன் பைய்யரில் நடுவன் உடையானேன் வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு குடுத்த பணம் பத்து...இப்பணம் பத்தும் கை......

234

பொருளந்தை குலம்

இடம்	–	ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காடையூர் காடையீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 1283

செய்தி - காடையூர் வெள்ளாளர் பொருளந்தைகளில் பிள்ளையாரான உடையான் காடையீசுரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு பத்தாவது காங்கைய நாட்டுக் காடவூர் வெள்ளாளன் புரளந்தைகளில் பிள்ளையாரான உடையான் காடவூர் ஆண்டாற்கு ஒடுக்கின அச்சு ஒன்றும் இக்கோயில் காணியுடைய திருஞானசம்பந்தன் உள்ளிட்டோம் கைக்கொண்டு சந்தியா தீபம்...

235

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காடையூர் காடையீசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழ தேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1263

செய்தி - காடையூர் வெள்ளாளர் பொருளந்தைகளில் சோழன் காளி காடையீசுவரருக்கு நிலம் தானமாகக் கொடுத்தார். திருமடைப் பள்ளி, மதில், நிர்மாலியத் தொட்டி செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ்சிறக்க விக்கிரம சோழதேவர்க்கு யாண்டு 8 வது காங்கைய நாட்டுக் காடவூர் வெள்ளாளன் புரளந்தைகளில் சோழன் காளி....விட்ட இடங்களும் திருமடைப்பள்ளியும் மதிலும் நிர்மாலியத் தொட்டியும் செய்வித்தேன்.

236

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காடையூர் காடையீசுவரர் கோயில்

காலம் - வீர சோழ தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1170

செய்தி - காடையூர் வெள்ளாளர் பொருளந்தைகளில் சிலம்பன் முதலியான் காடையீசுவரமுடையார் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழதேவர்க்கு யாண்டு 2 வதிற்கெதிராவது காங்கைய நாட்டுக் காடவூர் வெள்ளாளன் புரளந்தைகளில் சிலம்பன் முதலியான் காடவூர் காடவூரீஸ்வரமுடையாற்கு சந்தியா தீபத்துக்கு ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றுக்கு...நிறைந்த...குடங்கொண்டு கோயில் புகுவான் இத்தன்மம் ரட்சிக்க பன்மாகேஸ்வரர் ரட்சை.

237

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், காடையூர் காடையீசுரர் கோயில்.

காலம் - வீரசோழ தேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1170

செய்தி - காடையூர் வெள்ளாளன் பொருளந்தைகளில் ஆளுடையார் காடையீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரசோழ தேவற்கு யாண்டு உவதுக் கெதிராவது காங்கய நாட்டுக் காடவூரிருக்கும் வெள்ளாளன் புரளந்தைகளில்...ஆளுடையார் காடவூராண்டாருக்குச் சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஒன்றும் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்துக் கணபதி

238

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், வேட்டமங்கலம் புட்பவன முடையார் கோயில்.

காலம் - மன்னனின் எட்டாம் ஆட்சியாண்டு,

செய்தி - கிழங்க நாட்டுப் பகுமாபுரத்து வெள்ளாளன் பொருளந்தைகளில் நாடுகொண்டான் தொண்டைமான் வேட்டமங்கலம் புட்பவன முடையார் கோயில் திருவாசலில் திருநிலைகால் இரண்டும் வைத்தார்.

கல்வெட்டு

...ற்கு யாண்டு 8வது கிழங்க நாட்டு வேட்டமங்கலத்து உடையார் புற்பவனமுடைய நாயனார் திருவாசலில் திருநிலைகால் இரண்டும் படியும் மேற்படி நாட்டுப் பகுமாபுரத்து வெள்ளாளன் புரளந்தைகளில் நாடு கொண்டான் தொண்டைமான் கவுண்டர்.

239

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர் பெயர்.

கல்வெட்டு

பிடாரி ஊரில் வெள்ளாளன் பிரஎந்தைகளில் உலகுடையான் எழுத்து.

240

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், முன்னூர் மலை (மோளபாளையம்) மலைப்பாதையில் விநாயகர் கோயில் அருகே தனிக்கல்.

காலம் - கி.பி. 1758

செய்தி - மலைப்பாதையின் ஓரம் கல்லுக்கட்டு காரியணகவுண்டரால் கட்டப்பட்டது.

கல்வெட்டு

வெகுதானிய வருஷம் தைமி மாதம் 10 தேதி பரமுத்திக் கிராமம் காளிபாளையம் பொருளந்தை கோத்திரக்காரில் மோளக்கவுண்டன் குமாரன் காரியண கவுண்டன் கல்லுக்கட்டு உபயம் யிதின் மேக்கு மகாநோம்பிக்கு அம்பு போடுகிற வீதிக்கும் கிழக்கு

241

மணியன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் சோழீசுவரர் கோயில்

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - முத்தூர் சோழீசுவரர் கோயில் திருப்பணியின் போது மணியர்குல பன்றன் மாராயன் தென்னவன் மூவேந்த வேளான் ஒரு தூண் கொடையாக அளித்துள்ளார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ முத்தூரிலிருக்கும் வெள்ளாளன் மணியர்களில் பன்றன் மாராயனான தென்னவன் மூவேந்தவேளான் இட்ட கால்

242

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பருத்தியூர் தனிக்கல்

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - மணியன் கீழைக் கூடல் புண்ணிய தேவன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

...நக்கீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் நாலுக்கு.....விட்டேன்.. மணியன் கீழைக்கூடல் புண்ணியதேவன்...

243

இடம் - வட ஆர்க்காடு மாவட்டம், செங்கம் பகுதி நடுகல்.

காலம் - கி.பி. 925, வீர நுளம்பன் இரண்டாவது ஆட்சியாண்டு

செய்தி - கால்நடைப் போரின் போது போர் செய்து பவான்னையூர் காமிண்டன் மணியன் மணியனார் கால்நடை மீட்டுப்பட்டாருக்கு எடுத்த நடுகல்.

கல்வெட்டு

ஸ்ரீ சகரையாண்டு எண்ணூற்று நாற்பத்தேழாவது அண்ணையன் வீர நுளம்பனுக்கு யாண்டு ரண்டாவது பவான்னையூர் காமிண்டன் மணியன் மணியனார் தொறு மீட்டுப் பட்டார்.

244

இடம் - நாமக்கல் மாவட்டம், மோகனூர் குமரீசுவரர் கோயில்

காலம் - கி.பி. 1634, பவ ஆவணி 12ஆம் நாள்.

செய்தி - மணியரில் கறுப்ப கவுண்டர் பெண் கங்காத்தாள் குமரீசுவரருக்கு மார்கழித் திரு மஞ்சன அபிஷேகம் செய்தார்.

கல்வெட்டு

ஸ்ரீ மன் கலியுக சகாப்தம் 1556 மேல் செல்லாநின்ற ஆனைகுந்தி வெங்கடராயர் ராஜ்யம் பண்ணி அருளாநின்ற ஸ்ரீ இம்மடி ராமச்சந்திர நாயக்கரய்யனவர்கள் செங்கோல் செலுத்துகின்ற நாளில் பவ வருஷம் ஆவணி மாதம் 12 தேதி வாழவந்தி வெள்ளாளர் மணியரில் பொன்னம்பலக் கவுண்டன் மகன் கறுப்ப கவுண்டன் பெண் கங்காத்தாள் சுவாமி குமரீஸ்வர முடைய தம்பிரானாற்கு சிதம்பர..தில் மார்கழித் திருமஞ்சன அபிஷேகம் பண்ணினமைக்கு தன்மத்தை...காணிஉடைய சிவப்பிராமணன் ஆரித கோத்திரத்தில்...

245

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், நத்தக்காடையூர் செயங்கொண்டீசுவரர் கோயில்.

காலம் - வீரமல்லிகார்ச்சுன ராயர் காலம், பிரபவ வைகாசி 23,கி.பி.1567

செய்தி - காரையூர் வெள்ளாளர் மணியரில் பெற்றான் அல்லாளப் பெருமாள் செயங்கொண்டீசுவரர் கோயில் திருப்பணியின் போது தூண் ஒன்று அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலீசுவரன் ஸ்ரீ வீர மல்லிகார்ச்சுன ராயர்க்குச் செல்லாநின்ற பிரபவ சம்வத்சரத்து வைகாசி மாதம் 23 தேதி காங்கய நாட்டுக் காரையூரில் வெள்ளாளன் மணியகளில் பெற்றான் அல்லாளப் பெருமாள் இட்ட தூண்.

246

இடம்	-	ஈரோடு வட்டம், சத்தியமங்கலம் வட்டம், சதுமுகை கைலாய முடையார் கோயில்
காலம்	-	வீர ராசேந்திர தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1218
செய்தி	-	கீட்பா நாட்டுத் தாவல் வெள்ளாளர் மணியரில் கண்ணன் உய்யவந்தான் ஆலத்துக்கோம்பையான சதுமுகம் கைலாய முடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு பதினொன்று கீட்பா நாட்டில் தாவலிருக்கும் வெள்ளாளன் மணியரில் கண்ணன் உய்யவந்தானேன் ஆலத்துக் கோம்பையாள சதுமுகத்தில் நாயனார் சீ கைலாசமுடையாற்கு சந்தியா தீபம் ஒன்றுக்குக் கழஞ்சேகால் பொன் குடுத்தேன் இக்கோயிற் காணியுடைய சிவப்பிராமணன் காசிபரில் கம்பன் வினையாழ்வியும் மகிழனும் இவ்விருவோம் கைக்கொண்டு சந்திராதித்தவரையில் செல்வதாகக் குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவானாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

247

இடம்	-	ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நம்பியூர் தான்தோன்றீசுவரர் கோயில்.
காலம்	-	வீரபாண்டிய தேவனின் 11ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1276
செய்தி	-	நம்பியூர் வெள்ளாளர் மேல்மணிய குலத்தைச் சேர்ந்தவர் தான்தோன்றீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு 11 வது...ட்டு நம்பி பேரூர் வெள்ளாளன் மேல் மணியரில் இமுப்...யார் தான்தோன்றீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு... சிவப்பிராமணன் பாரத்வாஜ கோத்திரத்தில் ஆண்டான் செல்லயன்.

248

இடம்	-	திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர தேவனின் 8 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1215.

செய்தி - கீரனூரான கொழுமங்கொண்ட சோழ நல்லூர் வெள்ளாளர் கீழ் மணியரில் நீலன் புளியன் திருப்பள்ளியறை நாச்சியாரை ஆடிப் பூரத்தன்று ஊரில் எழுந்தருளச் செய்து பல படையலுக்காக மூலப் பொருள் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு எட்டாவது பொங்கலூர்க்கா நாட்டு கீரனூரான கொழுமங்கொண்ட சோழ நல்லூர் வெள்ளாளன் கீழ்மணியரில் நீலன் புளியனேன் இந்நாயனார் திருவாகீசுவரம் உடையார் திருப்பள்ளியறை நாச்சியாற்கு திரு ஆடிப்பூரம் திருநோன்பு நோற்று ஊரில் எழுந்தருள பல விஞ்சநமுட்பட நான் ஸ்ரீ பண்டாரத்திலே ஒடுக்கின ஆனை அச்சு அமுதன் ஐஞ்சும் இத்தால் வந்த உபயங்கொண்டு எழுந்தருளுவாராக சந்திராதித்தவல் இத்தன்மம் செல்ல கல்வெட்டினேன் நீலன் புளியனேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

249

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர தேவனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 1217.

செய்தி - கீரனூர் ஆன கொழுமங்கொண்ட சோழநல்லூர் வெள்ளாளர் மேல் மணியரில் காவன் உடையான் வாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பத்தாவது பொங்லூர்க்கா நாட்டுக் கீரனூரான கொழுமங்கொண்ட சோழநல்லூர் ஆளுடையார் திருவாகீசுரம் உடையாற்கு சந்தியாதீபம் ஒன்றுக்கு துளை கழஞ்சு பொன் ஒடுக்கினேன் இவ்வூர் வெள்ளாளன் மேல் மணியரில் காவன் உடையானேன் இப்பொன் கைக்கொண்டேன் இக்கோயிலில் காணியுடைய சிவபிராமணன் கவுசிகன் ஆண்ட பிள்ளை அரியவனான அபிமான சோழ பட்டனேன் குடங்கொடு கோயில் புகுவார் இவ்விளக்கு எரிப்பாராக சந்திராதித்தவரை கல்வெட்டிக் குடுத்தேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

250

மலையர் குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில் (பெரியமண்டபம் மூன்றாம் தூண்)

காலம் - வீரராசேந்திர தேவனின் 24 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1231

செய்தி - கவையன்புத்தூர் வெள்ளாளர் மலையர்களில் கேசன் காவனான தமிழவேளான் கோயில் திருப்பணியின்போது நாயகத் தூண் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்து நாலாவது வட பரிசார நாட்டுக் கவையன் புத்தூரிலிருக்கும் வெள்ளாளன் மலையரில் கேசன் காவனான தமிழவேளானேன் ஆளுடையார் காலகாலேசுவரர் கோயில் பெரிய திருமண்டபத்தில் யிந்நாயகத் தூண் தமிழ வேளானேன் என் தன்மம்.

251

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், இடிகரை வில்லீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவரின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1258.

செய்தி - இடிகரை வெள்ளாளர் மலையரில் சோழக் காமிண்டன் மன்றாடி வில்லீசுரமுடையார்க்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவற்கு யாண்டு 3 வது வடபரிசார நாட்டு இடிகரையிலிருக்கும் வெள்ளாளன் மலையரில் சோழக் காமிண்டன் மன்றாடியேன் ஆளுடையார் வில்லீசுவரமுடையாற்கு வைத்த சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு வைத்த பணம் வராகன் 10 இப்பணம் பத்தும் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் காசிப கோத்திரத்து திருநட்டன் அகஸ்தீசுவரம் உடையானான சித்திரமேழி பட்டனேன் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவதாகர் பன்மாகேஸ்வர ரட்சை.

252

இடம் - கோவை மாவட்டம், கோவை நகரம் சங்கமேசுவரர் கோயில்.

காலம் - வீரநாராயண தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1143.

செய்தி - வீர கேரள நல்லூர் வெள்ளாளர் மலையரில் தோளன பிள்ள னானதிருஞானசம்பந்தன் கார்த்திகைக்கு எழுந்தருளு வதற்கும் அன்றைய படையல்களுக்கும் கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரநாராயண தேவற்கு யாண்டு ஆறாவது வீர கேரளநல்லூர் வெள்ளாளன் மலையரில் தோளன் பிள்ளனான திருஞானசம்பந்தனேன் ஆளுடையார் சங்கீசுவரமுடையார்க்குத்

திருக்கார்த்திகைக்கு எழுந்தருளுகைக்கும் அந்றைக்கு அமுது வெஞ்சனாதிகளுக்கும் நான் ஒடுக்கின அச்சு ஒன்றும் சந்திராதித்தவரை நல்லூர் இருக்கின்ற திருஞானசம்பந்தர்

253

மாடை குலம்

இடம்	–	கோவை மாவட்டம், கோவை வட்டம், கோயில்பாளையம் காலகாலேசுவரர் கோயில் (பெரிய மண்டபம் இரண்டாம் தூண்)
காலம்	–	விக்கிரம சோழதேவனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1258
செய்தி	–	வழலையூர் நாட்டுக் கருவலூரிலிருக்கும் வெள்ளாளர் மாடைகளில் அரையன் காவன் கோயில் திருப்பணியின்போது நாயகத்தூண் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு மூன்றாவது வழலையூர் நாட்டுக் கருவலூரிலிருக்கும் வெள்ளாளர் மாடைகளில் அரையன் காவனேன் ஆளுடையார் காலகாலதேவர் கோயில் பெரிய திருமண்டபத்தில் இந்நாயகத்தூண் எந்தன்மம் ஸ்ரீ மாகேஷ்வர ரட்சை.

254

இடம்	–	திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பருத்தியூர் காட்டுக்குள் பாறை.
காலம்	–	வீரராசேந்திர தேவனின் இருபத்தைந்தாவது ஆட்சியாண்டு, கி.பி. 1232.
செய்தி	–	நடுவில் பத்தியூர் வெள்ளாளர் மாடைகளில் முழையன் தேவனான பொன்னம்பலச் சிலசெட்டி நக்கீசுவரமுடையார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தஞ்சாவது பொங்கலூர்க்கா நாட்டு நடுவிற் பத்தியூர் வெள்ளாளன் மாடைகளில் முழையன் தேவனான பொன்னம்பலச் சிலசெட்டியேன் நாயனார் திருநக்கீசுரமுடையாற்கு சந்தியா தீபம் ஒன்றுக்குப் பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் குடுத்தேன் இக்கோயிலுடைய சிவப்பிராமணன் கௌசிக கோத்திரத்து சந்தியா தீப விளக்கு குடங்கொண்டு கோயில் புகுவான் எரிப்பதாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

255

மாப்புள்ளி குலம்

இடம் - கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பெரிய களந்தை ஆதீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவனின் பத்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 1283

செய்தி - களந்தை வெள்ளாளர் மாப்புள்ளிகளில் கோவன் தேவன் ஆன உதைய பாலன் கோயில் திருப்பணியின் போது கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவற்கு யாண்டு பத்தாவது களந்தையிலிருக்கும் வெள்ளாளரில் மாப்புள்ளிகளில் கோவன் தேவனான உதைய பாலன் தன்மம் இத்தாண் பன்மாகேஸ்வர ரட்சை.

256

இடம் - கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன்பூண்டி முருகநாதர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவனின் 12 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1285.

செய்தி - பல்லடம் வெள்ளாளர் மாப்புள்ளிகளில் சோழன் பறையனான தனபாலன் திருமுருகன்பூண்டி ஆளுடைய நாயனார்க்கு நாள்தோறும் நாழியரிசி அமுதுபடிக்குக் கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழதேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு 11வதுக் கெதிராவது புரட்டாதி மாதம் 18 தியதி ஞாயிற்றுக் கிழமை முதல் வாயறைக்கா நாட்டுப் பல்லவிடத்தில் வெள்ளாளன் மாப்புள்ளிகளில் சோழன் பறையனான தனபாலனேன் நாயனார் திருமுருகன்பூண்டி ஆளுடையார்க்கு கோயில் நாயகர்க்கு நாளொன்றுக்கு நாழியரிசி அமுதுபடி செல்வதாக இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணர் காஸ்யப கோத்திரத்து அவிநாசி முருகனான சீகாழியானும் அவிநாசி முருகன் உள்ளிட்டாரும் சாந்தாரைக் காப்பான் திருவேகம்பமுடையானும் இவ்வனைவோங்கள் இவ்வச்சு பத்துக் கொண்டு எங்கள் மக்கமக்கள் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாகேஸ்ரர ரட்சை.

257

முத்தன் குலம்

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியகோட்டை சோழீசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழனின் 20 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1293

செய்தி - அண்ட நாட்டுப் புலரியூரில் வெள்ளாளர் முத்தர்களில் முழையான் வேளானான தமிழதரையன் நிலைகால் கொடையளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு பதினேழாவதுக் கெதிர் மூன்றாவது அண்ட நாட்டுப் புலரியூரில் வெள்ளாளன் முத்தர்களில் முழையன் வேளானான தமிழதரையனேன் திருநிலைகால் என் தன்மம்.

258

மூலன் குலம்

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தம சோழீசுவரமுடையார் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் ஆறாம் ஆட்சியாண்டு, கி.பி. 1271.

செய்தி - ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளர் மூலரில் அவிநாசி முதலியான சோழநாராயணக் காமிண்டன் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு யாண்டு ஆறாவது ஆனி மாத முதலாக வடபரிசார நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து வெள்ளாளன் மூலரில் அவிநாசி முதலியான சோழ நாராயணக் காமிண்டனேன் நாயனார் உத்தம சோழீசுவரம் உடையாற்கு நான் வைத்த தூபதீபத்துக்கு குடுத்த பழஞ்சலாகை அச்சு ஒன்று கைக்கொண்டேன் மேற்படி நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து காணியுடைய சிவப்பிராமணன் காசுவ கோத்திரத்து ஆளவந்தான் அப்பனான அன்னதான நம்பியேன் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவானாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

259

இடம் - கோவை மாவட்டம், திருப்பூர் வட்டம், பெருமாநல்லூர் உத்தம சோழீசுவரமுடையார் கோயில்

காலம் - திருமலை நாயக்கர் காலம், யுவ சித்திரை, கி.பி. 1635

செய்தி - வெள்ளாளர் மூலர்களில் உத்தமன் சந்தை மகமையை அபிஷேகம், நைவேத்தியம், சந்தியாதீபம், நந்தாதீபத்துக்கு அளித்தார்.

கல்வெட்டு

யுவ வருஷம் சித்திரை மாதம் ஸ்ரீமத் ராமப்பய்யனவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான

சிதம்பரநாதபிள்ளை பாற்பத்தியத்தில் வடபரிசார நாட்டு ஒத்தனூரான பெரும்பழனத்து காணியுடைய வெள்ளாளர் மூலர்களில் உத்தமன் மேற்படியூர்ச் சந்தையில் மகமை கண்ட ஆதாயம் சுவாமி உத்தம சோழீசுரமுடையார்க்கு அபிஷேக நெய்வேத்தியம் நந்தாதீபம் சந்தியா தீபத்துக்கும் நித்த தன்மம் பரிபாலனமாக நடத்தின பேரெல்லாம் காசி ராமேசுவரம் சேவித்த பலன் பெறுவாராகவும் இந்த தன்மம் விலக்கினவர்கள் கங்கைக் கரையில் காராம் பசு பிராமணன் மாதா பிதா குரு இவர்கள் அஞ்சு பேரையுங் கொன்ற தோஷத்திலே போக கடவாராகவும்.

260

மேதி குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பெருந்துறை சோழீசுவரர் கோயில்.

காலம் - 18 ஆம் நூற்றாண்டு, ஆனந்த ஆடி 2 ஆம்நாள், கி.பி. 1734.

செய்தி - மேதிகுல சூரியன் செல்லப்பகவுண்டர் சண்டேசுவரரை எழுந்தருளச் செய்தார்.

கல்வெட்டு

ஆனந்த வருஷம் ஆடி மாதம் 20 தேதி சண்டேசர் விக்கிரகம் மேதி குலத்தில் சூரியன் செல்லப்பகவுண்டர் உபயம்.

261

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்.

காலம் - வீர நஞ்சராய உடையார் காலம், கி.பி. 1489-1500.

செய்தி - பூந்துறை நாட்டுச் சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச்சபை உறுப்பினர்.

கல்வெட்டு

பெருந்துறையில் வெள்ளாளன் எருமைகளில் உலகுடையார்.

262

வகையர் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், நம்பியூர் தான்தோன்றீசுவரர் கோயில்.

காலம் - வீர பாண்டிய தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1276.

செய்தி - நம்பியூர் வெள்ளாளர் வகையரில் முக்கண் ஆண்டான் தான்தோன்றீசுவரருக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 11 வது வடபரிசாரநாட்டு நம்பிபேரூரில் வெள்ளாளர் வகையரில் மூக்கன் ஆண்டானேன் ஆளுடையார் தான்தோன்றீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் இரண்டுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் பாரத்வாஜ கோத்திரத்து ஆண்டான் செல்லபட்டனான திருச்சிற்றம்பல நம்பியும் ஆழ்வான்...இவர் பக்கம் உபயம்.

263

இடம்	-	கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அழகப்பெருமாள் கோயில்.
காலம்	-	சுந்தரபாண்டிய தேவனின் 27ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1312.
செய்தி	-	சேவூர் வெள்ளாளர் வகையரில் அடியார்க்கடியான், பெரியகேசன், பிள்ளைச் சிறுவன் ஆண்டான் ஆகியோர் அழகப்பெருமாளுக்குக் கொடையாக அளிக்கத் தங்கள் நிலத்தை விற்றனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தேழாவது ஆவணி மாத முதலாக மதிநாள் பக்கம் பஞ்சமிநாள் மூலங்கிழமை வெள்ளிப்பொழுது இதுநாள் இதுபருவமாக வடபரிசாரநாட்டுச் சேவூரான செம்பியன் கிழானடி நல்லூர் மன்றத்திலிருந்து மன்றறியச் செய்த நன்செய் நிலம் விலைப்பிரமாணமாவது இவ்வூர் வெள்ளாளன் வகையரில் அடியார்க்கடியான் பெரியகேசன் பிள்ளைச் சிறுவன் ஆண்டானும் இவ்வனைவோம் இவ்வூர்த் திருமேற்கோயில் அழகப்பெருமாள் விண்ணகர் எம்பெருமானுக்குத் திருவிடையாட்டமாக இந்நாட்டில் வியாபாரிகளுக்கு நாங்கள் விற்ற நன்செய் நிலம் இவ்வூர் கிழவர்குளம் எங்கள் காணியான இக்குளத்தில் இவ்வூர் நாயனார் திருக்கபாலீஸ்வரமுடைய நாயனார் தேவதானமான பல தடியினால் பன்னீரடிக்கோலால் இருநூற்றெழுபத்தாறு குழி நீங்கலாக இக்குளத்தில் மூன்றிலொன்றாய் வரும் குளமும் நிலமும் மேனோக்கிய மரமும் கீணோக்கிய கிணறும் இக்குளத்தில் மூன்றிலொன்றாய் வரும் சகல பிராப்திகளும் உள்பட விற்றோம் இதுக்கு எம்மிலிசைந்த விலைப்பொருள் அன்றாடு வராகன் புள்ளிக்குளிகைப் பணம் ஆயிரம்..... இப்படிக்கு கொங்காள்வி அருளாளப் பெருமாள் எழுத்து இப்படிக்கு சிறுவன் ஆண்டான் எழுத்து இப்படிக்கு நம்பி சாத்தன் எழுத்து இப்படிக்கு முடிகொண்ட காமிண்டன் பந்த பெருபிள்ளை எழுத்து இப்படிக்கு அடியார்க்கடியான் எழுத்து.

264

இடம்	-	கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், திருமுருகன் பூண்டி முருகநாதர் கோயில்.
காலம்	-	வீர ராசேந்திர தேவனின் 40 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1247.

செய்தி - சேவூர் வெள்ளாளர் வகையரில் தேவன் திருமுருகன்பூண்டி நாயனார்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீர ராசேந்திர தேவர்க்கு யாண்டு 40 ஆவது வைகாசித்திங்கள் வடபரிசார நாட்டில் சேவூரில் வெள்ளாளர் வகையரில் தேவன் தேவனேன் ஆளுடையார் திருமுருகன்பூண்டி நாயனார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு சீபண்டாரத்தில் ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஒன்றுக்கும் சந்திராதித்தவரை செல்லுவதாகக் கல்வெட்டுவித்தேன் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

265

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கீரனூர் வாகீசுர முடையார் கோயில், கருவறை வடபுறச்சுவர்.

காலம் - விக்கிரம சோழதேவனின் 22ஆம் ஆட்சியாண்டு. கி.பி. 1278

செய்தி - கீரனூர் வடக்குக் கோயில் வெள்ளாளர் வகையர்குல சோழன் பிள்ளை என்பவன் கீரனூர் வாகீசுவரர் கோயிலுக்குச் சந்தியா தீப விளக்கு எரிக்க ஒரு துளை கழஞ்சு பொன் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு இருபத்திரண்டாவது பொங்கலூர்க்கா நாட்டு கீரனூர் வடக்குக் கோயில் வெள்ளாளன் வகையரில் சோழன் பிள்ளையேன் ஆளுடையார் திருவாகீசுவரமுடையார்க்கு நான் வைத்த சந்தியா தீபம் விளக்கு ஒன்றுக்கு ஒடுக்கின பொன் துளைக் கழஞ்சு இக்கோயில் காணியுடைய சிவபிராமணன் காசிப கோத்திரத்து சுந்தன் ஆளவந்தான் ஆன சைவ சக்கரவர்த்தியேன் கொண்டு கல்வெட்டிக்குடுத்தேன் குடங்கொடு கோயில் புகுவான் சந்திராதித்தர் வரையில் காப்பான் இது பன்மாகேசுவரர் ரட்சை.

266

வண்ணக்கன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர் சந்திரபுரீசுவரர் கோயில்

காலம் - விக்கிரம சோழதேவனின் 13 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1269

செய்தி - திங்களூர் வெள்ளாளர் வண்ணக்கரில் பெரிய கொற்றன் கொற்றன் சந்திரபுரீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழதேவர்க்கு யாண்டு 13 வது குறுப்பு நாட்டு திங்களூர் வெள்ளாளன் வண்ணக்கரில் பெரிய கொற்றன் கொற்றனேன் சந்திரபுரீசுவரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு

இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் பாரத்வாஜ கோத்திரத்தில் தேவன் பெரியான் சித்திரமேழிப் பட்டனேன் பழஞ்சலாகை அச்சு ஒன்றுங் கைக்கொண்டு சந்திராதித்தவரை திருவிளக்கொன்று செலுத்துவேனாக இவ்வச்சுக் கைக்கொண்டேன் குடங்கொண்டு கோயில் புகுவான் செலுத்துவானாக பன்மாகேஸ்வர ரட்சை.

267

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஆதியூர் ஆதீசுவரர் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் நான்காம் ஆட்சியாண்டு, கி.பி. 1269

செய்தி - ஆதியூர் வெள்ளாளர் வண்ணக்கரில் பிள்ளை யாழ்வான் கரும்பறையன் ஆதீசுவரமுடையார் கோயில் திருப்பணியில் திருநிலைகால் இரண்டும், படி இரண்டும் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லா நின்ற திருநல்லியாண்டு நாலாவது குறுப்பு நாட்டு ஆதவூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் பிள்ளையாழ்வான் கரும்பறையனேன் நாயனார் ஆதீஸ்வரமுடையார் திருக்கோயில் திருநிலைகால் இரண்டு படி இரண்டும் என் தர்மமாகச் செய்வித்தேன் கரும்பறையனேன்.

268

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், வெள்ளோடு சர்வலிங்கேசுவரர் கோயில்.

காலம் - வீரநஞ்சராயர் காலம், கி.பி 1489-1500

செய்தி - பூந்துறை நாட்டுச்சபை 32 உறுப்பினர்களும் கூடி வெள்ளோடு சர்வலிங்கர்க்குத் தைப்பூச விழா எடுக்கக் கொடை கொடுத்தனர். பூந்துறை நாட்டுச் சபை உறுப்பினர்.

கல்வெட்டு

சாத்தனூரில் வெள்ளாளன் வண்ணக்கரில் சிவமாலை

269

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மொஞ்சனூர் சிவாலயம்

காலம் - கோனேரின்மை கொண்டானின் 15 ஆம் ஆட்சியாண்டு, 13 ஆம் நூற்றாண்டு

செய்தி - காங்கய நாட்டு வெள்ளக்கல் வெள்ளாளரில் வண்ணக்கன் அரைசன் சிருச்சியன் சிவாலயத்தில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

திரிபுவனச் சக்கரவர்த்தி கோனேரின்மை கொண்டான் ஆண்டு பதினைந்தாவது மேல்கரை அரையநாட்டு ஆளுடையார் முஞ்சனூர் நாயனார்க்கு காங்கேய அரைசன் சிருச்சியன் பக்கல் யான்கொண்ட பழஞ்சலாகை அச்சு ஒன்று கோயில் காணியுடைய சிவப்பிராமணன் செண்டையுடைய தேவனான செயங்கொண்ட சோழ பட்டன் உள்ளிட்டார் ஒரு சந்தி விளக்கு சந்திராதித்தவரை குடங்கொடு கோயில் புகுவாரெல்லாம் இத்தருமம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

270

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், திங்களூர், சுந்தரபாண்டிய விண்ணகர் அழகப்பெருமாள் கோயில்

காலம் - வீரபாண்டிய தேவனின் 14 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1279

செய்தி - திங்களூர் வெள்ளாளர் வண்ணக்கரில் மூக்கன் பிள்ளையான பிள்ளைப் பெருமாள் நூறு பொன் பெற்றுக் கொண்டு நிலம் அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பதிநாலாவது குறுப்பு நாட்டு திங்களூர் சுந்தர பாண்டிய விண்ணகர நாயனார் அழகப்பெருமாள் கோயில் நம்பிமார் ஸ்ரீ வைஷ்ணவர் திருச்செல்வ வேளைக்காரர்க்கு மேற்படியூர் வெள்ளாளன் வண்ணக்கரில் மூக்கன் பிள்ளையான பிள்ளைப் பெருமாள் தாதனேன் அவன் பேரால் இட்ட பரிசாவது இந்நாயனார் அழகப்பெருமாள் ஸ்ரீ பண்டாரத்தில் இவ்வாட்டை தைமாதம் முதல் தியதியில் நான் கொண்டு கடவ பணம் நூறு இப்பணம் நூறுக்கும் என்னுடைய நிலம் காற்கண கூலி கழனிகளில் மூன்று கழனி அறுதியாவதாகவும் இக்கழனிகளுக்கு எல்லையாவது கிழக்கு கொற்றன் சிறுபிள்ளை கழனிக்கு மேற்கு தெற்கு அவிநாசி யாண்டார் மகன் கழனிக்கு வடக்கும் மேற்கு சிறுப்பிள்ளையின் மக்கள் கழனிக்கு கிழக்கும் வடக்கு எந்தமையன் காளியாண்டார் கழனிக்கும் சிறுப்பிள்ளையார் மக்கள் கழனிக்கும் தெற்கு இந்நான்கெல்லைக் குட்பட்ட கழனிகளும் இக்கழனியால் வருங்கிணறும் அறுதியாக இட்டுக் குடுத்தேன் இக்கழனிகள் பற்றி அனுபவிப்பாராகவும்.

271

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், வெள்ளலூர் தேனீசுவரர் கோயில்.

காலம் - சேரன் கோக்கண்டன் வீரநாராயணனின் ஆட்சியாண்டு 11.

செய்தி - வெளிலூர் நக்கனார் மண்டபத்தில் வண்ணக்கரில் மூர்க்கன் செல்லன் அவன் தம்பி மூர்க்கன் தண்டன் ஆகிய இருவரும்

தங்கள் தந்தையார் ஏறமூர்க்கன் நினைவாகக் கல்தூண் நட்டனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சந்திராதித்ய குலதிலக சார்வ பௌமனாகிய ஸ்ரீ கோக்கண்டன் வீர நாராயணனுக்கு செல்லாநின்ற யாண்டு பதினொன்று இவ்வாண்டு வெளிலூர் தென்னூர் நக்கனார் மண்டபத்து வண்ணக்கன் மூர்க்கஞ் செல்லனும் தம்பி மூர்க்கன் தண்டனும் தமப்பனார் ஏற மூர்க்கனைச் சாத்தி நடுவித்த கல் தூண்.

272

வாணகுலம்

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், அத்தாணி செல்லாண்டி யம்மன் கோயில்

காலம் - கி.பி.1688, பிரபவ வைகாசி 19 ஆம் நாள்

செய்தி - அத்தாணி வெள்ளாளர் வாணகுலரில் சின்னப் பெரியண கவுண்டர் செல்லாண்டியம்மன் கோயில் அர்த்தமண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

பிறபவ வருஷம் வைகாசி மாதம் 19 தேதி ஸ்ரீ மது முதலியார் நல்லுடையப்பர் குமார கட்டி முதலியார் காரியத்துக்குக் கர்த்தரான பெருமாள் தீட்சிதர் செங்கோல் செலுத்தி அருளாநின்ற காலத்தில் வடகரை நாட்டில் அத்தாணியிலிருக்கும் வெள்ளாளரில் வாண குலரில் நல்லாக்கவுண்டன் மகன் சின்னப்பெரியண கவுண்டன் தேவ தேவதேவோத்தமி பத்திரி கொண்டத்து செல்லாண்டியம்மனுக்கு அர்த்த மண்டப முண்டாக்கினேன் அடியேன் சின்னப் பெரியான் விண்ணப்பம்.

273

வாலி குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி நிர்மலீசுவரர் கோயில்

காலம் - வீர ராசேந்திர தேவனின் இரண்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1209

செய்தி - பொன்னிவாடி வெள்ளாளர் வாலிகளில் குருடன் அரையன் நிர்மலீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு இரண்டாவது பொங்கலூர்க்கா நாட்டு நிர்மணியில் வெள்ளாளன் வாலிகளில் குருடன் அரையனேன் இந்நாயனார் நிர்மணீசுர முடையார்க்கு

சந்தியா தீபம் ஒன்றுக்கு அச்சொன்றும் ஒடுக்கினேன் இப்பொருள் கைக் கொண்டோம் காணியுடைய சிவப்பிராமணர் மணியன் வடுகன் உள்ளிட்டோம் சந்திராதித்தவரை எரிப்பாராக பன்மாகேஸ்வரர் ரட்சை.

274

விச்சர் குலம்

இடம் - கோவை மாவட்டம், கோவை வட்டம், பேரூர் திருவான்பட்டியுடையார் கோயில்.

காலம் - விக்கிரம சோழ தேவனின் 21 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1294.

செய்தி - பேரூர் வெள்ளாளர் விச்சர்களில் பட்டி கோவனான மண்டல முதலி தனக்கு இறைவன் அருளால் கிடைத்த மூன்றுமா முக்காணி நிலம் முழுவதையும் திருவான்பட்டியுடையார்க்கு ஸ்ரீ புஷ்ய யாகத்துக்குக் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் விக்கிரமசோழதேவற்கு யாண்டு 21 வது பேரூர் நாட்டுப் பேரூர் வெள்ளாளன் விச்சர்களில் பட்டி கோவனான மண்டல முதலியேன் ஆளுடையார் திருவான்பட்டி உடையார்க்கு ஸ்ரீ புஷ்ய யாகத்துக்கு நான் விட்ட நிலமாவது எனக்கு நாயனார் அருளி காணியாக விண்ணப்பஞ் செய்தருளின இந்நிலன் மூன்று மா முக்காணியும் ஆளுடையார்க்கு நந்தமரானார் செய்யத் திருவுள்ளமாயருளுமென்று நாயனாரைத் திருவடி தொழுது விண்ணப்பஞ்செய்ய நாயனார் நாமுனக்குத் தந்த நிலம் ஆளுடையார்க்குத் தன்மஞ்செய்து செம்பிலும் சிலையிலும் வெட்டிக்குடு வென்று நாயனார் எனக்கு ஸ்ரீ முகப் பிரசாதம் செய்தருள நான் விட்ட நிலமாவது இவ்வூர்ப் பிஞ்ஞகன் வயலில் இவ்வதிக்கு மேற்கு கணவதி வாய்க்காலுக்கு தெற்கு 3 ஆம் சதிரமாம் அதிராஜராஜ மேற் செம்பை வதிக்கு மேற்கு அதிராஜராஜ வாய்க்காலுக்கு வடக்கு..

275

வில்லி குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல் அழகு நாச்சியம்மன் கோயில்.

காலம் - 18 ஆம் நூற்றாண்டு, சித்தாத்ரி ஐப்பசி 21 ஆம் நாள், கி.பி. 1739.

செய்தி - தீபத்தம்பத்தின் வடபுறம் நாட்டாக்கவுண்டர் நல்லதம்பிக் கவுண்டர் உருவச்சிலையின் அருகில் உள்ள கல்வெட்டு

கல்வெட்டு

சித்தாத்திரி வருஷம் அற்பிசை மாதம் 21 தேதி வில்லி கோத்திரத்தில் நாட்டாக்கவுண்டர் நல்லதம்பிக்கவுண்டர்.

276

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல் மாந்தீசுவரர் கோயில்.

காலம் - விசய ஆவணி 2, 16 ஆம் நூற்றாண்டு, கி.பி. 1533.

செய்தி - வில்லிகுலப் பிள்ளன் உமையாண்டார் மாந்தியப்பர்க்கு 4 பொன் கொடை கொடுத்தார்.

கல்வெட்டு

விசைய வருஷம் ஆவணி மாசம் 2 தியதி மாந்தியப்பர்க்கு வில்லி பிள்ளன் உமையாண்டார் குடுத்த பொன் நாலு இப்பொன் நாலும் நாலு தானிகரும் பற்றிக் கொண்டு...

277

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், சின்னதாராபுரம் முனி முத்தீசுவரர் கோயில் கருவறை கிழக்குச் சுவர்.

காலம் - குலோத்துங்க சோழ தேவர் ஆட்சியாண்டு 18, கி.பி. 1167.

செய்தி - வில்லி குல கணிவன் நிலையுடையான் வீர நாராயண தேவர் என்பவர் முனிமுத்தீசுவரருக்கு ஒரு சந்தி விளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழதேவர்க்கு யாண்டு பதினெட்டாவது .....வில்லிகளில் கணிவன் நிலையுடையான் வீர நாராயண...ந்தேவர் முனியர்க்குடை ஈச்வரமுடையார்க்கு நான் ஒரு சந்தி விளக்குக்குப் பண்டாரத்துக்கு ஒடுக்கின பொன் துளை கழஞ்சும் இக்கோயில் சிவபிராமணன் காசுபன் ஆதிச்சன் ஆளுடையான் ஆளவந்த சோழபட்டனும் ஆடவிடங்கப் பட்டனும் நங்கை முனி...னும் ஆண்டபிள்ளை பெருமாளும் இந்நால்வோம் இப்பொன் கொண்டு சந்தி விளக்கொன்று சந்திராதித்தவல் எரிக்கக் கடவோம் இக்கோயிலில் குடமும் குச்சியும் கொண்டு வாயிற்படி கடந்து புகுவான் யாவன் ஒருவன் இவ்விளக்கு எரிப்பானாகவும் இது பன்மாகேஸ்வர ரட்சை.

278

விழியன் குலம்

இடம் - நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், இராசிபுரம் கைலாச நாதர் கோயில்

காலம் - கி.பி1443, சர்வசித்து வருடம்

செய்தி - இராசிபுரத்தில் வெள்ளாளர் விழியர்களில் கரிய பெருமாள் அத்தனூர்க் கிராமத்தை கைலாச நாதருக்குக் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ மன் மகாமண்டலேசுவரன் ஸ்ரீ மேதினிமீசுர கண்டன் கட்டாரி சாளுவ தரணிவராகன் ஸ்ரீ வீரப்பிரதாப ராயர் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற சகாப்தம் 1365 க்கு மேல் செல்லாநின்ற சர்வசித்து சம்வத்சரம் மேஷ ஞாயிற்று புஷ்ய நட்சத்திரம் வியதீபாதமும் தசமியும் கூடின புண்ணிய காலத்தில் இராசிபுர நாட்டில் இராசிபுரத்தில் வெள்ளாளன் வெளியர்களில் கரிய பெருமாளேன் இந்தக் கிராமத்தில் தேவ தேவ மகாதேவ ஸ்ரீ கைலாசநாத தம்பிரானார்க்கு தேவதானமாக ஹிரண்ய தாராபூர்வமாக குடுத்த நிலம் இராசிபுரத்து எல்லையென்றம் பாழிக்கு வடக்கு அலைவாயில் ஊஞ்சமடைக்குக் கிழக்கு கீரனூரில் ஈச்சம் பாழிக்குத் தெற்கு கள்ளமடைக்கு மேற்கு சதுர்சீமையும் உடைத்தான அத்தனூர்க் கிராமம் குடுத்தமைக்கு நிதி நிட்சேப ஜல பாஷான அஷ்டபோக சகிதமாக சந்திராதித்தவரைக்கு நடப்பதாகவும் இந்த தன்மத்தை யாதொருத்தன் அறம் செய்தான் அறங்காத்தான் பாதம் திறம்பாமல் சென்னிமேல் வைத்து.

279

வெண்டுவன் குலம்

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், மொஞ்சனூர் சிவாலயம்

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

செய்தி - உண்மம் வெள்ளாளர் வெண்டுவரில் பெரியான் பிள்ளன் ஆன செயங்கொண்ட சோழக் காமிண்டன் சிவாலயத்தில் திருநிலை கால் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ தென்கரை மணலூரா் நாட்டு உண்மத்தில் வெள்ளாளன் வெண்டுவரில் பெரியான் பிள்ளன் ஆன செயங்கொண்ட சோழக்காமிண்டன் இத்திருநிலைகால் செய்வித்தேன் பன்மாகேஸ்வரர் ரட்சை.

280

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், பழமங்கலம் நத்தக்காடு (இப்போது ஈரோடு கலைமகள் பள்ளி அருங்காட்சியகத்தில் உள்ளது).

காலம் - 11 ஆம் நூற்றாண்டு.

செய்தி - நித்த விநோதம் வெள்ளாளர் வெண்டுவன் அதிருக்குறையான் திசையாயிரத்தைஞ்ஞூற்றுவர்க்கு அடைக்கலம் ஏற்படுத்தினான்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திசையாயிரத்தைஞ்ஞூற்றுவ நாநாதேசியடைக்கலம் கிழங்க நாட்டு நித்த விநோதத்திருந்து வாழும் வெள்ளாளன் வெண்டுவ்வன திருக்குறையான் எடுப்பிச்ச மாநகரம்.

281

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கத்தாங்கண்ணி ஆயிஅம்மன் கோயில்.

காலம் - கி.பி. 1888.

செய்தி - பாப்பம்பாளையம் வெண்டுவகுல அப்பாச்சிக்கவுண்டர் ஆயி அம்மனுக்கு இரண்டு மண்டபம் கட்டினார்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4989 சருவதாரி வருஷம் புரட்டாசி மாதத்தில் பல தர்மத்தால் பாப்பம் பாளையம் காணியாழ வெண்டுவ குல முத்தைய கவுண்டருக்கு சுவிகார புத்திரன் மணியம் அப்பாச்சிக் கவுண்டன் யிந்த இரண்டு மண்டபம் அம்மனுக்குச் செய்து வைத்தது கவில் எழுதினது சதாசிவ முதலியார்.

282

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொல்லன்கோயில் தான்தோன்றீசுவரர் கோயில்

காலம் - கி.பி. 16ஆம் நூற்றாண்டு

செய்தி - வெண்டுவரில் நான்கு கரைக் காணியாளர்கள் தான்தோன்றீ சுவரருக்கு நந்தா விளக்கு ஒன்றும், சந்தியா தீபம் இரண்டும் வைத்தனர். அதற்காக நிலம் கொடையாக அளித்தனர்.

கல்வெட்டு

...வாகவும் வெண்டுவர் நாலுகரையில் காணியான இந்நாயனார் தாந்தோணியேசுரர்.... நந்தா விளக்கு ஒன்றும் சந்தியா தீபம் உடையவர் தாந்தோணியாற்கு சந்தியா தீபம் 2 சுற்று பரிவார.. வடக்கு தொட்டிய மடைக்கு கிழக்கு உசாவூர் எல்லைக்கு தெற்கு எருது கட்டி வாள்த்து பணமும் கால் விளங்க.. இத்தன்மம் சந்திராதித்தவரை நடத்தக்கடவோமாகவும் இந்த தன்மம் நடத்தினவன் காலுத்தூள் எங்கள் தலைமேலின.

283

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொல்லன்கோயில் கந்தசாமி பாளையம் சடையப்பர் கோயில்.

காலம் - கி.பி. 1874, விப மார்கழி 18 ஆம் நாள்.

செய்தி - கொல்லன்கோயில் கந்தசாமிபாளையம் வெண்டுவன் குல நாச்சிமுத்துக் கவுண்டர் கெருட கம்பம் உபயம்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4975 வருஷம் விப வருஷம் மார்கழி மாதம் 18 தேதி கொல்லன் கோயில் கந்தசாமிபாளையம் வெண்டுவ கோத்திரம் ராவுத்தக் கவுண்டன் மகன் குமரசாமிக்கவுண்டன் மகன் நாச்சிமுத்துக் கவுண்டன் துதிகை பூச நட்சத்திரம் கூடிய சுபதினத்தில் கோப்புலி நத்தம் கோப்புலித்துறை சடையப்ப சுவாமிக்கு கெருட கம்பம் உபயம்.

284

இடம் - திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், கொங்கூர் பசுபதீசுவரர் கோயில்.

காலம் - 16ஆம் நூற்றாண்டு.

செய்தி - வெண்டுவர்குலக் குப்பச்சிக் கவுண்டர் இரண்டு திருவிளக்கு பசுபதீசுவரருக்கு வைத்தார்.

கல்வெட்டு

கொங்கூர் பிரமாண்டக் கவுண்டர் சம்பந்தி வெண்டுவர் குல குப்பச்சிக் கவுண்டர் இரண்டு திருவிளக்கு வைத்தார் 12 வள்ளம் நெய் உபயம்.

285

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கத்தாங்கண்ணி ஆயிஅம்மன் கோயில்

காலம் - கி.பி. 1936.

செய்தி - தேவனூர்க் கிராமம் ஆண்டியூர் வெண்டுவ குல கிருஷ்ணசாமிக் கவுண்டர் திருமதிலும், தீர்த்தக்கிணறும் உபயம்.

கல்வெட்டு

சிவமயம் கலி 5038 தாது வருஷம் ஆவணி 27 உடுமலைப் பேட்டை தாலூகா தேவனூர் கிராமம் ஆண்டியூரிலிருக்கும் வெண்டுவ குலம் மலையாண்டியக் கவுண்டர் குமாரர் கிருஷ்ணசாமிக் கவுண்டர் இந்த திருமதிள் நாற்சுவரும் தீர்த்தக்கிணறும் செய்து வைத்தது ஆயி அம்மனுக்கு உபயம் எழுதியது உபாத்தியார் முத்து 1936 சின்னாபோயன்.

286

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கத்தாங்கண்ணி ஆயி அம்மன் கோயில்.

காலம் - 1.2.1937.

செய்தி - தேவனூர் புதூரைச் சேர்ந்த வெண்டுவன் குலத்தார் சேர்ந்து மடம் கட்டினர்.

கல்வெட்டு

சிவமயம் ஸ்ரீமது கலி 5038 தமிழ் தாது வருஷம் தை மாதம் 19 தேதி உடுமலைப்பேட்டைத் தாலூக்கா தேவனூர் கிராமம் புதூரிலிருக்கும் மலையாண்டிக் கவுண்டர் மகன் கந்தசாமிக் கவுண்டர் ரூ 200 ராமசாமிக் கவுண்டர் மகன் திருமூர்த்திக் கவுண்டர் ரூ 100 ராமசாமிக் கவுண்டர் மகன் திருமலைசாமிக் கவுண்டர் ரூ 100 நாச்சிமுத்துக் கவுண்டர் ரூ 100 ஆயிக்கவுண்டர் ரூ 100 மாரப்ப கவுண்டர் மகன் ராமசாமிக் கவுண்டர் ரூ 30 மலையாக்கவுண்டர் மகன் அவணாண்டிக்கவுண்டர் ரூ 15 செம்மாண்டாக் கவுண்டர் மகன் பழனிக்கவுண்டர் ரூ 5 இவர்கள் சேர்ந்து மடம் கட்டி வைத்தது ஆயி அம்மனுக்கு உபயம் வருஷம் 1.2.1937 வெண்டுவ குலம்.

287

இடம் - கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பெரிய திருமங்கலம் அருங்கரை யம்மன் கோயில்.

காலம் - கி.பி. 1856.

செய்தி - வடுகபட்டி வெண்டுவன் குல பழனிமலைக்கவுண்டர் செய்த கட்டிடச் செலவு.

கல்வெட்டு

சாலிவாகன சகாத்தம் 1778 கலியுக சகாத்தம் 4957 வெண்டுவ கோத்திரம் வடுகபட்டி முத்துவேலப்பகவுண்டன் மகன் நல்லண கவுண்டன் மகன் பழனி மலைக்கவுண்டன் ரூபாய் 100

288

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கத்தாங்கண்ணி, ஆயிஅம்மன் கோயில்.

காலம் - கி.பி. 1898.

செய்தி - பாப்பம்பாளையம் மணியம் அப்பாச்சிக்கவுண்டர் அம்மனின் காலை சந்திபூசைக்காக 1 ஏக்கர் நிலம் கொடை அளித்தார்.

கல்வெட்டு

சகாப்தம் சாலி 1820 கலியுக சகாப்தம் 4999 நிகழும் மன்மத வருஷம் ஆடி மாதத்தில் 9 தேதியில் கோயமுத்தூர் ஜில்லா ஈரோடு தாலூக்கா சர்க்கார் கத்தாங்கண்ணிக் கிராமத்திலிருக்கும் ஆயி அம்மன் கோயில் காலசந்தி பூசைக்காக கிராமம் பாப்பம் பாளையத்திலிருக்கும் வெண்டுவ குல

கோத்திரம் காணியாழ செல்லப்ப கவுண்டன் பேரனும் முத்தைய கவுண்டன் மகனுமாகிய மணியம் அப்பாச்சிக்கவுண்டனால் படித்தறமாக வய்க்கப்பட்ட சொத்தின் விபரம் கிராமம் ஆயிகோயில் தோட்டத்தில் வடபுறம் காலை கா.ச. நெ.35 பி. விஸ்தீரணம் கால் வழ்ழத்துக்கு ஒரு ஏக்கர்.

289

வெண்மணி குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுரமுடையார் கோயில்.

காலம் - சுந்தரபாண்டிய தேவனின் 27ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1312

செய்தி - விசயமங்கலத்து வெள்ளாளர் வெண்மணிகளில் துணையன் ஆண்டானான அம்பலப் பெருமாள் திருக்காமக் கோட்டத்து நாச்சியார்க்கு நந்தா விளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இருபத்தேழாவது தைத்திங்கள் முதலாக குறுப்பு நாட்டு விசயமங்கலத்து ஆளுடையார் திருநாகீசுவரமுடையார் திருக்காமக்கோட்டத்து நாச்சியார் ஆளுடைய நாச்சியார்க்கு விசயமங்கலத்து வெள்ளாளன் வெண்மணிகளில் துணையன் ஆண்டானான அம்பலப் பெருமாளேன் வைத்த திரு நந்தா விளக்கு ஒன்றினுக்கு ஒடுக்கின பணம் நூற்று நாற்பதும் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவபிராமணரில் மாடல கோத்திரத்து சிவஞான பண்டிதனும் மாடல கோத்திரம் பிள்ளையாழ்வி வாழவந்தானும் ஆத்திரய கோத்திரம் சங்காதி நம்பி மாணிக்க நாயக பண்டிதனும் இம்மூவரோம் இவ்விளக்கு முட்டில் இரட்டி எரிப்பதாகவும் இது மிக முட்டில் தெண்ட மிறுப்பதாகவும் இது சந்திராதித்தவரை குடங்கொண்டு கோயில் புகுவார் எரிப்பதாகவும் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

290

விலையன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி தலையநல்லூர் பொன்காளியம்மன் கோயில்.

காலம் - 19 ஆம் நூற்றாண்டு, சருவசித்து தை 25 ஆம் நாள், கி.பி. 1887

செய்தி - புகலூர் தலையநல்லூர் விலைய குல கொமரகவுண்டன் பொன்காளியம்மன் கொறட்டு வாசல் ஒரு அங்கணம் செய்தார். செலவு ரூபாய் 200.

கல்வெட்டு

சருவசித்தி வருஷம் தைமாதம் 25 தேதி தலையநல்லூரு வெலைய கோத்திரம் புகலியூரிலேயிருக்கும் சின்னாக் கவுண்டன் மகன் காளியப்ப கவுண்டன் கொமரகவுண்டன் பொன்காளியம்மன் கொறட்டு வாசல் வேலை ஒரு அங்கணத்துக்கு குடுத்தது ரூபாய் 200 பொன்காளியம்மனுக்கு உபயம்.

291

இடம் - ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி தலையநல்லூர் பொன்காளியம்மன் கோயில்.

காலம் - 19 ஆம் நூற்றாண்டு.

செய்தி - திருப்பணி செய்த விலையன், கூறை குலத்தார் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளன.

கல்வெட்டு

அ) விலைய குலம் மயிலம் பெரியணன் சதாசேவை.

ஆ) விலைய குலம் தலையநல்லூர் பொன்காளியம்மனுக்கு உபயம்.

இ) தலையநல்லூர் காணியாளக் கவுண்டர்கள் வெலையன் கூறை தேவ தேவ தேவோத்தமி பென்காளியம்மனுக்குக் கெருப்பக் கிரகம் உபயம்

292

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம் பூண்டி ஓங்காளியம்மன் கோயில்.

காலம் - கி.பி. 1883, சுபானு சித்திரை 14 ஆம் நாள்.

செய்தி - கூத்தம்பூண்டிக் காணியாளர்கள் விலைய கூட்டக் கவுண்டர்கள் அம்மனுக்கு மகாமண்டபம் கட்டினர்.

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4984 இதன்மேல் செல்லாநின்ற சுபானு வருஷம் சித்திரை மாதம் 14தேதி கூத்தம்பூண்டி காணியாளர்களில் வெலய கோத்திரத்துக் கவுண்டர்களால் காளியம்மனுக்கு மகாமண்டபம் உபயம்.

293

இடம் - நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், கூத்தம்பூண்டி புவனேசுவரர் கோயில்.

காலம் - கி.பி. 18 ஆம் நூற்றாண்டு

செய்தி - புவனேசுவரர் கோயில் புறச்சுவர்களில் காணியாளர்கள் உருவச்சிலைகள் அவர்கள் தேவிமாருடன் காணப்படுகின்றன.

கல்வெட்டு

அ) விலைய குலம் கோப்பண கவுண்டரும் தேவியும்

ஆ) விலைய குலம் பிடாரப்பகவுண்டரும் தேவி முத்தாமி கவுண்டிச்சியும்

294

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், பரஞ்சேர்வழி மத்யபுரீசுவரர் கோயில்.

காலம் - விக்கிரம சோழதேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1261.

செய்தி - அஞ்சுகரை நாடு, அடிக்கீழ்த்தளம், பதினெண்பூமி மகேசுவரர் ஆகியோர் பரஞ்சேர்வழி நட்டூரமர்ந்த நாயனாருக்குக் கொடுத்த கொடை கூறப்படுகிறது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்ரமசோழ தேவற்கு யாண்டு நாலாவதிற்கெதிராவது அஞ்சுகரை நாடும் அடிக்கீழ் தளமும் பதினெண் பூமியில் மாகேஸ்வரரும் காங்கய நாட்டுப் பரஞ்சேர் பள்ளியில் நாயனார் நட்டூரமர்ந்தார்க்கிவ்வூரில் மன்றுப் பிச்சை மவுனப் பிச்சை குடுத்தோம் இதுக்கு இவ்வூரில் காவல் ஊரார் ஆண்டொன்றுக்குச் சந்தியா தீபத்துக்கு இரண்டு பணமும் விசுவையன சங்கிரமங்களுக்கு திருவமுது படிக்கு சங்கிரமம் ஒன்றுக்குப் பணம் ஒன்றாகப் பணம் ஐஞ்சும் ஆண்டுவரை தோறும் சந்திராதித்தவரை குடுப்பாராகவும் இத்தன்மம் அழிவு செய்தவன் சிவத்துரோகியுமாய் ஸ்ரீ மாகேஸ்வரரை பத்திரத்தால் கொன்றது குலையாவதாகவும் குத்தின.....வதாகவும் இப்படி ஆஸ்ரயஞ் செய்து இத்தன்மம் இவ்வூர் வெள்ளாளன் வெளையர்களில் பிள்ளன் அத்தாணியான நாற்பத்தெண்ணாயிர வேளானும்...

295

வெள்ளம்பர் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் சோழீசுவரர் கோயில்.

காலம் - குலோத்துங்க சோழதேவனின் 10 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1159.

செய்தி - முத்தூர் வெள்ளாளர் வெள்ளம்பரில் தாமன் சோழீசன் செய்யான் தன்மபாலன் சோழீசுவரருக்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ குலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு பத்தாவது முத்தூர் வெள்ளாளன் வெள்ளம்பரில் தாமன் சோழீசன் செய்யான் தன்மபாலனேன் குலோத்துங்க சோழீசுவரமுடையார்க்கு சந்தியா தீபத்துக்கு அச்சு ஒன்றுங் கைக்கொண்டு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் தேவன் பட்டன் உடையானான குலதீப பட்டனேன் என் மக்க மக்கள் இவ்வச் சொன்றும் கைக்கொண்டு சந்திராதித்த பலம் உள்ள அளவும் எரிப்பதாகவும்.

296

வெள்ளெலி குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், அவிநாசி வட்டம், சேவூர் அழகப்பெருமாள் கோயில்.

காலம் - சுந்தரபாண்டியனின் 20ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1305

செய்தி - சேவூர் வெள்ளாளர் கொம்மையரில் சிறுவன் ஆண்டான் சேவூர் திருமேற்கோயில் அழகப்பெருமாள் விண்ணகர் எம்பெருமான் கோயில் சேனாபதி ஆழ்வார்க்கு நிலம் விற்பனை செய்த கல்வெட்டில் சாட்சிக் கையொப்பம் இட்டவர் வெள்ளாளர் வெள்ளெலிகளில் சொக்கன் சொக்கன் என்பவர்.

கல்வெட்டு

இப்படிக்கு வடபரிசார நாட்டு வெள்ளாளன் வெள்ளெலிகளில் சொக்கன் சொக்கன் எழுத்து.

297

வெள்ளை குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.

காலம் - இராசதிராச வீர சோழனின் ஐந்தாம் ஆட்சியாண்டு, கி.பி. 1123.

செய்தி - காங்கய நாட்டுப் பரஞ்சேர்வழி வெள்ளாளர் வெள்ளைகளில் சிலம்பன் நீலன் மனைக்கிழத்தி சிட்டன் காவி நாகீசுவரருக்குத் திருவிழாவிற்கும், திருஅமுது படிக்கும் நிலம் கொடையாக அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சகரையாண்டு ஆயிரத்து நாற்பத்து நான்கு கோ ராசாதி ராச ஸ்ரீ வீர சோழ தேவர்க்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு அஞ்சாவது குறுப்பு நாட்டு

விசயமங்கலத்து மகாதேவர் சீநாபுரமுடையார்க்கு காங்கய நாட்டுப் பரஞ்சேர்வழி இருந்து வாழும் வெள்ளாளன் வெள்ளைகளில் சிலம்பன் நீலன் மனைக்கிழத்தி சிட்டன் காவியேன் விசயமங்கலத்தில் தென்னூர் நங்கை நீலி கோயிலில் நத்தத்தில் உகாப்பாடி வழிக்குக் கிழக்கு வெள்ளைகள் தோட்டத்துக்கு மேற்கு வடக்கு சாலைத் தாற்றிக்குத் தெற்கு இந்நாற்பால் எல்லைக்கு நடுவுட்பட்ட நிலம் விசையமங்கலத்தில் மாதேவர்க்குத் திருவிழாவுக்கும் திருவமுதுக்கும் குடுத்தேன் சிட்டன் காவியேன் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

298

வேந்தர் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் சோழீசுவரர் கோயில்.

காலம் - குலோத்துங்க சோழ தேவனின் எட்டாம் ஆட்சியாண்டு, கி.பி. 1156.

செய்தி - முத்தூர் வெள்ளாளர் வேந்தரில் சல்லன் புகழ் ராஜகெம்பீரன் - பெயர் மட்டுமே உள்ளது.

கல்வெட்டு

ஸ்ரீகுலோத்துங்க சோழ தேவர்க்கு யாண்டு எட்டாவது காங்கய நாட்டு முத்தூரில் வெள்ளாளன் வேந்தரில் சல்லன் புகழ்... ராஜகெம்பீரன்.

299

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரிய மாணிக்கப் பெருமாள் கோயில்.

காலம் - வீர பாண்டிய தேவனின் 12 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1277.

செய்தி - வடகரை நாடு குறிச்சி வெள்ளாளர் வேந்தரில் வேந்தன் வாமதேவன் சித்திர மேழி விண்ணகர் ஆன கரியமாணிக்கப் பெருமாளுக்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 12 வது ஆவணித்திங்கள் முதலாக வடகரைநாட்டு குறிச்சி வெள்ளாளன் வேந்தர்களில் வேந்தன் வாமதேவனேன் விசயமங்கலத்துச் சித்திரமேழி விண்ணகரம்பெருமான் கருமாணிக்க ஆழ்வார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை அச்சு நாலுங் கைக்கொண்டோம் ஸ்ரீ கோயில் காணி உடைய வைகாநச சூத்திரத்தில் நம்பிமார்களில் கௌசிகன் மலைகினிய நின்றான் பட்டனும் கௌதமன் சொக்கதேவனும் திருப்பெரிய பெருமானும் இம்மூவோம்

குடங்கொண்டு கோயில் புக்கவன் இத்திரு விளக்கு சந்திராதித்தவரை எரிப்பதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் ஸ்ரீ வைஷ்ணவர் ரட்சை.

வெள்ளாளர் படைத்தலைக் கவுண்டர்கள்

குறுப்பு நாட்டு விசயமங்கலம் சூழ்ந்த பகுதியில் 'படைத்தலைக் கவுண்டர்கள்' என்போர் வாழ்ந்து வருகின்றனர். கி.பி. 12ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து 'வெள்ளாளர் படைத்தலைகளில்' என்று குறிக்கப் பெற்ற கல்வெட்டுகள் விசயமங்கலத்தில் கிடைக்கின்றன. விசயமங்கலம் நாகீசுவரர், கரியமாணிக்கப் பெருமாள், சந்திரப்பிரப தீர்த்தங்கரர், விஜயாபுரியம்மன் கோயில்களிலும், ஊத்துக்குளி கதித்தமலை யாண்டவர், தளவாய்பாளையம் விஜயாபுரியம்மன் ஆகிய கோயில்களிலும் திருப்பணிகள் செய்துள்ளனர். இவர்கள் கல்வெட்டில் விசயமங்கலம் 'அத்தாணீசுவரம்' என்ற கோயில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

கொங்கு வேளாளர்களுடைய பதினொரு குலங்கள் கொண்ட குழுவினர் படைத்தலைவராக விளங்கிப் பின்னர் தனி வேளாளராகப் பிரிந்து விட்டனர். இவர்கள் பதினொரு குலங்களை ஐந்து பிரிவாகப் பிரித்து ஐந்து பங்காளிக் கவுண்டர்கள் என்று தங்களைக் குறித்துக் கொள்கின்றனர்.

பொருளந்தை, சாத்தந்தை, மணியன், ஈஞ்சன், பூமன், புள்ளந்தை, மேதி, பயிரன், வாணன், வாணி, சாத்துவாய் ஆகிய பதினொரு குலங்கள் படைத்தலைக் கவுண்டர்களில் உள்ளன. இதைப் பின்வரும் பாடல் விளக்குகிறது.

'' மங்கையொரு பாகர் திருநா கீசரும்
    மால்கரிய மாணிக்கரும்
மகதேவர் சோமீசர் செல்சந்திர நாதரும்
    மகிழ்வுடன் மகிழ்ந்து காக்க

மங்கைநகர் கூடல் கருமாபுரம் காடையூர்
    மன்னவர்கள் பொருளந்தையும்
வானிதனில் அணைகண்ட சாத்தந்தை மேருவும்
    மணியனுடன் ஈஞ்சகுலமும்

துங்கமிகு பூமனும் புள்ளந்தை மேருவும்
    துரைராசர் மேதி குலமும்
துன்மமிகு பயிரனும் வாணன்கேள் வாணியும்
    துரைசாத்து வாயருடனே

இங்கிவர்கள் படைத்தலைவர் பதினொரு குலத்தவர்கள்
    இரவோர்கள் தம்பம் என்ன
எழில்பெற்ற நிலையுற்ற காராளர் ஏராளர்
    இன்னிலம் தனில் வாழ்கவே !

என்பது அப்பாடல்.

300

வெள்ளாளன் படைத்தலை

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - விக்கிரமசோழ தேவரின் 2 ஆவது ஆட்சியாண்டு, கி.பி. 1258

செய்தி - விசையமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் அரையன் திருநங்கன் நாகீசுவரர் கோயிலில் திருநிலைகால் செய்வித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு இரண்டாவது சகரையாண்டு ஆயிரத் தொரு நூற்றெழுபத்தொன்பதில் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் அரையன் திரு நங்கனேன் நிலைகால் செய்வித்தேன்.

301

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்

காலம் - குலோத்துங்க சோழன் ஆட்சியாண்டு 14ஆவது, கி.பி. 1163

செய்தி - விசயமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் மாதேவன் நாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் ஒன்று வைத்தார். (மண்டபம் திருப்பணி செய்யும்போது 1192 ஆம் ஆண்டு பழைய கல்வெட்டு மீண்டும் படி எடுத்து வெட்டப்பபட்டது.)

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரமசோழ தேவர்க்கு யாண்டு ஏழாவது சகரையாண்டு ஆமிரத்தொரு நூற்றெண்பத்தஞ்சு குறுப்பு நாட்டு விசயமங்கலத்து ஆளுடையார் திருநாகீசுவரமுடையார் கோயில் மண்டபமிறக்கித் திருப்பணி செய்யக்கொண்டபடியால் மண்டபஞ் செய்து முன்னாள் வைத்த சந்தியா தீபங்கள் பழங்கல்வெட்டின் படி எடுத்து இம்மண்டபத்தில் வெட்டின படியாவது

குலோத்துங்கசோழ தேவற்கு யாண்டு பதினாலாவது விசைய மங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் மாதேவன் ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின புதுச் சலாகை அச்சு ஒன்று.

302

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர சோழனின் இரண்டாவது ஆட்சியாண்டு, கி.பி. 1209.

செய்தி - விசயமங்கலம் வெள்ளாளர் படைத்தலைகளில் மாணிக்கதேவர் மணிச்சால் உடையான் பொற்காளிபிள்ளை விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இரண்டாவது விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் மாணிக்கதேவன் மணிச்சால் உடையான் பொற்காளிபிள்ளை ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின புதுச்சலாகை அச்சு ஒன்று.

303

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.

காலம் - வீர ராசேந்திர சோழனின் ஆட்சியாண்டு 4, கி.பி. 1211

செய்தி - விசயமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் திருவானைக் காவன் விச்சாதிரன் மனைக்கிழத்தி ஆளுடையாள் நாகீசுவரர் கோயிலில் சந்தியாதீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு நாலாவது விசயமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக்காவன் விச்சாதிரன் மனைக்கிழத்தி ஆளுடையாள் ஆளுடையார் திருநாகீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின பழஞ்சலாகை அச்சு ஒன்று.

304

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.

காலம் - வீரராசேந்திர சோழனின் 30 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1237

செய்தி - விசயமங்கலம் வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக் காவுடைய சொக்கன் விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலுக்கு சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு இருபத்தொன்பதாவதிற்கெதிர் ஆனித்திங்கள் முதலாக குறுப்பு நாட்டில் விசயன்மங்கலத்திலிருக்கும் வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக்காவுடைய சொக்கனேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்கு சந்தியா தீப

விளக்கு.... கோத்திரத்து ஆளவந்த மாணிக்கனும் மாடல கோத்திரத்து அப்பன் அவிநாசியும்... கோத்திரத்து உடையான் அவிநாசியும் உடையான்... கோயில் புகுவார் சந்தியா தீபம் ஒன்று.

305

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் சந்திரப்பிரப தீர்த்தங்கரர் கோயில்.

காலம் - வீர ராசேந்திர சோழனின் நாற்பதாவது ஆட்சியாண்டு, கி.பி. 1247

செய்தி - விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக்கா உடையான் சொக்கன் திருநிலைகால் அளித்தார்.

கல்வெட்டு

....யாண்டு நாற்பதாவது சகரையாண்டு ஆயிரத்தொருநூற்றெழுபத் தொன்பதாவதில் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் திருவானைக்காவுடையான் சொக்கனேன் இத்திருநிலைகால் செய்வித்தேன்.

306

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் 3ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1268

செய்தி - விசையமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் நம்பி மனைக்கிழத்தி பிள்ளையாழ்வி பாவை பிள்ளையம்மை திருநாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு மூன்றாவது மார்கழி மாதம் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் நம்பி மனைக்கிழத்தி பிள்ளையாழ்வி பாவை பிள்ளையம்மையேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகை ஒன்றுங் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் ஆத்திரய கோத்திரத்து ஆளவந்த பிழைபொறுத்தானும் மாடலகோத்திரத்து உடையான் வேதநாயக பட்டனும் குடங்கொண்டு கோயில் புகுவார் சந்திராதித்தவரை செல்வதாக இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

307

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம், நாகீசுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் 5 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1270

செய்தி - விசயமங்கலம் வெள்ளாளர் படைத்தலைகளில் நேரிய மூவேந்த வேளான் அவிநாசி நாகீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு அஞ்சாவது அற்பசித் திங்கள் முதல் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் நேரிய மூவேந்த வேளான் அவிநாசியேன் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்கு சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகையொன்றும் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன் ஆத்ரய கோத்திரத்து ஆளவந்த பிழை பொறுத்தானும் மாடல கோத்திரத்து உடையான் வேத நாயகபட்டனும் இவ்விருவர் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை விளக்கொன்று எரிப்பதாக இத்தன்மம் பன்மாகேஸ்வரர் ரட்சை.

308

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம், நாகீசுவரர்கோயில்.

காலம் - சுந்தரபாண்டியனின் 15ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1300

செய்தி - விசயமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் நம்பி உலகுடையான் விசயமங்கலம் ஆவத்தூர் விக்கிரமசோழீ சுவரர்க்கு நந்தா விளக்கு வைக்க 120 பணம் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்குத் திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு 16வது தை மாதம் குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் நம்பி உலகுடையானேன் விசைமங்கலமான ஆவத்தூரில் நாயனார் விக்ரம சோழீசுவரமுடையாற்கு வைத்த திரு நந்தா விளக்கு ஒன்றினுக்கு ஒடுக்கின பணம் நூற்றிருபதுங் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவபிராமணரில் கௌசிக கோத்திரத்து முதல் உத்தபதி நாயகன் உள்ளிட்டாரும் அகஸ்திய கோத்திரத்து பிறைசூடி அப்பன்...கிரமவித்தன் உள்ளிட்டாரும் மாடல கோத்திரத்து பிள்ளையான் வாழவந்தானும் குடங்கொண்டு கோயில் புகுவான் சந்திராதித்தவரை எரிப்பதாக இது பன்மாகேஸ்வர ரட்சை.

309

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயில்.

காலம் - சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 23 ஆம்ஆட்சியாண்டு, கி.பி. 1308.

செய்தி - விசயமங்கலம் கரியமாணிக்கப்பெருமாள் கோயிலுக்கு விசயமங்

கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் திருவாளி பெரியதேவன் வாணராயன் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 23 குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் திருவாளி பெரிய தேவன் வாணராயனேன் திருமேற்றிசைக் கோயில் சித்திரமேழி விண்ணகர் எம்பெருமான் கருமாணிக்காழ்வார்க்குச் சந்தியா தீப விளக்கு ஒன்றுக்கு இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் காசிப கோத்திரத்து அழகிய மணவாள பட்டன் சிங்கப் பெருமாள் விளக்கு ஒன்றுங் கைக்கொண்டேன் சந்திராதித்தவரை இக்கோமிற் புகுவார் எல்லாம் செலுத்துவதாக இது ஸ்ரீ வைஷ்ணவர் ரட்சை.

310

இடம் – ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் அத்தாணீசுவரர் கோயில்.

காலம் – சுந்தர பாண்டியனின் 28 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1313

செய்தி – விசயமங்கலம் வெள்ளாளர் படைத்தலைகளில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகன் விசயமங்கலம் அத்தாணீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு இருபத்தெட்டாவது மார்கழித்திங்கள் முதலாக குறுப்பு நாட்டு விசயமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகனேன் ஆளுடையார் அத்தாணீசுவரமுடையார்க்கு வைத்த சந்தியா தீபம் ஒன்றுக்கு ஒடுக்கின அச்சு ஸ்ரீயக்கி பழஞ்சலாகையச்சொன்றுங் கைக்கொண்டோம் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் ஆலம்பாய கோத்திரத்து மூல நாயனார் சைவபுரந்தரச் சக்கரவத்தியும் ஆத்ரைய கோத்திரத்து கங்க நாயக பண்டிதனும் குடங்கொடு கோயில் புகுவார் எரிப்பதாக.

311

இடம் – ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயில்

காலம் – சடையவர்மன் சுந்தரபாண்டியனின் 28 ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1313

செய்தி – விசையமங்கலத்து வெள்ளாளர் படைத்தலைகளில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகன் விசயமங்கலம் கரியமாணிக்கப் பெருமாள் கோயிலில் சந்தியா தீப விளக்கு வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடைய பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 28ஆவது குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் விச்சன் சிட்டனான தப்பிலா வாசகனேன் திருமேற்கோயில் சித்திரமேழி விண்ணகரம்பெருமாள் கரியமாணிக் காழ்வார்க்கு சந்தியா தீப விளக்கொன்றுக்கு அச்சு ஒன்றுக்கு பணம் பத்து இட்டேன் கோயிற்காணியுடைய பிராமணன் காசிப கோத்திரத்து அழகிய மணவாளன் வேங்கடமுடையானும் என் தம்பி சிங்கரும் இவ்வச்சு ஒன்றுக்கு பணம் 10 இப்பத்துப் பணமும் கைக்கொண்டோம் இவ்விருவோம் சந்திராதித்தவரை எரிப்போமாக இது வைஷ்ணவர் ரட்சை.

312

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.
காலம்	-	திரிபுவன வீர தேவனின் நான்காம் ஆட்சியாண்டு, கி.பி. 1171.
செய்தி	-	விசயமங்கலம் வெள்ளாளர் படைத்தலைகளில் தேவன் கூத்தப் பெருமாள், தேவன் பராக்கிரமன், நல்லிசையாளன் மகள் அஞ்சாதான் மனைக்கிழத்தி நம்பியம்மை, காங்கயம் வியாபாரி நம்பி திருநாகுடையான் நால்வரும் நாகீசுவரர்க்கு நித்தியப் படிக்குக் கொடை அளித்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவன வீர தேவற்கு யாண்டு நாலாவது குறுப்பு நாட்டு விசையமங்கலத்து வெள்ளாளன் படைத்தலைகளில் தேவன் கூத்தப் பெருமாளும் தேவன் பராக்கிரமனும் அச்சொன்றும் பணம் நாலும் மேற்படியூரில் வெள்ளாளன் படைத்தலைகளில் அஞ்சாதான் மனைக்கிழத்தி நல்லிசையாளன் மகள் நம்பியம்மை ஒடுக்கின அச்சொன்றும் பணம் நாலும் காங்கய நாட்டுக் காங்கயத்திலிருக்கும் வியாபாரி நம்பி திரு நாகுடையான் ஒடுக்கின அச்சொன்றும் பணம் நாலேகாலும் இவ்வூர் ஆளுடையார் திருநாகீஸ்வரமுடையார்க்கு நித்தப்படிக்குக் கறியமுது உரியக் கண்பின் கறியமுதும் இதற்கு வேண்டும் விஞ்சனாதிகளுக்கும் செலுத்துவதாகக் காணியுடைய சிவபிராமணன் ஆத்ரேய கோத்திரத்து சிங்க நாயக பட்டனும்

313

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், தளவாய்பாளையம் விசயாபுரியம்மன் கோயில்
காலம்	-	கி.பி.1877, விக்டோரியா மகாராணி காலம்
செய்தி	-	தளவாய்பாளையம் விசயாபுரியம்மன் கோயில் கருங்கல் திருப்பணி.

கல்வெட்டு

சுபமஸ்து சொஸ்திஸ்ரீ சாலியவாகன சகாப்தம் 1799 கலியுக சகாப்தம் 4978 தாது வருஷம் தை மாதம் ஈரோடு தாலூகா குருப்புநாடு விசயமங்கலம் குரு ஸ்தான மடாதிபதியாகிய கிருபை பொருந்திய கூனம்பட்டி ராசலிங்க மாணிக்கவாசக சுவாமிகள் அவர்களுடைய நாளையில் மகுத்துவம் பொருந்திய இந்தியா சக்கரவர்த்தினியாகிய மகாராணியாரவர்கள் அரசாட்சியில் மேற்படி குருசுவாமியவர்கள் சிஷ்யர்களான குருப்புநாடு விசையமங்கலம் வகையறாக் கிராமங்களின் மிராசுதாரர்களாகிய படைத்தலை வேளாளர் அய்ந்து பங்காளிகளும் அவரைச் சேர்ந்த பதினொரு கோத்திரக்காரர்களிலும் மூன்றாவது பங்கு பொருளந்தை கோத்திரம் தளவாய்பாளையம் கிராமம் சேடபாளையம் வெள்ளைக் கவுண்டர் குமாரர் ரங்கயகவுண்டர் அவர் குமாரர் முத்துக் கிருஷ்ணகவுண்டர் யிவர்கள் தாயாதியாகிய மேற்படி தளவாய்பாளையம் முத்துக்கவுண்டர் மேற்படி கிராமத்தில் விசயாபுரியம்மன் கோயில் முன் செங்கல் மண்டபம் வகையறா கட்டியது சிகஸ்தாயிருந்ததை மேற்படி முத்துக் கிருஷ்ண கவுண்டர் பிரித்து சொந்தத்தில் கல்லினால் கெர்ப்பக்கிரி அர்த்தமண்டபம் கட்டி வைத்து 1877 ஜனவரி மாதம் விசயாபுரி அம்மனுக்கு உபயம்.

314

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் நாகீசுவரர் கோயில்.
காலம்	-	கி.பி. 1869, விக்டோரியா மகாராணி காலம்.
செய்தி	-	விசையமங்கலம் நாகீசுவரர் கோயில் கொறட்டுவாசல் மண்டபம். கருடகம்பத்துக் கொறடு கட்டியது.

கல்வெட்டு

சுபமஸ்து ஸ்வஸ்திஸ்ரீ சாலிவாகன சகாப்தம் 1791 கலியுக சகாப்தம் 4970 விப வருஷம் ஐப்பசி மாதம் குறுப்பு நாடு விசயமங்கலம் வகையறா கிராமங்களில் மிராசுதாரர்கள் அஞ்சு பங்காளிகளும் அவர்கள் அண்ணன் தம்பி மாமன் மைத்துனர் வகையறா பதினொரு கோத்திரத்துக்கும் பட்டக்காரர் பொருளந்தை கோத்திரத்தில் மூணாவது பங்கில் துடுப்பூதி குமாரசாமிக்கவுண்டர் இவர்களுக்குக் குருவாகிய கூனம்பட்டி மாணிக்கவாசகர் மடம் ராசலிங்க மாணிக்கவாசக சுவாமியார் அவர்களுட நாளையில் இந்திய சர்க்கார் மகாராணியாரவர்கள் அரசாட்சியில் யிங்கிலீசு துரைத்தனத்தில் இந்து மத தேவஸ்தான விசாரணைக்கு பெருந்துறைத் தாலூக்காவுக்கு நேமுகமாயிருக்கிற கமிட்டியார்களில் ஒருவராகிய மேற்கண்ட அஞ்சு பங்காளிகளில் நாலாவது பங்கில் சேர்ந்த சாத்தந்தை கோத்திரத்திலும் கம்புளியம்பட்டி நாகப்பகவுண்டர் மகன் சிலம்ப கவுண்டர் மகன் மணியம் சின்ன ரங்கைய கவுண்டர் யிந்த நாகீஸ்வர சாமி கோயில் ஒழுகாப் பந்தி மண்டபங்கள் சிகஸ்தாயி பிரிஞ்சு விழுந்ததை மேல் கண்டபடி மற்ற கமிட்டியார்களில் கிருஷ்ணய்யர் இரணியப்ப அய்யர் சாமய்யர் சீனுவாசய்யர் பெரிய அண்ணா அய்யர் இவர்களை தருவித்து பார்வையிட்டு அவர்கள் சேர்ந்து எழுதிய உத்தரவின்படிக்கி யிந்த இந்து

தேவஸ்தானத்துக்கு தர்மகர்த்தவாக நேமுகமாய் இருக்கிற மேல்கண்ட அஞ்சு பங்காளிகளில் முதலாவது பங்கில் சேர்ந்த சீரங்கனாத கவுண்டர் நாலாவது பங்கில் சேர்ந்த பட்டக்காரக்கவுண்டர் இவர்கள் வசமிருந்த கசர் லாபத் துகையிலும் மேல்கண்ட சின்னரங்கய்ய கவுண்டர் சொந்தத் துகையிலும் சிலவு செய்து அஸ்திபாரங்கண்டு பிரித்துப் புதுசாயிக் கட்டி வச்சு கொறட்டு வாசல் மண்டபமும் கெருட கம்பத்துக் கொறடும் சிகஸ்தாயிருந்ததை துரஸ்து செய்து வைச்சது உபயம் சிவமயம்.

315

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம் விசயாபுரியம்மன் கோயில் கதவு.
காலம்	-	கி.பி. 19 ஆம் நூற்றாண்டு, கி.பி.1895.
செய்தி	-	கம்புளியம்பட்டி நாகப்ப கவுண்டர் விசயமங்கலம் விசயாபுரி அம்மன் கோயிலில் கதவு செய்தார்

கல்வெட்டு

மன்மத வருஷம் ஆனி மாதம் 13 தேதி விசையமங்கலம் விசையாபுரியம்மனுக்கு கம்புளியம்பட்டி நாகப்பகவுண்டர் உபயம்.

316

இடம்	-	ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், விசயமங்கலம், நாகீசுவரர் கோயில்.
காலம்	-	கி.பி. 1883
செய்தி	-	விசயமங்கலம் நாகீசுவரர் கோயிலில் சிலருடைய பொருள் உதவிபெற்று ஒழுகாப்பந்தி மண்டபம், தீர்த்தக்கிணறு, தென்புற மண்டபம், மகாமண்டபம், தட்டோடு இவைகளை கம்புளியம் பட்டி நாகப்ப கவுண்டர் முன்னின்று பழுது பார்த்தார்.

கல்வெட்டு

சொஸ்திக கலியுக சகாப்தம் 4985 இல் செல்லாநின்ற சுபானு வருஷம் சித்திரை மாதம் குருப்புநாடு விஜயமங்கலம் குருஸ்தான மடாதிபராகிய கூனம்பட்டி இராஜலிங்க மாணிக்க சுவாமியார்களுடைய நாளையில் மகத்துவம் தங்கிய இந்தியா சக்கரவர்த்தினியாரவர்கள் அரசாட்சியில் ஈரோடு தாலூக்கா இந்து தேவஸ்தானக் கமிட்டி மெம்பர்களில் இரணியப்ப ஐய்யர் 1 சாம ஐயர் 2 பலசுவாமி ஐயர் 3 சீனிவாச ராமானுஜ ஐயங்கார் 4 மேற்படி குருசுவாமியவர்கள் சிஷ்யர்களான வடபுர மண்டபத்தில் கண்ட சாசனத்தில் கண்ட படைத்தலை கம்புளியம்பட்டி சின்னரங்கய்ய கவுண்டர் குமாரன் நாகப்பகவுண்டர் 5 கைக்கோளபாளையம் பழனிமலைக்கவுண்டர் குமாரன் ராமய கவுண்டர் 6 இவர்கள் அனுமதிப்படிக்கு விஜயமங்கலம் தேவஸ்தான தர்ம

கர்த்தாக்களான மேற்படி வேளாளரில் சரவணக்கவுண்டர் குமாரன் நடுப்பட்டி மு.மணியம் அனுமந்தக் கவுண்டர் 1 மேட்டுப்புதூர் சீரங்ககவுண்டர் குமாரன் ரங்கயகவுண்டர் இவர்கள் வசமிருந்த கசர்ப்பணத்திலும் மேற்படி நாகப்பகவுண்டர் 1 மேற்படியார் சகோதரர்கள் சிலம்பண கவுண்டர் 2 முத்து சாமிக் கவுண்டர் 3 இவர்கள் சொந்தப்பணத்திலும் கோபாலகிருஷ்ண ஐயங்கார் குமாரன் சேஷ அய்யங்கார் 1 காளியப்பகவுண்டன்புதூர் மொசுக்கவுண்டர் மகன் சின்னக்கவுண்டர் 2 மூங்கிற்பாளையம் சின்னராமரெட்டியார் மகன் ரங்க ரெட்டியார் 3 சாமராஜா பாளையம் சின்ன வெங்கட்ட ரெட்டியார் மகன் சின்ன வெங்கிட்ட ரெட்டியார் 4 மேற்படி தேவஸ்தான சிப்பந்திகள் இவர்கள் செய்யலான உதவிப் பணத்திலும் சிலவு செய்து மேற்படி நாகப்பகவுண்டர் முக்கியஸ்தராயிருந்து நாகீஸ்வரசுவாமி சன்னதி கீழ்ப்புறம் ஒழுகாப்பந்தி மண்டபம் சிகஸ்தமாய் பிரிந்து கீழே விழுந்து கிடந்ததையும் தீர்த்தக்கிணறு நடைகிணறாய்ச் சிகஸ்தமாயிருந்ததையும் தென்புற மண்டபமும் மகா மண்டபமும் தட்டோடு சிகஸ்தமாயிருந்ததையும் துரஸ்து செய்து வைத்தது உபயம் எழுதியது வி. ஆணைய்யர் குமாரன் கிருஷ்ண ஐயர் வேலை செய்தது கொளந்தக் கொத்தன் மகன் கருப்பக்கொத்தன் ஒட்டுச் செலவு ரூ 600. 1883 வருஷம் நாகீஸ்பரசுவாமி துணை.

வடகரைக் கவுண்டர்கள்
(நரம்பர்)

கொங்கு வடகரை நாட்டிலும், காஞ்சிக்கோயில் நாட்டிலும் கொங்கு வேளாளர்களில் ஒரு பிரிவினர் வடகரையார், கணவாளர், நரம்பர் என்று அழைக்கப்படுகிறார்கள். வடகரையார் கணவாளர் என்ற பெயர்கள் இலக்கியங்களில் பயின்று வந்துள்ளது.

கலியின் மெலிந்து புகல்கவிக்கு ஈயப் பொருளின்மையால்
புலியின் உழைபுக்குக் கள்வர்கள் பங்குப் பொருள் திரளை
மலிய எடுத்துப் புலவருக்கு ஈந்த வடகரையான்
வலியன் கணவாளன் செட்டிபிள் ளான்கொங்கு மண்டலமே

முழுவார் வணிகர்க்கு நீலி பழிக்கு முதல்வன் என்று
கொழுவால் கழுத்தை ஒடித்தவன் காண்எள்ளுக் கோர்பணிப்பில்
கீழை கணவாள கோத்திரன் நல்லய்யன் கீர்த்தியிலே
வழுவா நெருப்பினில் வீழ்வான் திருக்கொங்கு மண்டலமே

இட்டமான கவிசொலும் புலவருக்கு
இல்லைஎன்று சொலற்கு அஞ்சிக் காட்டில்வாழ்
துட்ட வன்புலித் தூறில் புகுந்துநல்
தூயவன் கணவாள குலத்தினன்
செட்டி பிள்ளையப் பன்தினம் தொண்டுசெய்
தேவி மாமலை மாதொரு பங்குள
கட்டு செஞ்சடை அமர விடங்கனார்
கதித்துவாழ் பாரியூர் எங்கள் ஊரே

என்பன முறையே கார்மேகக் கவிஞர் (98), கம்பநாத சுவாமிகள் (24) கொங்கு மண்டல சதகம், அமரவிடங்கார் குறவஞ்சி வரிகளாகும்.

கணவாளர் என்பது கொங்கு வேளாளர் குலங்களில் ஒன்று. வடகரையார், கணவாளர் என்பது மட்டுமின்றி இப்போது வெள்ளாளர் நரம்பர் என்று குறிக்கப்பெறும் இரண்டு கல்வெட்டுக்கள் அந்தியூரிலும், பெருந்தலையூரிலும் கிடைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. பாரியூர் அமரவிடங்கர் கோயில் இவர்கள் நிர்வாகத்தில் உள்ளது. செட்டிபிள்ளையப்பன் பெயரினால் கோபி செட்டிபாளையம் ஏற்பட்டது என்பர்.

317

நரம்பர்

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பெருந்தலையூர் திரு மகிழ்வன முடையார் கோயில்

காலம் - சுந்தர பாண்டிய தேவனின் 22 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1307

செய்தி - அந்தியூரில் நரம்பர்களில் காமிண்டன் நாட்டுக் காமிண்டன் திரு அர்த்தசாமம் வரை எரிய சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோச்சடையபந்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ எம்மண்டலமுங் கொண்டருளிய சுந்தரபாண்டிய தேவற்கு திருவெழுத்திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு 22 வது சித்திரை மாதம் 21 தேதி வடகரைநாட்டு அந்தியூரில் நரம்பர்களில் காமிண்டன் நாட்டுக் காமிண்டனுக்கு காஞ்சிக்கூவல் நாட்டுப் பெருந்தலையூர் உடையார் திருமகிழ்வனமுடைய நாயனார் கோயில் காணியுடைய சிவபிராமணரில் காஸ்யப கோத்திரத்து பிள்ளை கோவன் வினாயகபட்டனும் இக்கோத்திரத்துப் பெரிய கோவன் பெரிய தேவ நம்பியும் இவ்விருவோம் கல்வெட்டிக் குடுத்த பரிசாவது இன்னாயனார் கோயிலுக்குச் சந்தியா தீபம் ஒரு விளக்கு திருவொத்த சாம அறுதியாக எரியக்கடவதாக நாங்கள் வாங்கின பணம் பன்னிரண்டு இவ்விளக்கு சந்திராதித்தவரை எரியக் கடவதாகவும் இவ்விளக்கும் கொண்டு கோயில் புகுவான் எரிக்கக்கடவன் இது பன்மாகேஸ்வர ரட்சை.

318

இடம் - ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், அந்தியூர் செல்லீசுவரர் கோயில்.

காலம் - வீரபாண்டிய தேவனின் 11 ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1276.

செய்தி - அந்தியூர் நரம்பர்களில் நாட்டுக்காமிண்டன் செல்லீசுவரர் கோயிலில் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ இராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவற்கு

யாண்டு 11வது ஐப்பசி மாதம் வடகரைநாட்டு அந்தியூர் உடையார் செல்லீஸ்வரமுடையநாயனார் கோயில் காணியுடைய சிவப்பிராமணரில் காசிப கோத்திரத்துப் பெரியதேவன் பிள்ளையானும் தேவன் நாயன் ஆன நாற்பத்தெண்ணாயிர நம்பியும் இவ்வூர் நரம்பர்களில் நாட்டுக் காமிண்டன் பக்கல் நாங்கள் சந்தியா தீபத்துக்குப் பற்றின பணம் 10 இப்பணம் பத்துங்கொண்டு சந்திராதித்தவரை இக்கோயில் குடங்கொண்டு கோயில் புகுவான் ஒருத்தன் முட்டாமல் திருவிளக்கு எரித்துப் போதுவதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் இப்படிக்கு பிள்ளையான் எழுத்து நாயன் எழுத்து இது பன்மாகேஸ்வர ரட்சை.

319

வெள்ளாளன் கணவாளர்

இடம் - ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், குன்னத்தூர் லட்சுமி நாராயணப் பெருமாள் கோயில்.

காலம் - போசள மன்னன் வீரவல்லாளன் காலம், ஆங்கிரச, தை மாதம், கி.பி. 1332.

செய்தி - குன்றத்தூர் வெள்ளாளர் கணவாளரில் உடையாண்டான் அழகப்பெருமாள் தாதன் ஆண்டானான காலிங்கராயன் போதிகை அளித்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர்க்குப் பிருத்விராச்சியம் பண்ணி அருளாநின்ற ஆங்கிரச சம்வத்சரத்து தைமாதம் குறுப்பு நாட்டுக் குன்றத்தூரில் வெள்ளாளன் கணவாளரில் உடையாண் டானான அழகப்பெருமாள் தாதன் பிள்ளை ஆண்டானான காலிங்கராயனேன் லெட்சுமி நாராயணப் பெருமாள் கோயிலின் ஸ்தபன மண்டபத்துக் கீழை வடக்கிற்காலில் மேல் போதிகை என்தன்மம்.

320

இடம் - ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், பாரியூர் அமரவிடங்கப் பெருமாள் கோயில்.

காலம் - போசள மன்னன் வீரவல்லாளன் , பிரபவ ஆவணி, கி.பி. 1306

செய்தி - பாரியூர் வெள்ளாளர் கணவாளர்களில் செட்டி பிள்ளையப்பன் அமரவிடங்கப்பெருமாளுக்குச் சந்தியாதீபம் வைத்தார். இத் தீபம் பள்ளியெழுச்சி எனப்பட்டது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் பிரதாபச் சக்கரவத்தி போசள புசபல வீரவல்லாள தேவர் பிருத்விராச்சியம் பண்ணியருளா நின்ற பிரபவ சம்வத்சரத்து ஆவணி மாதம் முதல் காஞ்சிக்கோயில் நாட்டில் பாரியூர் வெள்ளாளன் கணவாளர்களில் செட்டி பிள்ளையப்பனேன் உடையார் அமரவிடங்கப் பெருமாளுக்கு பள்ளியெழுச்சி சந்தியா தீபம்.

321

சாத்தந்தைகுலம், பெரியகுலம்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம் முருங்கத் தொழு அணி அரங்கமலை அணியரங்கப் பெருமாள் கோயில்.

காலம் : கி.பி. 1548, பிங்கள, ஆவணி 15ஆம் நாள்

செய்தி : முருங்கத் தொழு, வெள்ளோடு சாத்தந்தை குலம் பெரியண கவுண்டர், பெரியகுலம் கந்தப்பகவுண்டர், நல்லிக்கவுண்டர், கணக்கு நஞ்சைய பிள்ளை ஆகியோர் அணியரங்கப் பெருமாள்கோயில் கட்டினர்.

கல்வெட்டு

சொஸ்த்திஸ்ரீ கலியுக சகாத்தம் 4649 மேல் செல்லாநின்ற பிங்கள வருஷம் ஆவணி மாதம் 15தியும் ஆதித்தவாரமும் பஞ்சமியும் சோதி நட்சத்திரமும் பெற்ற சுபதினத்தில் பூந்துறை நாட்டு முருங்கத்துளு வெள்ளோட்டு சாத்தந்தை குலத்தில் முதலியாக்கவுண்டன் மகன் பெரியணகவுண்டனும் பெரிய குலத்தில் செல்லப்பகவுண்டன் மகன் பெரியதம்பிக்கவுண்டன் மகன் கந்தப்பகவுண்டன் மகன் வேணுடையாக்கவுண்டன் நல்லாக்கவுண்டன் மகன் கந்தப்பகவுண்டனும் செல்லப்பகவுண்டன் மகன் நல்லிக்கவுண்டனும் கணக்கு..... மகன் நஞ்சயபிள்ளை அணியரங்கப் பெருமாள் கோயில் செய்வித்தோம்.

322

செவந்திகுலம், வெண்டுவன்குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கத்தாங்கண்ணி ஆயி அம்மன் கோயில்.

காலம் : கி.பி. 1898.

செய்தி : செவந்தி குலத்தாரும், வெண்டுவ குலத்தாரும் இணைந்து செய்த கோயில் திருப்பணிகள். மகாமண்டபம், சிங்கக் கொறடு, ரிஷபக் கொறடு, தீபகம்பம், குறிஞ்சி, பொங்கு மடல், நான்கு செங்கல் பூதம் உபயம்.

கல்வெட்டு

கலியுகாதி சகாப்தம் 4999-ல் செல்லாநின்ற மன்மத வருஷம் ஆனி மாதத்தில் குறிஞ்சியில் சிலா சாசனம் எழுதிய விபரம் மகாமண்டபம் சிங்ககொறடு ரிஷபக்கொறடு தீபகம்பம் குறிஞ்சி பொங்குமடம் செங்கல்ப்பூதம் 4 இதுக்குப் பல தர்மக்காரர் முன்னிலையில் இந்த வேலைகள் நடத்தப்பட்டது இதில் சேலம் ஜில்லா இருப்புலி கிராமம் வகையரா

விலேயிருக்கும் ஆதீனக்காரராகிய செவந்தி குலத்தாருடைய ரூபாயும் சேர்ந்திருக்கிறது ஆயி அம்மன் உபயம் வெண்டுவ குல கோத்திர காணியாள ஆதீனக்காரராகிய முத்தைய கவுண்டன் மகன் மணியம் அப்பாச்சிக்கவுண்டன் இது எழுதினது உபாத்தியாயர் முத்து.

323

பாண்டியன், சேரன், பனங்காடை குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கொடுமணல் அத்த னூரம்மன் கோயில் கதவு.

காலம் : 19ஆம் நூற்றாண்டு, நந்தன சித்திரை 15ஆம் நாள்

செய்தி : கொடுமணல் காணியாளர்கள் பாண்டியன், சேரன், பனங்காடை குலத்தார் அத்தனூரம்மன் கோயில் கதவு செய்தார்கள்.

கல்வெட்டு

ஸ்ரீ நந்தன வருஷம் சித்திரை மாதம் 15 தேதி கொடுமணல் காணியாளர்கள் பாண்டியன் சேரன் பனங்காடை உபயம் ஆண்மக் கொல்லன் பழனித்தச்சன்.

324

ஆந்தை, கல்லி, மாடை, வண்ணக்கன் குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம்; மயில்ரங்கம் தீராவினை தீர்த்த தம்பிரானார் கோயில்.

காலம் : கிருஷ்ணதேவராயர் காலம், கி.பி. 1532.

செய்தி : அங்கரங்க வைபோகத்துக்கு வெள்ளக்கல் ஊரவர் பொம்ம நல்லூரில் 250 குழி கொடையளித்த கல்வெட்டில் கையொப்பம்.

கல்வெட்டு

வெள்ளாளர் ஆந்தைகளில் சேரமான் பெருமாள் பிறவியார்
வெள்ளாளர் மாடைகளில் மழவராயர் அவிநாசிமழவராயர்
வெள்ளாளர் வண்ணக்கரில் ஆவுடையார் இராக்கசப் பெருமாள்
வெள்ளாள கல்லிகளில் பூமாண்டார் கல்லி கட்டியார்.

325

ஆதி, அந்துவன், காடை, விலையர், தேவேந்திரன், கீரை குலங்கள்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், கீரனூர் நத்தவிநாயகர் கோயில்

காலம் : கி.பி. 1491, அச்சுதராயர் காலம்.

செய்தி : காணியாளர் ஆறுகுலத்தாரும் சேர்ந்து செல்லப்பிள்ளையார் கோயில் கட்டினர்.

கல்வெட்டு

சாலிவாகன சகாப்தம் 1459க்கு மேல் செல்லாநின்ற ஏவிளம்பி வருஷம் மார்கழி மாதம் 1 தேதிக்கு அச்சுதமகாராயர் காரியத்துக்குக் கடவதான அண்ணரய்யன் அவர்களுக்குச் செல்லாநின்ற காலத்துக் காங்கய நாட்டுக் கீரனூரில் வெள்ளாளன் அந்துவரில் செயராசக் கரிய வாண்டாரும் சிறுராசாவும் மேறப்படியூரில் உள்ளூர்க் கொத்துக்காரன் ராக்கியாரும் ஆதிகளில் நயினார் உலகுடையாரும் அந்துவரில் பிள்ளி ராக்கியாரும் காடர்களில் இராக்கியார் முத்தணனும் விலையரில் ராக்கிய நல்லண்ணரும் தேவந்தைகளில் செல்லன் கூத்தரும் கீரர்களில் முத்தண்ணனும் ஊரிலக்கத்தில் போகமா செல்லப்பிள்ளையாருக்கு ஊருக்கு உபயமிட்டுக் கொள்ளக் கடவோம் என்பவர் தன் பொன் நாலும் இதற்கழிவு செய்தவன் அசுவத்தி கோவத்தி பிரமஹத்தி முதலிய பாவத்திற்கு ஆளாவான் செல்வநாயகி ரட்சிப்பாள்.

வேளாளர்

குலப்பெயர்கள் குறிக்கப்பெறாமல் வெள்ளாளர், காமிண்டர், கவுண்டர், வெள்ளானூர், வெள்ளாநாட்டார், ஊரும் ஊராளிகளும், மூவேந்தவேளான் போன்ற பல பெயர்களில் பல கல்வெட்டுக்கள் உள்ளன. காணியூர்களையும் கோயில் ஆட்சி இவைகளையும் நோக்கும் போது அவை அனைத்தும் கொங்கு வேளாளர் கல்வெட்டுக்களே என்பது தெளிவாகிறது.

326

இடம் : கோவை மாவட்டம், உடுமலை வட்டம், கடத்தூர் கொங்கவிடங் கேசுவரர் கோயில்.

காலம் : கி.பி. 13ஆம் நூற்றாண்டு

செய்தி : கடற்றூர் வெள்ளாளன் நம்பி கரியான் அபிமான சோழன் கொங்க விடங்கீசுரர்க்குச் சந்தியாதீபம் வைத்தார்.

கல்வெட்டு

கடற்றூர் வெள்ளாளன் நம்பி கரியான் அபிமான சோழனேன் ஆளுடையார் கொங்கவிடங்கீஸ்வரமுடையார்க்கு சந்தியாதீப விளக்கு ஒன்றுக்கு நான் பண்டாரத்தில் ஒடுக்கின அச்சு இரண்டும் காரைத்தொழுவில் நிலங்கொண்டது இவ்விளக்கு சந்திராதித்தவரை செல்வதாகவும் பண்டாரத்தே விட்டு செலுத்துவதானமைக்கு...

327

இடம் : சேலம் மாவட்டம், சேலம் சுகவனேசுவரர் கோயில்.

காலம் : சுந்தரபாண்டியனின் 29ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1314.

செய்தி : வெள்ளாளன் வள்ளிமருதூருடையான் நிலையிட்டான் சொக்கி தூண் கொடுத்துள்ளார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 29வது சேலமான இராசாசிரயச் சதுர்வேதி மங்கலத்து வெள்ளாளன் வள்ளிமருதூருடையான் நிலையிட்டான் சொக்கி இக்கால.

328

இடம் : சேலம் மாவட்டம், சேலம் சுகவனேசுரர் கோயில்.

காலம் : சுந்தரபாண்டிய தேவனின் 26ஆம் ஆட்சியாண்டு ; கி.பி. 1311.

செய்தி : வெள்ளாளர் வள்ளிமருதூருடையான் சாத்தன் மானேந்தியகையன் தூண் கொடுத்துள்ளார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ சுந்தரபாண்டிய தேவர்க்கு யாண்டு 26வது சேலமான இராசாசிரய சதுர்வேதி மங்கலத்து வெள்ளாளன் வள்ளிமருதூருடையான் சாத்தன் மானேந்திய கையன் தர்மம் இக்கால.

329

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், வள்ளியறச்சல் மாந்தீசுவரர் கோயில்.

காலம் : வீரபாண்டிய தேவனின் பன்னிரண்டாம் ஆட்சியாண்டு ; கி.பி. 1277.

செய்தி : வள்ளியறச்சல் வேளாளர்கள் மாந்தீசர் அமுதுபடிக்கு மூன்று மாத்திரை நிலம் கொடுத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் மகாராசகேசரிபன்மரான திருபுவனச் சக்கரவர்த்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு பனிரண்டாவது வள்ளியரச்சாலையில் வெள்ளாளர்கள் மாந்தீசுவரம் உடையார்க்கு அமுதுபடிக்கு மூன்று மாத்திரை பூமி கொடுத்தோம் இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

330

இடம் : கரூர் மாவட்டம், கரூர் வட்டம், பழநாகம்பள்ளி மகாபலீசுரர் கோயில்

காலம் : வீரபாண்டியனின் மூன்றாம் ஆட்சியாண்டு, கி.பி. 1268.

செய்தி : பழநாகம்பள்ளி வெள்ளாளர் கிழார்கள் மகாபலீசுவரர்க்கு சந்தியா தீபம் வைத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோப்பரகேசரிபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரபாண்டிய தேவற்கு யாண்டு 3வது வீரசோழமண்டலத்து வெங்காலநாட்டு பழநாகம்பள்ளி வெள்ளாளர் கிழார்கள் .... மாவேலீசுரமுடையார்க்கு சந்தியாதீப விளக்கொன்றுக்கு குடுத்த பொன் கழஞ்சு சந்திராதித்தவரை எரிப்பதாகவும் கோயில் புகுவான் எரிப்பானாகவும்...

331

இடம் : ஈரோடு மாவட்டம். தாராபுரம் வட்டம், கீரனூர் வாகீசுவரர் கோயில்

காலம் : வீரராசேந்திர தேவனின் 13ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1220.

செய்தி : கீரனூர் வெள்ளாளர் துட்டன் செல்லன் பியங்கனான அமரபுயங்கப் பல்லவரையன் திருவாகீசுவரர்க்குச் சந்தியா தீபம் வைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திருபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீவீரராசேந்திர தேவற்குயாண்டு பதின்மூன்றாவது பொங்கலூர்க்கா நாட்டு கீரனூர் ஆன கொழுமங்கொண்ட சோழநல்லூர் வெள்ளாளன் துட்டன் செல்லன் பியங்கனான அமரபுயங்கப் பல்லவரையன் இந்நாயனார் திரு வாகீசுரமுடையாற்கு சந்திவிளக்கு ஒன்றுக்கு துளை களஞ்சு பொன் ஸ்ரீபண்டாரத்தில் ஒடுக்கினேன் அமரபுயங்கப் பல்லவரையனேன் இப்பொன் கைக்கொண்டேன் இக்கோயில் காணியுடைய சிவப்பிராமணன்.

332

இடம் : ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், கொளிஞ்சிவாடி சொக்கநாதர் கோயில்.

காலம் : சுந்தரபாண்டிய தேவனின் 25ஆம் ஆட்சியாண்டு; கி.பி. 1310

செய்தி : இராசராசபுரம் வெள்ளாளர் காவன் மனைக்கிழத்தி சடையம்மை சொக்கநாதர் கோயிலில் திருநிலைகால் இரண்டு அளித்தார்.

கல்வெட்டு

கோவிராசகேசரிபன்மரான திருபுவனச் சக்கரவத்திகள் சிரீசுந்தரபாண்டிய தேவற்கு யாண்டு 25ஆவது இராசராசபுரத்தில் வெள்ளாளன் காவன் மனைக்கிழத்தி சடையம்மையேன் இவ்வாசலில் திருநிலைகால் இரண்டும் என் தன்மம்.

333

இடம் : சேலம் மாவட்டம், சேலம் வட்டம், பொய்மான் கரடு அருகில் பாறை

காலம் : கி.பி. 12ஆம் நூற்றாண்டு

செய்தி : செக்கு அமைத்தவர் பெயர் பொறிக்கப்பட்டுள்ளது.

கல்வெட்டு

இராசிபுரநாட்டில் இராசிபுரத்தில் வெள்ளாளரில் சாத்தனுடையான் பெருமாள் தோமன் குன்றப்பெருமான் தன்மம்.

கல்வெட்டுக்களில் காணப்பெறும் மேலும் சில வெள்ளாளர் பெயர்கள்

* *நம்பிபேரூரில் வெள்ளாளன் முக்கண் ஆண்டான்.*
* *இலத்தூரில் வெள்ளாளன் கொங்கன் கோப்பிள்ளான்.*
* *வெள்ளாதி வெள்ளாளன் நக்கன்.*
* *கஞ்சப்பள்ளியில் வெள்ளாளன் முதலி பொத்தி.*
* *துறவலூர் வெள்ளாளன் சொக்கன்.*
* *கூவலூர் வெள்ளாளன் நக்கன்.*
* *கருப்பூர் வெள்ளாளன் காவனூர் உடையான் மாணிக்கவாசகன்.*
* *அன்னூர் வெள்ளாளன் தேவன் பொத்தி.*
* *அபிமான சோழநல்லூரில் வெள்ளாளன் மருதகாமிண்டன்*
* *மருதூர் வெள்ளாளன் நக்கன்.*
* *கருவலூர் வெள்ளாளன் பட்டியான்.*
* *கூவலூர் வெள்ளாளன் கம்பன்.*

காமிண்டன், கவுண்டன்

கொங்கு வேளாளத் தலைவர்கள் சிலர் ஆளும் தலைவர்களாலும், அரசர்களாலும் காமிண்டன் என்ற சிறப்புப் பட்டப் பெயர் பெற்றனர். ஒருவர் பெற்ற பட்டப் பெயரை அவர்

சந்ததியார்களும் பெயர்களுடன் சேர்த்துக் கொண்டனர். காலப்போக்கில் காமிண்டன் என்ற பெயர் கவுண்டர் என்றாகிச் சமூகம் அனைத்திற்கும் உரியதானது.

மிண்டன் என்றால் வலிமையுடையவன், பலசாலி, திறமை மிகுந்தவன் என்பது பொருள். செப்பேடுகளில் அரசர் புகழ்மொழிகளாக வண்டர்க்கொரு மிண்டன், தண்டுவார் மிண்டன் என்ற தொடர்கள் காணப்படுகின்றன.

நல்லதம்பிக் சர்க்கரையாரைப் பாடிய புலவர் வீரபத்திரக்கவிராயர் புலவர் களுக்குத் தொண்டா கசடர்கட்கு மிண்டா, என அவரை அழைக்கிறார்.

'கா' என்றால் பாதுகாப்பு, காப்பாற்று என்று பொருள். கா, மிண்டன் இரண்டு சொற்களையும் சேர்த்துக் காமிண்டன் என்ற பட்டத்தைச் சிலர் பெற்றனர்.

உத்தமசோழனை வென்ற காரணத்தினால் பாண்டிய மன்னன் பழைய கோட்டைப் பட்டக்காரர் ஒருவருக்கு உத்தமக்காமிண்டன் என்ற பட்டப் பெயரைக் கொடுத்தான் அம்மரபில் வந்த பட்டக்காரர்கள் அனைவரும் அப்பட்டத்தைத் தங்கள் பெயரோடு இணைத்துக் கொண்டனர்.

செல்லகுல இருப்புலிச் சேருமான் உலகப்பகவுண்டருக்கு விசயநகர மன்னன் முதலிக்காமிண்டன் என்று பட்டப் பெயர் கொடுத்தான். அவர்வழிவந்த பருத்திப்பள்ளிச் செல்ல குலத்தார் பலர் முதலிக்காமிண்டன் என்ற பெயரைப் பெற்று விளங்கினர். பிற்காலத்து வந்த பருத்திப்பள்ளி இராமைய கவுண்டரை ஒரு புலவர்,

"முதலிக் காமிண்டன் முழுமதி வதனன்
பருத்திநன் னாடன் பண்பன் சீயாலன்
கருத்துக்கு இசைந்த கல்வி இராமையன் " என்றுபாடுகிறார்.

பிற்காலத்தில் பலர் காமிண்டன் என்ற பெயரைப் பெற்று விளங்கினர். கொங்கு நாட்டில் அப்பட்டம் பெற்றவர்கள் அனைவரும் கொங்கு வேளாளர்களே என்பதில் ஐயமில்லை.

வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு பதினாலாவது மழைநாட்டு வலிபுரத்து வெள்ளாளக் குடிகளில் காமிண்டன் (குன்னமலை)

" விண்ணப்பள்ளியான அபிமான சோழ நல்லூர்
வெள்ளாளன் மருதக் காமிண்டன் " (அவிநாசி)

" இராக்குரல் காமிண்டன் " (பொய்மான்கரடு)

" வடபரிசார நாட்டு நம்பி பேரூரில்
வெள்ளாளன் கழஞ்சியரில் காமிண்டன் " (நம்பியூர்)

" வெள்ளோடு சாத்தந்தைகளில்
வீரசோழக் காமிண்டன்" (வெள்ளோடு)

" நிர்மணியூர் வெள்ளாளரில்
மன்றாடி பாண்டியக் காமிண்டன் " (பொன்னிவாடி)

" கொற்ற மூக்கன் ஏகவீர மாராயன் மகன்
பட்டில் மன்றாடி மூக்கன் சாத்தனான
இராசேந்திர சிங்க காமிண்டன் " (காங்கயம்பாளையம்)

" காமிண்டன் பொன்ன காமிண்டனான
ஊராண்டான் " (மல்லூர்)

" அழகிய சோழக்காமிண்டன் " (சங்கிராமநல்லூர்)

" பராந்தகக்காமிண்டன் " (பனைமரத்துப்பட்டி)

" அரையன் காமிண்டன் விக்கிரமன் " (பேரூர்)

" பெருந்தொழுவில் பெரியபிள்ளை காமிண்டன் " (ஈரோடு)

" காமிண்டனான மாணிக்கச் சதிரன் " (பிடாரியூர்)

" செய்யான் குன்ற காமிண்டன் " (தாரமங்கலம்)

தொடக்கத்தில் அரசனோடும், ஆட்சிஉரிமையோடும் தொடர்புடைய இப்பெயர் எல்லோருக்கும் பொதுப்பெயராகிக் கவுண்டர் என்றாயிற்று.

334

காமிண்டன்

இடம் : ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், பொன்னிவாடி நிர்மலீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர தேவனின் 8ஆம் ஆட்சியாண்டு ; கி.பி. 1215

செய்தி : சிறியாண்டான் காமிண்டன், அதியமான் காமிண்டன் ஆகியோரின் நிலங்கள் எல்லையாகக் கூறப்படுகின்றன.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு நாலாவதுக் கெதிர் நாலாவது பொங்கலூர்க்கா நாட்டில் கீரனூர் முதலிகளில் இயாழ்வல்லான் அட்டாலைச் சொக்கனான அனுத்திரப் பல்லவரையனேன் இராசராசபுரத்தில் வியாபாரி கோதை சொக்கனான வீர சேகரச் சில செட்டி பக்கலும் நிர்மணியில் வெள்ளாளூரார் பக்கலும் இவர்கள் பக்கல் நான் பொருள் கைக்கொண்டு மண்ணற விற்ற நிலமாவது நிர்மணியில் மன்றாடி பாண்டியக் காமிண்டன் நில மன்றாடி பக்கல் நெல்விதைகெல்லையாவது மாணிக்க வேளான் செய்க்கு மேற்கும் சிறியாண்டான் காமிண்டன் செய்க்கு வடக்கும் அதியமான் காமிண்டன் செய்க்குக் கிழக்கும் கன்னியங்கவருக்குத் தெற்கும் இவ்வெல்லைக் குட்பட்ட நிலம் அரை மாவும் வட கீழையில் காணிக்கு எல்லை சோழாண்டார்க்கு வடக்கும் தாளாண்டான் செய்க்குக் கிழக்கு ...

335

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், பிடாரியூர் திருப்பிராட்டியம்மன் கோயில்.

காலம் : வீரராசேந்திர சோழனின் 18ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1225

செய்தி : பிடாரி கோயிலில் தேவரடியார் மாணிக்கச் சதிரன் திருநிலைகால் அமைத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ நன்மங்கலஞ் சிறக்க வீரராஜேந்திர தேவற்கு யாண்டு பதினைஞ் சாவதுக்கெதிர் மூன்றாவது மேல்கரைப் பூழம்பூந்துறைநாட்டு பிடாரியூர் பிடாரி கோயில் திருநிலைகால் செய்வித்தேன் யிவ்வூர் தேவரடியாரில் காமுண்டனான மாணிக்கச்சதிரனேன்.

336

இடம் : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், குன்னமலை திருவேணீசுவரர் கோயில்.

காலம் : வீரராசேந்திர தேவனின் 24ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1231.

கல்வெட்டு

ஸ்வஸ்தி ஸ்ரீ வீரராசேந்திர தேவற்கு யாண்டு 24ஆவது மழைநாட்டு வலிபுரத்து வெள்ளாளக் குடிகளில் காமிண்டன்.

337

கவுண்டர்

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், இருப்புலி தேவராயப் பெருமாள் கோயில்.

காலம் : போசள மன்னர் இராமநாத தேவரின் 14ஆம் ஆட்சியாண்டு, கி.பி.1268.

செய்தி : முத்தண்ணகவுண்டர் திருவிளக்குப் புறமாக 25 குழி மானியம் கொடுத்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ் திஸ்ரீ ராமநாத தேவர்க்கு யாண்டு 14ஆவது இருப்பள்ளியான க்ஷத்திரிய சிகாமணிச் சதுர்வேதி மங்கலத்து தேவப் பெருமாளுக்குத் திருவிளக்குப்புறமாக இவ்வூர் சபையார் தோட்டச் சுற்றில் சபை பொதுவான நிலத்து குழி 25ம் இச்சபையார் பக்கல் பொன்னறக்குடுத்து மண்ணறக் கொண்டு விட்டேன் கௌண்டச்சிப்பல்லியில் கேசிக்கவுண்டன் மகன் முத்தண்ணனேன் இக்குழி இருப்பத்தஞ்சும் விலங்குமவன் ஏழெச்சமறுவான் இது

நோக்குமவன் கால்களிரண்டு என் தலைமேல்.

338

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு நகரம், பள்ளிகொண்ட பெருமாள் கோயில் முன் மண்டபம்.

கல்வெட்டு

லக்காபுரம் முத்துக்குமார கவுண்டன் உபயம்.

339

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், நசியனூர் மதுரகாளியம்மன் கோயில் செம்புவேல்.

எழுத்துப் பொறிப்பு

நசையனூர் அமராவதிக்கவுண்டன் மதுரகாளியம்மனுக்கு பார்பத்தியகுல விசுவ வங்கிஷத்தில் நோட்டம் சித்தலிங்கம்.

340

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், அனுமன்பள்ளி சின்னம்மன் பெரியம்மன் கோயில் கலசத்தில் உள்ளது (செல்லன் அல்லது பண்ணை குலம்)

எழுத்துப் பெறிப்பு

பிறமாதி வருஷம் ஆடி மாதம் 16 தேதி அறச்சலூருக்குச் சேந்த நாச்சிவல சிலேயிருக்கும் அனுமன்பள்ளிக் காணியாளன் வேமாண்டக் கவுண்டன் மகன் செல்லப்ப கவுண்டன் மகன் பூசாரி செல்லப்பன் பலர் உபகாரத்தால் பணம் வாங்கி அனுமன்பள்ளி சின்னாயி பெரியாயி கோயிலுக்கு கலசம் வச்ச உபயம் இந்தப் பணம் கொடுத்தவர்கள் எல்லாம் சுகமாயிருக்கவேணும் சின்னாயி பெரியாயி துணையாயிருந்து லட்சிப்பாள் இந்தத் தர்மத்தை யாராவது விகாதம் பண்ணினால் காசியில் கங்கைக் கரையில் காராம்பசுவைக் கொன்ற தோஷத்தில்.

341

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், சிவகிரி (தலைய நல்லூர்) பொன் காளியம்மன் கோவில் (கூறை அல்லது விலையன்)

நிலைகால்

கல்வெட்டு

அரையநாடு தலையநல்லூரிலேயிருக்கும் அதிகாரன் கொல்லண கவுண்டன் பொன்காளி அம்மனுக்குக் கொடுத்தது 2 காலு உபயம்.

342

வாயிற்படி

ஆங்கிரஸ வருஷம் சித்திரை மாதம் 5 தேதி கொடுமுடிக்கவுண்டன் பொன் காளியம்மனுக்கு உபயம்.

343

கதவு

ஸ்ரீ பிரஜோத்பத்தி வருஷம் தை மாதம் 27 தேதி மஞ்சப்புளிக் கிராமம் ஆத்திக்காட்டு வலசு கருமகவுண்டன் மகன் ராமசாமிக்கவுண்டன் பொங்காளியம்மனுக்கு உபயம்.

344

சிலை

தலைசைப்பதி வேந்தன் விக்கிரமாதித்த காளியண்ண கவுண்டர்.

தூண் :

வடகாளிபாளையம் செங்காளியப்பகவுண்டன் உபயம்.

345

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், காஞ்சிக்கோயில் சீதேவி யம்மன் கோயில் - பூதம்.

கல்வெட்டு

பிலவங்க வருஷம் கார்த்திகை மாதம் 15தேதி செங்காளியண கவுண்டன் மகன் செம்பாகவுண்டன் பண்ணி வச்ச 2 பூதம்.

346

இடம் : ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், மூலனூர் வஞ்சியம்மன் கோயில் ஊஞ்சல் தூண்.

கல்வெட்டு

நள வருஷம் புரட்டாசி மாதம் 7 தேதி சின்ன மண்டபம் கிழக்குப் பண்ணையம் கருப்பண கவுண்டன் மகன் கவுண்டம்ம கவுண்டன் ஐய்வித்து வைத்த ஊஞ்சல்

347

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், சென்னிமலை மலைமேல் மடப்பள்ளி (பொருளந்தை குலம்)

கல்வெட்டு

சென்னிமலை ஆண்டவர் துணை கள்ளிப்பட்டி சின்னக்கவுண்டர் குமாரன் குட்டியாக் கவுண்டர் மடப்பள்ளி உபயம் நள ஐப்பசி 15 தேதி (1-11-1816)

348

இடம் : தாராபுரம் வட்டம், ஊதியூர் மாரியம்மன் கோயிலில் இரு தம்பதியர் உருவச்சிலை (செம்பூத்த குலம்)

கல்வெட்டு

கலியுக சகாற்தம் 4954 பூசாரி சின்னய கவுண்டர் செல்லாயி.

349

இடம் : திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கொங்கூர் உக்கிரகாளியம்மன் கோயில் கல்விளக்குக் கம்பம் (வெண்டுவன் குலம்)

கல்வெட்டு

விரோதிகிறுது வருஷம் பங்குனி மாதம் 27 தேதி கொங்கூரு காணியாளன் கருப்ப கவுண்டன் மகன் கந்தப்பகவுண்டன்.

350

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், கூனவேலம்பட்டி அழியாவிலங்கியம்மன் கோயில்.

கல்வெட்டு

அழியா விலங்கை அம்மைக்கு துலுக்கண கவுண்டரிட தன்மமாகக் குடுத்த நந்தவனப்பயிர் மாமரம் இலுப்பைமரம் தென்னமரம் இதை யாதாமொருவன் அழியப் பண்ணினவன் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போவான்.

351

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், ஏழூர் பண்ணையம்மன் கோயில் சன்னதி முன்பு (பண்ணை அல்லது பொருளந்தை குலம்)

கல்வெட்டு

மாணிக்க கவுண்டன் மகன் மாணிக்கம் உபயம் இப்பலி பீடம்.

352

இடம் : நாமக்கல் ஆஞ்சநேயர் கோயில் தென்புறமாக நடப்பட்டுள்ள துண்டுக்கல்.

கல்வெட்டு

காளயுக்தி வருஷம் அற்பிசை மாதம் 15 தேதியில் மாநிதி பெரியராசாக்கவுண்டன் ஒரு மாற்றமும் மாற்றவரிய அம்மனுக்கு நந்தவானத்துக்குக் குடுத்த (நிலம்)

353

இடம் : நாமக்கல் மாவட்டம். நாமக்கல் வட்டம், கூளிப்பட்டி தனிக்கல் (7.5.1880)

கல்வெட்டு

விக்கிரம வருஷம் சித்திரை மாதம் 27 தேதி நாமக்கல் சீமை சுபை ராமி செட்டியார் அவர்கள் தோகைநத்தம் பெரியாக்கவுண்டர் தண்ணீர்ப்பந்தல் சாவடி தர்மத்துக்கு ராமிபுரத்து ஊருக்குத் தெற்கு தெற்குத்தாறு சருவமானியமாக விட்ட உபயம் யிந்த தர்மத்துக்கு விகாதம் பண்ணினவன் காராம் பசுவைக் கொன்ற தோஷம்...

354

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், ஆத்தூர் கரியராமர் கோயில் முன்கல்.

கல்வெட்டு

விரோதிகிறுது வருஷம் மார்கழி மாதம் 21 கள்ளரையகவுண்டர் மதுரவீரைய கவுண்டர் மேல்மலை நாட்டாரும் கரியபெருமாளுக்கு மேலைச் செம்பறக்கை திருவிடையாட்டம் குடுத்தபடி நஞ்சை புஞ்சை நாற்பாற் கெல்லையும் சகலமும் உள்பட சந்திர சூரியர் வரை அகிதம் பண்ணினவர் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற பாவத்திலே போகக் கடவர்கள்.

355

இடம் : சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், கருங்காடு மாரியம்மன் கோயில் அருகேயுள்ள கல்.

கல்வெட்டு

விய வருஷம் வய்யாசி மாதம் 27 அவ்வையாரம்மை சுவாமியார்க்கு பூதானம் விட்டதுக்கு கள்ளரைய பெரிய கரியப்பகவுண்டர் பட்டத்து கள்ளரைய அண்ணியப்பகவுண்டர் இந்த ரண்டு துரையளும் நாலுகரை நாட்டாரும் கள்ளநாட்டில் சேர்ந்த காநாடு பூதானம் விட்டதுக்கு பூசை நிமத்தியம் பண்ணி வருகுறவர்கள் நயினார்கவுண்ட நம்பியார் உள்பட்டார் இந்த பூதானத்துக்கு யாதாமொருவர் பூசை கட்டளை அபிசேகம் அதிகமா நடத்தி வருகுறவர்கள் ஆயிராரோக்கியமும் அயிஸ்வரியமும் அவர்பின் அவை தொழுது மாதாயம்

பண்ணி வருகுறவர் யிந்த பூதானம் பூமி ஆகவும் சந்திராதித்தர் உள்ளமட்டும் நடத்தவும் இப்படி இதுக்கு யாதாமொருத்தர் ரண்டு நினைச்சவர்கள் கங்கைக் கரையிலே காராம் பசுவைக் கொன்ற தோஷத்திலே போவார்கள்.

356

இடம் : சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், அமரகுந்தி தேவடியாள் கிணற்று அருகே தண்ணீர்த்தொட்டி.

கல்வெட்டு

ஆங்கிரஸ வருஷம் மாசி மாசம் 15 தேதி சாமாகவுண்டன் மகன் மாரயணன் உபயம்.

357

இடம் : திண்டுக்கல் மாவட்டம், பழனிவட்டம், கொண்டரங்கி கீரனூர் வசவேசன் கோயிலுக்கு மேல்புறம் உள்ள கல்.

அரசன் : விசுவநாத நாயக்கர், பிலவ, ஆவணி 9 ஆம் தேதி, கி.பி. 1541.

செய்தி : திருமலை நாயக்கரின் அலுவலர் காளத்தியப்ப முதலியாரும் கொங்கு 24 நாட்டுக் கவுண்டர்களும், காங்கய மன்றாடியாரும், சர்க்கரைக் கவுண்டரும், நாட்டாரும், கவுண்டரும் கொண்டரங்கிக் கீரனூர் சகல வருமானத்தையும் அன்னதான தர்மத்துக்கு அளித்தனர்.

கல்வெட்டு

திருச்சிற்றம்பலம் பிலவ வருஷம் ஆவணி மாதம் 9 தேதி ஸ்ரீமது விசுவநாத நாயக்கரய்யன் காரியத்துக்குக் கர்த்தரான காளத்தியப்பமுதலியாரய்யனவர்களும் இருபத்தி நாலுநாட்டுக் கவுண்டர்களும் காங்கய மன்றாடி சர்க்கரைக்கவுண்டரும் நாட்டாரும் கவுண்டரும் அன்னதானம் செய்வதற்கு தருமசாசனம் குடுத்தபடி தானப்பட்டயம் குடுத்தபடி கொண்டரங்கி கீரனூர் நான்கெல்லைக்குட்பட்ட சகலம் சகல ஆதாயமும் ஆபலிதாதாதாகே கோணமா மல்லிகார்ச்சுன தேவருக்கு பாதப் பாரதி ஆம் ஆசுவா தெதவகரனாகவும் யித்தர்மத்தை சந்திராதித்தவரையில் நடத்திக் குடுத்தோம் அகிதம் பண்ணினவர்கள் கங்கைக்கரையில் கராம்பசுவையும் மாதாபிதா குருக்களை வதை பண்ணின பாவம் கொள்வார்களாகவும்.

358

இடம் : கோவை மாவட்டம், கோவை வட்டம், விளாங்குறிச்சி அருகே சாலை ஓரக்கல்.

காலம் : கி.பி. 1851.

கல்வெட்டு

உ கலியுக சகாத்தம் 4952 பரிதாபி வருஷம் ஆடி மாதம் 14 தேதி வியாழக்கிழமை உத்திராட நட்சத்திரம் விழாங்குறிச்சி சுப்பிரமணியக்கவுண்டன் குமாரன் கறுப்பகவுண்டன் இற்றினகிரி சுப்பிரமணிய சுவாமிக்குத் தீர்த்தச் சுனையும் கன்னிமார் கல்பண்ணை சுமதாங்கி தண்ணீர் பந்தல் உபயம் பழனி ஆண்டவர் தர்மம்.

359

இடம் : கரூர் வட்டம், பரமத்திஅருகில் உள்ள ஆரியூர் செல்லாண்டியம்மன் கோயில்.

கல்வெட்டுக்கள்

வெங்கலக் குதிரை

விப வருஷம் மாசிமாதம் 9-ம் தேதி வாகரை பெத்தாக்கவுண்டன் அத்தப்பன்பட்டி முத்துக்கவுண்டன் கிழாங்குண்டல் பூசாரி கருப்பகவுண்டன் மற்றுமுண்டாகிய செனங்களும் முப்பாட்டுக்காரர்களும் ஆரியூருச் செல்லாயி கருப்பண்ணனுக்கு வெங்கலக் குதிரை உபையம்.

360

அம்மன் தூரி

உ குரோதன வருஷம் ஆனிமாதம்27தேதி குந்தாணிபாளையத்திலிருக்கும் பள்ளிக்கூடத்துக் கவுண்டன் மகன் மாரப்பகவுண்டன் ஆரியூர் செல்லாண்டியம்மனுக்கு தூரிக்கல் உபையம்.

361

கருப்பண்ணசுவாமி உலோக பீடம்

விபவ வருஷம் மார்கழி மாதம் 15தேதி கரூர் கிராமம் வாங்கப்பாளையத் திலிருக்கும் பழனியம்மாள் ஆரியூர் கருப்பணசாமிக்கு உபயம்.

362

நடுகல் அருகில்

ஆனந்த வருஷம் ஆனி மாதம் 4 தேதி இடப்பிச்சநாடு ஆரியூர் செல்லாண்டியம் மனுக்கு வாகரைகவுண்டன்.

363

கோயில் மரக்கதவுகளில்

1. மேழுகம் புளியம்பட்டி மணியம் வஞ்சியப்பகவுண்டன் செல்லியாயிக்கு கதவு உபயம்.

2. பழனிக்கவுண்டன் கறுப்பகவுண்டன்

3. மேழுகம் காதக்கோட்டை கறுப்பகவுண்டன் செல்லாயிக்கு செயிது வைச்ச கதவு உபயம்.

4. சாருவரி வருஷம் சித்திரை மாதம் செல்லாண்டி அம்மன் கதவு உபயம்.

5. துன்முகி வருஷம் ஆவணி மாதம் 7 தேதி சின்னமுத்தாம்பாளையத்தார் செய்து வைத்து கதவு மதுரை வீர சுவாமிக்கு உபயம்.

364

இடம் : ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், கம்புளியம்பட்டி அங்காளம்மன் கோயில்.

கல்வெட்டு

துன்முகி வருஷம் புரட்டாசி மாதம் 23தேதி சாமியார்பாளையத்திலிருக்கும் ஆறுக்கவுண்டர் மகன் சின்னயகவுண்டன் அங்காளம்மனுக்கு தூரி கட்டியது உபயம்.

365

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், ஆறுதொழு பெருமாள்கோயில்.

கல்வெட்டு

சொஸ்திஸ்ரீமன் சாலிவாகன 1675 கலியுகம் 4854 ஸ்ரீமுக வருஷம் மாசி மாதம் 16 தேதி கட்டையரசன்யன் கூட்டம் சுப்பிரமணியகவுண்டன் மகன் ஆறுதொழு பச்சோட்டா வுடையார் வரதராசப் பெருமாள் சன்னதி திருப்பணி உபயம் கந்தப்பகவுண்டன்.

366

வெள்ளானூரரார்

(வேளாளர் ஊர்)

இடம் : கோவை மாவட்டம், அவினாசி வட்டம், அவினாசி அவினாசியப்பர் கோயிலில் கருணாம்பிகை கோயில்.

காலம் : குலோத்துங்க சோழனின் 12ஆம் ஆட்சியாண்டு ; கி.பி. 1160

செய்தி : வடபரிசாரநாட்டு வெள்ளானூரரார் பெருங்கருணாலயச் செல்விக்கு குடிக்காணம் குறுணி நாநாழி கம்பு அமுதுபடி கொடுத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ திரிபுவனச்சக்கரவத்தி ஸ்ரீகுலோத்துங்கசோழ தேவர்க்குத் திருவெழுத்

திட்டுச் செல்லாநின்ற திருநல்லியாண்டு பதினொன்றாவதுக் கெதிராவது வடபரிசார நாட்டு வெள்ளாளரோம் ஆளுடையார் அவினாசி ஆளுடையார் திருக்காமக் கோட்டத்து நாச்சியார் பெருங்கருணைச் செல்வியார்க்கு நாங்கள் அமஞ்சு கொடுத்தபடியாவது ஒரு குடிக்காணம் குறுணி நானாழி கம்பு ஆண்டுவரை தோறும் குடுத்து வருவோமாகவும் இது சந்திராதித்தவரை ஆண்டவர் மகா தேவாண்டார் செய்ய.....

367

வெள்ளாநாட்டார்

(வேளாளர் சபை)

இடம் : கோவை மாவட்டம், அவினாசி வட்டம், அன்னூர் மன்னீசுவரர்கோயில்.

காலம் : வீரபாண்டிய தேவர் ஆண்டு 8 ; கி.பி. 1273.

செய்தி : வடபரிசார நாட்டு வேளாளர் சபையார் வெள்ளைப்பாடியில் வசூலிக்கும் வரிகளை இடங்கை மீகாமன் ஏற்படுத்திய விழாவிற்குக் கொடுத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீர பாண்டிய தேவர்க்கு யாண்டு எட்டாவது வடபரிசார நாட்டில் வெள்ளாநாட்டோம் ஆளுடையார் மன்னியூர் ஆளுடையார் தேவதானமாக வெள்ளைப்பாடியான வீரபத்திரன் தளத்தில் பிராமணக்குடி வெள்ளான்குடி உள்ளிட்ட ஓட்டிறைக்கும் இக்குடிகளில் நாங்கள் வரி கொள்ளும் ஆண்டு மாறி எலவை ஓட்டச்சு திருமுன் தேவை மற்றும் எப்பேர்ப் பட்டனவும் கன்னன் இடங்கை மீகாமன் திருநாளுக்கு உதகம் பண்ணிக்குடுத்தோம் வடபரிசார நாட்டில் வெள்ளாநாட்டோம் இது சந்திராதித்தவரை செல்வதாக.

வெள்ளாநாட்டார் - பூலுவ நாட்டார்

(வேளாளர் சபை, பூலுவ வேட்டுவர் சபை இரண்டு சபைகளும் இணைந்து கொடுத்த கொடை)

368

இடம் : கோவை மாவட்டம், அவினாசி வட்டம், சேவூர் அழகப்பெருமாள் கோயில்

காலம் : வீரபாண்டியனின் 15ஆம் ஆட்சியாண்டு, கி.பி. 1280

செய்தி : சேவூர் வெள்ளா நாட்டாரும், பூலுவ நாட்டாரும் அழகப்பெருமாளுக்கு அமுதுபடி உள்ளிட்ட வெஞ்சனங்களுக்கு காரையப்பாடி என்ற ஊரைக் கொடையாக அளித்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோவிராசகேசரி பன்மரான திரிபுவனச் சக்கரவத்திகள் ஸ்ரீ வீரபாண்டிய தேவர்க்கு யாண்டு 15 ஆண்டு வடபரிசார நாட்டுச் சேவூரான செம்பியன் கிழாண்டிநல்லூர் நாயனார் அழகப்பெருமாளான சுந்தரபாண்டிய விண்ணகர எம்பெருமாள் கோயில் நம்பிமார்க்கும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கும் இந்நாட்டு வெள்ளா நாட்டோமும் பூலுவ நாட்டோமும் பிடிபாடு குடுத்த பரிசாவது இன்னாயனாற்கு அமுதுபடி உள்ளிட்ட வெஞ்சனங்களுக்கு திருவிடையாட்ட இறையிலியாக நாங்கள் நீர் வார்த்துக் குடுத்த காரையப்பாடி நான்கெல்லைக்கு உட்பட்ட நிலமும் நஞ்சை புஞ்சை கிணறு தோட்டம் எப்பேர்ப்பட்ட நிலமும் 15 ஆவது முதல் குடியேற்றிக் கொள்ளவும் கல்லிலும் செம்பிலும் வெட்டிக் கொள்வாராகவும் நாட்டவர் சொல்லிப் பணிக்க... இப்படிக்கு நாட்டுக் கணக்கு மன்னியூராண்டான் எழுத்து.

369

ஊரும் ஊராளிகளும்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், தலைய நல்லூர் நக்கீசுவர முடையார் கோயில்.

காலம் : வீரவல்லாளதேவர், குரோதன ஆண்டு, கி.பி. 1325.

செய்தி : தலைய நல்லூர் ஊரும், ஊராளிகளும் நக்கீசுவரருக்குக் குளம் கொடையாகத் கொடுத்தனர்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர்க்குச் செல்லாநின்ற குரோதன சம்வத்சரத்து அய்ப்பசி மாதம் தலையநல்லூர் ஊரும் ஊராளிகளோம் திரு நக்கீஸ்வரமுடையார்க்கு குளம் தேவதானமாகக் குடுத்தபடியாவது அமுதுபடி சாத்துப்படி பூச்சுப்படி மற்றும் திருப்பணிக்கு உடலாக முற்றூட்டு அனுபவிப்பதாகச் சந்திராதித்தர் வரை செல்வதாகக் கல்வெட்டிக் குடுத்தோம் இது காத்தான் பாதம் என் தலைமேலின இது பன்மாகேஸ்வரர் ரட்சை.

370

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், அகிலாண்டபுரம் அகத்தீசுவரர் கோயில்.

காலம் : வீரசாயண உடையார் காலம், துந்துபி, கார்த்திகை 15

செய்தி : இரவுக்கால அமுதுபடிக்கு மாதம் 1 பணம் கொடை.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீமன் மகாமண்டலீசுவரன் அரியராய விபாடன் பாஷைக்குத் தப்புவராய கண்டன் ஸ்ரீ வீரசாயண உடையார்க்குச் செல்லாநின்ற துந்துபி வருஷத்து கார்த்திகை மாதம் 15

தேதி காங்கயத்தில் ஊரும் ஊராளிகளோம் எங்களூர் ஆளுடைய நயினார் திரு அகத்தீசுவர முடையார்க்கு இராக்காலத்துக்கு நெல் அமுதுபடிக்கு மாதத்தொருபணம் நடத்தக் கடவோ மாகவும் இதல்ல என்றவன் ஏழேழு சென்னமும் நரகத்துக்கு நாற்றங்கால் ஆவான்.

371

மூவேந்த வேளான்

இடம் : தாராபுரம் வட்டம், கோனாபுரம் சுந்தரபாண்டிய விண்ணகரம்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ விக்கிரம சோழ தேவர்க்கு யாண்டு 20வது சிவபாதசேகர மூவேந்தவேளான் இட்ட உத்தரம்.

372

கொங்கு நாட்டுவேளாள கவுண்டர்

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், குருசாமிபாளையம் குஞ்சாம்பாறை.

காலம் : 14-11-1759.

செய்தி : போத்தாங்குறிச்சி இராசியப்பர்க்கு இராசிபுர நாட்டார் வேலப்ப கவுண்டர், துலுக்கணகவுண்டர் ஆகிய நாட்டு வேளாளகவுண்டர்கள் கொடையளித்தனர்.

கல்வெட்டு

வெகுதானிய வருஷம் தை மாதம் 15 தேதி வேலப்பகவுண்டர் துலுக்கண்ண கவுண்டர் ராசிபுரநாட்டில் போத்தாங்குறிச்சி இராசியப்பர்க்கு குஞ்சிலிக் காட்டில் கொல்லையை பூசைக் கட்டளைக்கு விட்டது அறு பொன் கொல்லையும் முன்னாள் கொல்லையிரு...ணமுடி பத்துப்பணமும் ஆக ஒன்பது பொன் மானியம் இந்த புண்ணியத்தை குறைவற நிறைவேற்றின பேர்க்கு மோட்சமுண்டாம் இதுக்கு யாதாம் ஒருவன் விக்கினம் பண்ணினால் கெங்கைக் கரையிலே காராம்பசுவைக் கொன்ற தோஷத்திலே போவான் இப்படி எழுதின்மைக்கு இராசிபுர நாட்டுக் கணக்கு சேனாபதி குமாரன் பெற்றியப்பன் எழுத்து.

373

இடம் : நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், திருச்செங்கோடு மலைவேலவர் கோயில்.

காலம் : கிருட்டிண தேவராயர் : கி.பி. 1522.

செய்தி : அர்த்தநாரீசுவரருக்குக் கொடியேற்றித் தெப்பத்திருநாள் நடத்த விசயநகர அலுவலர் திரியம்பக உடையார் கொடுத்த கொடை. நாட்டாண்மைக்காரக் கவுண்டர்கள் என்று நாட்டுவேளாள கவுண்டர்கள் குறிக்கப்பெறுகின்றனர்.

கல்வெட்டு

கலியுகாதி சாலிவாகன சகாப்தம் 1444ல் விஜயநகரம் ஸ்ரீ கிருஷ்ண தேவமகாராயர் கொங்கான வீரசோழமண்டலத்துக் குன்றத்தூர் துர்க்கத்தைச் சூழ்ந்த பனிரண்டு பற்றுத் திரியம்பக உடையார் கீழ்க்கரைப் பூந்துறைநாட்டின் ஸ்ரீ அர்த்தநாரீசுவரமுடைய தம்பிரானார்க்கு உத்திராட நட்சத்திரத்தில் துவஜாரோகணமும் ரேவதி நட்சத்திரத்தில் தெப்பத் திருநாள் நடத்தத் தக்கதாக சந்தையிலுண்டான சுங்கம் தரகு மகமை முதலியவைகளைத் தாரைவார்த்துக் கொடுத்ததாக... இந்த தர்மத்தைக் குன்றத்தூர் துர்க்கத்துக்கு வந்த அரசுகளும் இத்தானத்துக்கு வந்த அதிகாரிகளும் இந்நாட்டாண்மைக்காரக் கவுண்டர்களும் நடத்தி வைக்க...

374

இடம் : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் வட்டம், ஏழூர் பொன்காளியம்மன் கோயில்.

காலம் : கி.பி. 1753.

செய்தி : ஏழூர் நாட்டுக்கவுண்டர் பொன்காளியம்மன் கோயில் கட்டினார்

கல்வெட்டு

1. *சுபமஸ்து ஏழூரான்கூட்ட நாட்டு வெள்ளாளகவுண்டன் குலதேவதை கல்யாணி பொங்காளி கோயில் கவுண்டன் தலக்கட்டு வரியில் தர்மகர்த்தா நமசிவாயகவுண்டன் கட்டியது.*
2. *சாலிவாகன சகாத்தம் வருடம் 1675 பவ வருஷம் 313 தலக்கட்டு.*

375

இடம் : நாமக்கல் மாவட்டம், இராசிபுரம் வட்டம், மூணுசாவடி விநாயகர் கோயில்.

கல்வெட்டு

அற்பசி மாதம் 24 கலி 5009 சாலி 1826 னாட்டுக்கவுண்டர் சாவடி ஆதீனம்.

376

இடம் : நாமக்கல் மாவட்டம், நாமக்கல் நகரம் முனீசுவரன் கோயில் அருகில் உள்ள குளத்தின் எதிர்க்கல்.

காலம் : 17ஆம் நூற்றாண்டு எழுத்தமைதி

செய்தி : எழுர் நாட்டுத் திருவாரைக்கல் திருப்பதியில் கொல்லர் இனத்தைச் சார்ந்த பதினேழு கம்பளத்தார் சுக்காடர் இனத்தவர்க்கு இசைவு முறி கொடுத்தது.

கல்வெட்டு

ஸ்ரீமதே ராமாநுஜாய நம ஏழூர் நாட்டுத் திருவாரைக்கல்லுத் திருப்பதியில் கொல்லர் பதினேழு கம்பளத்துக்கும் முந்தின வரிசைக்கு விபரம் ருத்ரோத்காரி வருஷம் ஆவணி மாதம் 8 தேதி கொல்லர் பதினேழு கம்பளத்தாரும் சுக்காடர்க்கு இசைவுமுறி குடுத்தபடி நாங்கள் குன்றத்தூர் துருக்கம் இராமாஞ்சி அய்யன் அவர்கள் காலத்தில் பூந்துறை நாட்டுக்குக் கர்த்தரான செகதேவராயர்க்கு நடக்கையில் அவர்கள் காரியத்துக்குக் கர்த்தரான தம்மரசையன் அவர்கள் சமூகத்திலும் கொண்டரசையன் பூந்துறை நாட்டு நாலு கவுண்டர்கள் முன்பாகவும் பருத்திப்பள்ளிநாட்டு கொண்டரசகவுண்டர் இராசிபுரநாட்டு துலுக்கணகவுண்டர் காரையூர் நல்லநயினார் மற்றும் குடியாணவர்கள் வழக்கற்ற வர்த்தமானம் சுக்காடருக்கு நாங்கள் சூடும் துடையும் இல்லை என்று சொல்ல.....

377

குறும்பகவுண்டர்

இடம் : ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் வாவித் தோட்டம்,

காலம் : போசள வீரவல்லாளன், சீமுக வருடம், கி.பி. 1333.

செய்தி : இறங்கலாய்க் கிடந்த பந்தீசுரமுடையார் கோயில் இருப்பணி.
(இப்போது இக்கற்கள் ஈரோடு கலைமகள் கல்வி நிலையம் அருங்காட்சியகத்தில் உள்ளது)

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரவல்லாள தேவர் பிருத்விராஜ்யம் பண்ணி நின்ற சீமுக வருஷத்துப் பங்குனி மாதம் 30ஆம் தேதி வடகரை நாட்டில் சிலம்பூரில் நாயனார் பந்தீஸ்வரமுடையார் இறங்கலாய்க் கிடக்கையில் இவ்விறங்கல்மீட்டு ஜீர்க்கிசையம்பண்ணி அமுதுபடிக்கு இவ்வூரில் நிலத்திலே னாயினார் கொல்லர்க்கு நிலம் கீழ்பாற்கெல்லை இட்டேறிக்கு மேற்கு இதன் வடபாற் கெல்லை வம்ம கவுண்டன் நிலமான பூமாக்குத் தெற்கு இதன் மேற்பாற் கெல்லை ஆற்றுக்குக் கிழக்கு இதன் தென்பாற்கெல்லை ஊர் மதிலுக்கு வடக்கு இந்நான் கெல்லைக்குட்பட்ட நிலம் இறையிலியாக மா 1 கல்வெட்டிக் குடுத்தோம் இவ்வூர்க் காணியுடைய குறும்பர்களோம் இப்படிக்கு வம்மகவுண்டன் மகன் ரவிபந்தன் எழுத்து இவன் தம்பி ராசக்கவுண்டன் எழுத்து

இவன் தம்பி சொன்னகவுண்டன் எழுத்து இவன்மகன் பெரியப்பன் குப்பன் எழுத்து இப்படிக்கு பெரியமாரு எழுத்து பெரிய மகபூதன் எழுத்து காரிராமன் ராமகவுண்டன் எழுத்து இப்படிக்கு இவர்கள் சொல்ல இக்கய் எழுதினபடிக்கு இந்தக் கல்வெட்டுப் பாரிசம் எழுதினேன் நடுவிக்கவுண்டன் பந்தியப்பனேன் சந்திராதித்தவரை நடத்திக்குடுப்பதாகவும் இத்தன்மம் செலுத்துவான் சீபாதம் தலைமேலே யித்தை இறங்கல் செய்வான் வழி யேழெச்சம் அறுவான்.

378

பாலவேளாளர்

இடம் : கோவை மாவட்டம், அவிநாசி வட்டம், நடுவச்சேரி ஊர் தெற்கில் உள்ள செக்கு

காலம் : கி.பி.1623

செய்தி : பாலவேளாளர்கள் கொடை

கல்வெட்டு

கலியுக சகாப்தம் 4724வது வருடம் மேல்செல்லாநின்ற ருத்துரோத்காரி வருஷம் கார்த்திகை மாதம் 3 வடபரிசார நாட்டு செவ்வளைபூண்டி சீர்மை துலுக்கன்புத்தூர் காபாடு நடுவச்சேரியில் ஓற்றைச்சங்குப் பாலவெள்ளாளர் கொட்டாறரில் காளியப்பகவுண்டர் சின்னக்குப்பாண்டக்கவுண்டரும் காளியப்பகவுண்டர் அரியாக்கவுண்டரும்....।

379

கல்வெட்டில் காணிப்பாடல்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், முத்தூர் குப்பியணன் கோயில்

காலம் : 20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கம்.

செய்தி : முத்தூர்க்காணியாளர் முத்தன், மணியன், சேரன், வெள்ளம்பர், பொருளந்தை, காவலன், முதலியார் ஆகியோர் திருப்பணி செய்தனர்

கல்வெட்டு

குப்பண்ணசுவாமி துணை

அருள்மிகு குப்பயணசுவாமி கோயில் புணருத்தாரணம் காணிப்பாடலில் கண்ட காணியாளர்களால் செய்யப்பட்டது.

முத்தன் மணியன் முதற்சேரன் வெள்ளம்பர்
மெத்துபொரு ளந்தையுடன் மேலான - சித்திபெறும்

காவலன் நன்முதலிக் காமருடன் ஏழ்முதன்மை

தாவுபுகழ் முத்தூர்த் தலம்.

380

செம்பூத்த குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், ஊதியூர் கைலாசநாதர் கோயில்

காலம் : கி.பி. 1849.

செய்தி : செம்பூத்தகுல நல்லகுமாருக்கவுண்டரின் திருப்பணி.

கல்வெட்டு

கலியுக சகார்த்தம் 4950 விரோதிகிறுது வருஷம் ஊராளிக்கவுண்டன் மகன் நல்லகுமாருக்கவுண்டன் உபயம் செம்பூத்தகுலம்.

381

இடம் : ஈரோடு மாவட்டம், காங்கயம் வட்டம், ஊதியூர் கைலாசநாதர் கோயில்

காலம் : கி.பி. 1850.

செய்தி : செம்பூத்தகுல சின்னயகவுண்டர் செய்த திருப்பணி.

கல்வெட்டு

கலியுக சகார்த்தம் 4951 பரிதாபி வருஷம் ஆவணி மாதம் பழனியூராதிபன் செம்பூத்த கோத்திரம் பிச்சகவுண்டன் மகன் பழனிக்கவுண்டன் மகன் பண்டிதகாரச் சின்னயகவுண்டன் உபயம்.

382

பொருளந்தை குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி கோட்டை மாரியம்மன் கோயில்.

காலம் : கி.பி. 1855.

செய்தி : பட்டக்குறிச்சி பொருளந்தை குலப் பழனிக்கவுண்டர் கோட்டை மாரியம்மன் கோயிலில் குறிச்சி கட்டினார்.

கல்வெட்டு

பொருள்தந்தை கோத்திரம் பட்டக்குறிச்சி காணியாளனாகிய மாதப்பகவுண்டன் மகன் பழனிக்கவுண்டன் கோட்டை மாரியம்மனுக்கு குறிச்சி உபயம் கலியுக சகார்த்தம் 4956.

383

செங்கண்ண குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி கோட்டை மாரி யம்மன் கோயில்

காலம் : கி.பி. 1838.

செய்தி : செங்கண்ணகுல நாகமலைக்கவுண்டர் மாரியம்மன் கோயிலில் தூரி, பலிபீடம், தாயார்பூதம் ஆகியவை செய்தார்.

கல்வெட்டு

சொஸ்திஸ்ரீ விசய சாலிவாகன சகார்த்தம் 1760 கலி 4939-ல் செல்லாநின்ற விளம்பி வருசம் தை மாதம் 10-தேதி திங்கட்கிழமை சப்தமியும் ரேவதி நட்சத்திரமும் சுபநாமயோகமும் பெற்ற சுபதினத்தில் செங்கண்ணகுல கோத்திரம் முன்சி திருமலைக்கவுண்டர் மகன் பெரியண கவுண்டர் மகன் சீரங்ககவுண்டர் மகன் பெருமாள் கவுண்டர் மகன் திருமலைகவுண்டர் மகன் சூரியகவுண்டர் மகன் நாகமலைக்கவுண்டர் தூரி பலிபீடம் தாயார்பூதம் உட்பட அம்மனுக்கு உபயம்.

384

கண்ண குலம்

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பாம்பலங்காரர் கோயில்.

காலம் : கி.பி. 1876.

செய்தி : கண்ணகுலக் கந்தியணகவுண்டர், திருமலைக்கவுண்டர் ஆகியோர் பாம்பலங்காரர் கோயிலில் கருவறை, சோபனமண்டபம் ஆகியவற்றை கட்டினார்.

கல்வெட்டு

சாலிவாகன சகார்த்தம் 1798 கலி 4977 செல்லாநின்ற பிரபவ வருஷம் வைகாசி மாதம் 22 தேதி குழாநிலை கண்ணகுல எளையாக்கவுண்டன் மகன் பெருமாள்கவுண்டன் மகன் திருமலைக்கவுண்டன் கந்தியணகவுண்டன் கெர்ப்பக்கிரகம் சோபனமண்டபம் உபயம்.

385

இடம் : ஈரோடு மாவட்டம், ஈரோடு வட்டம், கொளாநல்லி பொன்குழலி யம்மன் கோயில்

காலம் : 19ஆம் நூற்றாண்டு.

செய்தி : கச்சிமாபட்டிக் கண்ணகுல கவுமாரன் கருப்பகவுண்டர் செய்த திருப்பணி.

கல்வெட்டு

வாமலை கிருஷ்ணன் மகன் சின்னக்கவுண்டன் மகன் நல்லாக்கவுண்டன் மகன் மோளைகவுண்டன் மகன் விருப்பாட்சியைச் சேர்ந்த கச்சிமாபட்டியிலிருக்கிற கவுமாரன் கருப்பகவுண்டன்.

386

கொம்மையர் குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், மருவூர் பசுவேசுரர் கோயில்.

காலம் - கி.பி. 13 ஆம் நூற்றாண்டு.

செய்தி - கொம்மை காமிண்டர்கள் கொடுத்தகொடை.

கல்வெட்டு

ஆண்டு வரை தோறும் கதிது பற்றுமறக் கொள்ளக்கடவதாகவும் இப்படிக்கு செம்பிலும் சிலையிலும் செய்து கொள்... வெள்ளாளர் கொம்மை காமிண்டகளோம் சந்திராதித்தவரை வீர உலகனுள்ளிடாரும் கைம் மாட்டாமையில் கோயில் பறிமிரில்...

387

செல்லன் குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் மாவட்டம், வெள்ளியங்காடு பசுவேசுவரர் கோயில்.

காலம் - கி.பி. 13ஆம் நூற்றாண்டு.

செய்தி - வெள்ளாளர் செல்லரில் பறையன் தென்னகோன் என்பான் செய்த கொடையைக் குறிக்கிறது.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ வீரராசேந்திர தேவர்க்கு யாண்டு... பசுபதீசுரமுடையார் பதினெண் பூமீசுரமுடையார் கோயில் ... குடமும் குச்சியுங்கொண்டு கோயில் உள் புகுவான் சந்திராதித்தவரை செலுத்துவோமாக .... இருக்கும் வெள்ளாளன் செல்லரில் பறையன் தென்னகோனேன்.

388

பவள குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், தேவணாம்பாளையம் மாரியம்மன் கோயில் கிழக்குச்சுவர்.

காலம் - கி.பி. 19 ஆம் நூற்றாண்டு.

செய்தி - இராமசாமிக்கவுண்டர் மனைவி மாரியம்மன் கோயில் திருப்பணி செய்தார்.

கல்வெட்டு

கீலக வருஷம் தை மாதம் 23தேதி தேவணாம்பாளையம் பவளகோத்திரத்தில் இராமசாமிக்கவுண்டர் பெண்சாதி நஞ்சம்மாள் கண்டியகவுண்டர் மகள் உபயம்.

389

பொன்ன குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், தேவணாம்பாளையம் அமணலிங்கேசுவரர் கோயில் முன்மண்டப மேற்குச்சுவர் நுழைவாயில் இடப்புறம்..

காலம் - கலியுகம் 5015; கி.பி. 1914.

செய்தி - தேவணாம்பாளையம் வேளாளரில் பொன்னகுலத்தைச் சேர்ந்த மூன்றுபேர் கோயில் முழுமையாகக் கட்டினர்.

கல்வெட்டு

அமணீசுவரசுவாமி துணை கலியுகாதி சகாப்தம் 5015 பிரமாதி வருஷம் தை மாதம் 1 தேதி தேவணாம்பாளையம் பொன்ன கோத்திரத்தில் கு.அ. பழனிசாமிக்கவுண்டர், கு.பெ. பழனிக்கவுண்டன் கு.சி. பழனிக்கவுண்டன் மூவர்களால் அமணீசுவரசுவாமி கோயில் முழுவதும் ஜீரண உத்தாரணம்.

390

மணியன், பூதந்தை குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், ஆனைமலை நக்காண்டார் கோயில்.

காலம் - வீரகேரளர், அதிராசராசதேவர்.

செய்தி - வெள்ளாளன் வடமணியரில் அதிராசராச வஞ்சிவேளான் மணவாட்டி, வெள்ளாளன் பூதந்தைகளில் மணியமறையனான இராசராசவல்லவரையன் வசம் நக்காண்டார்க்கு விளக்கெரிக்க பத்துக்கழஞ்சு பொன் கொடுத்தாள்.

கல்வெட்டு

ஸ்வஸ்திஸ்ரீ கோ அதிராஜராஜ தேவர்க்குக் கோனேரின்மை கொண்டான் வீரகேரள வளநாட்டு நன்னூர் ஆளுடையார் நக்காண்டார்க்கு மேற்படியூரில் வெள்ளாளன் வடமணியனான

அதிராசராச வஞ்சி வேளான் மணவாட்டியான.... த்தேவர்க்கு திருநந்தாவிளக் கொன்றுக்கு மேற்படியூர் வெள்ளாளரில் பூதந்தைகளில் மணியமறையனான இராசராச வல்லவரையன் பக்கல்... வைத்த பொன் பதின்கழஞ்சும் இவ்வூரில்......

391

வேந்தர் குலம்

இடம் - கோயமுத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், குரும்பபாளையம் வெங்கிடுசாமி நாயக்கர் தோட்டத்து நடுவில் உள்ள நடுகல்.

காலம் - விசயநகர மன்னர், கிருஷ்ணதேவராயர் காலம், கி.பி. 1516.

செய்தி - வடபரிசார நாட்டு வெள்ளாதி வெள்ளாளர் வேந்தரில் நயினார் மாலை ஆண்டான் புலியைக் கொன்று வீரமரணம் அடைந்தான்.

கல்வெட்டு

சுபமஸ்து ஸ்ரீமன் மகாமண்டலேசுவரன் வீரகிருஷ்ண ராயர்க்குச் செல்லாநின்ற தாது வருஷம் ஆவணியில் வட பரிசாரநாட்டில் சுவள்ளாதி வேந்தர்களில் நயினார் மாலை ஆண்டனேன்.

392

வண்ணக்கன் குலம்

இடம் - ஈரோடு மாவட்டம், பவானி வட்டம், பெருந்தலையூர் திருமகிழ்வனமுடையார் கோயில் தனிக்கல்.

காலம் - சேரமன்னன் வீரநாராயண தேவனின் இருபதாம் ஆட்சியாண்டு.

செய்தி - குறுப்புநாட்டுத் திங்களூர் வேளாளர் வணக்கர் குல வண்ணக்கன் பெரியான் அணுக்கநம்பி காஞ்சிக்கூவல் நாட்டுப் பெருந்தலையூர் மகிழ்வனமுடைய மகாதேவர் கோயில் திருப்பணியின்போது அர்த்தமண்டபத் திருப்பணி செய்தார்.

கல்வெட்டு

ஸ்வஸ்தஸ்ரீ வீரநாராயண தேவற்கு யாண்டு இருபதாவத குறுப்பி நாட்டு திங்களூரிலிருக்கும் வெள்ளாளன் வண்ணக்கரில் வண்ணக்கந் பெரியான் அனுக்க நம்பியேன் காஞ்சிக்கூவ நாட்டில் தேவதான பிரம்மதேயம் பெருந்தலையூர் மகிழ்வனமுடைய மகாதேவர் கோயிலும் அர்த்தமண்டபம், பிறம்பில் மண்டபம்...

காணிப் பாடல்கள்

காணி - ஒரு பார்வை

கொங்கு வேளாளர் சுமுதாய வரலாற்றில் மிக முக்கிய இடம் வகிப்பது குலங்களே. குலங்களைக் கூட்டம், கோத்திரம் என்றும் அழைப்பர். மூன்றும் ஒரே பொருள் தருவன. குலக்காணி, குலதெய்வம், குலகுரு குலப்புலவர் எனக் குலத்தின் அடையாளத்தோடு அழைக்கும் வழக்கம் இன்றும் உள்ளது.

அறிமுகம் ஆகாத இரு கொங்கு நண்பர்கள் சந்திக்கும் போது அநேகாகக் கேட்கும் முதல் கேள்வி 'நீங்க என்ன கூட்டமுங்க' என்பதாகத்தான் இருக்கும். ஒரே கூட்டமாக இருந்தால் வயதிற்கேற்ப தந்தை - மகன் ; அண்ணன் - தம்பி உறவு கொண்டாடு வதும், வேறு கூட்டமாக இருந்தால் மாமன், மைத்துணனாக உரிமை கொண்டாடுவதும் கொங்கு வேளாளர் சமுதாயத்திற்கேயுள்ள தனிப்பண்பாட்டு அடையாளமாகும்.

திருமணத்திற்கு மணமக்களோ, மணமகனோ தேடும் போது முதலில் விசாரிப்பது குலத்தைப் பற்றியே. ஒரே குலத்தில் பெண் எடுப்பதும், கொடுப்பதும் கொங்கு வேளாளர் வழக்கம் இல்லை. அயல் குலத்திலேயே திருமண உறவு கொள்வர்.

குலங்களின் எண்ணிக்கை எவ்வளவு ? இன்னும் சரியாக வரையறுக்கப்பட வில்லை என்பதுதான் உண்மை. முன்பு கொங்கு வேளாளர் குலங்கள் 60 என்றனர். கொங்கு காணியான பட்டயம் கொங்கு வேளாளர் குலங்கள் 124 என்று கூறுகிறது. பிரமயணப்புலவர் பாடிய ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி 142 குலங்களைக்குறிக்கிறது.

குலங்களின் பெயர்கள் தனியாகவும் தொகுத்தும் பல இடங்களில் கூறப்படுகின்றன.

1. பெரும்புலவர் வே.ரா. தெய்வசிகாமணிக்கவுண்டர் தேடிக்கண்டுபிடித்த 96 கீர்த்திப்பாடல்.
2. சின்னத்தம்பி நாவலர் ஓதாளர் அலகுமலைக் குறவஞ்சி.
3. முதலிபாளையம் மகாவித்துவான் நாச்சிமுத்துப் புலவர் பாடிய வேளாளர் குலக்கும்மி.
4. தம்மரெட்டிபாளையம் நாச்சிமுத்துப் புலவர் வீட்டில் கிடைத்த கொடுமணல் இலக்கியங்கள் ஏடு
5. கொங்கு வேளாளர்களின் கல்வெட்டு, செப்பேடு.
6. மூன்று கொங்குமண்டல சதகங்கள்.

அனைத்தையும் தொகுத்து அகரவரிசைப்படுத்தியதில் குலங்களின் எண்ணிக்கை 214 வருகிறது. 96 கீர்த்திப் பாடலில் சில குலங்களின் பெயர் ஐயத்திற்கு இடமாக இருந்தாலும் ஆவணத்திற்கு மதிப்பளித்து அவைகளும் எண்ணிக்கையில் சேர்க்கப் பட்டுள்ளன. செப்பேடு கல்வெட்டுக்களில் வேறு எங்கும் காணப்பெறாத பல குலப் பெயர்கள் வருகின்றன. அளிக்கப்பட்டுள்ள விளக்கப் பட்டியலில் அவைகளைக் காணலாம். சுமார் 30 குலங்களே ஆறு ஆவணங்களிலும் முழுமையாக இடம் பெற்றுள்ளன.

குலங்களின் வீழ்ச்சி, மறைவு, தொடர்ச்சி ஆகியவைகளைப் பட்டியல் காட்டுகிறது.

குலங்களின் பெயர்களை

முனைவர் கிருஷ்ணசாமி
டி.எம். காளியப்பா
புலவர் வி. இராமமூர்த்தி
நல் நடராசன்
புலவர் தே.ப. சின்னுசாமி
புலவர் இரா. வடிவேலனார்
கு.சேதுராமன்
முனைவர் மணிமேகலை புட்பராசு
முனைவர் திலகவதி பழனிசாமி
இரா. இரவிக்குமார்
கே.எஸ். மோகனசுந்தரம்
கவிஞர் சிவதாசன்.

ஆகியோர் தொகுத்துக் கொடுத்துள்ளனர். அவர்கள் அனைவரும் பாராட்டுக்குரியவர்கள்

குலங்களின் பெயர்காண்பதில் பல குழப்பங்கள் ஏற்பட்டுவிட்டன. அலகுமலைக் குறவஞ்சியைப் பாடுவித்தவள்ளல் ஓதாளர் குலத்தைச் சேர்ந்தவர். அந்நூலில்தான் குலப் பெயரைத் தொகுத்துக் கூறும் பாடல் வருகிறது.

"பொன்னர் ஓதாளர் பூசர் செம்பூதர்"

என்று அந்த நீண்ட அகவல் தொடங்குகிறது, ஆய்வாளர் ஒருவர் பொன்னர் வந்தால் தம்பி சங்கர் வரவேண்டும் என்று நினைத்துள்ளார். அந்த முதல்வரியை, பொன்னர் சங்கர் பூசர் செம்பூதர், என்று மாற்றிப்பதிப்பித்துள்ளார். அப்பாடலைப் பாடுவித்த ஓதாள குலமே அப்பாடலில் இல்லை என்பதுதான் வியப்பான செய்தி.

அலகுமலைக் குறவஞ்சி மூல நூலைப் பார்க்காமல் மேற்கண்ட நூலைப்பார்த்த பல ஆய்வாளர்கள் ஓதாளருக்குப் பதில் தம்பி சங்கர் என்பதைக் குலப் பெயராகக் சேர்த்துள்ளனர் ஒருவர் அப்பெயரை கல்வெட்டில் கண்டதாகவும் கூறுகிறார்.

ஒரு நூலில் பூச்சந்தை என்ற பெயர் பிழையாக நச்சந்தை என்று அச்சாகி விட மற்றொருவர் அதைப்பார்த்து நச்சந்தையை தனிக்குலமாக்கி நான்கு ஊர்களையும் காணியாகக் கொடுத்துக் காணிப்பாடலாகத் தனிப்பாடலும் பாடிவிட்டார். பொருளந்தை பொருள்தந்தான், பேரிழந்தான், பெரழந்தை, பிறளந்தை, முழுக்காதன் அனைத்தும் ஒரேகுலம். கல்வெட்டும், செப்பேடும் முழுக்காது பொருளந்தை என்றே கூறுகிறது. ஒரே கூட்டத்தை நான்காகக் கொண்டுள்ளனர். காடை, காடான், சாகாடை மூன்றும் ஒரே குலம்தான். இதனையும் மூன்றாகக் கொண்டு எழுதியுள்ளனர். வெண்டுவன் கூட்டத்தை வெண்டு உழவர் என்று டி.எம். காளியப்பா கூறுவார். சாத்தந்தை, கண்ணந்தை, பொருளந்தை என்பதை சாத்தாந்தை, கண்ணாந்தை, பொருளாந்தை எனக்கொண்டு ஆந்தை குலத்தோடு தொடர்புபடுத்துவர் சிலர். இக்குழப்பங்களைத் தெளிவு படுத்தினால்

தனி நூலாகவே அமையும். மாதிரிக்காக இரண்டொன்றை மட்டும் காட்டப்பட்டது.

ஒவ்வொரு குலங்களுக்கும் காணியூர்க்ள் வகுக்கப்பட்டன. இதனைப்பட்டயம் நற்குடி நாற்பத்தெண்ணாயிரம் பசுங்கடி பன்னீராயிரம் என்றும் " குல கோத்திரங்கள் பிரித்து நாடு 24 நாட்டார் என்றும் இந்தக் குலங்களை ஊருக்கெல்லாம் குல தெய்வங்களும் காணி பூமிகளும் பிரித்து "என்று கூறுகிறது.

ஒரு குலத்துக்குச் சொந்தமான உரிமையுடைய ஊர் காணி எனப்படும். காணி என்ற சொல்லுக்கு ஆட்சி, அனுபவிக்கும் உரிமை என்று பொருள். ஓர் ஊர்க் காணியுடையவர் காணியாளர் அல்லது காணியாளக்கவுண்டர் எனப்படுவார்.

காணியாளர்கள் அந்த ஊரை நிர்வாகம் செய்வர். வரி வசூல் செய்து அரசு அதிகாரிகளுக்குச் செலுத்துவர். கோயில் முதல் உரிமை பெறுவர். எல்லாக் குடிமக் களையும் ஏவல் கொள்ளும் உரிமை அவர்கட்கு உண்டு. இதனை முகுந்த நல்லூர்ப் பட்டயம் பின் வருமாறு கூறுகிறது.

" ஆண்ட சொர்னாதாயம் நஞ்சை புஞ்சை பட்டி தொட்டி மாவடை மரவடை புறகூலி பிறமுதல் அணை அச்சுக்கட்டு மக்க மகமை சுங்கம் சோதினை எல்லை கொல்லை இதுவெல்லாம் செல்லும் சதுர்பூமியை மரியாதைக்குள்ள விபூதி பிரசாதம் பச்சடம் பாக்கு வெத்திலை இதுவெல்லாம் முதலானது கொடுத்து " காணி பெற்றதைக் கூறுகிறது.

“ கோயில் காணியுடைய சிவப்பிராமணர், தச்சாசார்யக் காணியுடைய ஆசாரியர், பாடவ்யக் காணியுடைய நாகபாசத்தார் ” என்று காணிகள் பலவகைப்படும்.

இதுவரை 40 குலங்களுக்குக் காணிப்பாடல்கள் கிடைத்துள்ளன. சில காணிப்பாடல்களைத் தொகுத்து காணிநூல் என்று பெயரிட்டுள்ளனர். அவை பெரும்பாலும் நீண்ட ஆசிரிய விருத்தப் பாடல்களாக அமைந்துள்ளன. சில வெண்பாக்களும், கட்டளைக் கலித்துறையும், கலிவெண்பாப்பாடல்களும் உண்டு. அவை கொங்கு வேளாளப் பெருமக்களால் நன்கு ஆதரிக்கப்பட்ட புலவர்களால் பாடப்பட்டவை. அப்பாடல்களில் இந்தக் காணியூர்களைக் காணியாளர்கள் ஆட்சி செய்வதாகவே கூறப்படுகின்றன.

“ அரசுபுரி காணியிவையே ”
“ இவை பதியில் அரசுபுரியும் "
“ பொன்னின் மேழிக்கதிபர்
பூமி பாலகரானவர்
புகழ்பெருகு காணியி வையே ”

என்ற பகுதிகள் அதனை விளக்கும். கொங்கு வேளாளர் காணி என்பது ஊரின் முழு உரிமையுடையதாகும்.

இந்தக் காணிப்பாடல்கள் இரண்டு விதமான அமைப்பில் காணப்படுகின்றன. ஒன்று குலப்பெயரைக் கூறி அக்குலத்தார் காணியுரிமை கொண்ட ஊர்களைத் தொகுத்துக் கூறுவது. மற்றொன்று ஒரு குலத்தில் தோன்றிய ஒரு தலைவரைக் கூறி அவர் இக்குலத்தின் இந்த ஊர்களுக்கெல்லாம் காணியுரிமையுடையவர் என்று கூறுவது. சில குல

இலக்கியங்களிலும் காணியூர்கள் தொகுத்துக் கூறப்பட்டுள்ளன.

“போதமிகு காடைகுல மகராசர் வாழ்கின்ற
புகழ்பெருகு காணியிவையே”

என முடிவது காணிப்பாடல் முதலாவது வகை.

காணியூர்களைத் தொகுத்துக்கூறி
“தழைக்கவே காணிபெற்றாய்
மருவிவரும் விலையகுல பெரிச்சி பூபாலனே
மைந்தனே ஐந்தாருவே
மருப்புயா சலன்ஆன பெரியண்ண வசீரனே
மண்டலப் பிறக்கியாதியே”

என விலையகுல பெரிச்சிக்கவுண்டர் மகன் பெரியண்ண கவுண்டருக்குக் காணிகள் உரிமையுடையவை என்று கூறப்பட்டுள்ளது. இது இரண்டாவது வகை. பல்வேறு காரணங்களினால் புதுப்புதுக்காணிகள் பல பின்னாளில் ஏற்பட்டுள்ளன. தந்தை தன் மக்களுக்குப் புதிய காணியூர்களைப் பெற்றுத்தந்துள்ளார்.

கன்னிவாடியில் கண்ணன்குலப் பெரியவர் ஒருவர் வாழ்ந்தார். அவருக்கு அத்தப்பகவுண்டர், நல்லணகவுண்டர், அமராவதிக்கவுண்டர் என மூன்றுமக்கள். அவர்களில் நல்லண கவுண்டர் மக்கள் கன்னிவாடியிலேயே இருந்துள்ளனர். அத்தப்பகவுண்டர் தம் மக்களுக்குக் கத்தாங்கண்ணியில் காணி அளித்தார். அமராவதிக் கவுண்டர் தம் மக்களுக்கு (மூவர்) கூடலூர், மோரூர், முளசியில் காணியுரிமை அளித்தார் என்பது கத்தாங்கண்ணிச் செப்பேட்டால் அறியப்பெறும் செய்தியாகும்.

சிலருக்கு நாட்டு நலன் கருதிச் செய்த அரிய செயல்களால் அரசரால் காணி வழங்கப்பட்டிருக்கிறது. தென்கரை நாடு, காங்கயநாடு, அரையநாடு, பூந்துறைநாடுகளில் தொல்லை கொடுத்த தென்னிலைக் கொங்குராயனை வென்ற காரணத்திற்காக தாராபுரம் நஞ்சய உடையாரால் காரையூர், கொடுமணல் ஆகிய காணியூர்கள் அழகன் சர்க்கரை யாருக்கு அளிக்கப்பட்டது என்று காரையூர்ச் செப்பேடு கூறுகிறது. ஏற்கனவே அங்கு வேளாளரில் மணிய குலத்தாரும், காசவேட்டுவரும், செட்டியார்களும் வாழ்ந்தாலும் அம்மூவர் உரிமைகளை நீக்கி முழுக் காணியுரிமை அழகன் சர்க்கரையாருக்கு அளிக்கப்பட்டது. இதனைச் செப்பேடு ‘ காரையூரிலே மணியவேளாள மொதமை, காச வேட்டுவ மொதமை, செட்டியள் மொதமை யிந்த மூணு மொதமையும் கூட்டி ஒனக்கே காரையூர் வளிதி சுத்தமாக ஒரு முகனையாக கட்டளையிட்டோம் ” என்று கூறுகிறது.

வெள்ளைப்பெண் அல்லது முடப்பெண் போன்ற குறைபாடு உடையவர்களை மணந்து மணமகன் காணி பெற்றுள்ளார்.

பிடாரியூர் ஈஞ்சகுலம் கூத்தக்கவுண்டர் மகள் வெள்ளைப்பெண் பழனியம்மாளைத் திருமணம் செய்து கொண்டு கருமாபுரம் பொருளந்தை குலம் பள்ளிக்கூடத்தான் குழந்தை வேலப்பகவுண்டர் பிடாரியூரிலே காணி பெற்றார்.

பின்னர் பொருளந்தைகுல செங்கோடகவுண்டர் மகள் வெள்ளைப்பெண் வேலம்மாளைத் திருமணம் செய்து கொண்டு வள்ளியறச்சல் ஆந்தை குலத்து குமார வேலப்பகவுண்டர் பிடாரியூரிலே காணி பெற்றார்.

பொருளந்தைகுல சூரியாலிச்சாக் கவுண்டர் மகள் வெள்ளைப்பெண் வள்ளியம்மாளை மணம் செய்து தலைய நல்லூர் கூறை குல பொன்காளியப்ப கவுண்டர் பிடாரியூரிலே காணி பெற்றார். இவர்களுக்குக் கால்காணி அளிக்கப்பட்டது. பிடாரியூர்ச் செப்பேடுகள் இரண்டால் கருமாபுரம் பொருளந்தை, வள்ளியறச்சல் ஆந்தை, தலைய நல்லூர்க் கூறை குலத்தினர் பூந்துறை நாட்டுப் பிடாரியூரில் புதுக்காணி பெற்ற விபரம் தெரிகிறது. ஆனால் இன்று பொருளந்தை குலத்தார் மட்டுமே பிடாரியூருக்குக் காணியுரிமை கொண்டாடுகின்றனர்.

பலர் பல காரணங்களால் காணியுரிமையைக் கைவிட்டு வேற்றூர் சென்றுள்ளனர்.

அரசர், அரசு உயர் அதிகாரிகளேயன்றிக் கொங்கு நாட்டுப் பட்டக்காரர்களும் புதுக் காணியுரிமை கொடுத்துள்ளனர். வேட்டுவர் தலைவன் காவுலவன் விஜய காளிராயனை வென்ற காரியத்திற்காக ஈங்கூர் ஈஞ்சகுல ரகுநாத சிங்கக் கவுண்டருக்குத் தென்கரைகாடு நீலம்பூர் காணியாக அளிக்கப்பட்டதை நீலம்பூர்ச் செப்பேடு கூறுகிறது. இதை அளித்தவர் பெரியகுலப் பட்டக்காரர் வேணாடுடையார்.

ஒரு ஊர் அதிகாரி அல்லது காணியாளர் செலுத்த வேண்டிய அரசு வரிப்பணத்தை அவர்கள் கட்ட முடியாத பொழுது அத்தொகையை அளித்து அதற்காகக் காணி பெற்றுள்ளனர். மதுரைச் சொக்கலிங்க நாயக்கர் பிரதிநிதியாக திருமுருகன் பூண்டி, அவிநாசி, மங்கலம் ஆகிய ஊர்களைப் பாலவேளாளர் வீரவிக்கிரம சோழியாண்டாக் கவுண்டர் நிர்வாகம் செலுத்திவந்தார். மதுரைக்குச் செலுத்த வேண்டிய வரிப்பணம் 15000 பொன் பாக்கியாகிவிட்டது. எழுமாத்தூர்ப் பனங்காடை குலம் பொய்க்காக்கவுண்டரும், மருதுறை ஆந்தை குலச் செல்லப்ப கவுண்டரும் அத்தொகையைக் கொடுத்து மேற்படி மூன்று ஊர்களையும் காணியாகப் பெற்றனர்.

தண்டனையிலிருந்து தப்புவதற்காகக் காணி உரிமையைப் பிறருக்கு அளித் துள்ளனர்.

தென்முகம் வெள்ளோடு ஞானிபாளையம், மயிலாடி, கனகபுரம் ஆகிய மூன்று ஊர்களை வெள்ளை வேட்டுவரும், வடமுகம் வெள்ளோடு புதுப்பாளையம், புங்கம்பாடி, கொம்மக்கோயில் ஆகிய மூன்று ஊர்களை வெள்ளை பெரிச்சி மூப்பனூம் அதிகாரம் செய்துவந்தனர்.

வல்லிபுரம் சாத்தந்தைகுல முத்துக்கவுண்டரின் மாட்டுப்பட்டி வெள்ளோட்டில் இருந்தது. முத்துக்கவுண்டர் ஊரில் இல்லாத போது ஒருநாள் முத்துக்கவுண்டர் தந்தை பெரியண கவுண்டரை வெட்டிக்குத்தி கால்நடைகளை வெள்ளை வேட்டுவனும், வெள்ளைப் பெரிச்சி மூப்பனும் கவர்ந்து கொண்டனர்.

முத்துக்கவுண்டர் வெள்ளோடு வந்து தகவல் அறிந்து உள்ளூர் அதிகாரிகளிடம் புகார் செய்தார். அவர்கள் நடவடிக்கை எடுக்க வில்லை, திருமலை நாயக்கரிடம் கூறி

ஆள் பலம் பெற்று வெள்ளை வேட்டுவனையும், வெள்ளை பெரிச்சி மூப்பனையும் வென்று அவர்கள் தலை வெட்டும் போது அவர்களிருவரும் எங்களை வெட்டாமல் விட்டு விட்டால் தென்முகம், வடமுகம் வெள்ளோடு ஆறுகிராமங்களையும் காணியுரிமையாகக் கொடுத்து விடுகிறோம் என்று கூறினர். அந்த ஆறு ஊர்களும் சாத்தந்தை குலத்தினர் காணியூர்களாக ஆயின.

பலர் காணியுரிமைகளை விலை கொடுத்தும் வாங்கியுள்ளனர். கொங்குச் செட்டிகளில் திருமிய கோத்திரம் காசிலிங்கம் செட்டியாரிடமிருந்து பனங்காடை குலத்து எழுமாத்தூர் சோழியாண்டாக்கவுண்டர் முகுந்தனூர், நல்லூர், திருப்பூர், ஊத்தலூர், மண்ணறை ஆகிய ஐந்து ஊர்களின் பாதிக் காணிஉரிமையை விலைகொடுத்துக் கிரயம் செய்து கொண்டதாக முகுந்த நல்லூர்ப்பட்டயம் கூறுகிறது.

கொங்கச் செட்டியார் வேலாயதம் செட்டியார், பூவாணி வேட்டுவர் ஆகியோரிட மிருந்து 1500 பொன்கொடுத்து பரஞ்சேர்வழி ஓதாளர்குல குள்ள காளியப்பகவுண்டர், வெள்ளகோயில் ஆந்தை குலம் சென்னிமலைக்கவுண்டர் ஆகியோர் திருவாச்சியை விலைக்கு வாங்கியதாகத் திருவாச்சிச் செப்பேடு கூறுகிறது. இன்று ஓதாள குலத்தாரும், ஆந்தை குலத்தாரும் திருவாச்சிக் காணியாளர்களாக உள்ளனர்.

கொங்கச்செட்டி பவளத்தானிடமிருந்து ஆயிரம் பொன்னாகரமும், பத்துப் பொதி நெய்யும் கொடுத்து நல்லூரைச் கிரையம் செய்து காணி பெற்றார் ஆத்தூர்ப் பனங்காடைகுல சோழியப்பகவுண்டர்.

சேரன், சோழன், பாண்டியன், செட்டி, சிவப்பிராமணர் காலத்தில் கொங்கு நாட்டின் மீது படை எடுத்த ஒக்கிலியரை விரட்டி நாட்டைக் காத்தமைக்காகப் பல ஊர்களின் காணியைப் பெற்றதாகக் கூறுகின்றனர்.

காணி பெறும் போது சிலர் கால்காணி, அரைக்காணி (செம்பாதி) பெறுகின்றனர். சிலருக்கு முழுக்காணி (சுத்தக் கிரையம்) அளிக்கப்படுகிறது. இந்தக் காணிஉரிமை மாற்றம் எல்லோரும் அறிய நடைபெற்றுள்ளது.

காணியுரிமை மாற்றத்திற்கு அரசன் அல்லது அரசு அதிகாரிகளிடம் அனுமதி பெறவேண்டும். " ஸ்ரீமன் கர்த்தராகிய ஆளித மகாராயருக்கு விண்ணப்பம் செய்து கொண்டு முகுந்த நல்லூர்ச் சீமைக்கு முந்தின சரிபங்கு காணியாளனென்று நாட்டி வைத்துக் கொண்டோம் ". என்பது பட்டயப்பகுதியாகும்.

காணி மாற்ற ஒப்பந்தத்தில் அளிப்பவர், பெறுபவர் மட்டுமில்லாமல், தொடர்புடைய அனைவரும் கையெழுத்திட்டுள்ளனர். பலர் சாட்சிக் கையொப்பமும் இட்டுள்ளனர். திருமுருகன் பூண்டிக் கிரைய சாசனத்தில் அந்தக் காணி உரிமை மாற்றத்தை யார் யார் ஒப்புக் கொண்டார்கள் என்று விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது.

குருக்கள், கோயில் அர்ச்சகர், ஊர்மணியம், சேனபோகம், இசைக்கலைஞர்கள், சத்திரியர், பண்டார முத்திரை, வைசியர், நகரத்தார், தேசத்தார், இருபத்து நான்கு மனையார், இசுலாமியர்கள், கம்பளத்தார், தேவாங்குச் செட்டி, வெள்ளாஞ்செட்டி, செங்குந்தர், கருணீகர், பஞ்சகம்மாளர்கள், ஆதீனப் புலவர், உப்பிலியர், வீரமுஷ்டிகள், ஆண்டி,

நாகபாசத்தார், தாசிகள், மண்ணுடையார், ஏகாலியர், நாவிதர், வாரியர், மல்லன் இது முதலாகிய பேரும் சம்மதித்து " காணி மாற்றம் நடைபெறுகிறது. காணி உரிமையை " மேரு மிராசு பத்திக்கொள்ளுதல் " என்று ஒரு ஆவணம் கூறுகிறது.

புதுக்காணியூர்கள் ஏற்பட்டமை போலவே பழைய காணியூர்களைப் பலர் இழந்துள்ளனர். ஊர் அழிவு, வறுமை, பஞ்சம், பகைவர்கள் ஆகியவற்றால் பலர் இழந்துள்ளனர்.

கத்தாங்கண்ணி செவந்திகுலத் தீத்தாக்கவுண்டர் கண்ண குலத்துச் செங்கோட்டு வேலப்பகவுண்டரிடம் " என் மகளை நீங்கள் மணம் செய்து கொள்ளுங்கள். பெண்ணும் கொடுத்துப் பொன்னும் பூமியும் கொடுக்கிறேன் " என்றார். அதற்குச் செங்கோட்டு வேலப்ப கவுண்டர் உங்கள் பொன்னும் பொருளும் பூமியும் வேண்டாம். உங்கள் காணி மிராசு சுத்தக் கிரையம் செய்து எனக்குச் கொடுத்தால் கலியாணம் செய்து கொள்கிறேன் " என்றார். கத்தாங்கண்ணி செவந்தி குலத்தார் தங்கள் காணியை மருமகனுக்கு அளித்துவிட்டுக் கீழ்க்கரைப் பூந்துறை நாட்டு இருப்புலிக்குக் குடிபோய் விட்டனர்.

இந்நூலில் பழைய காணிகள் மட்டுமே கூறப்பட்டுள்ளன. கொங்குக்குலங்களுக்கு இன்றுள்ள காணியூர்களை ஓரளவு முதலில் கொடுத்த பெருமை டி.எம். காளியப்பா அவர்களுக்கு உண்டு. காளிவேலம்பட்டி வேலுசாமி போன்ற அன்பர்கள் உதவியால் அதை அவர் தொகுத்தளித்துள்ளார்.

காணி என்பது கொங்குச் சமுதாயத்தில் மிக முக்கியமான ஒரு உரிமையாகும். வரலாறு எழுதியவர்கள் எவரும் கல்வெட்டு, செப்பேடு, காணிப் பாடல்களைப் பயன்படுத்தவில்லை.

ஒரு ஊர் ஒன்றுக்கு மேற்பட்ட பல காணியாளர்களைப் பெற்றிருப்பதும் உண்டு, ஊர்களில் காணியாளர்களை வரிசைப்படுத்தியுள்ளனர். சில ஊர்களில் கோயிலில் யார் யாருக்கு எந்தெந்த உரிமை என்று வரையறுத்துள்ளனர். பேரோட்டுக்கு வெண்டுவன், பண்ணை, பெருங்குடி ஆகிய மூன்று குலத்தார் காணியாளர்கள். முப்பாடு, பச்சைப்பந்தல் உரிமை வெண்டுவன் குலத்துக்கும், கட்டியம் செய்தல் பண்ணை குலத்திற்கும், திருக்கொடிப் பாத்தியம் பெருங்குடி குலத்தாருக்கும் உரியன என்று பிரித்துக்கொண்டனர்.

காங்கயநாடு 14 ஊர்களுக்கும், தென்கரைநாடு 12 ஊர்களுக்கும் ஊர்கள் தோறும் யார் யார் காணியாளர்கள் என்பதனையும் புலவர்கள் பாடியுள்ளனர். அப்பாடல்களும் இங்கு இடம் பெற்றுள்ளன.

எந்தக் காணியூர்கள் எந்த நாட்டைச் சேர்ந்தது என்று அறிந்துகொள்ள வசதியாக நாடுகளின் ஊர்த்தொகைகளும் இறுதியில் அளிக்கப்பட்டுள்ளன.

எதிர்காலத்தில் சமூக வரலாறு எழுதுவோர் இக்கல்வெட்டுக்களையும் காணிப் பாடல்களையும் அடுத்த தொகுதியில் உள்ள செப்பேடு, பட்டயங்களையும் பயன்படுத்திக் கொண்டு எழுதுவது நல்லது.

1. அந்துவகுலம்

காணிஊர்கள்

நாகம்பள்ளி, கீரனூர், ஆதியூர், மோடமங்கலம், அஞ்சூர் பாலமேடு, தூரம்பாடி, திருச்செங்கோடு, அந்தியூர், லக்காபுரம், தோட்டாணி, செவியூர், வாய்ப்பாடி, முடுதுறை, திருவாச்சி, கொடையூர், ஊஞ்சலூர், பூந்துறை, தெக்கலூர், சேவூர், குன்னத்தூர் ஆகிய இருபத்தொரு ஊர்கள்.

காணிப்பாடல்

சீருலவு நாகநகர் கீரனூர் ஆதியூர்
செப்பரிய மோடமங்கை
திகழ்அஞ்சி யூர்பாலை மேடுதூ ரம்பாடி
சித்திரவீ திக்கோதையூர்

ஏருலவு வடகரை நன்னாட்டில் அந்தியூர்
இனியலக் காபுரமுடன்
எழில்பரவு தோட்டாணி மேவுசெவி யூருடன்
இனிதான வாய்ப்பாடியூர்

காருலவு முடுதுறை நன்னகர் திருவாச்சி
கனககொடை யூருமிகவும்
காவேரி சூழுமேல் அரையநன் னாட்டினில்
கதிபெருகும் ஊஞ்சலூரும்

ஆரமணி மேடை திகழ் பூந்துறைசை தெக்கலூர்
அதிகசே வூருகுன்றை
அந்துவ குலத்தில்வரு மோழைசெல் லப்பனே
அடையவர்கள் பணிசிங்கமே !

அந்துவ குலத்தின் மற்றொரு காணிப்பாடல் குந்தாணி, குந்தாணி ஆகிய ஊர்களும் அந்துவகுலக் காணியூர்கள் என்று கூறுகிறது.

காணிப்பாடல் - 2

நன்னிலம் புகழ்கின்ற நாகம்பள்ளி கீரனூர்
நற்பால மேடுஅதுவும்
நளினமுள லக்கா புரத்துடன் திருவாச்சி
நலகுந்தி ஆதியூரும்

சென்னெல்வயல் சூழ்நிலை மோடமங் கலமதும்
செழித்ததூ ரம்பாடியும்
செயமருவு அஞ்சியூர்ப் பதியுடன் மிக்கவாம்
செப்பமுள காணிபெற்றாய்

சொன்னமொழி தவறாத அந்துவ குலத்தில்வரு
சுகசரண கெம்பீரனே
சுந்தர மடந்தையர்கள் விரதமத ரூபனே
சொற்பனுட மகமேருவே

தன்மையது வாகவே நம்புலவன் என்று நீ
தாபரித் திடும்பவுளித்
தாட்டீக சென்னியருள் செல்லமகி பாலனே
தாடளர் பரிநகுலனே!

2. ஆந்தை குலம்

காணியூர்கள்

கொன்னையார், முத்தூர், பருத்தியூர், மாணிக்கம்பாளையம், தூரம்பாடி, எதிரனூர், பட்டணம், பாலைமேடு, சென்னிமலை, வயிரூசி, தோழூர், பிடாரியூர், திண்டமங்கலம், மருதுறை, திருவாச்சி, வள்ளியறச்சல், மோரூர், வெள்ளகோயில், விண்ணப்பள்ளி, கிருதநல்லூர், காகம், கூத்தம்பூண்டி, குந்தாணி, சடையகுளம், ஒடுவங்குறிச்சி, மாம்பாடி, முறங்கம், நல்லூர், புத்தூர், கரியாங்குளம், பொன்பரப்பி பாலை நகர், சிறுக்கிணறு கொற்றனூர் ஆகிய முப்பத்து நான்கு ஊர்கள்.

காணிப்பாடல்

பன்னுதமி ழாகரன் ஆந்தைகுல மரபாளர்
பதிகொன்னை யாருமுத்தூர்
பருத்தியூர் மாணிக்கம் தூரை நகர் எதிரனூர்
பட்டணம் பாலைமேடு
சென்னிகிரி வயிரூசி தோழூர் பிடாரியூர்
திண்டமங் கலம்மருதுறை
திருவாச்சி வள்ளிநகர் மோரூரு வெள்ளக்கல்
சிறந்தவிண் ணப்பள்ளியும்
மன்னுபுகழ் மேவும் கிருத நல் லூர்காகம்
மருவுகூத் தம்பூண்டியும்
வளமான குந்தாணி சடையகுளம் மிகுசெல்ல
மானஒடு வங்குறிச்சி
துன்னுமாம் பாடி முறங்கநாச் சார்துகில்
தோறாத புத்தூருடன்
துய்யகரி யான்குளம் பொன்பரப்பி பாலைநகர்

சிறுக்கிணறு கொற்றனூரே.

வயிரூசிக்கு வடுகநகர் என்றும் தூரைக்கு காவிரை என்ற பாட வேறுபாடுகள் உள்ளன.

ஆந்தை குலத்தாரின் மற்றொரு காணிப்பாடல் பரமத்தி, காளமங்கலம், முருங்கத்தொழு, கருவூர், முன்னூர், கீரனூர், தென்னமங்கலம், திருச்செங்கோடு, முளசி, செம்பியநல்லூர், தேனூர், ஊத்துக்குழி, ஊதியூர், ஆலத்தூர், முருங்கமங்கலம், காஞ்சிக்கோயில், ராயகுளம், மானூர், குளத்தூர், ஆதியூர், தூசியூர், அத்தனூர், ஆரியூர், ஆவணிப்பேரூர், ஊத்தலூர், அருமணநல்லூர், அனுமன்பள்ளி ஆகிய ஊர்களும் ஆந்தை குலத்தார் காணியூர்கள் என்று கூறுகிறது.

காணிப்பாடல் - 2

நீதிசேர் வள்ளிநகர் பரமுத்தி வெள்ளக்கல்
நிகர்சடைய குளம்மருதுறை
நேர்பட்ட ணம்காள மங்கைமுருங் கைத்தொழு
நீளவண் பள்ளிகருவூர்.

தீதிலா முத்தனூர் முன்னூர் கீரனூர்
தென்னவன் மங்கைமோரூர்
திருவாச்சி யூர்புத்தூர் காகம்திண்டமங்கை
திருச்செங் கோடுதோழுர்

ஓதும் பிடாரியூர் பருத்தியூர் குந்தாணி
ஒடுவன் குறிச்சிமுளசை
உற்றசெம் பியநலூர் கதிரநல் லூர்எதிர
னூர்பாலை மேடுதேனூர்

போதில்ஊ ற்றுக்குழி மாவண்விண் ணப்பள்ளி
பொன்னூதி கிரிகொற்றையூர்
புகழ்ஆலத்தூர்முருங் கமங்கைமா ணிக்கநகர்
புதியகாஞ் சிக்கோயிலும்

கோதில் கூத் தம்பூண்டி வடுகநகர் ராயகுளம்
கொண்டபெயர் விளங்குமங்கை
குலவுகரி யான்குளம் காக்கைதூ ரம்பாடி
கூறும்மா னூர்குளத்தூர்

ஆதியூர் தூசியூர் அத்தனூர் ஆரியூர்
ஆவணிகொள் பேர்ஊற்றலூர்
அருமணநல் லூர்கொற்றை அனுமநகர் காணிகொளும்
ஆந்தைகுல வேளிர்குலமே.

3. ஈஞ்சகுலம்

காணிஊர்கள்

பூந்துறை, வெள்ளோடு, பரஞ்சேர்வழி, பிடாரியூர் மண்ணறை, ஈங்கூர், பழனி, வாகரை, பொருளூர் ஆகிய ஊர்கள் ஈஞ்சண்குலக் காணியூர்கள்.

காணிப்பாடல்

பூந்துறையும் வெள்ளோடு புகழ்பரஞ் சேர்வழியும்
வாய்ந்த பிடாரியூர் மண்ணறையும் - சேர்ந்தபுகழ்
ஈஞ்சூர் பழனியூர் வாழ்கரையும் நீள்புலரி
ஈஞ்சகுலக் காணி இது.

மிகவும் சிதைந்த மற்றொரு காணிப்பாடல் தொட்டியம், பவித்திரம், முசிறி, வில்லிபுத்தூர், தெங்கூர், புகலூர். வடகரையாத்தூர், கொந்தளம், குன்னத்தூர், பரமத்தி, முத்தூர், பருத்திப்பள்ளி, நீலம்பூர், பாலைமேடு, குளித்தலை, இராசிபுரம், ஆவலூர், வீரப்பூர், மல்லூர், ஒடும்பறை, மோரூர், முளசி, ஈஞ்சம்பள்ளி, அஞ்சூர், தலையூர், நசியனூர், பெரியபுலியூர், புன்னம், மாவலூர், காவேரிபுரம், சாம்பள்ளி, வேம்பத்தி, சிறுவலூர், காஞ்சிக்கோயில், கவுந்தப்பாடி, செவியூர், குளப்பலூர், கோசணம், குருமந்தூர், இலத்தூர், நம்பியூர், நடுவச்சேரி, கருவலூர், துடியலூர், பேரூர், வெள்ளலூர், தொண்டாம்புத்தூர், கீரனூர், வேலூர், கலையமுத்தூர், மானூர், தாண்டிக்குடி, கொத்தயம், குத்திலுப்பை, தேவத்தூர், மயில்ரங்கம், அரவக்குறிச்சி, கூத்தம்பட்டி, வெங்கரை, வெங்கம்பூர், கண்ணபுரம், மாம்புரை, காரைச்சேரி, பொன்னிவாடி, பில்லூர், இருடிகளத்தூர், மேச்சேரி, கம்பையனூர், விசயமங்கலம், காடையூர் ஆகிய ஊர்களையும் காணியூராகக் குறிக்கிறது (என்பத்தெட்டு ஊர்கள் என அப்பாடல் குறிக்கிறது).

4. ஒழுக்ககுலம்

காணியூர்கள்

ஆத்தூர், ஊஞ்சலூர், சேந்தமங்கலம், கலசப்பாடி, திங்களூர், வெங்கரை, தோட்டக்குறிச்சி, தேவநல்லூர், கோமங்கை, கண்ணபுரம், இளம்பிள்ளை, பெருங்களந்தை, மருதூர், ஊத்துக்குழி, பொருளூர், கருஞ்சேரி, மங்கலம், கூத்தம்பூண்டி, கொடுமணல், காகம், நத்தம், குறிச்சி, கரசை ஆகிய ஊர்கள் ஒழுக்கர் குலக் காணியூர்கள்.

காணிப்பாடல்

செங்கமல வாவிசூழ் ஆத்தூரு ஊஞ்சலூர்
சேமங்கை கலசபாடி
திங்களூர் வெங்கரை தோட்டக் குறிச்சியும்
தேவநல் லூர்கோமங்கை
துங்கமுயர் கண்ணபுர மாமிளம் பிள்ளையும்

துலங்கிய பெருங்களந்தை
தோராத மருதூரு ஊத்துக் குளிபுலரி
தோன்றுசிறு தாவளத்து

கொங்குலவு நகரம் குறுஞ்சேரி மங்கலம்
குலவுகூத் தம்பூண்டியும்
கூறரிய கொடுமணல் காகம்நத் தத்துடன்
குறிச்சிதென் கரசைமுதலாய்

மங்காத புகழ்பரவு மேழிப் பதாகையான்
வள்ளலே ஒழுக்ககுலனே
மன்னுலவு குவளையணி நல்லண நராதிபதி
வளருமூ தூருதானே.

5. ஓதாள குலம்

காணி ஊர்கள்

பரஞ்சேர்வழி, பெருந்தொழு, மணியனூர், குண்டடம், வெள்ளகோயில், கண்ணபுரம், கண்டியன்கோயில், நிழலி, கொடுவாய், கொற்றமங்கலம், நல்லிகோயில், குரும்பலமாதேவி, சித்துப்பூண்டி, கோலாரம், நல்லூர், வடகரை ஆத்தூர், தாழக்கரை ஆகிய ஊர்கள் ஓதாளர் குலக் காணியூர்கள் ஆகும்.

முதல் காணிப்பாடல்

ஆதிமுத லாம்பரஞ் சேர்வழி பெருந்தொழுவு
அழகுமணி யம்குன்றிடம்
அன்பான வெள்ளக்கல் கண்ணபுர மும்கண்டி
யன்கோயில் நிழலிகொடுவாய்

நீதியுள அரையநாடு நீள்கொற்ற மங்கலம்
நிலைமைசெறி நல்லிகோயில்
நேர்பெறு குரும்பைமா தேவிசித் துப்பூண்டி
நிகருகோ லாரம்நல்லூர்

தாதுலவு வடகரையில் ஆத்தூரு டன்பரிவு
தாழக்கரை தானுமாகும்
தமிழ்பெற்ற கீர்த்தியும் புகழதும் விளங்கினோர்
தரணியில் பெருமையுடையோர்

ஓதுபுகழ் சித்திரமே ழிக்கொடிக் கதிபனே
ஓதாள கோத்திரற்கு
உற்றநிலை யாம்என நற்றமிழ் விளங்கவே
உறுதியென வருகாணியே!

இரண்டாவது காணிப்பாடல்

ஓதாள குலத்தாரின் மற்றொரு காணிப்பாடல் பழையனூர், காவிரிப்பூம்பட்டினம், தில்லைப்பாடி, மைசூர், கோட்டை, வடமலை, கார்பாடி, பாச்சலூர், நரையனூர், திடுமலூர், கும்பகோணம், உறையூர், அஞ்சுகோட்டை ஆகிய ஊர்களைக் காணியூராகக் குறிப்பிடுகிறது.

பழையனூர் காவிரிப் பூம்பட்டி னம்தில்லை.
பாடியும் மைசூருடன்
நிலையான கோட்டையும் வடமலைக் கார்பாடி
நேர்பாச்ச லூர்நரையனூர்
நலமான திடுமலூர் கும்பகோணம் உறையூர்
நவில்அஞ்சு கோட்டைச்சேத்ரம்
உளமகிழ் நாற்பத்தெண் ணாயிரம் கோத்திரம்
ஓதாளர் குலக்காணியே.

6. கணக்கன் குலம்

காணியூர்கள்

வெள்ளியணை, வஞ்சி (கரூர் ?) கொந்தளம், ஓமலூர், விண்ணப்பள்ளி, பவுதை, தேவநல்லூர், பல்லாக்கோயில், முன்னூர், வள்ளியறச்சல், சுரர்பூண்டி, கீரனூர், மைவாடி கடத்தூர் ஆகியவை கணக்கன் குலத்தார் காணியூர்கள்.

காணிப்பாடல்

வெள்ளி யணைவஞ்சி கொந்தளம் ஓமலூர் மேவுவிண்ணப்
பள்ளி பவுதையும் தேவநல் லூர்பல்லாக் கோயில்முன்னூர்
வள்ளி யறச்சலூர் பூண்டியும் கீரனூர் மைவாடியும்
விள்ளும் கடத்தூர் கணக்க குலத்தோர் மேவியதே.

7. கண்ணந்தை குலம்

காணியூர்கள்

காஞ்சிக்கோயில், பாப்பினி, கன்னிவாடி, காளமங்கலம், முளசி, காகம், கொளாநல்லி, நசியனூர், மணியனூர், ஓடப்பள்ளி, தகடப்பாடி, கொன்னையாறு, கத்தாங்கண்ணி, மோரூர், ஆலத்தூப்பட்டணம், ஆனங்கூர் ஆகியவை கண்ணந்தை குலக்காணியூர்கள்.

காணிப்பாடல்

வாசமிகு காஞ்சிபார்ப் பதிகன்னி வாடியும்
வளர்காள மங்கைமுளசி
வல்லபெரு காகம் குழாநல்லி நசையனூர்
மணியனூர் ஓடைதகடை

ஆசைமிகு கொன்னையார் பரவுகற றான்காணி
அழகுபெறு மோரூர்புகழ்
ஆலத்தூர்ப் பட்டணம் பெருகும்ஆ னங்கூரு
ஆகமார்க் கண்டன்வயதாம்

தேசமிகு கொங்கினில் பெரிநா யகிஅருள்
செயகால மும்விளங்கத்
திவ்யநவ மணிசுனைகள் சடைவன்னி கொன்றையும்
தேங்குதா லம்சிறப்பாய்

நேசமிகு கண்ணந்தை குலஉசிதன் எனவந்த
நேமமிகு பச்சைபூபா
ஈன்றவர புத்திரன் செல்லப்ப பூபதி
நிலைமையென வருகாணியே!

8. கண்ணகுலம்

காணியூர்கள்

கன்னிவாடி, காகம், கொளாநல்லி, காளமங்கலம், கிழாம்பாடி, நசியனூர், காஞ்சிக்கோயில், மோரூர், முளசி, ஏமப்பள்ளி, சம்பை, கத்தாங்கண்ணி, ஆலத்தூர்ப் பட்டணம், மணியனூர், ஓடப்பள்ளி, தகடப்பாடி, கொன்னையாறு, ஆனங்கூர், கூடல், பாதிரை ஆகியவை கண்ணகுலக் காணியூர்களாகும்.

காணிப்பாடல்

கன்னி வாடி காகம் குழாநிலை
காள மங்கை கிழாம்பாடி நசையனூர்
எண்ணுகாஞ் சிக்கோயில் மோரூர் முளசியும்
ஏவை சம்பையும் கற்றான் காணியும்

வண்ணம் மேவிய ஆலத்தூர்ப் பட்டணம்
மணிய னூருடன் ஓடை தகடையும்
கொன்னை யாறுடன் ஆனங் கூரதும்
கூடல் பாதிரை கண்ணகுல ஊர்களே!

கண்ணகுலச் கண்ணப்ப மன்றாடியார் புகழ்ச்சிப்பாடலில் காங்கயம் காணியூராகக் குறிக்கப்பட்டுள்ளது.

9. காடைகுலம்

காணிஊர்கள்

வள்ளியறச்சல், பாப்பினி, ஆத்தூர், கீரனூர், ஆதியூர், பூந்துறை, பெருந்தொழு, பவித்திரம் வெள்ளியணை, கழனியூர், ஏழூர், தோழூர், கங்குப்பட்டி முளையாம்பூண்டி, பில்லூர், வாழவந்தி, புன்னம், இளம்பிள்ளை, பட்டிலூர், சடையகுளம், மருதுறை ஆகி

இருபத்தொரு ஊர்கள் காடை குலத்தாரின் காணியூர்களாகும்.

முதல் காணிப்பாடல்

கன்னல்உயர் வள்ளிநகர் புகழ்பெறும் பார்ப்பதி
கருணைபெறும் ஆத்தூருடன்
கனகமுயர் கீரனூர் ஆதியூர் நன்னகர்
காரணர் உறைந்தபதியும்

நன்னர்சேர் பூந்துறை பெருந்தொழு பவித்திரம்
நன்மைசெறி வெள்ளியணையும்
நலமான கழனியூர் ஏழூரு தோழூரு
நாட்டிலுயர் கங்குப்பட்டி

இன்னிலத் திலகுமுளை யாம்பூண்டி புல்லூரு
இயல்வாழ வந்திபுன்னம்
இளம்பிள்ளை பட்டிலூர் சடையகுளம் மருதுறை
இவைபதியில் அரசுபுரியும்

பொன்னின்மே ழிக்கதிபர் செங்குவளை அணிமார்பர்
பூமிபா லகரானவர்
போதமிகு காடைகுல மகராசர் வாழ்கின்ற
புகழ்பெருகு காணியிவையே!

காடை குலத்திற்கு வேறு மூன்று காணிப்பாடல்களும் உள்ளன. அவற்றில் தூசியூர், மாவிரட்டி, சேமந்தூர், வெண்ணந்தூர், மங்கலம், மோடமங்கலம், காகம், ஆலாம்பாடி, நசியனூர், வேம்பத்தி, கூடற்கரை, சிறுநல்லூர், பட்டாலி ஆகிய ஊர்களும் காடைகுலக் காணியூர்களாகக் குறிக்கப்பெறுகின்றன.

இரண்டாம் காணிப்பாடல்

கன்னல்உயர் பூந்துறை பெருந்தொழு புவுத்திரம்
கருணைபெறும் ஆத்தூருடன்
கனகமுயர் வெள்ளியணை ஆதியூர் நன்னகர்
காரணர் உறைந்தபதியும்

இன்னிலத் தினியமுளை யாம்பூண்டி புல்லூரு
இயல்வாழ வந்திபுன்னம்
இளம்பிள்ளை பட்டிலூர் சடையகுளம் மருதுறையும்
ஏழூரு தோழூருடன்

சென்னெல்செறி கழனியூர் கீரனூர் ஆண்மைமிகு
திறமையுள கங்குப்பட்டி
செல்வமிகு வள்ளிநகர் காடைகுல வள்ளல்கள்
தீர்க்கஅர சாட்சிபுரியும்

மன்னர்பணி யும்பெரிய நாயகி மனோன்மணியின்
மலரடியை மறவாதவர்
வன்னிபூ பதிஉதவு செல்லயன் காடைகுல
மகராசர் காணியிதுவே!

மூன்றாம் காணிப்பாடல்

கன்னல்செறி தூசியூர் புல்லூர் தோழூர்
கனமான மாவிரட்டி
கதித்திடும் சேமந்தூர் வெண்ணந்தூர் மங்கலம்
கனிவாத்தூர் தேவர்தொகையும்

மன்னவர் புகழ்மோட மங்கலம் இவையுடன்
வளமைபெறும் பூந்துறையுமாம்
வண்மைசேர் காகம் ஆலாம்பாடி நசையனூர்
வளர் கூடக்கரையுமாம்.

சென்னெல்செறி புன்னம் பெருந்துறை வேம்பத்தி
சிறுநல் லூர்பட்டிலூர்
செயமான இளம்பிள்ளை கீரனூர் பட்டாலி
திறமான வள்ளிநகரும்

அன்னதரு வான பார்ப்பதி நகருக்கு
அதிபன்என வந்தசுமுகன்
அரசர்மனம் மகிழவரும் காடைகுல மேருவென
அவனிதனில் வருகாணியே!

நான்காம் காணிப்பாடல்

நன்னெறிசேர் பூந்துறை பெருந்துறை பவுத்திரம்
நன்மைசெறி வெள்ளியணையும்
நலமான கழனியூர் ஏழூரு தோழூரு
நாட்டிலுயர் கங்குப்பட்டி

இன்னிலத் திலகுமுளை யாம்பூண்டி புல்லூரு
இயல்வாழ வந்திபுன்னம்
இளம்பள்ளி பட்டிலூர் இவையெலாம் அதிபதி
எனவந்த காடைகுலனே

பன்னுதமிழ் வாணருக்கு ஐந்தரு வேநீலி
பழிகழு வியநிருபனே
பார்மீதில் உன்புகழ்க்கு இணையாக ஒருவரை
பகருதற் கெளிதாகுமோ

மன்னர்புகழ் பூந்துறைசை நாடாளும் அவிநாசி

மைந்தனே மகராசனே
மதனவா ரணவாசி ராசனே எதிரிட்ட
மருமன்னி யர்கண்டனே!

10. காரிகுலம்

காணியூர்கள்

கன்னிவாடி, காரையூர், கொந்தளம், எழுமாத்தூர், சேவூர். மேச்சேரி, பூங்குறிச்சி, ஆனங்கூர், மண்மங்கலம், பட்டிலூர், வள்ளைக்குழி உஞ்சணை, புத்தூர் ஆகியவை காரிகுலக் காணியூர்களாகும்.

காணிப்பாடல்

நானிலம் மதிக்கஉயர் புகழ்கன்னி வாடியும்
நற்காரை யூர்கொந்தளம்
நறைமேவு பொழில்சூழும் எழுமாதை நகர்சேவூர்
நவிலுமேல்ச் சேரிநகரம்

மானிதி குலாவூபூங் குறிச்சிஆ னங்கூர்மண்
மங்கலம் பட்டிலூரும்
மஞ்சுலவு வள்ளைக் குழிப்பதியும் உஞ்சணையும்
வைப்பான புத்தூருடன்

தானினிய காணிபெறு காரிகுல தூயனே
தமிழன்பர்க்கு அடிமைமுறியும்
தானுலவு கைத்தல மேழிப் பதாகையான்
தண்குவளை மாலைமார்பன்

தேனினிய மொழிமாதர் ஆசைபெறு மார்பனே
தேவேந்திர முத்தேந்திரனே
சேயநின் சொல்லரி வானநஞ் சயதீர
சீர்த்திமிஞ் சியயோகனே.

11. குழாயர் குலம்

காணியூர்கள்

கண்ணபுரம், அவிநாசி, வைகாவூர் (நாடு), பூந்துறை (நாடு), கோயிலூர், விளங்கில், கண்டியன்கோயில், நிழலி, கலியாணி, ஆனையூர், குழாநிலை, குயப்பள்ளி, கருமாபுரம், புத்தரச்சல், கோயில்பாளையம், நிரையூர், கொற்றனூர் ஆகியவை குழாயகுலக் காணியூர்களாகும்.

காணிப்பாடல்

வளமிலகு நாகமலை சென்னிமலை கொல்லிமலை
வானிலங்கும் ஆனைமலைசேர்

மாசிலா அலகுமலை பன்றிமலை பொன்னூதி
மலைசெம்பொன் மலைகுடகுடன்
தலமிளகு காஞ்சிமா நதிவானி நள்ளாறு
தாழ்வில்ஆன் பொருநைலவணம்
தாங்குநதி காவேரி ஆளியாறுடன்பல
தருமதென் கரைநாடுகாண்
புளகண்ணை அவிநாசி வைகாவூர் நாடுகீழ்ப்
பூந்துறைசை மேல்ப்பூந்துறை
புகழ்கோயி லூர்விளங்கில் கண்டியன் கோயில்நிழலி
பொற்பமரும் கலியாணியூர்
களபமுள ஆனையூர் குழாநிலை குயப்பள்ளி
கருமாபுரம் புத்தரசை
கவசைநிரை யூர்கொற்றை மேவிய குழாயரைக்
காத்திடும் பெரியம்மனே.

12. கூறைகுலம்

காணியூர்கள்

தலையநல்லூர் (சிவகிரி), மின்னாம்பள்ளி, சேமூர், மாதேவி, திடுமல், நசியனூர், வெள்ளியணை, மேச்சேரி, செகதாபுரம், கொத்தனூர், பாப்பினி, பிடாரியூர், பழனி, திண்டமங்கலம், நவனி, அரசிலாமணி, பெரியபுலியூர், கிழாம்பாடி, கலங்காணி, வடுகநகர், வளவனூர் ஆகியவை கூறைகுலக் காணியூர்கள்.

முதல் காணிப்பாடல்

செந்தமிழ் வளம்பெற்ற தலைசைமின் னாம்பள்ளி
சேமூரு மாதேவியும்
செய்திடுமல் நசையனூர் வெள்ளியணை மேச்சேரி
செகதாபுரம் கொத்தனூர்
அந்தமிகு பாப்பினி பிடாரியூர் பழனியும்
அருள்திண்ட மங்கைநவனி
அரசிலா மணிபெரிய புலிநகர் கிழாம்பாடி
அழகுள கலங்காணியும்
சந்தமிகு வடுகநகர் வளவனூர் இவையெலாம்
தழைக்கவே காணிபெற்றாய்
சதுரங்க சேனைசெறி அரையவள நாடனே
சம்பிரமிகு கூறைகுலனே
கந்தமிகு நாகீசர் அழகுதிரு வனிதையை
கரிவரதர் பொன்காளியை

கனவில்மற வாமல்உயர் காளிஅரு ளால்வந்த
காளியண மகராசனே !

இரண்டாம் காணிப்பாடல்

திதமுலவு புகழ்கொண்ட தலசைமின் னாம்பள்ளி
சேமூரு நசையனூரும்
திடுமல்மா தேவிநகர் அரசிலா மணியுடன்
செயமான வளவனூரும்

பதியில்மிக் காகிய பிடாரியூர் வெள்ளியணை
பார்ப்பதியும் மேச்சேரியும்
பரிவான பெரியபுலி யூர்காணி யும்கொண்ட
பண்பான கூறைகுலனே

மதிமுக சவுந்தரிய ரணவீர பத்ரனே
வல்லாண்மை பெற்றசூரா
வளமான பொன்னிநதி வானிநதி காஞ்சியும்
மருவுபூந் துரைநாடனே

அதிமதன ரூபன் பழனியைத் துணைவன்எனும்
அன்பான வரராமனே
அறிவுடைய மால்துரைச் சின்னயன் புதல்வனே
அமராப திக்குரிசிலே.

13. சாத்தந்தை குலம்

காணியூர்கள்

வெள்ளோடு, நாகம்பள்ளி, கூகலூர், விசயமங்கலம், குன்னத்தூர், அல்லாளபுரம், கூடலூர், உகாயனூர், காங்கயம், இலவமலை, பாலத்தொழு, கருவலாம்பாடி, காரைக்தொழு, அத்தாணி, அல்லிபுரம், வல்லிபுரம் ஆகியவைசாத்தந்தைகுலச் காணியூர்களாகும்.

புதுநகர் நல்லணவேள் காதல்

வெள்ளோடை ஆம்பல்களும் மெய்நளின மாமலர்சூழ்
வெள்ளோடை யும்பரவு வெள்ளோடை அம்பதியும்

நாகநகர் கூகலூர் நல்விசைய மங்கையுடன்
சேகரம்சேர் குன்றைநகர் செப்பும்அல் லாளபுரம்

கூடலூர் உகாயனூர் கொள்ளஅருள் காங்கயமும்
நீடுஇல வன்மலையும் நேயமிகும் பாலைநகர்

நற்கருவ லாம்பாடி நன்னகராம் காரைத்தொழு
சொற்குலவும் அத்தாணித் தொன்னகரும் நன்னயமாய்

அல்லிபுரத் துக்கதிக அதிகபுகழ் நிறைந்த
வல்லிபுரம் என்னும் வளநகரும் மேன்மைகொண்டோன்

இன்னும் பலகாணி இன்பமுட னேபடைத்த
கன்னன்நிகழ் சாத்தந்தை கனத்த புகழுடையான்!

காணியூர்கள்

வெள்ளோடு, காங்கயம், விசயமங்கலம், காரத்தொழு, பாலத்தொழு, அல்லாபுரம் கூறப்படுகின்றன.

முதல் காணிப்பாடல்

கொங்கினில் கலியுகம் சகாத்தநா லாயிரத்து
இருநூற்றி ஏழுபத்தில்
குலோத்துங்க சோழனும் சேரனும் பாண்டியன்
குலமது வகுக்கும்நாளில்

மங்கைமணி சாத்தந்தை உலகில்மன் றாடிக்கு
வரிசைப்பட் டம்தரித்தே
மன்னுகர வருஷம்ஆ வணிதேதி பத்தினில்
வந்தசெவ் வாய்க்கிழமையில்

கங்கைகுலக் காலிங்க ராயவெள் ளோட்டுடன்
காங்கயம்விசய மங்கைநகரம்
காரைதொழு பாலத்தொழு அல்லாள புரமதில்
கடகம்எனும் யானைகட்டி

முன்கையில் சந்தனம் உரைத்ததே வணன்உதவு
முந்துபெத் தாமகீபன்
முனைபெற்ற திருமலை சரவணமன் றாடிக்கு
மூவர்முடி சூட்டினர்களே

இரண்டாம் காணிப்பாடல்

காணியூர்களாக நாகம்பள்ளி, உகாயனூர் கூறப்படுகின்றன

திசைபரவு கலியுகம் சகாத்தம்ரெண் டாயிரம்
சென்றநூற் றேழுக்குமேல்
தசமியும் ரேவதி வெள்ளிசுக்ல பட்சமதில்
செம்பொன்மா முடிசூட்டியே

மசச்சோழன் இம்முடிப் பாண்டியன் சேரனும்
மன்னர்கள் முன்பாகவே
வார்த்தையது தவறாமல் சாத்தந்தை நீயென்று
வளர்உலகில் மன்றாடியார்

விசையுற்ற நாகநகர் வெள்ளோடு காங்கயம்

வியன்காரைத் தொழுபாலையும்
வெற்றியுள உகாயனூர் அல்லாள புரமதனை
வேளமனு நீபடைத்தாய்
அசையாத யோகனாம் காலிங்கன் திருமலை
அன்புபெத் தாமகீபன்
அழகுபெறு திருமலை சரவண மன்றாடிக்கு
அதிகமுடி சூட்டினாரே.

14. செகன்குலம்

காணியூர்கள்

கெட்டி செவியூர், அவிநாசி, சேவூர், வண்டியூர், மணக்கடவு ஆகிய காணியூர்களும், வடகொங்கு, நரையனூர் நாடு, சென்கரை நாடு ஆகியவற்றில் காணியூர்களும் உண்டு,

காணிப்பாடல்

வட்டமிடு பரிநகுலன் கெட்டிசெவி யூரனே
வடகொங்கு நன்னாடனே
மருவுபுக் கொளியூரு அழகுசே வூரனே
வண்டியம் பதியூரனே
திட்டமுடன் வருகின்ற பொங்கலூர் நாடனே
தென்கரசை வளநாடனே
சித்தாறு காஞ்சிபுரம் வானிகா வேரியும்
செல்வனே புகழ்பெற்றவா
அட்டதிசை புகழவரு காட்டம்மை சின்னம்மை
அறிவுடைய முருகேசரும்
அரசுபுரி வஞ்சியில் பதிகள்துரை மக்கள்முன்
ஆஸ்தான மதுமெச்சவே
கட்டளைய தாகவரு மணக்கடவு எனதென்று
காணிக்கு மழுவெடுத்தாய்
கந்தனருள் செகன்குல தயிலன்அருள் தயவனே
கனயோக குணசீலனே!

15. செங்கண்ணன்குலம்

காணியூர்கள்

சிற்றமுந்தூர், கடம்பங்குறிச்சி, சிராமலை, கண்ணபுரம், வையப்பமலை, நேரிமலை, திருச்சிராப்பள்ளி, திருவெள்ளறை, சீரங்கம், சிவாயம், சிதம்பரம், குடுமியாமலை, திருவொற்றியூர், திருக்கழுக்குன்றம், காங்கயம், கொடுமுடி, சிங்கநல்லூர், கொங்கூர், திருவானைக்காவல், சீர்காழி, கன்னாங்கோயில், விசயநகரம், முதலைநகர்

ஆகியவை செங்கண்ணகுலக் காணியூர்களாகும்.

முதல் காணிப்பாடல்

திருவுற்ற சிற்றமுந் தூர்கடம் பங்குறிச்சி
சிராமலை கண்ணபுரமும்
செயமிகும் வையமலை நேரிமலை சீர்திருச்
சிராப்பள்ளி திருவெள்ளறை

தருவுற்ற சீரங்கம் சிவாயமலை சிதம்பரம்
தன்னுலவு குடுமிமலையும்
தருமதிரு வொற்றியூர் கழுக்குன்றம் காங்கயம்
தவமிகும் கொடுமுடியுடன்

மருவுற்ற சிங்கநல் லூருகொங் கூருடன்
வளர்திரு ஆனைக்காவல்
வளமிகுசீர் காழிகன் னாங்கோயில் விசயநகர்
வடிவுள்ள முதலைநகரும்

அருளுற்ற சிவமலைக் குமரர்தாள் மறவாத
அன்புசெங் கண்ணகோத்திரன்
அமராப திப்பல்லவ ராயதுரை எந்நாளும்
அரசுபுரி காணியிவையே!

இரண்டாம் காணிப்பாடல்

சிற்றமுந்தூரு கடம்பங் குறிச்சி சிதம்பரமும்
கற்றபொங் கற்சி ராமலை காங்கயம் கண்ணபுரம்
கொற்றம் கழுக்குன்றம் மேழிப் பதாகை குவளையணி
வெற்றியூர் செங்கண்ண கோத்திரத் தார்காணி விசையங்களே!

16. செம்பகுலம்

காணியூர்கள்

பாசாறு, கருவூர், திருவழுந்தூர், பரஞ்சேர்வழி, பொங்கலூர் (நாடு), மணக்கடவு, நல்லூர், அவிநாசி, காஞ்சிக்கோயில், சத்தியமங்கலம், புலியூர், சம்பை, முசிறி, குளித்தலை, குந்தாணிபோன்ற ஊர்களும் குடகுப்பகுதியும் செம்பகுலத்தார் காணியூர்களாகும்.

காணிப்பாடல்

பங்கயத் துளபணி சேருமலை மன்னனே
பண்ணைமே டாதிபதியே
பாசாறு கருவூர் திருவழுந் தூரனே
பரஞ்சைநக ராதிபதியே

பொங்கலூர் நாடனே மணக்கடவு வேந்தனே
புகழ்சேர்ந்த நல்லூரனே
புக்கொளி யூர்காஞ்சிக் கோயில்சத் திமங்கை
புலியூர் சம்பைதனிலே

இங்கிதம தாகவரும் செம்பகுல மன்னனே
இயல்முசிறி குளித்தலையனே
எங்கும்புகழ் செம்பகுலக் கங்கைகுலப் புண்ணியா
இரவலர்க்கு உதவுதருவே

கொங்கிலுயர் பொருநைநதி சித்தாறு காஞ்சியும்
குடகுகுந் தாணிஅதிபா
குழந்தைவே லப்பனருள் அமராபதிக்குரிசில்
குவளையந் தார்மார்பனே!

17. செம்பூத்தன்குலம்

காணியூர்கள்

மாம்பறை, இரணபுரம், மண்டபத்தூர் அத்தனூர், வயிரூசி, குமரமங்கலம், அந்தியூர், இராம கூடல், காடனூர், கண்டகுலம் மாணிக்கம், வாகை, கீரம்பூர், தாராபுரம் தென்சேரி, விதரி (அத்திப்பாளையம்), சேமூர், மொஞ்சனூர், கூடச்சேரி, கருமனூர், புல்லூர், சிவதை, வாழவந்தி, உத்தமசோழபுரம், மாத்தூர், திண்டமங்கலம், வைகுந்தம், முடுதுறை, கொற்றனூர் (சங்கரண்டாம்பாளையம்) ஆகிய ஊர்கள் செம்பூத்த குலக் காணியூர்களாகும்.

முதல் காணிப்பாடல்

மண்டலம் தன்னில்வளர் மாம்பறை இரணபுரம்
மண்டபத் தூர்அத்தனூர்
வயிரூசியும்குமர மங்கலமும் அந்தியூர்
வளம்பெருகு இராமகூடல்

வண்டமிழ்க் காடனூர் கண்டகுல மாணிக்கம்
வாகைகீ ரம்பூருமே
மன்னுதா ராபுரம் தென்சேரி விதரிநகர்
மானசே மூர்மொஞ்சனூர்

எண்டிசை விளங்குகூடச்சேரி கருமனூர்
இலகுபுல்லூர் சிவதையும்
இயல்வாழ வந்திபுகழ் உத்தமச் சோழ புரம்
எழிலான மாத்தூருடன்

திண்டமங் கலமும்வை குந்தமும் முடுதுறை
தென்கொற்றை நகரில்வாழும்

திருமலைச் செல்வனெனும் முதலிமகி பாலனே
செம்பூத்த குலதிலகனே !

ஒரு சுவடியில் அத்தனூர் என்பதற்குப் பதிலாக ஆரியூர் என்று எழுதப்பட்டுள்ளது. மாத்தூருடன் என்பதற்குப் புத்தூருடன் என்ற பாடபேதம் உண்டு. செம்பூத்த குலத்திற்கு வேறு இரண்டு காணிப்பாடல்கள் உள்ளன. அவற்றில் பிறசை, கருமாபுரம், மங்கலம், கொன்னையாறு, வேட்டம்பாடி, திருவாரூர், தோழூர், தம்மபட்டி, தாளப்பதி, மின்னக்கல், சோலையூர், காழனூர், பிள்ளையாநத்தம், முருங்கத்தொழு, அயோத்தியாபட்டணம், தோகைநத்தம், வஞ்சி, நல்லூர், சீனாபுரம், ஆதியூர், வடுகநகர், லக்கம்பாடி கொங்கணாபுரம், கன்னிவாடி, இரும்பை, காதப்பள்ளி, வேலூர், நத்தம், வீசனம், தோகைநத்தம் ஆகிய ஊர்கள் செம்பூத்த குலத்தார் காணியூர்களாகக் குறிக்கப்பெறுகின்றன.

இரண்டாம் காணிப்பாடல்

மாவுற்ற கீரம்பூர் பிறசைகரு மாபுரம்
மங்கலம் கொற்றைமொஞ்சை
மாநகர் கொன்னைவேட் டம்பாடி விதரிதிரு
வாரூரு உடும்பைசிவதை

காவுற்ற ஊதிநகர் தோழூரு தம்மநகர்
தாளபதி மின்னல்சோலை
காழனூர் பிள்ளையார் நத்தம்ஈ சன்முருங்
கைப்பெரும் தொழுவயோத்தி

பூவுற்ற தோகைநத் தம்கொங்கு வஞ்சிரண
புரம் நல்லூர் சீனம்ஆதி
புரம் வடுக நகர்லக் கம்பாடி கொங்கணா
புரம்செந்நெல் கன்னிநகரே

கூவம்உற் றிடுவாழ வந்திமுடு துறைவயிரூசி
கொல்லிசிற் றாறுபொருனை
கொற்றநகர் உற்றசெம் பூத்தகோத் திரர்காணி
கொண்டனர்கள் மிகவாழ்கவே.

மூன்றாம் காணிப்பாடல்

சீர்மருவு கீரம்பூர் பிரசைவேட் டம்பாடி
தென்கொற்றை யூர்விதரியூர்
செய்யபுகழ் மின்னக்கல் இடும்பைகா தப்பள்ளி
செம்பைவே லூருநத்தம்
கார்மருவு சோலைசெறி பிள்ளையா நத்தமும்
கருமநகர் வீசனமதும்

கனமிகு முருங்கைப் பெருந்தொழு அயோத்தியும்
கல்விசேர் தோகைநத்தம்
ஏர்மருவு கொங்குதா ராபுரம் மிக்கான
எழில்தரும தானநல்லூர்
இனியதென் கொல்லிமலை எண்பத்கெட் டூருக்கும்
இறைவனே செம்பூதனே
வார்அணியும் முலைமாதர் வேள்என மதிக்கவரு
மைந்தனாம் ஐந்தருவதாம்
வானவர்கள் புகழவரு நலகுமா ரேந்திரன்
மாற்றலர் மனத்தின்இடியே.

18. செல்லகுலம்

காணியூர்கள்

அஞ்சூர், அனுமன்பள்ளி, தலைநாடு, இடையாறை, தாராபுரம், ஈரோடு, இருப்புலி, பட்டிலூர், எழுமாத்தூர், கருங்கல்பாடி, வெஞ்சமாங்கூடல், கடம்பங்குறிச்சி, முட்டம், கொன்னையார், கச்சுப்பள்ளி, ஆனங்கூர், பருத்திப்பள்ளி, வண்டிநத்தம், குலவிளக்கு, அவிலூர், அறச்சலூர், வள்ளிஎறிச்சல், பவானி, வட்டூர்,விளக்கேத்தி, ஆறுகொழு, கோக்கிளாய், மணப்பள்ளி, வெள்ளோடு ஆகிய ஊர்கள் செல்ல குலத்தார் காணியூர்களாகும்.

முதல் காணிப்பாடல்

தண்டமிழ்க் கவிவாணர் புகழ்அஞ்சி அனுமாதை
தலையநாடு இடையாறையும்
தாரா புரத்துடன் ஈரோடு இலுப்பையும்
தருமமிகு பட்டிலூரும்
எண்டிசையில் எழுமாதை கருங்கல்லுப் பாடியும்
இயல்வெஞ்சை கடம்பம்முட்டம்
இன்பவழி கொன்னையார் கச்சுபளி ஆனங்கூர்
இனமிகும் பருத்திப்பள்ளி
வண்டிநத்தம் குலவிளக்கு அவிலூர் அறச்சலூர்
வள்ளிநகர் கூடுதுறையூர்
வட்டூர் விளக்கேத்தி ஆறுதொழு கோக்கிளாய்
மணப்பள்ளி வெள்ளோடையூர்
கொண்டதுரை யேகனக செல்லகுல மேருவே
கொற்றைஆ னந்தன்உதவும்
கூறுமொழி பிசகாத சின்னய வசீரனே
குவலயம் புகழ்த்தாருவே!

செல்ல குலத்திற்கு வேறொரு காணிப்பாடல் உள்ளது. அதில் புகலூர், கருமனூர், கபிலை நகர் ஆகிய ஊர்களும் செல்ல குலத்தார் காணியூர்களாகக் கூறப்பட்டுள்ளன.

இரண்டாம் காணிப்பாடல்

அஞ்சையூர் எழுமாதை தலையநாடு இடையாறை
அனுமநகர் தாராபுரம்
ஆறுதொழு ஈரோடு இருப்புலி வெள்ளோடு
அறச்சலூர் பட்டிலூரும்

வெஞ்சநகர் கச்சிபளி வண்டிநத் தங்குல
விளக்கொடு விளக்கேத்தியும்
வெற்புகலி யூர்கொன்னை யாறுடன் பருத்திப்பளி
வெண்கரும னூரினுடனே

செஞ்சொல்புகழ் வள்ளிநக ரும்வண் டுரைசெய்
சீர்மணப் பள்ளியுடனே
தேங்குபுகழ் கோக்கிளாய் இன்ஆனங் கூரதும்
சீரான கபிலைநகரும்

நஞ்சைதிகழ் கின்றகருங் கல்பாடி முட்டம்
நற்கடம் பங்குறிச்சி
நாட்டிலுயர் செல்லகுல மகராசர் காணியொடு
நானிலம் தனில்வாழ்கவே.

19. செவ்வாயர் குலம்

காணியூர்கள்

வானிகூடலூர் (பவானி), மாதப்பநல்லூர், சிறுமுகை, தோடயம், வெள்ளகோயில், உப்பிடமங்கலம், செவளம்பூண்டி, பள்ளிமங்கலம், சத்தியமங்கலம், செங்கப்பள்ளி, ராசிபுரம், அஞ்சூர், ஏழூர், சேவூர், பழையனூர், மலையனூர், பருத்தியூர், சகரந்தி, தேவதாயம், கோட்டை, மணிநகர், கருவலூர், தகடப்பாடி, சோழனூர், வஞ்சி (கரூர்), கொங்கல்நகர், அரவக்குறிச்சி, தாந்தோணி, துங்காவி இவை செவ்வாயர் குலக் காணியூர்களாகும்.

காணிப்பாடல்

வல்லமை புகழ்பரவு செவ்வாயர் குலமருவு
வாணியங் கூடலுடனே
மாதப்ப நல்லூரும் சிறுமுகை தோடயம்
வாழ்வுசேர் வெள்ளகோயில்

நல்லஉப் பிடமங்கை வளமைசெவ ளாம்பூண்டி
நாணயப் பள்ளிமங்கை
நானில மதிக்கவரு சத்திசெங் கைப்பள்ளி
ராசிபுரம் அஞ்சிநகரும்

பல்லவஞ் சேர்கின்ற ஏழுரு சேவூரு
        பழையனூர் மலையனூரும்
பருத்தியூர் சகரந்தை தேவதா யங்கோட்டை
        பகர்கின்ற மணிநகருடன்
சொல்லரிய கருவலூர் மேவுதக டப்பாடி
        சோழனூர் வஞ்சிநகரம்
சுகிர்தமிகு கொங்கல்நகர் அரவக் குறிச்சிதாந்
        தோணிதுங் காவிதானே!

20. சேகர் குலம்

காணியூர்கள்

காஞ்சிக்கோயில், ஓமலூர், பனயம்பள்ளி, முத்தூர், மாம்பூண்டி, காரையூர், நீலம்பூர், மண்ணறை ஆகியவை சேகர குலத்தார் காணியூர்கள்

காணிப்பாடல்

முதல்காஞ்சி ஓமலூர் முன்பனசை முத்தூர்
கதிர்செவ ளாம்பூண்டி காரை - மதிசேர்
வாகுபெறு நீலம்பூர் மண்ணறைதான் மன்னும்
சேகர்குலத் தோர்காணி செப்பு.

21. சேவடி குலம்

காணியூர்கள்

மோரூர், நசியனூர், முன்னூர், கிழாம்பாடி, பாரியூர், பட்டிலூர், காரூர், சிங்கநல்லூர், புத்தூர், கொங்கூர், இராய குளம் ஆகியவை சேவடி குலக் காணியூர்கள்

காணிப்பாடல்

மோரூர் நசையனூர் முன்னூர் கிழாம்பாடி
பாரியூர் சோழனூர் பட்டிலூர் - காரூரும்
சிங்கநல்லூர் புத்தூர் சேவடிகுலத் தோரிருக்கும்
கொங்கூரு ராயர் குளம்.

22. தனஞ்செயன் குலம்

காணியூர்கள்

